கலைமாமணி விக்கிரமன்

எழுதிய சமூகச் சிறுகதைகள்

# செவ்வந்திப்பூ சிங்காரி

தொகுதி

1

| | சிறுகதையின் பெயர் | வெளிவந்த ஆண்டு | பிரசுரமான இதழ் | கருத்துரை வழங்கிய எழுத்தாளர் | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1. | விளையாட்டுக் கல்யாணம் | 1942 | மாலதி | நவீனன் * | 13 |
| 2. | நண்பா, மறந்து விட்டாயா? | 1943 | மாலதி | நவீனன் * | 17 |
| 3. | காய்ந்த மல்லிகை | 1944 | நவசக்தி | கங்கா ராமமூர்த்தி | 22 |
| 4. | வாணக்காரன் | 1945 | ஜ்வாலா | மகரிஷி | 33 |
| 5. | கஸ்தூரியின் கடிதம் | 1946 | வெள்ளிமணி | கௌதம நீலாம்பரன் | 41 |
| 6. | மலைவீடு | 1946 | வெள்ளிமணி | தாமரைக்கண்ணன் * | 49 |
| 7. | பொல்லாத மனசு | 1946 | சுதேசமித்திரன் | பூவண்ணன் | 59 |
| 8. | புத்துயிர் | 1947 | சுதேசமித்திரன் | நா. ராமச்சந்திரன் * | 67 |
| 9. | புது வெள்ளம் | 1948 | சுதேசமித்திரன் | மேகலா சித்ரவேல் | 76 |
| 10. | நிம்மதி | 1949 | | மாயூரன் | 83 |
| 11. | செவ்வந்திபூ சிங்காரி | 1949 | கல்கி | பூவை எஸ். ஆறுமுகம் * | 92 |
| 12. | அன்பும் ஆசையும் | 1949 | கல்கி | ஜெயரதன் * | 99 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | கந்தப்பன் காளை | 1949 | வெள்ளிமணி | நாகராஜகுமாரி | 106 |
| 14. | கதையும் கல்யாணமும் | 1949 | அமுதசுரபி | வாசவன் | 116 |
| 15. | இரு கடிதங்கள் | 1949 | அமுதசுரபி | ராஜகுமாரன் | 120 |
| 16. | மீண்டநாதம் | 1950 | கல்கி | ஏ. நடராசன் | 130 |
| 17. | பட்டாபிராமன் புண்ணியம் | 1950 | கல்கி | ஜெயா வெங்கட்ராமன் | 137 |
| 18. | பூங்கோதையின் கணவன் | 1951 | கல்கி | அரசு மணிமேகலை * | 143 |
| 19. | கல்யாணத் திருட்டு | 1951 | தினமணி கதிர் | பி.எஸ். மணி * | 151 |
| 20. | இன்பத்தில் விலை | 1951 | கல்கி | இந்திரா சௌந்தர்ராஜன் | 161 |
| 21. | அரையணா | 1951 | கல்கி | பின்னலூர் மு. விவேகானந்தன் | 172 |


* அமரராகி விட்டனர்



# ஆய்வுரை

## டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன்

### பூக்காட்டில் கொய்த மலர்

எழுத்தாளர் - இதழாளர் விக்கிரமன் தமிழகத்தின் தலைசிறந்த புதின
எழுத்தாளர்களுள் ஒருவர். அவர் எழுதியுள்ள வரலாற்றுப் புதினங்கள்
மிகு புகழ் பெற்றவை. புதினம் எழுதுவதையே போக்காகக்
கொண்டுள்ள அவர் இடையே பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.
1942ஆம் ஆண்டு தொடங்கி இன்றைக்கு வரையிலான கால எல்லையில்
அவர் எழுதியுள்ள சிறந்த சிறுகதைகள் தொகுக்கப் பெற்று இந்நூல்
வடிவம் பெற்றுள்ளது.

### சிறுகதைத் தோற்றம்

மேனாட்டு இலக்கியத் தாக்குறவால் தமிழில் சிறுகதை இலக்கியம்
தோன்றியதென்பர். உரைநடையில், மேனாட்டார் கூறியுள்ள
இலக்கணப்படி அமைந்த சிறுகதைகளைப் பொறுத்தவரை இக்கூற்று
உண்மையானதாகலாம். ஆனால், தமிழில் இலக்கியங்கள் தோன்றிய
காலந்தொட்டே சிறுகதைகள் இருந்து வந்துள்ளன. மருத்துவம்,
கணிதம், ஜோதிடம் போன்ற கணித அறிவியல் சார்ந்த கலைகள் கூடத்
தமிழில் செய்யுள் வடிவில் எழுதப்பட்டு வந்துள்ளன. தமிழ்க்
காப்பியங்கள் இன்றைய நெடுங்கதை என்றும், தனிப்பாடல்கள் பல
இன்றைய சிறுகதை என்றும் சொல்லத்தக்க வகையில் அமைந்
துள்ளன.

ஒரு சிறிய இல்லத்தே தூணைப் பற்றி நின்ற வண்ணம் ஓர் இளமகள்
ஒரு முதிய தாயிடம் கனிவாய், ''நின் மகன் எங்குளன்?'' எனக்
கேட்கிறாள். முதியவளோ ''அவனா? போர்க்களத்திலேயல்லவா அவன்
இருப்பான். புலியிருந்த குகை போன்று இதோ அவன் இருந்த வயிறு''
எனத் தன் வயிற்றைக் காட்டினாள். ஆறு அடிகள் கொண்ட புற
நானூற்றுப் பாடல் (86) ஒன்றின் கருத்து இது. வீரச்சுவையை
எடுத்தியம்பும் சிறுகதை தானே இது!

ஒருவன் ஒருத்தி; இருவரும் தம்முள்ளே காதல் கொள்கின்றனர். அவன் அவளைச் சந்திக்க விழைகிறான். ஒருநாள் பகற் பொழுதில் அவன் வீட்டின் முன்னே வந்து நின்று, ''உண்ணு நீர்'' கேட்கிறான். தாய் மகளிடம் செம்பில் நீர் கொடுத்தனுப்புகிறாள். வெளியே நீர் கேட்பவன் தன் காதலன் என்றறியாமலேயே நீர் எடுத்து வருகிறாள். அவனைப் பாராமலேயே செம்பை நீட்டியதும் அவன் செம்பை விட்டு, கையைப் பற்றுகிறான். காதலன் என அறியாத அவள், ''அம்மா'' என வாய்விட்டுக்கூவுகிறாள். கைப்பற்றியவன்காதலன்தான்என்றறிந்ததும் அன்னையை அழைத்து விட்டோமே என்று துணுக்குறுகிறாள்.

மகளின் ஒலி கேட்டு வெளிவந்த அன்னை, ''என்ன?'' என்று கேட்டதும் மகள், ''ஒன்றுமில்லை அம்மா! நீர்தந்தேன். குடிக்கும்போது அவருக்கு விக்கிக் கொண்டது'' என்றாள். தாயோ பரிவுடன் அவன் தொண்டையை நீவிக் கொடுக்க, அப்போது காதலன் இருவரும் கண்களால் பேசிக் கொள்கின்றனர்'' என்பது ஒரு கலித் தொகைப் பாடல் ஓவியம். இவ்வாறு வாழ்க்கையின் அக, புற நிகழ்ச்சிகள் சிறுகதை ஓவியங்களாகச் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே மிளிர்வதைக் காணலாம்.

## சிறுகதை வளர்ச்சி

சிறுகதை இலக்கியம் இப்போது மிகவும் வளர்ந்த நிலையில் உள்ளது. முதன் முதலில் வீரமாமுனிவர் 18ஆம் நூற்றாண்டில் பரமார்த்த குரு கதை எழுதினார். 19ஆம் நூற்றாண்டில் தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரக் கதைகளை எழுதினார். வீராசாமிச் செட்டியார் இயற்றிய 'விநோதரச மஞ்சரி'யிலும் பல கதைகள் உள்ளன.

இவற்றை இன்றைய சிறுகதைகளோடு ஒப்பிட இயலாது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார் சில சிறுகதைகள் எழுதினார். வ.வே.சு. அய்யரும் எழுதினார். இவை சிறுகதை இலக்கிய வித்துகள் எனலாம். பின்னர் புதுமை'ப்பித்தன், கு.ப.ரா. போன்றோர் எழுதிய காலத்தே சிறுகதை இலக்கியம் பலரைத் தன்வழி ஈர்த்து அவ்வழியில் நடை போடத் தூண்டியது.

'கல்கி' எழுதத் தொடங்கியதும் அரசியலாயினும், பொருளாதார மாயினும், அன்றி சமூக சீர்திருத்தமாயினும் - எதுவாயினும் சிறுகதையில் அடக்கிச் சுவைக்கச் செய்ய முடியும் என்னும் நிலை மலர்ந்தது. பல்வேறு துறைகளில் சிறுகதை தன் கால்களை அகலப் பதிக்கலாயிற்று.



இதழ்கள் சிறுகதையின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தன எனலாம். 'மணிக்கொடி' போன்ற இதழ்கள் சிறுகதை எழுதுவதற்குப் பேருக்கம் அளித்தன. எந்த இதழாயினும் அதில் சில சிறுகதைகள் பெருகப் பெருகச் சிறுகதை எழுதுவோரின் எண்ணிக்கையும் மிகுதியாயிற்று. சிறந்த கதைகள் வெளிவரும் இதழ்களே மக்களிடம் செல்வாக்குப் பெறுகின்றன என்பதால் சிறந்த கதையாசிரியர்களை நாடி, அவர்களின் கதைகளைப் பெற்று வெளியிடும் நிலை, இன்று மலர்ந்துள்ளது.

ஆசிரியர்கள் கதைகளை எழுதி, அவற்றை அவ்வாறே நூலாக வெளியிடும் நிலை பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். இதழ்களில் வெளிவந்த கதைகளே பின்னர் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவரும் நிலை நிலவி வருகிறது. இந்நூலும் விக்கிரமன் அவர்கள் 'அமுதசுரபி', 'கல்கி', 'ஜ்வாலா', 'சுதேசமித்திரன்', 'தினமணி', 'கலைமகள்', 'ஆனந்தவிகடன்' ஆகிய இதழ்களில் எழுதியுள்ள கதைகளின் தொகுப்பேயாம்! இவ்வகையில் சிறுகதை வளர்ச்சி இதழ்களின் தொண்டு பெருந்தொண்டு எனலாம்.

## கதைத் தொடக்கம்

ஒரு நிகழ்ச்சியை அல்லது உரையாடலைத் தோற்றுவித்து அதிலிருந்து கதை எழுதுவது போன்ற முறையில் விக்கிரமனுடைய கதைகள் அமைகின்றன. ஆசிரியரும் நண்பரும் பேசிக் கொண்டிருக்கின்றனர். அதிர் வெடியுடன் பழகும் வாணக்காரனின் உள்ளம் ஒவ்வொரு நொடியும் பெருந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் என்று பேசிய நண்பரிட தனக்கு அதிர்வெடியைக் கேட்டாலே பயம் என்ற போதிலும், நண்பருடைய வாயைக்கிண்டிவிட, ''தொழில் செய்பவனுக்குத் துன்பமென்னப்பா?'' என்கிறார். உடனே நண்பர் வாணக்காரன் ஒருவன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

ஆசிரியர் (இந்தக் கதையில்) மருத்துவமனையில் படுக்கையில் படுத்திருக்கிறார். அவனுடனேயிருந்து ஒரு பெண் கண்ணும் கருத்துமாக அவனைக் கவனித்து வருகிறாள். கவுண்டரிடம் ஆசிரியர் ''கவுண்டா... உனக்குத் தொண்டு செய்யும் உன் மனைவி கண்ணகி, நளாயினியைப் போலக் கணவனைப் பாதுகாக்கிறாளப்பா'' என்றதும், கவுண்டர் எழுந்து வந்து இவர் படுக்கையருகே அமர்ந்து கொண்டு, ''சாமி! இவ இன்னும் என் மனைவியாகலை...'' எனத் தொடங்கி, தானும் அவளும் அங்கிருக்க நேர்ந்தது பற்றிய கதையைச் சொல்கிறான். இதுவே 'பொல்லாத மனசு' என்னும் கதை!

இந்நூலிலுள்ள பெரும்பான்மைக் கதைகள் இவ்வாறே அமைந்துள்ளன. ஆசிரியர் கதையைத் தொடங்கக் கையாளும் ஒரு தனித்த உத்திமுறை இது எனலாம்.

## கதை முடிப்பு

சிலர் பிரச்னைகளை எழுப்பி அவற்றிற்கு முடிவு சொல்லாமலேயே படிப்போர் மனநிலைக்கேற்ப முடிவு காணும் வகையில் கதையை முடித்து விடுவதுண்டு. விக்கிரமனோ கதைகட்குத் தெளிவான முடிவுகளைத் தந்து விடுகிறார். தெளிந்த முடிவுடன் கதை புனைவது விக்கிரமனின் கதை முடிப்புத்தியாக விளங்குகிறது.

## கதைக் கரு

கதை எழுதுவதற்கு ஏதேனும் ஒரு செய்தி அல்லது நிகழ்ச்சி அடிப்படையாயிருக்க வேண்டும். அது கதைக் கரு எனப்படுகிறது. மனித உணர்ச்சிகள், குறைபாடுகள், முரண்பாடுகள் ஆகியவை கதைக் கருவைத் தோற்றுவிக்கின்றன. கதாசிரியர்கள் வாழ்வில் தாங்கள் காண்பவற்றையும், உணர்பவற்றையும் கருவாகக் கொண்டு தம் கற்பனையையும் இழையோட விட்டுக் கதைகளைப் புனைந்து விடுகின்றனர். வாழ்வில் நடந்த சம்பவங்களைக் கதைகளாக எழுதலாம்; கற்பனையாகவும் புனைந்து எழுதலாம்.

சிறுகதைகளில் கற்பனைப் புனைவுகளை விட உள்ளது கூறலே சுவை பயக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு விக்கிரமன் வாழ்வியல் நிகழ்ச்சிகளையே கதைகளாகப் படைத்துள்ளார். நடக்க முடியாச் சம்பவங்கள் அல்லது அதீதக் கற்பனைகள் எனச் சொல்லுமளவுக்கு இத்தொகுப்பில் எக்கதையும் இல்லை. இளமையிலேயே மனைவி தன்னை நிரந்தரமாகப் பிரிந்து வாழ்ந்து வந்த வீணையாசிரியர் கேசவ ராம் ஒருகணம் தன்னிடம் இசை பயிலும் வாணியிடம் தவறாக நடக்க நினைத்ததும், தூங்குகின்ற அவளைத் தொடுவதும் உடனே மனசாட்சி உறுத்த மீண்டும் போய் ''சிவசக்தி, உலக மாதா! என்னைக் காப்பாற்றி விட்டாய் தேவி! இருந்தாலும் இந்த விரல்கள் பாவம் பண்ணி விட்டன. இதற்குத் தண்டனை வேண்டும்'' என்று எரியும் கற்பூரத்தினால் கை விரல்களைச் சுட்டுக் கொள்ளும் கேசவராமர்கள் இன்றும் இருக்கத் தான் செய்கிறார்கள் ('நல்லதோர் வீணை' கதை).

இவ்வாறு தாம் அறிந்த, உணர்ந்த நிகழ்ச்சிகளை உள்ளத்தே பதித்து, தாம் படைக்கும் கதை மாந்தர்களோடு ஒன்று கலந்து - உணர்வு பூர்வமாக விக்கிரமன் அவர்கள் எழுதுகிறார்களாதலின், கதைகள் அனைத்தும் உயிரூட்டமும், உயிரோட்டமும் கொண்டு விளங்குகின்றன.



## கதையின் உள்ளடக்கம்

''எந்தக் கதைக்கும் ஒரு தொடக்கம், இடையிலேயே சில சம்பவங்கள் அல்லது மனோ தர்மத்தினால் ஏற்பட்ட பின்னல், ஆரோகண அவரோகணக் கதிகள் (ஏற்ற இறக்க நிலைகள்), முடிவு முதலியவற்றை ஆசிரியர் விருப்பம் போல் கையாண்டு கதைக்கு ஒரு முழுமையான வடிவம் கொடுக்க வேண்டும். கதைக்கு வேண்டியது உண்மைக்கு - யதார்த்த நிலைக்குப் புறம்போகாத கதை அம்சம் - அதாவது நடைமுறைச் செய்திகளைப் பற்றி எழுதுவது நல்லது'' என்னும் சிதம்பர ரகுநாதனின் இலக்கியத் திறனாய்வு உரைப்பது போல இவருடைய கதைகள் நடைமுறைச் செய்திகளையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

## குடும்பக் கதைகள்

பொழுது போக்கிற்கெனவே எழுதப்பட்ட கதைகள்; ஆழ்ந்து சிந்தித்து அறிய வேண்டிய உணர்ச்சிக் கதைகள்; சமுதாயக் குறைபாடுகளை நையாண்டி செய்யும் அங்கதக் கதைகள்; குறிப்பிட்ட சில குறிக்கோள்களுக்காக எழுதப்பட்ட கதைகள்; தனி மனிதனின் மனப் போராட்டங்களை விவரிக்கும் கதைகள்; வாழ்வின் மேம்போக்கான சலசலப்புகளை ஒதுக்கிவிட்டு உயர்ந்த பண்புகளை விளக்கும் வழிகாட்டிக் கதைகள் எனக் கதைகளைப் பல்வேறு வகையாகப் பாகுபடுத்துவர்.

டாக்டர் விக்கிரமனின் கதைகளில் இத்துணை தன்மைகளும் ஆங்காங்கே காணக்கிடக்கின்றவெனினும் பொதுவாக இந்நூலிலுள்ள இவருடைய கதைகள் குடும்ப நிகழ்ச்சிகளை, பிரச்னைகளை - வெளிப்படுத்தும் கதைகளாகவே இருந்திடக் காண்கிறோம். ஓர் இளைஞன் முறைப்பெண்ணை மணப்பதற்கு உடன்பட மறுத்த அப்பெண்ணின் தந்தை, அவ்விளைஞன் இசைப் பெருமையால் நிறையச் சம்பாதிக்கத் தொடங்கியதும் மகளை மணமுடிக்க முன் வருவதும், ஆனால் அவ்விசையே அவ்விளைஞன் முடிவுக்குக் காரணமாக அமைய, அப்பெண் பெருவருத்தத்திற்காளாகியதையும் ஒரு கதை சுட்டுகிறது (புது வெள்ளம்).

குழந்தையின் இடைவிடா அழுகையும் அது காரணமாக மனைவி பேசுவதையும் நச்சரிப்பாகக் கருதியவன், அவர்கள் சில நாள் பிரிந்தவுடன், அந்தக் கூச்சலிடையே இருப்பதுதான் நிம்மதி என்றுணர்வதை ஒரு கதை செப்புகிறது (நிம்மதி).

தங்கைக்கு அவள் விரும்பியவனையே மணம் முடிக்க வைக்க முன்வருகிறான் ஓர் அண்ணன். தந்தையோ பிடிவாதமாக அவளை மற்றொருவனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்கிறார்; இதனால் வீட்டை விட்டே வெளி யேறி வெளிநாடு சென்றவன் முடிவில் தங்கை தான் விரும்பியவனையே மணக்க நேர்ந்த செய்தியறிந்து தன் இலட்சியம் வெற்றியடைந்ததைக் கேட்டு மகிழ்வது பற்றியது ஒரு கதை (கதையும் கல்யாணமும்).

## ஒரு சுவை ஆட்சி

புதினம் வேறு; சிறுகதை வேறு. புதினம் பல சுவைகளைக் கொண்டதாயும் பல நிகழ்ச்சிக் கோவையாகவும் இருக்கும். சிறுகதையில் ஒரு சுவை தான் மிகுந்து நிற்கும். பிற சுவைகளின் சாயல் இடையிடையே இருக்கலாமெனினும் ஒரு சுவை மட்டுமே மேலோங்கி நிற்க வேண்டும்.

கேசவன் அச்சுக்கூடத்தில் பணிபுரிபவன். மணமாகி இரண்டாண் டாகியும் மனைவியை எங்கும் அழைத்துப் போகக் கூட முடியாதபடி வேலை. வெளியே சென்றால் கையில் செலவுக்குக் காசில்லாததும் அதற்குக் காரணம். கிராமத்திலிருந்து மைத்துனி வந்திருக்கிறாள். அவளை அழைத்துச் சென்று கடற்கரையைக் காட்ட மனைவி வற்புறுத்த, அன்று வேலை நிறுத்தத்தினால் ஓய்வு கிடைக்க, மனைவி யையும் மைத்துனியையும் அழைத்துக் கொண்டு கிளம்புகிறான். மைத்துனிக்கு எதையும் வாங்கிக் கொடுக்கக் காசில்லாத நிலைமை. கடைவீதியில் ரிப்பனைப் பார்த்த மைத்துனி அதை வாங்கித் தருமாறு கேட்டும் முடியாத ஏக்கம். அவள் ஊருக்குத் திரும்பப் புறப்படுகின்ற அ...றாவது அதை வாங்கித்தர வேண்டுமென எண்ணுகிறான். அவளை இ...யில் நிலையத்துக்கு அழைத்து வர மனைவியிடம் சொல்லிவிட்டு நடந்தவன், வழியே ஒருவர் அவனைக் கூலியாள் எனக் கருதிப் பழக்கூடையை எடுத்து வரச் சொல்ல, அதைத் தூக்கிப் போய்த் தந்ததில் கிடைத்த ஆறணாவைக் கொண்டு நீல ரிப்பன் வாங்கிக் கொண்டு இரயில் நிலையத்துக்கு விரைகிறான். அங்கே அந்தப் பெண் தலையில் நீல ரிப்பனோடு நிற்கிறாள். கேசவனுக்கு வியப்பு! மனைவி பார்வதி அவ்வப்போது அரையணா, காலணாவாகத் தான் சேர்த்து வைத்...ந்...க் கொண்டு, அதனை வாங்கித் தந்திருப்பதை உணர்கிறான். உடனே பூரிப்புடன் 'பார்வதி இப்படித் திரும்பேன்' என்று கூறிக் கொண்டே அவள் முகத்தைத் திருப்பி பூவைச் சூட்டுகிறான். மனைவியின் பின்னலின் நுனியிலே கட்டித் தொங்கிய சணலை



அறுத்தெறிகிறான். ரிப்பனைக் கட்டுகிறான். பார்வதியின் முகம் வெட்கத்தால் சிவக்கிறது; கேசவனுக்கோ மனத்தில் பெரிய நிம்மதி உண்டாகிறது. இப்படியொரு கதை (நீல ரிப்பன்). இக்கதையில் 'கையில் காசில்லையே' என்னும் அவலச்சுவை மட்டுமே பேரிடம் பெறுகிறது. மனைவியின் தலையில் பூச்சூடி, ரிப்பன் கட்டும்போது கேசவன் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி பெருமிதச்சுவையைத் தருகிறது. எனினும் கதையின் உயிர்ப்புச் சுவையாக விளங்குவது அவலச் சுவையாகும். இவ்வாறே மற்ற கதைகளிலும் ஒன்பான் சுவைகளிலும் ஏதேனும் ஒரு சுவை மட்டுமே மற்ற சுவைகளினும் மேம்பட்டுக் கதையின் முக்கிய சுவையாக அமைந்திருப்பதை உணரலாம்.

## ஒரே நிகழ்ச்சியின் விளக்கம்

''சிறுகதையின் ஜீவநாடி ஒன்று. அதில் எழுத்தாளப்படும் சம்பவம் அல்லது நிகழ்ச்சி தனிப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும்'' என்கிறார் புதுமைப்பித்தன். ''வாழ்வின் ஒரே ஓர் அம்சத்தை மட்டும் பெரிது பண்ணுகிறது சிறுகதை. எடுத்துக் கொண்ட ஒரு பொருளை மட்டுமே செதுக்கிச் சித்திரவேலை செய்யப்படுகிறது சிறுகதையில்'' என்றும் சிறுகதைக்கு இலக்கணம் வகுப்பர் ஆய்வாளர். இந்த இலக்கணத்துக்கு உட்பட்டதாகவே இந்நூலிலுள்ள அனைத்துக் கதைகளும் அமைந் திருக்கக் காண்கிறோம். கூட்டுக் குடும்பத்தில் மூர்த்தி, வேதா என்னும் கணவன், மனைவி தனித்து ஒருநாள் கூடப் பேசி மகிழ்ந்து இன்பமாக இருக்கக் குழந்தைகள், நாத்தனார், மைத்துனி என அக்குடும்பத்தின் பெருக்கம் இடந்தரவில்லை. அவர்கள் எல்லாரும் வெளியூர் சென்று விட்ட ஒரு நாள், இன்றாவது நிம்மதியாக ஊரைச் சுற்றிப் பார்ப்பதோடு மனம் போலப் பேசி மகிழலாம் என்று வெளியில் புறப்படுகின்றனர். பணத்தை எடுத்துச் செல்ல மறந்துவிட்டதை வழியிடையேயறிந்து வீடு சென்று பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பலாம் என வந்தனர். அங்கே பம்பாயிலிருந்து மூர்த்தியின் அத்தை, குழந்தைகளுடன் வந்து நின்றாள். அதற்கு மேல் எங்கே வெளியே போக நேரம்? ''கடைக்குப் போய்க் காய்கறி வாங்கி வாருங்கள். நான் அடுப்பை மூட்டுகிறேன்'' என்கிறாள் வேதா (ஒருநாள் நிம்மதி). கூட்டுக் குடும்பத்தில் கணவன் மனைவி தனித்திருக்க முடியாத ஒரு பிரச்னை மட்டுமே இக்கதையில் விவரிக்கப்படுகிறது. மற்ற கதைகளும் இப்படியே.

## கதைப் பெயர்

கதைகட்குப் பெரும்பாலும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பெயர்கள் தரப்படுவது வழக்கம். விக்கிரமன்

அவர்களும் இந்தப் பொதுப் போக்கையே கையாண்டுள்ளார். இரயிலில் தங்கை வீட்டுக்குப் புறப்பட்டாள் ஒரு பெண். குழந்தை விடாமல் அழுதது. விகாரமான தோற்றமுடைய ஒருவனைக் காட்டி அக்குழந்தையிடம் ''பூச்சாண்டி பிடித்துக் கொள்வான்; அழாதே'' என்றுஅக்குழந்தையின்தாயும்தந்தையும்அழுகையைஅடக்குகின்றனர். ''பூச்சாண்டி என்கிறோம். அவனுக்கும் பொண்டாட்டி குழந்தைகள்னு இருக்காதா?'' என நினைக்கிறாள் அக்குழந்தையின் தாய். மாலையில் அவள் தன் வீடு திரும்பும்போது அந்தக் கோர உருவமுடையவனை வழியில் காண நேர்கிறது. அருகே அவன் மனைவி. அவன் இவள் குழந்தையைப் பார்த்து ''அழாதே! அழாம இருந்தியா'' எனக் கேட்கிறான். நீண்ட பற்கள்; கோரமுகம்; அவனைச்சுற்றிக் குழந்தைகள் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர் எனச் சொல்கிறது ஒரு கதை (பூச்சாண்டி). உறவுக்கு அருவெறுப்பு இல்லை என்பதைக் கூறும் இக்கதையில், அவனைப் பூச்சாண்டியாகக் காட்டி அக்குழந்தையை அடக்கியதால் கதையின் பெயர் 'பூச்சாண்டி' எனத் தரப்பட்டுள்ளது.

ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கிறான். காதலியோ, காதலனிடம் அவனுடைய தாயைக் கொன்று அவளுடைய இதயத்தை எடுத்து வந்தால் தான் மணப்பேன் என்கிறாள். காதல் வெறிகொண்ட அவனும் தாயைக் கொன்று அவளுடைய இதயத்தை அறுத்தெடுத்துக் கையிலேந்திய வண்ணம் காதலியை நோக்கி ஓடுகிறான். இடையிலே கல் தடுக்கிக் கீழே வீழ்கிறான். அப்போது அந்தத் தாயின் இதயம், ''மகனே! மெதுவாகச் செல்லக்கூடாதா? கீழே விழுந்ததில் அடிபட்டு விட்டதா? வலிக்கிறதா? நிதானமாகப் போ அப்பா'' என்றதாம். இஃது ஒரு பிரெஞ்சுக் கதை. 'பெற்ற மனது பித்து பிள்ளை மனம் கல்லு' என்னும் பழமொழியை மெய்ப்பித்தாய்த் தாயன்பின் சிறப்பை விளக்குகிறது இக்கதை. தாயன்பை இதேபோன்று அருமையாக விவரிக்கிறது நம் ஆசிரியரின் 'தெய்வத்தாய்' என்னும் கதை. தாயன்பு என்றும் எந்நிலையிலும் குறையாத, குறை காணாத ஒன்று என்னும் ஒரு செய்தியை மட்டுமே 'தெய்வத்தாய்' தெளிவுபடுத்துகிறது.

## சிறுகதைச் சேக்கிழார்

ஒவ்வொரு கதையையும் ஏதோ ஒரு குறிக்கோளுடன் எழுதிச் செல்கிறார் ஆசிரியர். தொழிலைத் திறமையுடன் செய்தால் மட்டும் பேதாது; அதனைத் தூய்மையுடன் செய்ய வேண்டும்; இல்லையேல் அழிவுதான் மிஞ்சும் என்பது ஒரு கதைக் கருத்து (வாணக்காரன்). மஞ்சள் கயிற்றைக் கழுத்தில் முடிந்து போட்டால் தான் கணவன்/மனைவி. அதன் முன்னர் அவர் ஓரிடத்திலிருக்க நேர்ந்தாலும் அந்த



உரிமையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதைச் சுட்டுகிறது மற்றொரு கதை (பொல்லாத மனசு). எந்தச் சூழ்நிலையிலும் ஒரு பெண் உறுதியாக இருந்தால் கற்பு நெறி வழுவாது வாழ முடியும் என்பதை விளக்குகிறது ஒரு கதை (ஜன்னலுக்கு வெளியே). வாழ்வில் தவறே செய்யாதவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தவறும் போது அத்தவறுக்காக இரங்கி அத்தவற்றினை ஒப்புக் கொள்ளும் போது அவர் இதயம் பிழைத்து விடுகிறது என்பதைச் சுட்டுகிறது ஒரு கதை (பிழைத்த இதயம்). இவ்வாறு எந்தக் கதையைத் தொட்டாலும் அங்கே ஒரு கொள்கைப் பிடிப்பு - மரபு வழுவா நெறிமுறை இருந்திடக் காண்கிறோம். சுகி சுப்பிரமணியம் அவர்கள் புதுமைப்பித்தனைச் 'சிறுகதை வள்ளுவர்' என்றும் கு.ப.ரா.வை 'சிறுகதை மன்மதன்' என்றும் குறிப்பிட்டார். பெரிய புராணத்தில் சேக்கிழார் ஒவ்வோரடியார் வரலாற்றிலும் 'இறைநெறி'யை மையமாகக் கொண்டு கதைக் கூறிச் செல்லும் பாங்கில் விக்கிரமன் அவர்கள் 'நம் பண்பாட்டு நெறி'யை மையமாகக் கொண்டு கதைகள் புனைந்து செல்வதால் இவரை நாம் 'சிறுகதைச் சேக்கிழார்' எனப் பெருமையோடு குறிப்பிடலாம்.

''சிறுகதையின் வடிவ அமைப்பிலே மிகவும் முக்கியம் என்ன வென்றால் வார்த்தைகளைச் சிதறாமல் இயக்குவது, உறுதியற்ற முறையில் கதையை வளர்த்துவதும் அவசியமற்ற விதத்தில் தொடர்பற்ற நிகழ்ச்சிகளை அல்லது உணர்ச்சிகளை அல்லது கருத்துகளை அடுக்குவதும் கதையைச் சுமைதாங்கியாக்கி அப்படியே கீழே இறக்கி விடும்'' என மீ.ப. சோமு அவர்கள் சுட்டியுள்ள நிறைவை மேற்கொண்டும் குறைக்கு இடமின்றியும் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய கதைகளாக இத்தொகுப்பில் கதைகள் விளங்குகின்றன.

எடுத்துக் கொண்ட கருத்தைப் படிப்போர் உள்ளத்தே நிலை நிறுத்தும் வகையில் அமைந்த பாத்திரப் படைப்புகள், நுட்பமான கருத்துகளைத் தெளிந்த நீரோட்டம் போல் இட்டுச் செல்கின்ற உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கின்ற கட்டுக் கோப்பான வடிவம், பொழுது போக்குக்காகவன்றி குறிப்பிட்ட நோக்கத்துடன் சமூகத்தின் உள்ளோட்டத்தை உயிர்ப்பாகக் கொண்ட பொருளடக்கம் ஆகியவை டாக்டர் விக்கிரமனின் சிறுகதைகளின் சீரிய பண்புகளாகும்.

இச்சிறுகதைச் சேக்கிழார் தொண்டு மேன்மேலும் சிறந்து அதன் வழி நாடு நலம் பெறுவதாக.

அன்புடன்

**சு. செல்லப்பன்**

# விளையாட்டுக் கல்யாணம்

சிறுவர்கள் சிறுவயதில் அப்பா - அம்மா விளையாட்டு விளையாடுவது வழக்கம். அப்படி இரண்டு சிறுவர்கள் ஒரு சிறுமியோடு விளையாடிய விளையாட்டு, பிறகு அவர்களுடைய வாழ்க்கையிலும், விளையாடி விட்டதை சிறுகதையாக எழுதியிருக்கிறார் விக்கிரமன். அப்போது 'வேம்பு'.

சின்னாயி என்பவள் முருகன், கந்தன் ஆகியோருடன் சிறு வயதில் விளையாடிவிட்டு, அவர்களில் முருகனைத் தன் கணவனாக அடைகிறாள். பிறகு முருகன் பிழைப்புத் தேடி வெளிநாடு சென்றபோது அங்கு இறந்து போனதாகச் செய்தி வரவே, சில நிர்ப்பந்தங்கள் காரணமாகக் கந்தனுக்கு அவள் இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட நேரிடுகிறது.

ஆனால், இறந்து போகாமல் உயிரோடு ஊர் திரும்பும் முருகன், சின்னாயி கந்தனின் மனைவியாக வாழ்வதைக் கண்டுவிட்டு மனம் புழுங்கி ஆற்று நீரில் மூழ்கித் தன்னை மாய்த்துக் கொள்கிற கதையே இந்தச் சோகச் சித்திரம்.

விளையாட்டாகத் தொடங்கிய வாழ்க்கை விபரீதமாக முடிந்து விடுகிற ஒரு கருத்தை வைத்து விக்கிரமன், அந்த சோகத்தைப் பொங்கி வரும் ஆற்று வெள்ளம் போல எழுதியிருக்கிறார். எழுத்தில் முருகனின் தாபத்தை முழு வீச்சுடன் பார்க்க முடிகிறது.

இளம் வயதில் 'வேம்பு' என்னும் இயற்பெயர் கொண்டு எழுதப்பட்ட அந்தச் சிறுகதையை 'மாலதி' மாதமிருமுறை இதழுக்கு ஆசிரியராக இருந்த நான் வெளியிட்டேன். அன்றே வேம்புவின் எழுத்திலிருந்த ஆழ் கருத்துகளும் வேகமும் இன்று விக்கிரமனாக மாறியிருக்கும் அவரிடம் காணப்படுவது ஆச்சர்யமில்லை.

அந்தச் சிறுகதையை முதலில் வெளியிட்ட பெருமை எனக்கு இருந்து வந்தாலும் வேம்பு - விக்கிரமனாகி, விஸ்வரூபம் எடுத்து இருப்பதைக் கண்டு நான் மேலும் பெருமை அடைகிறேன்.

- நவீனன்





# 1. விளையாட்டுக் கல்யாணம்

முருகனும், கந்தனும், சின்னாயியும் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் மூவரும்தான் சேர்ந்து எப்பொழுதும் விளையாடுவார்கள். அவர்களுடைய விளையாட்டு 'கல்யாண' விளையாட்டுதான். முருகன் 'அப்பா'வாகவும் சின்னாயி 'அம்மா'வாகவும் கந்தன் விருந்தினராகவும் விளையாடுவார்கள்.

அன்று முருகன், கந்தன், சின்னாயி விளையாடிக் கொண்டிருக்கையில் கந்தனுக்குக் கோபம் வந்தது. "தினமும் முருகன்தானா அப்பாவாக இருக்கணும்! நான் இருக்கக்கூடாதா?" என்று கோபமாகக் கேட்டான். உடனே முருகனுக்குக் கோபம் வந்தது. அவனுடைய கன்னத்தில் பளீரென ஓர் அறைவிட்டான்.

கடைசியில் சின்னாயி இருவரையும் சமாதானப்படுத்தினாள். 'இருவருக்கும்' மனைவியாக இருக்கிறேன் என்று சமாதானப் படுத்தினாள்.

ஊரில் எல்லாரும் முருகனையும், சின்னாயியையும் தகுந்த ஜோடி என்பர். ஆனால் கிழவன் அவர்கள் இருவரையும் பார்த்துப் பெருமூச்சு விடுவான்!

வருடங்கள் பல கழிந்தன.

முருகன் சின்னாயியின் கணவனானான். கல்யாணமாகி இரு வருடங்களுக்கெல்லாம் ஒரு குழந்தையும் பிறந்தது. குடும்பமும் வலுத்தது. குடும்பத்தைக் காப்பாற்ற முருகனால் முடியவில்லை. ஆதலால் முருகன் அடுத்த ஊரான மதுராந்தகம் சென்று கங்காணியின் வீடு சென்று வேலையகப்படுமாவெனக் கேட்டான்.

முருகனை அவன் பார்த்து "நான் சொல்லுகிறபடி செய்தால் மாதம் 20 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை தருவேன்" என்றான்.

முருகனும் சந்தோஷத்தால் ஒப்புக் கொண்டான். முருகன் மலேயா கிளம்பினான். சின்னாயி கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள்.

ஆண்டுகள் ஐந்து சென்றன. 1941ஆம் ஆண்டு ஜப்பானும் மலேயாவைத் தாக்கியது. மலேயா தேசத்திலுள்ள ஜனங்களும் தேயிலைத் தோட்டத்தின் எஜமானர்களும் ஓட்டம் பிடித்தனர்.

சின்னாயி தன் நாயகனிடமிருந்து கடிதமே வராத காரணத்தையறிய கங்காணியின் வீட்டை நோக்கிக் கிளம்பினாள். கங்காணி மகா பிகுவுடன், "ஓ! உன் புருஷனா? அவன் ஓடி வரும்போது கப்பலிலிருந்து கடலில் வீழ்ந்து மாண்டான்" என்று அலட்சியமாகக் கூறினான். அதைக் கேட்ட சின்னாயி துக்க சாகரத்தில் மூழ்கினாள் என்று கூறவும் வேண்டுமா?

விளையாட்டுச் கல்யாணத்தில் பங்கெடுத்துக் கொண்ட கந்தன், சின்னாயியை அடைவதற்கு முன்பு பிரயத்தனம் செய்தானல்லவா? முருகன் போனவுடன் தன்னுடைய அன்பு மொழிகளால் அவளுடைய தூய மனத்தைக் கலைந்தான்!

அவளும் அப்பாதகனின் வலையில் சிக்கினாள். கந்தன் சின்னாயியை அழைத்துக் கொண்டு ஊருக்கு அப்பாலுள்ள அஞ்சலையாற்றின் மத்தியிலுள்ள சிவன் திட்டில் குடியேறினான்.

மலேயாவுக்குச் சென்ற முருகனோ, ஜப்பான் படையெடுத்தவுடன் ஒருநாள் திடீரென்று தப்பித்துக் கொண்டு கால்நடையாகப் பிரயாணம் செய்து ரங்கூனையடைந்து, அங்கிருந்து நடந்து கல்கத்தாவை அடைந்தான்.

அப்பொழுது கருணைமிக்க கவர்ன்மெண்டார் அநாதைகளுக்கு உணவளித்து, போஷித்து, அவர்களை இலவசமாக ரயிலில் ஏற்றினார்கள். அவர்களில் முருகனும் ஒருவன்.

முருகன் தன் சொந்த ஊரையடைந்தான்.

அவன் போகும்போது மனத்தில் பின்வருமாறு எண்ணிக் கொண்டே சென்றான்:

'நாம் நம் அன்பு மனைவியைக் காணப் போகிறோம். நம் குழந்தையையும் பார்ப்போம். அப்போது அவளிடம் கடிதம் போடாததற்கு மன்னிப்புக் கேட்போம். அப்பொழுது அவள் பரவாயில்லையென்பாள்...'

ஊர் சமீபித்தது. முன்பு இருந்த வீட்டையடைந்தான். முருகன் இப்பொழுது முன் முருகனாயில்லை. சிங்கப்பூர் உடையுடுத்தி மீசை, தாடி வளர அசல் முஸ்லிம்போல் காணப்பட்டான்.



ஆதலால் ஒருவராலும் அவனைக் கண்டு கொள்ள முடியவில்லை.

முருகன் பழைய வீட்டையடைந்தவுடன் அங்கு யாரும் இல்லாததை அறிந்தான். அங்கு ஆப்பம் விற்கும் ஊர் வம்பி என்று புகழ்ப்படும் தப்பிக் கிழவியைப் பார்த்து, "ஆயா! சின்னாயி எங்கே?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "அவளா? படு மோசக்காரி! புருஷன் இறந்து விட்டான் என அறிந்தவுடன் கந்தனை இழுத்துக் கொண்டு ஓடி விட்டாள்" என்றாள்.

முருகனுக்குத் தலை சுழன்றது. அவனுடைய மனக் கோட்டைகள் இடிந்து வீழ்ந்தன. அப்பொழுது மணி இரவு ஏழு. பேசாமல் அஞ்சலை நதிக்கரையை அடைந்தான்.

அப்பொழுது சிவன் திட்டில் ஒரு புதிய குடிசையைக் கண்டான். உள்ளுக்குள்ளிருந்து விளக்கு வெளிச்சம் வந்தது. அந்த நிசப்தமான இருளில் 'கலகவென சின்னாயியின் சிரிப்பொலி கேட்டது. திடுக்கிட்டான்.

சின்னாயியைக் கடைசி முறை பார்க்க குடிசையின் அருகில் சென்றான். அங்கு அவன் சின்னாயியையும், தன்னுடைய குழந்தையையும், கந்தனையும் கண்டான்.

"ஏ அஞ்சலையாறே! காத்தாயி தேவியே! முன்பு விளையாட்டுக் கல்யாணத்தில் இருவரை சின்னாயி மணவாளனாக அடைந்தாள். இந்த வாழ்க்கை விளையாட்டிலும் இருவரோடு வாழ்க்கை நடத்துகிறாள். முதலில் என்னுடன், பிறகு இவனுடன். இது என்ன உலகமா? இருள் சூழ்ந்த நரகமா? இதோ நானே இப்பூலோக நரகத்தை விட்டுச் செல்கிறேன். சின்னாயி! கந்தா உங்களுக்குக் கடவுள் அருள் புரியட்டும்" என்று கூறிக் கொண்டே, 'யானைப் பள்ளம்' என்று கூறப்படும் அஞ்சலையாற்றின் ஒரு பாகத்தில் குதித்தான்.

இதைக் காணச் சகியாது போல் சந்திரனும் மேகங்களுக்கிடையில் மறைந்தான்.

அஞ்சலையாற்றுத் தண்ணீரும் அவனுடைய கனத்தைத் தாங்காது கரையின் மேல் தண்ணீரை வாரித் தெளித்தது.

● ● ● ●

## நண்பா, மறந்துவிட்டாயா?

நட்பு என்பது உயர் உள்ளத்துப் பண்பிற்கு அடையாளம். அந்தத் தடம் புரளும்போது, அதனால் பாதிக்கப்பட்ட சங்கரன் என்ற மாணவனின் உள்ளம் படும் பாட்டை உணர்ச்சி நிறைந்த சிறுகதையாக்கி இருக்கிறார் விக்கிரமன் (வேம்பு).

உயிர் நண்பனாக சங்கரனால் நேசிக்கப்பட்ட மனோகரன் ஐ.சி.எஸ். தேர்வில் தேறி, கலெக்டர் பதவியேற்கும் தகுதியோடு வந்ததும், சங்கரை அறியாதவன் போல உதறித் தள்ளுகிற மன மாறுதலை இந்தக் கதையில் படித்துவிட்டு, 'இப்படியும் ஒரு நண்பனா?' என்று வேதனை ஏற்படுகிறது.

'நண்பா! மறந்து விட்டாயா?' என்று சங்கரன் எழுப்பும் கூக்குரல் எங்கிருந்தோ இப்போதும் கேட்கும் ஓர் உணர்வு கதை படிக்கும்போது உண்டாகிறது.

இந்த சிறுகதையையும் 'மாலதி' இதழில்தான் நான் வெளியிட்டேன். விக்கிரமனின் எழுத்தாற்றலுக்கு - அவருக்குப் பதினைந்து வயதிருக்கும் - அந்தக் காலத்திலேயே மகுடம் சூட்டிக் கொண்ட மற்றொரு படைப்பு இது. 'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்பதற்கு இதுவே ஒரு சான்று.

- நவீனன்





# 2. நண்பா, மறந்துவிட்டாயா?

அன்று எம்.ஏ. பரீட்சை முடிவு வரும் தினம்.

காலேஜ் பையன்களும் உபாத்தியாயர்களும் குதூகலம் கொண்டனர்.
சங்கரனும், மனோஹரனும் நெருங்கிய நண்பர்கள். ஒருவருக்கொருவர்
கனவிலும் விரோதம் செய்து கொள்ள மாட்டார்கள்.

காலேஜ் மாணவர்களில் சிலர் சங்கரனே பிரெசிடென்சியில் முதன்மை
யாகத் தேறுவான் என்றார்கள். சிலர் மனோஹரனே வருவான் என்று
பந்தயமும் கட்டினார்கள்.

'ஹிந்து', 'மெயில்' என்னு பத்திரிகை விற்கும் சிறுவன் கூவிக்
கொண்டே சென்றான். காலேஜ் மாணவர்கள் 20 பத்திரிகைப் பிரதிகளை
வாங்கிக் குதூகலத்துடன் பார்த்தனர்.

அதில் 'சங்கரனே மாகாணத்தில் முதன்மை ஸ்தானம் பெற்றான்'
என்றிருந்தது.

சென்னைக் கடற்கரை. சங்கரனும் மனோஹரனும் பேசிக் கொண்
டிருந்தார்கள்.

மனோஹரன் முகத்தில் மந்தஹாசம் தவழ்ந்தது.

சங்கரன் முதன்மையாகத் தேறினாலும் அவன் கவலையே உருவா
யிருந்தான்.

மனோஹரன் சந்தோஷத்துடன், "என்ன சங்கர்? பிரெசிடென்சி
ஃபர்ஸ்டா? நானோ பிரெசிடென்சி செகண்ட் என்றாலும் உன் முகத்தில்
சந்தோஷம் காணோம்! ஸ்காலர்ஷிப் வேறு ஐ.சி.எஸ். படிக்கக்
கிடைத்திருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் வருத்தமாயிருக்கிறாய்?"
என்று இருவருக்குமிருந்த அமைதியைக் கலைத்தான்.

அதற்கு சங்கரன், "பிரெசிடென்சி ஃபர்ஸ்ட் இருந்தாலென்ன... இது
சாப்பாடு போடுமா? என் மாமாவை இந்த க்ஷணத்தில் காப்பாற்றுமா?
ஸ்காலர்ஷிப்பில் எம்.ஏ. பாஸ் செய்தாகி விட்டது. வாழ்க்கையை நடத்த
யார் ஸ்காலர்ஷிப் கொடுப்பார்கள்?" என்றான்.

மனோஹரன், ''என்னப்பா... என்னமோ சொல்கிறாய்? அது கிடக்கட்டும்... ஐ.சி.எஸ். சேரப் போகிறாயல்லவா! அதிலும் ஃபர்ஸ்ட் அடித்து விடுவாயல்லவா?''

சங்கரன், ''ஐ.சி.எஸ். யாருக்கு வேண்டும்? பணமுள்ளவர்களுக்கு... ஏழைகளுக்கல்லவே. நீ போய் வா. நான் வந்தால் என் மாமாவை யார் காப்பாற்றுவார்கள்? ஐ.சி.எஸ். போய் பாஸ் செய்து கலெக்டராகத் திரும்பி வருகையில் நான் ஏதாவது பிச்சையெடுக்க வருவேன். அப்போது 'டாம்... நான்சென்ஸ்' என்று விரட்டுவாய்!''

மனோஹர், ''பார்த்தியா... இன்று இவ்வளவு நட்பு கொண்டவர்களாயிருக்கிறோம். அந்த நட்பு நாளைக்கு எங்கே போய்விடும்? வா... ரூமுக்குப் போகலாம்'' என்று சமாதனப்படுத்தினான்.

இருவரும் விட்டையடைந்தார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை. பம்பாய் எக்ஸ்பிரஸ் மனோஹரனை பம்பாய்க்குக் கொண்டு சென்றது. அவன் பம்பாயில் கப்பலேறி இங்கிலாந்து செல்லப் போகிறான்.

ஆண்டுகள் மூன்று சென்றன.

இருளடைந்த மதறாஸில் ஒரு சந்தில் சின்னஞ்சிறு வீடு. விளக்கின் கீழ் சங்கரன் எம்.ஏ. கிழிந்த உடையுடன் பரட்டைத் தலையுடன் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஆசிரியரிடமிருந்து திரும்பி வந்த கதைகள் குவிந்து கிடக்கின்றன.

சங்கரன் எழுதுவதை நிறுத்தி படுக்கையை விரித்து கையில் அன்று வந்த தினசரியுடன் படுத்து வாசிக்கலானான்.

ஒரு மூலையிலிருந்த ஒரு செய்தி அவன் கண்ணில் பட்டது.

'மிஸ்டர் மனோஹர் எம்.ஏ., ஐ.சி.எஸ். சென்னை கலெக்டராக பிப்ரவரி 8ஆம் தேதி பதவி ஏற்க வருகிறார்' என்றிருந்த செய்தியைப் பார்த்தவுடன் அவன் முகம் மலர்ந்தது.

பிப்ரவரி எட்டாம் தேதி. சென்டிரலில் ஏகக் கும்பல். போலீஸ்காரர்கள் கலெக்டர் வருகையை எதிர்பார்த்த வண்ணமாக இருந்தனர்.

சங்கரன் மயிலாப்பூரிலிருந்து சிறிது வாரப்பட்ட பரட்டைத் தலையுடனும், அழுக்கடைந்த கதர் வேட்டியுடனும், ஒரு கிழிந்த கதர் ஜிப்பாவுடனும் கால் நடையாக நடந்து வந்து சென்டிரலில் தன் நண்பன் வருகையை எதிர்பார்த்தான்.



பம்பாய் மெயில் புகையைக் கக்கிக் கொண்டு 'ஹோ' என்னும் சப்தத்துடன் பிளாட்பாரத்தில் வந்து நின்றது.

மனோஹரனும் ஓர் ஆங்கில மாதுவும் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கி வெளியே வந்தனர்.

அநேக ரோஜா மாலைகள் அவர்கள் கழுத்தில் வீழ்ந்தன. அநேகர் அவனோடு கை குலுக்கினார்.

ஓர் உருவம் பரட்டைத் தலையுடன் - கிழிந்த உடையுடன்... கும்பலில் நெக்கி, அருகில் சென்று ''மிஸ்டர் மனோஹர்... குட் ஈவினிங்... நீ வருவதைக் குறித்து மிகவும் சந்தோஷம்'' என்றது.

அதைச் செவியுற்ற மனோஹர், ''டாம்... நான்சென்ஸ்! யார் உன்னை இங்கே விட்டது? அந்நோன் பர்ஸன்... கெட் அவே'' என்றான்.

இதைக் கேட்டதும் பல கைகளும், பல முரட்டுக் கரங்களும் சங்கரனை வெளியேற்றுவதில் ஆவல் கொண்டன.

இருளடைந்த சென்னையில் அதே சந்து; அதே வீடு.

சங்கரன் அதே கோலத்துடன் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ''நண்பா! ஐ.சி.எஸ். போய் வந்தால்... பிரயோஜனம்... நட்பை மறத்தல்... என்ன உலகம்? நண்பா, மறந்துவிட்டாயா?'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

● ● ● ●

# காய்ந்த மல்லிகை

67 ஆண்டுகளுக்கு முன்பு சிறுகதை இலக்கியச் சூழல் நிலவிய வண்ணங்களை 'காய்ந்த மல்லிகை' என்னும் இச்சிறுகதை பிரதிபலிக்கிறது.

சிறுகதை இலக்கியம், இன்று பல நிலைகளில் வளர்ந்துள்ளது. என்றாலும் அவற்றின் அடிப்படைத் தன்மை மாறாதல்லவா? அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கிய நிலையைக் கவனத்தில் கொண்டு இக்கதையைப் படிக்கும்பொழுது, இதன் சிறப்பியல்புகள் மனத்தில் பதியும்.

கலைமாமணி விக்கிரமன் அவர்கள் 'வேம்பு' என்னும் தம் இயற்பெயரில் எழுதியுள்ள 1944ஆம் ஆண்டு இச்சிறுகதையில் பாத்திரப் படைப்புகள் யதார்த்த நிலையைச் சித்திரிக்கின்றன. கிராமத்திலிருந்து பட்டணத்திற்குப் படிக்கச் சென்று மீண்டுத் தன் கிராமத்துக்கு வரும் இளம் வாலிபனின் உணர்வுகளை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ள முறை வெகு இயற்கையாக அமைந்துள்ளது. இடையிடையே நிகழ்காலக் கண்ணோட்டத்தில் சில உண்மைகளைக் கூறுவதும் பாராட்டத்தக்கதாகும்.

மல்லிகா பவனமும் மல்லிகாவின் சந்திப்பும் காதலாகக் கனிந்து மணமாக முடியுமோ என்று எண்ணுமளவு விறுவிறுப்புடன் கதை செல்கிறது. அக்காலத்தில் நிலவிய ஜாதிபேதம் மல்லிகாவை மலரச் செய்யாமல், காய்ந்த மல்லிகை ஆக்கி விடுகிறது. வாசகர்கள் மனம் ஏற்றுக் கொள்ளும்படியாகச் சித்திரித்திருக்கும் ஆசிரியரின் 'உத்தி'யைப் பாராட்ட வேண்டும்.

இத்தகைய உத்திக்குத் துணையாக, படிப்பிற்காக அவன் வெளியூர் செல்ல நேரிடுவதாக ஒரு திருப்பத்தை அமைத்திருப்பது சிறுகதையின் வடிவிற்கு ஏற்றமளிக்கிறது.

மணம் பரப்பி மகிழ்வூட்ட வேண்டிய மல்லிகை, அதற்கு மாறான நிலைப்பட்டுப் போனதை மல்லிகா பவனம் 'பாம்குரோவ்' ஆனதாகக் கூறுவதில் வலியுறுத்துகிறார். கதையின் கருவுக்கும் தலைப்பிற்கும் பொருந்தும் வகையில் கொண்டு போயிருக்கும் விதம் நம் நெஞ்சில் பதிகின்றது.



சிறுகதை இலக்கியம் ஐம்பதாண்டுகளில் நிறைய வளர்ந்திருக்கிறது. கதைக்கரு (Theme), யதார்த்தம் (Reality), வடிவம் (Form), கதைப்போக்கு (Narration), கற்பனைச் செறிவு (Imagination), திருப்பமும் முடிவும் (Climax and Conclusion) ஆகிய சிறுகதைக்குரிய இலட்சணங்கள் இக்கதையில் இயல்பாகவே அமைந்திருப்பதை நான் படித்து வியந்தேன்.

ஆசிரியர் தம் 17ஆவது வயதிலேயே தெளிவான சிந்தனையுடன் விறுவிறுப்பான கதைப் போக்குடன் சரளமான நடையுடன் எழுதியுள்ள 'காய்ந்த மல்லிகை' என்னும் இச்சிறுகதை, இக்காலத்திற்கும் ஈடுகொடுக்கும் வண்ணம் அமைந்திருக்கும் நேர்த்தி வெகு அழகு!

இன்றைக்கு இலக்கியச் சோலையாக மணம் பரப்பும் ஆசிரியரின் இலக்கிய மணத்தை, இச்சிறுகதை எனும் அரும்பில் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது.

இன்றைய இளம் எழுத்தாளர்களின் நெஞ்சில் பதியும்படியாகப் பண்போடும், தெளிவோடும் எழுதப்பட்டுள்ள இச்சிறுகதை ஒரு நல்ல இலக்கியம் என்று பாராட்டுகிறேன்.

**– கங்கா ராமமூர்த்தி**

1944

# 3. காய்ந்த மல்லிகை

**‘கா**ய்ந்த மல்லிகை’ என்னும் தலைப்பைப் போட்டுவிட்டுக் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்ன எழுதுவது என்னும் எண்ணம் என்னைத் தீவிரமாக வாட்டியது. நாளைக்குள் சிறுகதை ஒன்றைக் கொடுத்தாக வேண்டும்.

என் அறையின் ஜன்னல் கதவுகள் திறந்திருந்தன. மெல்லென வீசி வரும் தென்றலிலே தோட்டத்திலிருந்து வீசும் மல்லிகையின் மணம் என்னைப் பெரும் சிந்தனையில் ஆழ்த்தியது.

சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு நான் இந்நிலையில் இல்லை. வெள்ளைத்தாள்களில், மசியால் கிறுக்கி நிரப்பி ‘கதை’ எனக் கதை பண்ணும் வழக்கம் அப்பொழுது இல்லை. ‘பணம், பணம்’ என்று பணத்திற்குப் பறக்கும் புத்தி அப்பொழுது இல்லை. பரட்டைத் தலையுடனே கிழிந்த கதராடை அணிந்து ஊரெல்லாம் சுற்றியலைந்து திரியும் பிழைப்பு அப்பொழுது எனக்கில்லை.

லட்சக்கணக்காகப் பணம் நடமாடும் ஒரு கம்பெனியிலே முப்பது ரூபாய்க்காக மணிக்கணக்காக உழைக்கும் பிழைப்பு அப்பொழுது எனக்கில்லை.

ஆனால்... அந்தக் காலத்தை நினைக்கையில் என் மனம் சொல்லொணா வேதனையை உண்டாக்குகிறது. கால தேவனுக்குத்தான் என்ன வேகம்? மாயத் தொழில் ஈடுபட்டு மக்களை மயக்குவதில்தான் என்ன ஆசை?

சலசலவென்று ஓடிக்கொண்டிருக்கும் பவானி ஆற்றின் கரையை ஒட்டி, பச்சைப் பசேலென்று கண்ணைக் கவரும் தோட்டங்களின் நடுவே விளங்கியது பூந்தோட்டம் கிராமம்.

பூந்தோட்டம் என்னும் பெயருக்கேற்றபடி அக்கிராமத்தைச் சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மலைகளும், மலர்களைத் தாங்கி வளர்ந்திருக்கும் பூந்தோட்டங்களும், கருப்பஞ் சோலைகளும் செழித்து விளங்கி அவ்வூருக்குத் தனியழகை அளித்து வந்தன.



இயற்கை வளம் பூர்ண சோபையுடன் விளங்கிய அந்தக் கிராமத்தில்தான் துரதிருஷ்டம் பிடித்த நான் பிறந்தேன். என் தந்தை பணக்காரரல்லர். ஏதோ கொஞ்சம் கரும்புக் கொல்லை உண்டு. விளைகிற கரும்பை ஆலை முதலாளிகளுக்குக் கொடுக்காமல், தானே வெல்லம் காய்ச்சுகிறேன் என்று பல ரூபாய்களைக் கோட்டை விட்டவர். நான் படித்துப் பாஸ் செய்து வேலைக்குப் போய்ச் சம்பாதித்து வந்தால்தான் குடும்பத்துக்கு விமோசனமென்று என்னை அவ்வளவு கஷ்டத்திலும் பக்கத்திலுள்ள மேட்டுப்பாளையத்திற்கு அனுப்பிப் படிக்க ஏற்பாடு செய்தார்.

மூன்றாவது பாரம் வரையில் நான் மேட்டுப்பாளையத்திலேயே தான் படித்து வந்தேன். ஆண்டவன் ஏன் எனக்குப் புத்தியை அளித்தார்?

‘படிப்பு வரவில்லையே புத்தியை அளி ஆண்டவா!’ என்று கதறுகின்றவர்களுக்கு அதை அளித்திருந்தால், அவர்கள் எவ்வளவோ பயன் பெற்றிருப்பார்கள்.

நான் நன்றாகப் படிப்பதைக் கண்டு என் பள்ளித் தலைமைப் பாதிரியார் சம்பளமில்லாமல் மேலே படிக்க ஏற்பாடு செய்தார்.

எப்படியாவது நான் படித்துச் சம்பாதிக்க வேண்டும் என்னும் ஆசை என் தந்தைக்கு இருந்ததால், நான் அவருடைய ஒரே மகனென்றும் பாராது சென்னைக்கு என்னை அனுப்பினார்.

பாதிரியார் கொடுத்த கடிதத்தைச் சென்னைக்குச் சென்று அவர் குறிப்பிட்டவரிடம் காட்டினேன். அவரும் பாதிரியார்தான். என்னைப் புன்முறுவலுடன் வரவேற்றார். பெயர், சாதி, மதம் ஆகியன பற்றிக் கேட்டதற்குக் கணீர் கணீர் என்று பதிலளித்தேன்.

‘உனக்கு இயேசுநாதரைப் பற்றித் தெரியுமா? பைபிள் படித்திருக்கிறாயா?’ என்று கேட்டார். அவரது முகம், என் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தது.

நான் சட்டென்று ‘‘ஓ! படித்திருக்கிறேன். இவ்வளவு நாள் அதைப் படித்த மகத்துவந்தான் என்னை இங்கு அனுப்பியது’’ என்றேன். அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

மறுநாளே என்னை ஹாஸ்டலில் சேர்த்துவிட்டுப் பள்ளிக்கும் போகுமாறு சொல்லிச் சென்றார்.

எனக்குச் சென்னைப் பட்டணத்தைப் பார்க்க அப்பொழுது மிகவும் ஆச்சர்யமாயிருந்தது. கட்டை வண்டியை விட மெதுவாகச் செல்லும்

டிராம் வண்டியையும், மின்சார விளக்கையும், வெயிலையும் பார்க்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால், இன்று இதே சென்னை நகரம் எனக்கு நரகமாகத் தோன்றுகிறது. டிராம், பஸ் ஆகியவற்றின் கோரசப்தமும் தனிமையையே அறியாத கடற்கரையில் அழும் மின்சார விளக்குகளையும் காண எனக்குக் கசப்பாக இருந்தது.

உயர்நிலைப் படிப்பு உருண்டோடி மறைந்தது. எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் சிறப்பாகத் தேறிவிட்டேன். பாதிரியாருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. என் தாய் தந்தையரைப் பார்த்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், பாதிரியாரிடம் விடை பெற்றுக் கொண்டு பூந்தோட்டம் கிராமத்துக்குப் புறப்பட்டேன்.

பூந்தோட்டம் முன்பைப் போலில்லை. மேட்டுப்பாளையம் ஸ்டேஷனில் இறங்கி எங்கள் கிராமத்தை நோக்கி வருகையிலேயே மல்லிகையின் மணம் கம்மென்று வீசத் தொடங்கிவிட்டது. தென்றலின் இனிமையிலே, கலந்து வரும் மல்லிகையின் மணம் என்னை மறக்கச் செய்தது.

ஊருக்குள் புகுமுன்னரே, சிறு தோட்டத்திற்குள் புதிதாக நகர பாணியில் கம்பீரமாகக் கட்டப்பட்ட ஒரு வீடு கண்ணில்பட்டது. அழகான சிறு வீடும், வீட்டைச் சுற்றியுள்ள சிறு தோட்டமும், தோட்டத்திலே வெள்ளை வெளேரென்று பூத்துக் குலுங்கி இருக்கும் மல்லிகைப் பூவும் என் கவனத்தை மிகவும் கவர்ந்தன.

மல்லிகைத் தோட்டத்திற்கும், அழகிய வீட்டிற்கும் ஏற்றாற்போல் 'மல்லிகை பவனம்' என்று பெயர் இடப்பட்டிருந்த அவ்வீட்டின் பெயரைப் படித்தவுடன், எங்கள் கிராமம் நாகரிகமடைந்ததைப் பற்றிச் சந்தோஷம் ஏற்பட்டது. அவ்வீட்டில் வசிப்பவர்களைப் பற்றி அறிய ஆவல் உண்டானதால், என் தந்தையிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தேன்.

''ஏதப்பா... இப்படி கம்மென்று வாசனை வீசுகிறதே?'' என்றேன்.

''அதோ... அந்த மல்லிகை பவனத்திலிருந்துதான் வீசுகிறது. நீ இந்தக் கிராமத்திலிருக்கையில் இந்த மாதிரி வீடு ஏது?'' என்றார்.

நானும், ''ஆமாம், சென்னை முறையில் கட்டப்பட்டிருக்கிறதே, யாருடைய வீடப்பா?'' என்று கேட்டேன்.

என் தந்தை சட்டென்று பதில் சொல்லவில்லை. என்னவோ யோசிக்கிறார் என்று எண்ணினேன். சிறிது நேரம் கழித்து, ''நானும்...



இது போன்றதொரு வீடுதான் கட்ட வேண்டுமென்று எண்ணினேன். நாமும்... என்ன செய்வது? நீ படித்துப் பாஸ் ஆகிவிட்டாய். இனி ஏதாவதொரு வேலைக்குப் போய்ச் சம்பாதித்தால் உண்டு'' என்று ஏதேதோ பேசிக் கொண்டே வந்தார்.

ஆனால், என் மனம் மல்லிகை பவனத்தின் மாடியின் மேல் நின்று கொண்டிருப்பவர் மீதும், அவர் பின்னால் நின்று கொண்டிருக்கும் பெண்ணின் மீதும்தான் சென்றது.

இரண்டு நாள்கள் கழிந்தன. ஒருநாள் மாலை, நான் வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்துகொண்டு பாரதி பாடல்களைப் படித்துக் கொண்டிருந்தேன். என் தந்தை வேகமாக வந்தார். ''மணி, முதலியார் வீட்டுக்குப் போகலாம் வா... உன்னை அவருக்குப் பார்க்க வேண்டு மாம்'' என்றார்.

'இந்த வீடுதானா?' என ஆச்சர்யத்தால் என் முகம் மலர்ந்தது. நான் ஊருக்கு வந்த அன்றே என் மனத்தைக் கவர்ந்த அதே மல்லிகை பவனம்தான். தோட்டத்திற்குள் நுழையும்போதே எனக்கு ஒருவித உணர்ச்சி இதயத்துள் எழுந்தது.

''வாங்கோ!'' என்று என் தந்தையை வரவேற்றபின், ''வாப்பா!'' என்று என்னையும் புன்முறுவலுடன் வரவேற்றார் முதலியார்.

சிறிது நேரம் எங்களிடையே அமைதி நிலவியது. கூடத்தின் எதிரேயிருந்த அறையில் கலகலவென்று வளை குலுங்கும் ஒலியும், யாரோ நடமாடும் ஓசையும் தவிர வேறு வித ஒலியுமின்றி அந்த வீடு நிசப்தமாய் இருந்தது.

''எங்களைக் கூப்பிட்டனுப்பி இருந்தீர்களாமே!'' என்று என் தந்தை முதலில் பேச முற்பட்டார்.

''ஆமாம்... உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக் கிறேன்'' என்று கூறிவிட்டு ஹாலுக்கு எதிரேயுள்ள அறையை நோக்கி, ''பாப்பா... இவர்களுக்கு ஏதாவது சாப்பிடப் பழம் கொண்டு வா!'' என்றார்.

''அதெல்லாம் எதுக்குங்க'' என்று என் தந்தை சொல்லி முடிப்பதற்குள் பாப்பாவே கையில் பழத்தட்டுடன் அங்கே வந்தாள்.

நான், யாரையோ முதலியார் 'பாப்பா' எனக் கூப்பிடுகிறார் என்று எண்ணினேன். ஆனால், காட்சியளித்ததோ... ''இவள்தான் என் பெண்... மல்லிகா!'' என்று அவர் என் தந்தையைப் பார்த்துக் கூறினார்.

மெல்ல, பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டே பேசிக் கொண்டிருந் தோம். என் தந்தையும் முதலியாரும் பேசியதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். ஹூம்... சும்மாவா உட்கார்ந்திருந்தேன்? என் மனம் முழுதும் மல்லிகை மலரைப் போன்று அழகு மணம் வீசி நிற்கும் மல்லிகாவின் மீதிருந்தது.

முதலியார் என் பக்கம் திரும்பினார். ''தம்பி! நீ பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்ததைக் கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம்!'' என்றார்.

நான் மௌனமாக இருந்தேன். பிறகு அவர், ''தம்பி... உனக்கு டைப் அடிக்க வருமா?'' என்று கேட்டார்.

நான் சிறிது புன்முறுவலுடன், ''எங்கள் ஹாஸ்டல் வார்டனுக்காக அடிச்சுப் பழக்கமிருக்கு!'' என்றேன்.

உடனே அவர் என் தந்தை இருக்கும் பக்கம் திரும்பி, ''என்னங்க, பையனை மேலே எதுக்காவது படிக்க வைக்கப் போறீங்களா?'' என்றார்.

என் தந்தை பெருமூச்சுடன், ''படிக்க வைக்க ஆசைதான். பணம் எங்கே இருக்கு? எங்கேயாவது வேலையில் அமர்த்த வேண்டியது தான்'' என்றார்.

சிறிது நேரம் முதலியார் மௌனமாக இருந்தார். பிறகு அவர், ''அன்னிக்குப் பையன் ஊருக்கு வரும்போதே பார்த்தேன். பையன் நல்ல புத்திசாலியா இருக்கான். நீங்கள்தான் எங்கேயாவது வேலைக்கு அனுப்பப் போகிறேன் என்கிறீர்கள். எனக்குப் பெரிய எஸ்டேட் இருப்பது உங்களுக்குத் தெரியும். எனக்கு அடிக்கடி இந்த மார்பு வலி வந்து பெரும் தொந்தரவைக் கொடுக்கிறது. என்னால் எதையும் கவனிக்கவே முடியவில்லை. இவனிருந்தால் வருகிற கடிதங்களுக்குப் பதிலெழுதவும், கணக்குகளைப் பார்க்கவும் சௌகரியமாக இருக்கும்'' என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என் தந்தை, ''அதற்கென்ன, உங்கள் வார்த்தைக்கு மறுப்பு என்ன சொல்வது?'' என்றார்.

முதலியார் என் பக்கம் திரும்பினார். அச்சமயம், அந்த அறையில் உள்ள இரு கண்கள் எங்களையே கவனித்துக் கொண்டிருந்தன.

நானும், ''அதற்கென்ன ஸார்... உங்கள் இஷ்டப்படி செய்கிறேன்'' என்றேன்.



''நாளைக்கே நல்ல நாளாக இருக்கிறது. வந்து விடுங்கள்!'' என்றார் முதலியார்.

நாங்களும் விடை பெற்றுக் கொண்டோம். எனக்கு அந்தக் கண்களையோ, வீசும் காற்றினில் மிதந்து வரும் மல்லிகையின் மணத்தையோ மறந்து ஒருநாள் முழுவதும் இருக்க முடியவில்லை. எப்பொழுது பொழுது விடியும் என்று காத்திருந்தேன்.

மறுநாளிலிருந்து நான் முதலியார் வீட்டிற்குச் செல்லத் தொடங்கினேன். வேலை ஒன்றும் பிரமாதமாக இல்லை. ஆனால், பொழுது மட்டும் இன்பகரமாகச் சென்று கொண்டிருந்தது. முன்பு என் கண்ணில் தென்படாத மல்லிகா, ஏதாவது ஒரு காரணத்திற்காக என் ஆபீஸ் அறைக்கு வருவாள். பழைய இலக்கியங்களில், பெண்களின் கண்களுக்குள்ள காதல் சக்தியின் வர்ணிப்பைப் படித்து, அவையெல்லாம் 'சுத்தப் போலித்தனமான கற்பனை' என்று எண்ணியிருந்த நான், கண்கூடாக அன்றுதான் காதலின் சக்தியை அறிந்தேன்.

எஸ்டேட் விஷயமாக சகல வேலைகளையும் முதலியார் என்னிடமே நம்பி விட்டு விட்டார். நான் சில நாள்கள் ஆபீஸில் முக்கிய விஷயமாகக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்பொழுது, தபால்காரன் கொடுத்த கடிதங்களை அவளே என் மேஜையின் மீது கொண்டு வைத்து விட்டுச் செல்வாள். கடிதத்தை நேரிடையாக அவளிடமிருந்து வாங்குகையில், என் கை அவள் கை மீது பட்டுவிடும். அப்பொழுது என் உடலில் உண்டாகும் உணர்ச்சியை என்னால் இப்பொழுது விவரிக்க முடியவில்லை.

எந்தவிதத்திலோ எங்களிருவருக்கும் தெய்விகக் காதல் பிறந்து வளரத் தொடங்கியது. காதலுக்குத்தான் என்ன சக்தி? அது சமூக வேற்றுமையையோ, தாழ்வு உயர்வையோ இலட்சியம் செய்யவில்லை. ஒருநாள் முதலியார் ஏதோ அவசர வேலையாக கோயமுத்தூர் சென்றிருந் தார். மல்லிகாவுக்குத் துணையாக என்னை வைத்துச் சென்றிருந்தார்.

என்னிடம் அவருக்குள்ள நம்பிக்கைதான் என்ன! அவ்வீட்டில் சமையல்காரனைத் தவிர வேறு யாரும் இல்லை.

நான் ஏதோ சில கடிதங்களை டைப் செய்து கொண்டிருந்தேன். மல்லிகாவும் உள்ளே கையில் அன்றைய தபால்களுடன் நுழைந்தாள். நான் டைப் அடிப்பதை நிறுத்தினேன்.

''ஸார்... அப்பா எங்கே போயிருக்கிறார் தெரியுமா?'' என்று கேட்டாள். அந்த 'வார்த்தைகளின்' இனிமையிலே மயங்கிவிட்ட

எனக்குச் சட்டென்று பதில் பேச முடியவில்லை. எனினும்
சமாளித்துக் கொண்டு "கோவை வரையில் போயிருக்கிறார்"
என்றேன்.

"ஸா... ர்..." என்றாள் அவள்.

"... ... ... ... ..."

அவளது குரல் தழுதழுத்திருந்தது. என் நாற்காலியின் பிடிகளில்
சொந்தமுள்ளவள்போல் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

எனக்கு என்னையே நம்ப முடியவில்லை. என்னவோ அவள்
கேட்டாள். மிருதுவான அவள் கை விரல்களின் ஸ்பரிசத்தில் மெய்
மறந்திருந்த எனக்கு, என்ன கேட்டாள் என்றே புரியவில்லை.

எவ்வளவு நேரம் அவ்விதமிருந்தேனோ எனக்கே தெரியாது. "ஸார்
காபி" என்று சமையல்காரன் கூப்பிடும் குரல் கேட்டது. நான் கனவு
உலகிலிருந்து விழித்துக் கொண்டேன்.

நாள்கள் உருண்டு காற்றினும் கடிய வேகத்தில் சென்றன. எனக்குப்
பூந்தோட்ட வாழ்க்கையிலே கசப்புண்டாகி விட்டது.

'கண்காணா இடத்திலே, காற்றுக்கு எட்டாத தீவிலே மல்லிகாவுடன்
இருப்பதே போதும்' என்று ஒரு பைத்தியக்கார எண்ணம் ஏற்பட்டது.
வேற்றுச் சாதி பெண்ணான அவளை மணப்பது இயலுமா என்று
அப்போது என் பேதை மனம் எண்ணவில்லை. ஆனால், நான் சில
வேளைகளில் 'நாம் ஏன் வேறு சாதியில் பிறந்தோம்? மல்லிகாவின்
மாமனாக ஏன் பிறந்திருக்கக்கூடாது' என்றெண்ணுவேன்.

இவ்வளவையும் சொல்லி வந்த பின்பு, இதை முடிக்கும் தறுவாயில்
வருகிறேன். இந்தக் கதையையும் சோகமாக முடித்து விட்டீர்களே என்று
என் நண்பர்கள் கேட்பார்கள். அதற்கு நானென்ன செய்வேன்? என்
வாழ்க்கை துன்பத்தோடு பின்னிக் கொண்டிருக்கும்பொழுது அதை
எப்படி இன்ப முடிவாகக் காட்ட முடியும்?

ஆறு மாதங்கள் சென்றன. எனக்கு காலேஜில் படிக்க நல்ல வாய்ப்பு
ஏற்பட்டது. பழைய பாதிரியாரின் உதவி கிட்டும் போலிருந்தது. ஆனால்,
என்னிடம் அன்பு பூண்டிருக்கும் அந்த மல்லிகாவின் இரு கண்களையும்,
கனிவுடன் கூடிய அவள் தந்தையின் முகத்தையும் விட்டு எப்படிப்
பிரிவது?

முதலியார் திடீரென இதய நோய்வாய்ப்பட்டார். அந்த நோயே
அவருக்கு இடும்பையாக முடியுமென்று யாருக்குத் தெரியும்?



டாக்டர்கள் கைவிட்டனர். அவரது மரணப் படுக்கையைச் சுற்றி
[illegible], மல்லிகா, அவுள் மாமன் மற்றும் பலர் கூடியிருந்தனர்.

என் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அவருடைய உயிர் வெளியே
[illegible] மன்றாடுவதுபோல், கண்ணிலே முட்டிக் கொண்டிருக்கும்
கண்ணீர் கீழே சிந்தப் பிரயத்தனப்பட்டது.

ஏதோ பேச வாயெடுத்தார் முதலியார். அவரால் பேச முடியவில்லை.
உயிர் நெஞ்சை அடைத்துவிட்டுக் கடைசி முறையாக அவரிடம் விடை
பெற்றுச் சென்றது.

ஒருநாள் என் வீட்டிற்குப் பழைய பாதிரியார் தேடிக் கொண்டு
வந்தார். "உனக்குக் காலேஜ் படிப்புக்கு 'ஸ்காலர்ஷிப்' கிடைத்திருக்
கிறது" என்றார்.

எனக்குப் பாதிரியார் கூறியது ரொம்பப் பிடித்தது. அந்த
வாரத்திலேயே மீண்டும் நான் சென்னைக்குப் புறப்பட்டு விட்டேன்.ங

நாள்கள் மறைந்து கொண்டிருந்தன. கொஞ்சம் கொஞ்சமாகப்
பூந்தோட்ட வாழ்க்கை மலர்ந்து பின் வாடிய மலர்களைப் போன்றாகியது.
ஒருநாள் ஹாஸ்டலில் நானிருக்கையில் என் பெயருக்கு ஒரு தபால்
வந்தது.

ஒருமுறை கடிதத்தைப் படித்து முடித்தவுடன் எனக்கு என்னவோ
செய்தது. மறுமுறை படிக்கத் தோன்றவில்லை. இப்பொழுதும் எனக்கு
அக்கடிதத்தின் சுருக்கத்தைச் சொல்லப் பிடிக்கவில்லை. அப்படியே
அந்தக் கடிதம் முழுமையையும் கீழே கொடுத்து விடுகிறேன்.

"அன்பு! இக்கடிதத்திலிருந்து என்னை யாரென்று தெரிந்து
கொண்டிருப்பீர்கள்.

நீங்கள் பூந்தோட்டத்தை விட்டுச் சென்ற மறு மாதமே என் மாமன்
மகன் சண்முகத்துக்கும், எனக்கும் திருமணம் நடந்தது. எனக்கு என்
தாய் 'மல்லிகா' என்று பெயர் வைத்ததை விட துர்பாக்கியவதியென
வைத்திருக்கலாம்.

என் கணவருக்குக் காசநோய் உண்டென்பது எனக்குத் தெரியாது.
அது அவர் உடலை உள்ளுக்குள்ளேயே அரித்து வந்தது. கடைசியில்
நான் சென்ற வாரம் பெண்களுக்குரிய இலட்சணங்களை இழந்தேன்.

ஸார்! இனி உங்களிடம் ஒன்றையும் ஒளிக்காமல் கூறுகிறேன். மனித
வர்க்கத்திலே ஒதுக்கப்பட்ட இனமாக இருந்து வாழ்வதில் பயமென்ன?

நல்ல மலர் இன்றி, மஞ்சள் இன்றி, கலகலப்பான பேச்சின்றி வாழ்வு எதற்கு?

என் சகோதரி பவானி நதி என்னை அழைக்கிறாள். வருகிற அமாவாசை இரவு அவளுடன் சேர்ந்து விடப் போகிறேன்.

முடிவாக என்னை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் துணையாக வருபவளுக்கு அளிக்குமிடத்தில் முடிந்தால் எனக்கும் பாகம் கொடுங்கள்.

மல்லிகா"

எங்கிருந்து வந்தது என்ற விலாசமே இல்லை. கடித உறைக்குள் நான்கைந்து காய்ந்த மல்லிகைப் பூவிதழ்கள் இருந்தன.

நான் பரபரப்புடன் என் துணிப் பெட்டியின் அடியில் வைத்திருந்த பழைய டைரியில் வைக்கப்பட்டிருந்த மல்லிகை மலர்களை எடுத்தேன். சருகுபோல் காய்ந்திருந்த இதழ்களுடன், மல்லிகா அனுப்பிய மலர்களையும் சேர்த்தேன்.

இரண்டாண்டுகள் கழிந்தன. பூந்தோட்டம் சென்றிருந்தேன்.

முன்னைப்போல் அக்கிராமத்தில் பூத்துக் குலுங்கியிருந்த மல்லிகையின் வாசனையைக் காணோம். 'மல்லிகை பவனம்' என்னும் அவ்வீட்டை ஒரு வெள்ளைக்காரன் வாங்கி, 'பாம்குரோவ்' என்னும் பெயரிட்டு, தோட்டம் முழுதும் குரோட்டன்ஸ் செடிகளை வைக்க, மல்லிகைப் பந்தல்களை வெட்டி விழ்த்தி விட்டான்.

மல்லிகாவைப் பற்றிய நினைவே அவ்வூராருக்கு இல்லை.

என் மனத்தில் காய்ந்து போன மல்லிகாவின் வாழ்க்கையும், வெட்டி வீழ்த்தப்பட்டுக் காய்ந்து கொண்டிருக்கும் மல்லிகைக் கொடியும் தோன்றின.

'சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி
சொல்லல் பாவம்' - பாரதி

● ● ● ●



# வாணக்காரன்

1945 ஆம் ஆண்டு எழுதப்பட்ட சிறுகதையா இது? நம்பவே முடியவில்லை!

சிறுகதையின் வடிவம் எப்படிப்பட்டது, அதன் வீச்சு என்ன, இரண்டு வரிகளுக்கு நடுவே தொக்கி நிற்கும் மனோதத்துவம் என்ன என்று சிரமப்பட்டு இலக்கண இலக்கியங்களை நுணுக்கமாக ஆராய்ந்து அலசிக் கொண்டிருந்த காலகட்டத்தில் வெளியான சிறுகதை. அப்பொழுது இலக்கியம் படைப்பவர்களிடையே குழுக்கள் இல்லை.

அன்றைய காலகட்டப் படைப்பாளர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாணியில் எழுதினார்கள். அவரவர் திறமையைப் புரிந்து கொண்டு ஒவ்வொருவர் எழுத்தும் மதிக்கப்பட்டது. விமர்சிக்கப்பட்டது.

புதுமைப்பித்தன் ஒரு பாணி, கு.ப.ரா. ஒரு பாணி, மௌனி ஒரு பாணி, தி. ஜானகிராமன் ஒரு பாணி - இப்படி அவரவர் தனித்தன்மைகள் அப்படியே அங்கீகாரம் பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதுவே மதிப்பிற்குரிய விக்கிரமன் அவர்களின் கதை சொல்லும் பாணியும் அவருக்கே உண்டான தனி பாணியில் (ஸ்டைலில்) அமைந்ததாகவே இன்றுவரை இருக்கிறது.

'வாணக்காரன்' என்னும் இச்சிறுகதையின் வடிவம் மிக நேர்த்தியானது. வாணக்காரனில் அத்தொழிலின் செய்முறை விளக்கம் இந்தச் சிறுகதைச் சேக்கிழாரால் எவ்வளவு கூர்மையாகக் கவனிக்கப்பட்டிருக்கிறது.

எளிமையான சொல் ஆட்சி, மையக் கருவின் தன்மையையொட்டி இவரால் மிக லாகவமாகக் கையாளப்பட்டிருக்கிறது.

ஒரு கதை விஷயத்தை எளிமையாகச் சொல்லுவது ஒரு முறை. எளிமைப்படுத்திச் சொல்வது மற்றொரு முறை. என்னைப் பொறுத்தவரையில் எளிமையாகச் சொல்வதே சிறந்ததாகப்படுகிறது. இதுவும் இரண்டாவது வகையைச் சேர்ந்தது.

கடவுள் நம்பிக்கை, அதற்குண்டான உள்ளத்தூய்மை ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. உள்ளத்தூய்மையை இழந்ததால் 'வாணக்காரன்' விநாயகம் முடிவில் எப்படிப்பட்ட இழப்பைச் சந்திக்க நேர்ந்தது என்பதைக் கட்டம் கட்டமாகச் சிறுகதையில் விவரித்துக் கொண்டே போகும் ஆசிரியர், 'நான் இனி குடிக்க மாட்டேன்' என்று செய்து கொடுத்த சபதத்தை வாணக்காரன் மீறினபோது, அவன் அதற்குரிய பெரிய தண்டனையொன்றைப் பெறுகிறான் என்றும் கூறிக் கதையை முடிக்கிறார்.

சிறுகதைக்கு முன்னுரையோ விமர்சனமோ எழுதும்போது கதைச் சுருக்கத்தைச் சொல்லுவது அத்தனை சிலாக்கியமானதன்று. விமர்சனத்தைப் படித்து விட்டு மேலே போய்விடுவார்கள். எனவே, கதையைச் சொல்லாமல் அது ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை மட்டுமே விவரிக்கிறேன்.

கடவுள் நம்பிக்கையின் முக்கியத்துவம், குடிப்பழக்கத்தால் ஏற்படும் இழப்பு போன்றவற்றை ஒரு மின்னல் கீற்றுப் போலக் கோடிட்டுக் காட்டிவிட்டு இச்சிறுகதையை மிக எளிமையான உத்தி மூலம் விவரிக்கும் பாங்கிலே ஆசிரியரின் பார்வை சரியாகவே பதிந்திருக்கிறது.

நேரில் பார்த்த ஒரு சம்பவத்திற்குக் கதை வடிவம் கொடுக்கும்போது அதில் அனுபவரீதியிலான சில அழுத்தங்கள் சேர்ந்துவிடும்.

வாணக்காரனிலும் இந்த அனுபவ ரீதியிலான அழுத்தம் சரியாகவே வந்திருக்கிறது.

- மகரிஷி





# 4. வாணக்காரன்

நண்பரும் நானும் பெரும்பாளையம் குளத்தின் படிக்கட்டில் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். கோயிலில் 'ஓம் ஓம்' என மணி ஒலித்துக் கொண்டிருந்தது. இடையிடையே 'டமீல்... டமீல்' என அதிர்வேட்டின் ஓசை அதிர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. வானத்து ஆறாம் பிறையின் இளஞ்சாயல் குளத்து நீரில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

''இந்தச் சந்திரனும், குளத்து நீரும் எவ்வளவு இன்பத்தை அளிக்கின்றன நமக்கு - ஆனால், அதோ அந்தக் கோயிலின் மதிலுக்கு உட்புறத்தில் இருக்கும் வாணக்காரன் - அதிர்வெடியிடம் பழகும் அவன் உள்ளம் ஒவ்வொரு விநாடியும் எவ்வளவு துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்?'' என்றார் நண்பர்.

களுக்கென்று சிரித்துவிட்டேன் நான். ''துன்பமென்னப்பா... தொழில் செய்பவனுக்குத் துன்பமேது? இன்ப நினைவுதான் அவனது தொழிலை ஆக்குகிறது'' என்றேன் நான்.

''உனக்கு அனுபவம் போதாது. எழுத்தாளர் வேலையோ, பாடகர் வேலையோ அன்று; தொழிலின்பம் அனுபவிக்க. வாணக்காரன் நெருப்புடன் விளையாடுகிறான். அதுவும் அவன் அதிர்வெடி போடுகையில் கெட்டிக்கப்பட்ட ரசாயனத்துடனும் தீயுடனும் பழகுகிறான், பாம்புச் சிநேகிதம்போல்!'' என்றார் நண்பர்.

அதிர்வெடியைக் கண்டாலே எனக்குப் பயம். அந்தச் சப்தத்தைக் கேட்கும்போதெல்லாம் பழைய கால பீரங்கியின் ஒலியை உருவகப் படுத்திக் கொள்வேன்.

மரக்கட்டையிலுள்ள குழிகளில் மருந்தைக் கெட்டித்துத் திரியை வைத்துத் திரித்து நெருப்பை இட்டு உடனே வெடிப்பதற்குள் ஓடிவருவது சாதாரண வேலையன்று என்பது எனக்குத் தெரியும். ஆனால், நண்பரின் வாயைக் கிண்டிவிடவே அது போல் கூறினேன். நான் கேட்டது நல்லதாகப் போனது. நல்ல கதை ஒன்று எழுதக் கிடைத்தது.

''தம்பி... உனக்கென்ன தெரியும்? வாணக்காரன் தொழிலுக்கு திறமையும் தூய்மையும் வேண்டும்'' - அவர். என்னைவிட மூத்தவர் என்றாலும் நண்பராகப் பழகினோம். தம்பி என என்னை அழைப்பார்.

''ஹா... ஹா... திறமை வேண்டும்தான்! ஆனால், தூய்மை எதற்கு நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது!''

''ஆமாம், ஆமாம்... நான் சொல்வது வேடிக்கைதான். இந்த காலத்தில் அனுபவத்தையும், உண்மையையும் யாரும் நம்ப மாட்டார்களே... வாணக்காரன் விநாயகத்தின் கதையைக் கேள்விப் பட்டிருந்தாயானால், இதுமாதிரி என்னைக் கேட்டிருக்க மாட்டாய்'' என்றார் அவர் கோபத்துடன்.

'வாணக்கார விநாயகம்' என்றவுடன் நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். 'டுமீல் டுமீல்' என்னும் ஒலி ஒரு கதையையே உண்டு பண்ணுவதாயிருப்பின் அதன் மகிமையை நீங்களும் அறிய வேண்டாமா?

''இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பிருக்கலாம். இதே பெரும் பாளையத்தில்தான் நான் படித்துக் கொண்டிருந்தேன். ஓலைச்சுவடி எழுத்துப் போல் அந்தச் சம்பவம் என் மனத்தில் மங்கி மூன்றாம் பிறை மாதிரி தேய்ந்து லேசாக நினைவிருக்கிறது. சம்பவத்தின் சாயல் மறைந்தாலும் வாணக்கார விநாயகம் என் மனத்திரையில் நினைக்கும் போது தோன்றுகிறான்.

வாணக்கார விநாயகத்துக்கு ஊரிலே தனி மதிப்பு. ஊரில் வருடா வருடம் வரும் திருவிழாவின்பொழுது அவனது வாண வேடிக்கைத் திறமையைக் காண வெகு தொலைவிலிருந்தும் மக்கள் வருவார்கள். அவன் தைரியத்தையும், திறமையையும் மெச்சாதவர்களே இல்லை.

சக்கர வாணம், சட்டி வாணம், ஊசி வாணம், ஊதல் வாணம் என்று பல வாணங்களை வடக்கேயிருந்து வரவழைத்துத் தைரியமாகக் கையாள்வான். அவற்றைவிட ஆகாயத்தில் போய்ப் பூச்சொரிந்து வெடிக்கும் செருகு வாணம் விடுவதில் அவனைவிடக் கைதேர்ந்தவர்கள் இல்லை.

அவன் விடுவது ஒன்றாவது குறுக்கு நெடுக்காகப் பாய்ந்து சோடையானதும் இல்லை. அதிர்வேட்டில் அவன் மருந்து கெட்டித்துத் திரிக்கு நெருப்பு வைப்பதே தனி விதந்தான்.

அவனுக்குத் தனி மான்யம், பிரத்யேகச் சம்பளம், சலுகை, இவற்றை விட மரியாதைதான் அதிகம்.



விநாயகம் தொழிலில் எப்படி திறமைசாலியோ அதுபோலக் குடும்பம் நடத்துவதிலும் நல்ல பெயர் வாங்கினான். 'விநாயகம் - இளம் பூரணம் போல' என்னும் உவமை பிறருக்குக் காட்டுமளவு ஒற்றுமையுடன் வாழ்க்கை நடத்தி வந்தான்.

காலையில் திருக்குளத்தில் குளித்துவிட்டுப் பட்டை பட்டையாகப் பளிச்சென்று திருநீறு அணிந்து, நடுவில் ஒரு ரூபாயளவுக்குக் குங்குமப் பொட்டிட்டு எடுப்பான மீசையை முறுக்கிவிட்டுக் கோயிலுக்குள் சென்று நடராஜ மூர்த்தியைச் சேவித்தபின்தான் ஆகாரம், மற்றவை எல்லாம்.

திருவிழாச் சமயங்களில் மானம்பட்டி ஜமீன்தார் தினமும் கோயிலுக்கு விஜயம் செய்வார். அவருடைய சௌகரியத்துக்காக, திருவிழாவில் சுவாமி புறப்படுவதற்குள் மூன்று முறை அதிர்வெடிகள் போடப்படும். அலங்காரம் முடிந்தவுடன் ஒன்று. வாகனத்தில் வைக்கும் முன் இருவெடிகள். கோபுர வாசலை நெருங்கும்பொழுது மூன்று வெடி. மூன்றாவது வெடியோசை கேட்டுத்தான் ஜமீன்தார் கோயிலுக்கு வருவார்.

இந்த வழக்கம் விடாது நடந்து வந்தது. ஊரிலுள்ளோர்கூட இரண்டாவது வேட்டொலி கேட்டபின்னே கோபுர வாயிலுக்கு தரிசனம் செய்ய வருவார்கள். அதனால் விநாயகம் உற்சவத்தின் முக்கிய காரணமாகி விட்டான். நாள்கள் கழிந்தன.

''ஒம் போக்கு வரவர எனக்குப் பிடிக்கலை. வூட்டுக்கு வரச்சே தள்ளாடி வர்றியே. காரணமென்ன?'' என இளம்பூர்ணம் ஒருநாள் அதிகாரத்துடன் அவனைக் கேட்டாள்.

எப்பொழுதும் மனைவிக்குப் பணிந்துபோகும் விநாயகம், ''ஏ புள்ளே... சும்மா உன் வேலையைப் பார்த்துண்டு போ!'' என்று கூறி விட்டான்.

ஆம்; விநாயகத்தின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. துரியோதனனுக்குச் சகுனியும், சர்ச்சிலுக்கு அமெரியும் ஏற்பட்டது போல் விநாயகத்துக்குத் தர்மலிங்கம் வந்து சேர்ந்தான்.

''விநாயகம் அண்ணே! வாண வேடிக்கை முடிச்சுட்டு வீடு திரும்பச்சே களைப்பாயில்லே? நாள் பூராவும் உழைக்கிறியே. ஒரு பட்டையைப் போட்டுப்பார்த்தியானா ராத்திரி நல்லாத் தூக்கம் வரும். களைப்பெல்லாம் போயிடும்'' என ஆலோசனைக் கூறியதுடன் நில்லாமல் தர்மலிங்கம் அழைத்தே போய் விட்டான் சாராயக் கடைக்கு.

''ஐயோ! பஞ்சமா பாதகங்களில் ஒன்றாச்சே குடிப்பது'' என்று முதலி அச்சப்பட்டான் விநாயகம். தான் வணங்கும் நடராஜமூர்த்திக் விரோதமாச்சே என்று அவன் மனச்சாட்சி குத்தியது. தயங்குவ போலிருந்த அவனைத் தட்டிக் கொடுத்தான் தர்மலிங்கம். ஒ நாளைக்கு ருசி பார்த்த விநாயகம் பிறகு குருவையும் மிஞ் விட்டான்.

சாதாரண நாள்களில் கோயிலுக்குத் தவறாமல் போய்விடு விநாயகம், காலையில் வெகுநேரம் தூங்கிக் கிடக்கலானான். கண்க கோவைப் பழம்போல சிவந்திருக்கும்.

''அய்யோ பாவி! உன்னைக் கெடுத்தவன் எவனோ? நல் குடும்பத்தில் நாகதாளியைப் போட்டானே! குடிச்சுப்புட்டு சிவன் கோயிலுக்குப் போறே. என்ன நேரப் போவுதோ?'' என்று கதறுவா இளம்பூரணம்.

மகிழ்ச்சியூட்ட மகன் மாணிக்கமிருந்தாலும், கணவனின் கெட் சேர்க்கை அவள் இதயத்தைச் சுருக்கியது.

வருடங்கள் இரண்டு சென்றன. தன் வரையில் அதிகமாகச் சுய நினைவிழக்காமல் குடித்துக் கொண்டிருந்த விநாயகம், இப்பொழு சுய புத்தியையே இழக்கலானான். கோயிலுக்குப் போவதேயில்லை. வீட்டிற்கு வருவது, அற்ப விஷயத்துக்கெல்லாம் இளம்பூரணத்துடன் போர் தொடுப்பது என்று மாறிவிட்டான். துன்ப வாழ்க்கையையே அறியாத உத்தமி இளம்பூரணத்துக்கு வாழ்க்கை வேம்பாகியது. அதனால் அவள் தளரவில்லை.

ஒருநாள் காலை குடி மயக்கம் தெளிந்து விநாயகம் எழுந்திருக்கும் சமயம் பஞ்சாயத்தார்களைக் கூப்பிட்டுக் கொண்டு தயாராய் வந்தாள். தள்ளாடி எழுந்த விநாயகம் தன்னெதிரே பலர் நிற்பதைக் கண்டான். இளம்பூரணம் அனல் பறக்கும் கண்ணுடன் நிற்பதைக் கண்டான்.

''இன்னிலேர்ந்து குடிக்கறதை ஒழிக்கிறேன்னு சத்தியம் செய்து கொடு; இல்லைன்னா நானும் புள்ளையும் கண்காணாமல் ஓடிப் போய் விடுவோம். சிவன் கோபம் பொல்லாதது. அவனது கோயில் உப்பைத் தின்று கெட்ட வழியில் போகாதே. என் நொந்த மனத்தில் ஊசியை ஏத்தாதே. இன்னிலேர்ந்து நீ குடிச்சயானா... சொல்லிட்டேன்... இந்த ஒரு புள்ளையும் உனக்கு உதவாமப் போயிடட்டும். சத்தியம் சத்தியம்'' என்றாள் இளம்பூரணம் சீற்றமுடன்.



இளம்பூரணம் இவ்வளவு துணிச்சலுடன் இப்படிச் சொல்வாள் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. பஞ்சாயத்தார் எதிரிலும், பாஞ்சாலி போல் சபதம் செய்திருக்கும் இளம்பூரணம் எதிரிலும் விநாயகத்தால் நிற்க முடியவில்லை.

ஒரு காலத்தில் அவனுக்கு எவ்வளவு மரியாதை! நான்கு மணிக்கு 'ஜாம்ஜாமென்று' மணியோசை கேட்கையில் குளத்தில் நீராடிப் பதிகம் பாடிப் பக்திக் கனவில் அமிழ்ந்தவன், இப்பொழுது சாராயச் சாக்கடையில் மூழ்கியதை எண்ணும்பொழுது அவன் உள்ளம் அவமானத்தாலும், வெட்கத்தாலும், குறுகுறுக்கும் குற்றத்தாலும் துடிதுடித்தது.

என்ன நினைத்தானோ என்னவோ, ''இளம்பூரணம்! என்னை மன்னித்துவிடு. இனி நான் சத்தியமாக் குடிக்க மாட்டேன். குடிச்சால் காளிம்மா அறிய, நடராஜமூர்த்தி அறிய, என் பிள்ளை உதவாமல் போய் விடுவான். சத்தியமிது!'' என்று கூவினான். ஒன்றன்பின் ஒன்றாக நடந்து இந்த நாடகத்தைக் கண்டு பஞ்சாயத்தார்கள் அசந்து நின்றனர்.

விநாயகம் இப்பொழுது குடிப்பதில்லை. தர்மலிங்கத்தையும் காணவில்லை. விநாயகத்தின் மகன் மாணிக்கம் நன்றாக வளர்ந்து விட்டான். அப்பனைப் போலவே சுறுசுறுப்பு. விநாயகத்திற்கு மாணிக்கத்தின் மீது அவ்வளவு உயிராகிவிட்டது. தினம் கோயிலுக்கு வெடி போடப் போகும்பொழுது அவனையும் அழைத்துச் செல்வான். தான் திரிக்கு நெருப்பு வைப்பதாகத் துடிதுடிப்பான் மாணிக்கம். மருந்து கெட்டிப்பான், திரியிடுவான், எல்லாம் செய்வான். தகப்பனுக்குப் பிறகு பிள்ளை தொழிலை விடாது நடத்துவானென்று பலர் எண்ணினர்.

வருடங்கள் மூன்று உருண்டன. மாணிக்கம் பன்னிரண்டு வயதுப் பாலகனானான். அந்த வருடம் திருவிழாவை வழக்கத்தை விட மிகச் சிறப்பாக நடத்தத் திட்டமிட்டிருந்தனர். விநாயகம் முனைந்து வேலை செய்யலானான். மாணிக்கமும் ஓடி ஓடி உழைக்கலானான்.

தேருக்கு முதல் நாள். ''என்ன விநாயகம் அண்ணே! சௌக்கியமா?'' என்னும் குரல் கேட்டு விநாயகம் திரும்பினான்.

தர்மலிங்கம் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனேயே விநாயகத்துக்குப் பக்கென்றது. எனினும் பழைய நட்பை விட முடியாதவனாய், ''வா அண்ணே! எங்கே இவ்வளவு வருடமாய்க் காணலை?'' என்றான்.

''அது சரிதான் அண்ணே... இப்படி இளைச்சுட்டியே! முன்பிருந்த விநாயகமில்லையே'' என்று பேச்சை ஆரம்பித்தான் தர்மலிங்கம். பல விஷயங்களைப் பேசிக் கடைசியில் விநாயத்தை மயக்கி மூலைக் கடைக்குக் கிளம்பினான் தர்மலிங்கம்.

''வெடி போடற நேரம்பா... இப்பக் கூப்பிடறியே'' என்றான் விநாயகம்.

''அட அஞ்சு நிமிஷத்துலே வந்துடலாம்பா!'' - தர்மலிங்கம்.

விநாயகம் சற்று யோசித்தான். மாணிக்கம் எதிரே வந்து கொண்டிருந்தான். ''டேய் பயலே! இன்னிக்கு நீ வெடி போடறயா?'' என்றான் குஷியாக விநாயகம்.

''நீங்கதான் விட மாட்டேங்கறீங்களே அப்பா!'' என்று முனகினான் மாணிக்கம்.

''சரி, இன்னிக்கு நீ போடு. ஏழரைக்கு ஆரம்பி. பார்த்துப் போடு. நான் இதோ நொடியிலே வந்துடறேன்'' என்று கூறி, தர்மலிங்கத்துடன் கிளம்பினான் விநாயகம்.

மூன்று வருடங்களுக்கு மேலாக மறந்திருந்த விஷத்தை மீண்டும் சுவைக்கும் ஆவல் விநாயகத்துக்கு எங்கிருந்தோ பீறிட்டு வந்தது.

''போடு! சாப்பிடண்ணே!'' என்று இரண்டு மூன்று திராம் அடித்தார்கள் இருவரும்.

அங்கே மாணிக்கத்துக்குக் கன குஷி - தான் வேட்டுப் போடப் போகிறோமென்று. அன்று தேருக்கு முதல் நாள். கோயிலில் ஏகக் கும்பல். வெடி போடும் இடத்தைச் சுற்றிச் சிறுவர் கும்பல். தன் வயதொத்த சிறுவர்களிடம் தன் சாமர்த்தியத்தை வெளிப்படுத்த எண்ணி நன்றாக மருந்தைக் கெட்டித்தான் மாணிக்கம்.

முதல் தடவை வெடியும் வெடித்தான். சிறுவர்களுக்கெல்லாம் பெரும் சந்தோஷம்.

பாண்டு வாத்திய முழக்கத்துடன் சுவாமி வாகனத்துக்குச் சென்று கொண்டிருந்தது. அதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாணிக்கம், 'கபகப'வென்று திரியை இரண்டு துளையிலும் வைத்தான். நெருப்பை வைத்தான்.

படார்... ஒரு வெடி வெடித்தது.



இரண்டல்லா வெடிக்க வேண்டும்? பத்து விநாடி, பதினைந்து விநாடி... இன்னும் ஏன் வெடிக்கவில்லை? திரி சரியாக வைக்கவில்லையா? என்று குழப்பத்துடன் மாணிக்கம் இரண்டாம் துளை அருகில் சென்றான். அவ்வளவுதான்.

படார்... என்று வெடித்தது. புகைப்படலம் எங்கும் சூழ்ந்தது. காதை மூடிக் கொண்டு சிறுவர்கள் பறந்தோடினர். ஆனால், புகை கலைந்தபிறகு...

சுவாமி கோபுர வாசற்படிக்கருவில் வந்தாகிவிட்டது. ஏன் இன்னும் வெடி போடவில்லை என்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். கும்பலில் விநாயகம் நின்று கொண்டிருந்தான். கோபுரத்தையும் வாகனம் தாண்டியது. இன்னும் ஜமீன்தாரைக் காணோம். மூன்றாவது வேட்டுக்கல்லவா அவர் வருவார்!

''வேட்டு போடச் சொல்லு. விநாயகம் தூங்கறானா?'' என்று கூவினார் தர்மகர்த்தா. விநாயகத்தின் காதில் அது எதிரொலித்தது. ஆம்; ஏன் மூன்றாவது வேட்டைக் காணோம்? என்று கனவு உலகத்திலிருந்து எண்ணினான் விநாயகம். கனவு அன்று மது மயக்கம்!

''அய்யய்யோ! அங்கு விநாயகத்தைக் காணோமே! ஒரு புள்ளைதான் செத்துக் கிடக்கு!'' என்று ஒருவன் ஓடி வந்து கூவினான்.

திடுக்கிட்டான் விநாயகம். ஓடினான். பின்தொடர்ந்து பலர் ஓடி வந்தனர். சாராய மயக்கத்தையும் மீறித் துக்கம் பீறிட்டது.

''அய்யோ, சபதத்தை மீறினேனே! என் பிள்ளை எனக்கு உதவாமல் போய்விட்டானே!'' என்று அலறினான் அவன். அவ்வளவுதான். மாணிக்கத்தை அணைத்துக் கொண்டு மயங்கிக் கீழே சாய்ந்தான்.

''ஏம்பா, இப்பவாவது திறமையுடன் தூய்மை இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறாயா'' என்று முடித்தார் நண்பர்.

எனக்கு உடலெல்லாம் மயிர்க் கூச்செறிந்திருந்தது. வியர்த்து விட்டது. வார்த்தைகள் வரவில்லை.

● ● ● ●

# கஸ்தூரியின் கடிதம்

கதைத் தலைப்பைப் பார்த்ததும் ஒரு பெண்ணின் காதலைப் பற்றி விவரிக்கப் போகிறது கதை என்று எண்ணினேன்.

கஸ்தூரி - ஓர் ஆணின் பெயர். அவன் ஓர் இளம் பெண்ணிடம் அன்புடன் பழகுகிறான். அது மற்றவர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப் படுகிறது பேசப்படுகிறது. ஆனால், கஸ்தூரிக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையே நிலவுவது சகோதர - சகோதரிப் பாசமே.

அவள் ஒருநாள் திருமணமாகிச் செல்கிறாள். அதன்பிறகு கஸ்தூரி அவளுக்குக் கடிதங்கள் எழுதுகிறான். அதில் அவளை 'அக்கா' என்றே குறிப்பிடுகிறான். அவளுடைய கணவன் பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறான். மனைவிக்கு எவனோ ஒருவன் கடிதம் எழுதுகிறானே என்று வீண் சந்தேகம் கொள்ளவில்லை. மாறாக அவன் தன் மனைவியிடம், 'இப்போது உன் கஸ்தூரி எப்படி இருக்கிறாள்... என்ன தகவல் வந்தது?' என்று விகற்பமில்லாமல் வினவுகிற மனம் கொண்டவனாக இருக்கிறான்.

இதுதான் கதையின் மைய இழையாகப் புலப்படுகிறது. ஆனால், இந்த இழையில் விக்கிரமன் அவர்கள் அற்புதமான சம்பவ மணிகள் பலவற்றைக் கோர்த்தளித்து விடுகிறார். சமுதாயத்தின் ஒரு கால கட்டத்தை - அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல புரட்சி நிகழ்ச்சிகளை அருமையாகப் படம்பிடித்துக் காட்டிவிடுகிறார். காந்திய யுகத்தின் கனவுகளை - இலட்சியங்களை - செயற்பாடுகளை இந்தக் கதை மிகுந்த இலக்கியத் தரம் வாய்ந்த உத்திகளோடு பிரதிபலிக்கிறது.

கதைச் சொல்லும் பாங்கில் ஒரு புதுமை மிளிர்கிறது. சிக்கலில்லாமல், தெளிந்த நீரோடை போல் செல்லும் கதைப் போக்கு. ஏராளமான சம்பவங்களை உள்ளடக்கியிருந்தபோதும் குழப்பமில்லாமல் செல்லும் பாங்கு ரசிக்கவும் பாராட்டவும் தக்கது. சுமார் ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் இதை விக்கிரமன் எழுதியுள்ளார் என்பதை எண்ணுகையில் பிரமிப்பு தோன்றுகிறது.

- கௌதம நீலாம்பரன்



1946

# 5. கஸ்தூரியின் கடிதம்

கஸ்தூரி எனக்குக் கடிதம் எழுதிப் பல மாதங்களாகி விட்டன. முன்பெல்லாம் அவனது கடிதத்தை எதிர்பார்ப்பேன். தபால்காரன் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும், சரி கஸ்தூரியின் கடிதம் எது என்பதைத் தெரிந்து கொண்டு விடுவேன். எனக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்க்கும் வழக்கம் என் கணவருக்கில்லை. நானாகக் கடிதத்தைப் பற்றி கூறினாலன்றி அவர் இந்த விஷயங்களிலெல்லாம் தலையிடுவதில்லை. அற்பத்துக்கெல்லாம் மற்ற கணவன்மார்களைப் போல் என்மீது சந்தேகப்படுவதில்லை.

கஸ்தூரி என்றால் எனக்கு உயிர். அவனை நேரிடையே சந்தித்து ஆறு வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. எனக்குக் கல்யாணம் ஆகாததற்கு முன்பு நான் கல்லுப்பட்டி கிராமத்தில் இரண்டு வருடங்கள் இருந்தேன். என் தந்தை இறந்தபிறகு என் தாயார் என்னையும் அழைத்துக் கொண்டு தன் தம்பியின் வீட்டிற்கு வரும்படியாயிற்று. என் மாமாவும் மிகக் கஷ்டப்பட்டுக் குடித்தனம் நடத்தி வந்தார். என் தாயார் அப்பா வைத்துப் போன சொத்தின் உதவியால் எப்படியோ என்னை வைத்துக் கொண்டு காலம்தள்ளி வந்தாள். நான் ரொம்பவும் பிடிவாதக்காரி என்று எல்லாரும் சொல்வதனால் 'என்னை' என்று குறிப்பிட்டேன். பிடிவாதம் மட்டும் இல்லையாம். 'வேளைக்கு வேளை தலைவாரிக் கொள்ள வேண்டும்; விதவிதமான உடை உடுத்திக் கொள்ள வேண்டும்' என்று அடம் பிடிப்பேனாம். என் தகப்பனார் முகத்துக்குப் பவுடர், தலைக்கு வாசனை எண்ணெய் இப்படியாக வாங்கிக் கொடுத்து வழக்கப்படுத்தி விட்டார். கல்லுப்பட்டி கிராமத்தில் இதெல்லாம் கிடைக்குமா?

இது விஷயமாகத்தான் எனக்கு கஸ்தூரி சிநேகமானான். நாங்கள் இருந்த வீட்டிற்கு எதிர் வீட்டிலிருந்த முன்சீப் சுந்தரராஜ ஐயரின் மகன் அவன். நான் எப்படித் தாயாருக்கு ஒரே புதல்வியோ, அவனுக்கு அவன் தந்தைக்கு ஒரே பிள்ளை. குறுகுறுவென்று பார்ப்பதற்குத் துடியாக இருப்பான். தலையில் கிராம வழக்கத்துக்கு விரோதமாகக் கிராப் வைத்துக் கொண்டிருந்தான். முதலில் நாங்கள் கிராமத்தில் வந்த அன்றே மாட்டு வண்டியிலிருந்து சாமான்களை இறக்கும்போது கூட

மாட ஒத்தாசை செய்தான். அப்பொழுதே அவன்மீது எனக்கு வாஞ்சை ஏற்பட்டது.

என்தாயாருக்குஅவனைக்கண்டால்பிரியம்என்றுசொல்வதற்கில்லை என்றாலும் வெறுப்பில்லை. சில வேளைகளில், ''ஆண்பிள்ளையோடு என்னடி விளையாட்டு?'' என்று கண்டிப்பாள். ''கல்யாணமாகிற வயசாச்சு உனக்கு. கொஞ்சம்கூடப் புத்தி தெரியலையே'' என்பாள் என் மாமி.

'ஆண்பிள்ளை! பாவம், சிறு பையன்! அக்கா - தம்பி எண்ணத்தில் பழகுகிறவன். ஐயோ பழமைவாதிகளே!' என்று தலையில் அடித்துக் கொள்வேன் நான்.

பொழுது விடிந்தவுடன் எங்கள் வீட்டிற்கு ஓடி வந்துவிடுவான் கஸ்தூரி.

'ஏன் அக்கா... கல்கத்தாவிலே இருந்தீர்களாமே...' என்று சில சமயம் சந்தேகத்தைக் கேட்பான். அந்தச் சமயத்தில் அந்தச் சிறுவனனுடைய உள்ளத்தில் எழும் எண்ண அலைகளைப் பற்றி நான் மனத்தில் எண்ணி வியப்பேன். சோப்பு, பவுடர் முதலியவற்றைப் பணம் கொடுத்து வாங்கி வரச் சொல்வேன். பள்ளிக்கூடம் போய்த் திரும்பி வரும்பொழுது வாங்கி வருவான்.

நான் கல்லுப்பட்டிக்கு வந்த இரண்டு வருஷங்களாயின. என் மாமா என் கல்யாணத்திற்கு வரன் தேடியலைந்தார்.

''அக்கா! கல்யாணமாகிப் புருஷன் வீடு போனாலும், என்னை நினைவு வைத்து கொள்வீர்களா?'' என்று ஒருநாள் திடீரென்று கஸ்தூரி என்னைக் கேட்டான்.

அப்பொழுது அவனுக்குப் பதினைந்து வயது. ''கஸ்தூரி! நான் சின்னக் குழந்தையா மறந்துபோவதற்கு? நீதான் மறந்து போவாய்'' என்றேன்.

''அப்படி எல்லாம் நினைக்காதீர்கள். கடுதாசி போடத் தவற மாட்டேன்'' என்றான்.

அதைச் செயலிலும் நிறைவேற்றினான். எனக்குக் கல்யாணமாகியது. என் கணவர் சென்னையில் குடித்தனம் வைத்தார். ஊருக்குப் போகும் பொழுது கஸ்தூரியும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். 'சொந்த அக்காவிடம் கூட இவ்வளவு அன்பாக இருக்க மாட்டார்களே!' என்று சொன்னார் என் கணவர்.



சென்னைக்கு வந்தது முதல் கஸ்தூரி தவறாமல் கடிதம் எழுதி வந்தான். என் தாயாரிடமிருந்தும், மாமாவிடமிருந்தும்கூடக் கடிதம் வராமல் இருக்கும். ஆனால், அவன் கடிதம் சொல்லி வைத்தாற்போல மாதம் முதல் வாரத்தில் வந்துவிடும். மணி மணியாய் அழகான கையெழுத்து. தன் மனத்தில் தோன்றுவது, தன் குடும்பத்தில் நடப்பது எல்லாவற்றையும் கடிதத்தில் எழுதி விடுவான்.

ஒருமுறை கிறிஸ்துமஸ் லீவில் சென்னைக்கு வந்தான். இரண்டு நாட்கள் எங்கள் வீட்டில் இருந்தான். நன்றாக வளர்ந்திருந்தான். அந்த வருஷம் ஸ்கூல் பைனல் பரீட்சைக்குச் செல்லப் போவதாகப் பெருமையுடன் சொன்னான்.

அப்பொழுது பார்த்ததுதான். பின்னர் கடிதங்கள்தான் வந்து கொண்டிருந்தன. ''நான் ஸ்கூல் பைனல் பாஸ் செய்து விட்டேன் அக்கா! மேலே படிக்கப் போவதில்லை. 'ஊரிலேயே இருந்து நிலபுலன்களைப் பார்த்துக் கொள்' என்கிறார் அப்பா. 'படித்தது எதற்காக? நாலு காசு சம்பாதிக்கட்டும்' என்கிறாள் அம்மா. நீங்களே சொல்லுங்கள் அக்கா! படித்தாலும் சொந்த நிலத்தைச் செவ்வையாகக் கவனித்து வாழுவது போல் வருமா?'' என்று எழுதியிருந்தான் ஒரு கடிதத்தில்.

இந்தக் காலத்துப் பிள்ளைகள்போல் நாலு எழுத்து இங்கிலீஷ் படித்து விட்டுக் கிராமத்தை விட்டுச் சென்று முப்பது ரூபாயில் கம்பெனி வேலை செய்ய அவன் ஆசைப்படவில்லை. இது விஷயத்தில் எங்கள் வீட்டில் அவருக்கும் எனக்கும்கூடக் கருத்து வேற்றுமை.

''அக்கா! அப்பாவும் அம்மாவும் எனக்குக் கல்யாணம் செய்யப் பெண் பார்த்து வைத்திருக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் வரதட்சணையாம்! சீர் செனத்தி உண்டாம். எனக்குப் பிடிக்கவில்லை. என் மாமா பெண் கமலாவைத்தான் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. உள்ளதைச் சொல்கிறேன்! அக்கா, கமலாவுக்குக்கூட என்னைப் பிடித்திருக்கிறது. நான் அப்பாவிடம் இந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் அந்தப் பெண் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். நான் என்ன சொல்வது?'' என்று எழுதியிருந்தான் கஸ்தூரி.

நான் என்னையே ஒருமுறை பார்த்துக் கொண்டேன். என்னிடம் ஒரு மாறுதலுமில்லை. இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி சிறு மூப்பு தட்டியதைத் தவிர பழைய குழந்தைத்தனம் இன்றும் இருக்கிறது. ஆனால், கஸ்தூரியோ அன்று மாதிரி சின்னப் பையன் இல்லை. இன்று பெரியவனாகிவிட்டான்.

பின்னர் இரண்டு மாதத்துக்குக் கடிதமே காணோம். அதுவரை அவனிடமிருந்து முப்பது கடிதங்களுக்கு மேல் வந்திருக்கின்றன. இப்பொழுதெல்லாம் கஸ்தூரியின் கடிதங்களை எடுத்து வைத்துக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்ப்பேன். 'சரியான தம்பி கிடைச்சாண்டி உனக்கு' என்று என் கணவர் கேலி செய்திருக்கிறார். அவன் யாரோ, நான் யாரோ என்ற பேத எண்ணமே எனக்குத் தோன்றவில்லை.

''அக்கா! ஒரு பெரிய காரியம் செய்துவிட்டேன்'' என்ற பீடிகையுடன் கஸ்தூரி ஒரு கடிதமெழுதியிருந்தான். ''அப்பாவின் கல்யாணத் தொந்தரவு அதிகமாய்ப் போச்சு. இரண்டாயிரம் ரூபாய் வரதட்சணை பெண்ணைத்தான் முடித்துவிட வேண்டும் என்று தலைகீழாய் நிற்கிறார். அந்தப் பெண் வீட்டாருக்குப் பக்கத்தூர்தான். ஒரு தந்திரம் செய்தேன். என் ஜாதகத்தை பெண் வீட்டார் எந்த ஜோசியரிடம் பொருத்தம் பார்க்கக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். ராத்திரியோடு ராத்திரியாய்ச் சென்று அந்த ஜோசியருக்கு ஐந்து ரூபாய் கொடுத்தேன். அவர் வாயெல்லாம் பல்லாகிவிட்டது. 'ஜாதகப் பொருத்தமில்லை. பெண் கல்யாணமாகி மூன்றாவது மாதம் மாப்பிள்ளை இறந்துவிடுவார்' என்று சொல்ல சொல்லிவிட்டு வந்தேன். அப்படியே அவரும் சொல்லிவிட்டார். என் தந்திரம் பலித்தது. பெண் வீட்டார் இந்த உண்மையை என் தந்தையிடம் கூறாமல் ஏதேதோ கூறி, கல்யாணப் பேச்சை நிறுத்திவிட்டார்கள். என் தந்தையின் முகத்தில் ஈயாடவில்லை. இரண்டாயிரம் போச்சு என்று எண்ணியிருந்தார். செய்து கொண்டால் கமலாவைக் கல்யாணம் செய்து கொள்வது; இல்லாவிட்டால் பிரம்மச்சாரியாகக் காலம் கழிப்பது என்று உறுதி செய்து கொண்டேன். என் பக்கம் ஜெயமாகலாம்'' என்ற விவரமாக எழுதியிருந்தான்.

இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் எனக்கு ஆச்சர்யம், பயம் இரண்டும் கலந்து தோன்றின. நம்ம கஸ்தூரியா இவ்வளவு துணிவுடன் எழுதியிருந்தான் என்று எண்ணி ஆச்சர்யப்பட்டேன். வேறு எவ்விதத் தொந்தரவும் கவலையுமில்லாத எனக்கு, கஸ்தூரியின் கடிதங்கள் சிறந்த பொழுதுபோக்காகவும், சிந்தனைக்குகந்ததாகவும் இருந்து வந்தன.

அவர்கூட எப்பொழுதாவது ஒரு சமயம், ''உன் கஸ்தூரி எப்படி இருக்கான்?'' என்று கேட்பார். இன்னொருவராயிருந்தால் ஏதாவது வித்தியாசமாக நினைத்துக் கொள்வார்கள். எனக்கென்னவோ என் உடன் பிறந்தவன் போன்ற இயற்கை நிலையே இன்னும் இருக்கிறது. ஊரிலிருந்து யாராவது வந்தால்கூட, ''கஸ்தூரி சௌக்கியமா?'' என்று நான் விசாரிக்கத் தவறுவதில்லை.



என் தாயார் வந்தாள். ''அம்மா! கஸ்தூரி சௌக்கியமா?'' என்று கேட்டேன். ''ஏண்டி பெண்ணே! என்னடி அவன்மேல் உனக்குக் கரிசனம்? அவன் யாரோ, நீ யாரோ? அந்தப் பிள்ளை தன் மாமா பொண்ணையே கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்லி அலையறான். அவன் சகவாசமே ஊராருக்குக் கட்டோடு பிடிக்கல்லை. இதைக் கேளடி; நம்ப ஊர் சிவன் கோயிலை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட வேண்டும் என்று நம்ப ஊரிலேயே ஒரு மீட்டிங் போட்டார்கள். பிறகு பெரிய மனுஷாளெல்லாம் அந்த வேலை மட்டும் செய்யாதேன்னு எவ்வளவோ சொன்னா'' என்று பெரிய ராமாயணமாய் அம்மா சொன்னாள். இன்னும் சொல்ல மாட்டாளா என்றுதான் இருந்தது. இதுக்குக் கேள்வி எல்லாம் போட்டு முழு விவரத்தையும் அறிந்து கொண்டேன்.

வருஷம் இரண்டு கழிந்தது. கஸ்தூரியிடமிருந்து கடிதமே வருவ இல்லை. எனக்கு எதையோ இழந்ததைப் போலிருந்தது. பெண்களின் மனப்போக்கைப் பற்றி எழுதுவதென்பது ஆகாத காரியம். சொந்தத் தம்பியிடமிருந்து கடிதம் வராததை எண்ணி வருந்தினேன்.

என் தாயார் கூறியதிலிருந்து கஸ்தூரியைப் பற்றி என் உள்ளத்தில் ஒரே மகிழ்ச்சிதான். தேசத்துக்காகப் பாடுபடும் ஒரு ஸ்தாபனத்தில் தொண்டனாக இருந்து உழைக்கிறான் என்பதில் எனக்குப் பரம சந்தோஷம். கள்ளங்கபடமற்ற குழந்தை கஸ்தூரியாகவே என்றுமிருக்க முடியுமா அவன்? அவன் என்ன ஆனான்? அவன் யாரைக் கல்யாணம் செய்து கொண்டான்? என்று அறிந்து கொள்ள ஆவலாயிருந்தேன்.

என் அம்மா ஊரிலிருந்து வந்துபோகும்தெல்லாம் ஏதாவது சமாசாரம் கூறிக் கொண்டிருப்பாள். அம்மாவும் வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டன. நானே கஸ்தூரிக்கு ஒரு கடிதம் எழுதினேன். பதிலைத்தான் காணோம். என் கடிதத்தில் அவனைச் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்ளுமாறு தூண்டி இருந்தேன். அவனுடைய தேசத் தொண்டையும் மெச்சியிருந்தேன். வாரமும் மாதமும்தான் ஓடின.

ஒருநாள் காலை பரபரப்புடன் என் கணவர் வந்தார். அவரது பரபரப்பையும் கையில் அன்றைய செய்தித் தாளையும் கண்ட நான் ஒன்றும் புரியாமல் நின்றேன். ''இதோ பார்... உன் கஸ்தூரியின் கதியை'' என்று தழுதழுக்கக் கூறினார். பேசிவரும்போதே அவர் கண்களில் நீர் ததும்பியது.

ஒன்றும் புரியாதவளாய் பரபரப்புடன் அவர் காட்டிய இடத்தைப் படித்தேன். 'கல்லுப்பட்டியில் நடந்த விவசாயத் தகராறில் போலீஸார்

துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது 12 பேர் காயமடைந்தனர். 3 பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். உள்ளூர் பிரபல முன்சிப் பிள்ளை கஸ்தூரியும் இறந்து போனவர்களில் ஒருவன்' என்னும் செய்தியைப் படித்து முடித்தவுடன் என் தலை சுழன்றது. அவ்வளவுதான் தெரியும். என் கணவர் என்னைத் தன் மடியில் கிடத்தியிருந்தார். கஸ்தூரியை நினைத்துப் புலம்பினேன்.

செய்தியை என்னால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அதை நினைத்து நினைத்து உள்ளம் வருந்திக் கொண்டிருந்த சமயம், தபாலில் ஒரு கடிதம் வந்தது. அதை ஆவலாய்ப் படித்தேன். கடிதத்தைப் படித்து முடித்தபோது என் உள்ளமே வெடித்து விட்டதென்று கூறலாம். மூன்று நாள் வரை உன்மத்தம் பிடித்தவள் போலிருந்தேன். அந்தக் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துப் பெருமூச்சு விட்டேன். நீங்களும்தான் படியுங்களேன்.

''அன்புள்ள அக்கா!

உங்கள் கடிதம் கிடைத்தது. நான் என்னத்தைக் கூறி மன்னிப்புக் கேட்பது? வழக்கம்போல் கடிதம் எழுதத் தவறியதற்குக் காரணம் என்னவென்று உங்களுக்குக் கூறுவது?

நானே மாறிவிட்டேன் என்றுதான் கூற வேண்டும். நாட்டுத் தொண்டு - அதுவும் சொந்தக் கிராமத் தொண்டு - எனக்கு மிகவும் பிடித்து விட்டது. ஊரைச் சீர்திருத்தம் செய்ய, கல்லுப்பட்டியிலுள்ள நான்கைந்து பேர் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டோம். கல்யாணமாகாதது மிகவும் நல்லதாய்ப் போய்விட்டது. பீஷ்மரைப் போலவும், காமராசரைப் போலவும் நான் பிரம்மசாரியாகக் காலம் கழித்துக் கடமையைச் செய்யச் சபதம் செய்துள்ளேன்.

கல்லுப்பட்டியில் மிராசுதார்கள் இருக்கிறார்களே... சரியான முறையில் உழவர்களுக்குக் கூலி கொடுப்பதில்லை. அவர்களுடைய கஷ்டத்தை நான் கடிதத்தின் மூலமாகச் சொன்னாலும் புரியாது. என் தகப்பனார்கூடத்தான் - அவருக்கு இருக்கிற நிலபுலன்களுக்கு - அதைப் பொன் விளையும் பூமியாக்கிய குடியானவர்களுக்கு வாரத்தை அதிகமாக்கினால்தான் என்ன? குடியானவர்களோ நெற்றி வியர்வை மண்ணில் விழ உழைத்தும் கூலி உயர்வு கேட்கப் பயப்பட்டார்கள்.

நானும் என் நண்பர்களும் இந்தத் தொல்லைத் தீர்த்து, உழவர்களுக்கு நன்மை செய்து விட வேண்டும் என்று தீவிரமாக முடிவு செய்தோம். உழவர் சங்கம் ஒன்றை ஆரம்பித்தோம். இதன் நடுவில் என் தந்தை திருமணத்திற்கு வற்புறுத்த ஆரம்பித்துவிட்டார். நான் ஜோசியருடன்



சேர்ந்து செய்த சதி அவருக்குத் தெரிந்து விட்டது. அவருக்குக் கட்டுக் கடங்காத கோபம். 'என் சொத்தில் ஒரு காலணாகூட உனக்குச் சேராமல் செய்கிறேன் பாரடா!' என்று சபதம் செய்து விட்டார். எனக்கெதற்குச் சொத்து?

'சரி வேண்டாம்' என்று கூறி விட்டேன். வீட்டில்கூடச் சாப்பிடுவது கிடையாது. பொங்கல் அறுவடைக்குப் பிறகு கூலி உயர்வு கொடுப்பதாகக் கலெக்டர் முன்னிலையில் ஊர் மிராசுதார்கள் வாக்களித்தார்கள். உழைப்பாளர் சங்கப் பிரதிநிதிகளாக நாங்களும் - நான் ஒரு பக்கம் என் அப்பா ஒரு பக்கம் - ஒப்புக் கொண்டோம். பொங்கல் போய் மாதம் ஒன்றாகிறது. இன்றும் வாரத்தை அதிகப் படுத்தவில்லை. பொறு கிளியே பொறு. பழம் பழுக்கும் என்றால் முடியுமா? குடியானவர்கள் இந்தத் தொழிலே வேண்டாம். வேறு வேலைக்கு - பட்டணத்துக்கு - மில்லுக்குச் சென்று விடுவதாகக் கூறுகிறார்கள். நீயே நினைத்துப் பார். அவர்கள் சென்று விட்டால் சித்திரை அறுவடையின் கதியென்ன? அதற்காகத்தான் நான் அரும் பாடுபட்டு வருகிறேன்.

வயலிலே கதிர்கள் தலை சாய்ந்துவிட்டன. அறுவடைக்கு இன்னும் ஊர்க் குடியானவர்கள் செல்லவில்லை. ஊரே கலவரப்படுகிறது. பண்ணையார் எல்லாம் - என் தந்தை கூட - இந்தக் கஸ்தூரியால் தான் இவ்வளவும்என்கிறார்கள். நான்என்ன,திருடவும்கொள்ளையடிக்கவுமா தூண்டுகிறேன்?

நீங்களே சொல்லுங்கள் அக்கா! உலகமே சம்பள உயர்வு, பஞ்சப்படி கேட்கும்போது, குடியானவர்கள் கேட்பதில் என்ன தப்பு?

இருக்கட்டும்; இன்னும் ஒரு வாரத்தில் நிலைமை சரியாகிவிடும் என்று நம்புகிறோம். உள்ளூர் ஆளில்லாமல் அறுவடை எப்படி முடியும் பார்க்கலாம். வேறு ஊர் ஆள் காலை வைக்க முடியுமா?

அடிக்கடி கடிதம் எழுதாததற்கு இந்த வேலைகளே காரணம். என்னை மன்னித்து விடுங்கள்.

அன்புள்ள கஸ்தூரி''

ஆறு நாள் தாமதமாய் எனக்குக் கிடைத்த கஸ்தூரியின் கடைசிக் கடிதத்தைப் படித்து முடித்தேன். என் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்த் துணி அந்தக் கடிதத்தின் எழுத்துகளை அழித்தன.

● ● ● ●

## மலை வீடு

எழுத்தாளனின் படைப்பு வெற்றி பெற கருவும், உருவும் திருவுட அமைந்தால் மட்டும் போதா; அந்தப் படைப்பு உயிருடனும் இய வேண்டும். அவ்வாறு கருவும், உருவும், திருவும், உயிரும் சேர்ந்த படைப் படிப்பாளனின் உணர்ச்சியைத் தூண்டி அவனையே தன்னுள் ஈர்த்து கொள்ளும்; கதையின் - படைப்பின் - முதலிலிருந்து இறுதி வன கதையை அவன் பிடித்துச் செல்லாமல், கதையே அவன் கையைப் பிடித்து அவன் இதயத் துடிப்பைப் பிடித்து தன்னுடன் அழைத்துச் செல்லும். கதை முடிந்ததும் படித்தவன் "ஐயோ! இவ்வளவு நேரம் நம்முடன் இருந்தவர்களை காணவில்லை" என்று திகைக்கும்படி வைக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, எத்தனை ஆண்டுகள் கழித்துப் படித்தாலு நிகழ்காலத்தில் கண்முன் நடப்பது போன்ற உணர்ச்சியினைப் படிப்பவ உள்ளத்தில் கிளர்ந்தெழச் செய்தல் வேண்டும்.

மேலே கூறிய அத்தனை ஆற்றல்களையும் 'மலை வீடு' சிறுகதை பெற்றுள்ளது. அதனால்தான், சுமார் அறுபதாண்டுகளுக்குப் பிறகு இக்கதையைப் படிக்கும்போது இரவில் வீசும் இதமான குளிர் காற்றை சுகமாக உணர்கிறோம்.

செவ்வாய் தோஷம் உள்ள ஒரு பெண் காதலில் தோல்வியுற்று தற்கொலைச் செய்து கொள்கிறாள். அவள் ஆவி அவ்வீட்டில் இரவில் உலாவருவது போன்ற கற்பனை. எனினும், ஓர் ஆவியின் திகில் கதையாக இல்லாமல், அற்புதமான சிந்தனைக் கதையாகவும் அருமையான காதல் கதையாகவும் மனத் தத்துவத்தின் அடிப்படையில் ஆசிரியர் இதனை உருவாக்கியுள்ளார்.

மூட நம்பிக்கையின் அடிப்படையில் சமுதாய மக்களின் சிந்தனை வாழ்க்கை அவலமாக்கி விடுகிறது என்ற உள்ளுறையைக் கொண்ட அற்புதமான மனோதத்துவக் கதை இது. கதை ஆசிரியர் தம் பதினெட்டு வயதில் எழுதிய இந்தச் சிறுகதை, காலத்தை வெல்லும் படைப்பு என்று கூறலாம்.

**– தாமரைக்கண்ணன்**





# 6. மலை வீடு

பரங்கி மலையிலிருந்து மீனம்பாக்கம் போகும் சாலை. அமைதிக்குத் துணையாக அந்தச் சாலையிலே அடர்ந்து செழித்து வளர்ந்த அரச மரங்களும், ஆல மரங்களும் இருபுறமும் கோட்டையைப் போல் விளங்கின.

அந்தச் சாலையில் காரில் போகிறவர்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாகத் தனித்து நிற்கும் சிறு வீடொன்றைப் பார்க்காமலிருக்க முடியாது.

அமைதி குடிகொண்ட அந்தச் சாலையில், களையிழந்து தனிமையாக நிற்கும் அந்தப் பங்களாவைப் பார்க்கும் எவருக்கும் ஒருவித எண்ணம் தோன்றாமல் போகாது.

நான்கு வருடங்களாக அந்த வீட்டுக்கு யாரும் குடி வரவில்லை. காரணம், வீடு ஊருக்கு ஒதுக்குப் புறமாயிருப்பதாலோ, தனிமையாக இருப்பதாலோ என்றுதான் முதலில் எண்ணினேன். அந்த வீட்டில் 'பேய், பிசாசு' குடியிருக்கிறது என்ற வதந்தியை நான் கேலி செய்தேன்.

அந்த வருஷம்தான் நான் சென்னையில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன். 'காலேஜ் ஹாஸ்டலை'க் கண்டாலே எனக்குப் பிடிப்ப தில்லை. என்னை அறிந்த நண்பர்களுக்கு நான் தனிமையை விரும்பு கிறவன் என்பது நன்கு தெரியும். நான் வருவதற்கும் குடியிருக்க வீடு கிடைக்காத திண்டாட்டம் சென்னையில் உண்டாவதற்கும் சரியாக இருந்தது. எனவே நான் வந்தது முதல் வீடு தேடாத நாளேயில்லை என்று சொல்லலாம்.

ஒருநாள் செங்கல்பட்டுக்கு சைக்கிளிலேயே செல்ல வேண்டும் என்று நாங்கள் மூன்று பேர் முடிவு செய்து கொண்டோம். என்னைப் போல் அவர்களும் வீட்டிற்காக அலைபவர்கள்தாம். வழவழவென்று தார் போடப்பட்ட மவுண்ட்ரோட்டில் சைக்கிளில் போவது மிக இன்பமாக இருந்தது. அப்படிப் பரங்கி மலையைத் தாண்டிப் போகும் போதுதான் மேற்படி வீடு என் கண்ணுக்குப்பட்டது.

நல்ல களை பொருந்திய வீடுதான். சுற்றிலும் தோட்டம். வெள்ளைக் காரர்களுடைய நாகரிகத்திற்குத் தக்கபடி அந்த வீடு கட்டப்பட்டிருந்தது.

கவனிப்பாரில்லாததால் ஒட்டடையும், தூசியும் படிந்து காட்சியளித்தது. 'வீடு குடிக்கூலிக்கு விடப்படும்' என்று போடப்பட்டிருந்த மரப் பலகையொன்று மழையிலும் வெயிலிலும் காய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. மேற்படி வீட்டு வாயிலில் பொறிக்கப்பட்டிருந்த 'மலை வீடு' என்னும் பொருள் கொடுக்கும் 'மவுண்ட் ஹவுஸ்' என்னும் ஆங்கில எழுத்துகள் பழைமையின் காரணமாகச் சரியாகப் புலப்படவில்லை.

வீட்டு வேட்டையில் இறங்கியவர்களுக்கு 'மலை வீடு' கிடைத்ததில் மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமன்று. வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது. அருகே அரை மைல் தொலைவிற்கு வீடோ, குடிசையோ, கடையோ ஒன்றுமேயில்லை. அந்த 'டுலெட்' போர்டின் அடியிலே மங்கிய எழுத்துகளில் விசாரிக்க வேண்டியவர் முகவரியும் எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டுபிடிப்பதற்கு நாங்கள் பட்ட பாடு, பெரும் பாடாய்ப் போய் விட்டது.

அம்மன் கோயில் வடக்குத் தெருவை நோக்கிப் புறப்பட்டோம். அந்த முகவரியில் குறிப்பிட்டிருந்த ஆசாமியும் அகப்பட்டார். அவர் கிழவர். எங்களை முக மலர்ச்சியுடன் வரவேற்றார். வீட்டு விஷயத்தைப் பற்றிச் சொன்னோம். அவர் முகத்தில் அர்த்தமில்லாத புன்னகை தோன்றி மறைந்தது. ''பட்டணத்தில் வேறு வீடு அகப்படவில்லையா?'' என்று கேட்டார்.

''எதற்குச் சொல்கிறேன் என்றால், இந்த வீட்டில் நாலு வருஷமாக யாரும் நிலைத்துக் குடியிருந்ததே இல்லை. இப்போது ஒரு வருஷமாக யாரும் குடி வரவேயில்லை. அப்படிக் குடி வந்தவர்கள் இரவிலே யாரோ பாட்டுப் பாடும் குரலைக் கேட்கிறார்களாம். அதனால் ஏதாவது 'பிசாசு கிசாசு' இருக்குமோ என்று பயந்து போய் விடுகிறார்களாம். இந்த வீட்டை விலைக்கு வாங்கினபோது நான்கூட 'வீடு இருக்கிற இடம் நல்ல அமைதியான இடம். தொந்தரவில்லை' என்றுதான் வாங்கினேன். ஆனால், ஒரு வருஷத்துக்குள் என் வீட்டில் ஒவ்வொருவரும் 'இரவில் ஏதோ பாட்டின் சப்தம் கேட்கிறது' என்றே சொல்லி வந்தனர். என் அருமை மகன், இருபத்திரண்டு வயதிருக்கும். ஒருநாள் இப்படித்தான் சொன்னான். 'போடா, பைத்தியக்காரா!' என்று அவனைக் கேலி செய்து விட்டு சும்மா இருந்துவிட்டேன். ஆனால், ஒருநாள் காலையில் அவன் செத்துக் கிடந்தான். எப்படி என்று தெரியவில்லை.

பிரேத பரிசோதனை செய்த டாக்டர், 'கழுத்தை அழுத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறான்' என்று கூறிவிட்டார்.



என் அருமை மகனை இழந்த பிறகு எனக்கு அந்த வீட்டில் ஏதோ ஒரு கெட்ட தேவதை இருக்கிறதென்பது நிச்சயமாகிவிட்டது. வீட்டை வாடகைக்கு விட்டுப் பார்த்தேன். இடத்தையும் சுற்றிலுமுள்ள தோட்டத்தையும் கண்டு ஆசை கொண்டு பலர் குடி வந்து ஒரு மாதம் கூட நிற்காமல் காலி செய்து கொண்டு போய்விட்டனர். ஒரு வெள்ளைக்காரக் குடும்பம் வந்தது. இந்த வீட்டைப் பற்றி வாயாரப் புகழ்ந்தது. இதே வீட்டை இன்னும் அழகாகச் செப்பனிட்டுத் தரும்படி கேட்டார்கள்.

நான் கவலையுடனே எல்லாவற்றையும் செய்தேன். அந்த வெள்ளைக்காரக் குடும்பத்துக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

ஒருநாள் அந்த வெள்ளைக்காரத் துரை நேராக என் வீட்டிற்கு வந்து ஆங்கிலத்தில், 'நல்ல வீடு இது. இரவிலே இனிய காற்று வீசுகிறது. நடு இரவிலே அழகான கீதம் ஒன்று எங்கிருந்தோ கேட்கிறது. நான் தினமும் நல்ல இன்பக் கனவுகள் எல்லாம் காண்கிறேன்' என்றார்.

எனக்கு ஒரு பக்கம் சிரிப்பும் மற்றொரு பக்கம் பயமும் உண்டாயின. அந்த வெள்ளைக்காரர் அவ்வீட்டைத் தனக்கு விற்று விடும்படி கூறினார். உடனே மறு பேச்சில்லாமல் நல்ல விலைக்கு விற்று விட்டேன். ஐயோ! பெரும் பாவம் செய்து விட்டேன் எனலாம். அந்த வெள்ளைக்காரர் தன் அருமை மனைவியையும், குழந்தைகளையும் விட்டு விட்டுத் திடீரென ஒருநாள் மாண்டுவிட்டார். இரவு நன்றாகத்தான் இருந்தாராம். படுத்தாராம். காலையிலே இறந்து கிடந்தாராம்.

அந்த வெள்ளைக்காரச் சீமாட்டி கொஞ்ச நாள் வருத்தப்பட்டாள். பின்பு நீலகிரிக்குப் போய்விட்டாள். போகும்பொழுது அந்த வீட்டை என் மேற்பார்வையில் விட்டுவிட்டு, வாடகை வந்தால் தன் பெயருக்கு அனுப்பச் சொல்லிச் சென்றாள். ஆனால், என் மனம் அந்த வீட்டில் வேறு யாரையும் குடி வைக்கத் துணியவில்லை.

வாடகைக்கு வருபவர்களை நான் குடி வைப்பதில்லை. ஒரு வருஷமாக அப்படியே கிடக்கிறது. நீங்களோ சிறு பிள்ளைகள் ஊரை விட்டு ஊர் வந்து, இந்த வீட்டில் அகால மரணமடைய வேண்டாம். பட்டணத்திலேயே வேறு வீடு பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றார்.

என் நண்பர்கள் அவர் சொன்னவற்றைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். எனக்குச் சிரிப்புத் தாளவில்லை. 'மெடிக்கல் காலேஜ்' மாணவன் நான்.

''பெரியவரே! பிசாசு, மோகினி, துர்தேவதை இவற்றில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. உங்கள் மகன் அதிகமாகச் சாப்பிட்டு இரவில்

படுக்கையில் புரண்டதனால் மாண்டிருக்கலாம். அதிகமாகக் குடித்து விட்டு புரையேறி மாரடைப்பால் அந்த வெள்ளைக்காரத் துரை மரணமடைந்திருக்கலாம். எலும்புக்கூட்டுடனும், இறந்த பிணத்துடனும், கொலையுண்ட மனித உடலுடனும் பாடம் கற்கும் எங்களுக்குப் பயம் ஏது? தைரியமாக நாங்கள் இருக்கிறோம். பயப்பட வேண்டாம்'' என்றோம்.

அவர் விகார முகத்துடன், ''அப்பா! இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குப் பயமில்லைதான்; எனினும் அந்த வீட்டை நான் வாங்குமுன் ஒரு பெண்துர்மரணமடைந்தாளாம். அவள்தான் இரவில் பாடுகிறாளாம். தனக்கு இஷ்டப்பட்டவர்களைக் கொன்று விடுகிறாளாம்!'' என்றார்.

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''வீணாகப் பயப்படாதீர்கள். எங்களுக்கோ வீடே கிடைக்கவில்லை. கல்லூரியில் இன்னும் ஐந்து வருடங்கள் படித்தாக வேண்டும். எப்படியாவது நீங்கள் வாடகைக்கு விட்டுத்தான் ஆக வேண்டும்'' என்று வற்புறுத்திக் கேட்டேன். பெரியவர் ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். நாங்கள் கேட்கவில்லை. கையிலிருந்த முப்பது ரூபாயை அட்வான்ஸாகக் கொடுத்து உடனே அந்த வீட்டின் சாவியைக் கொடுக்கும்படி கேட்டோம். மறு பேச்சு பேசாமல் அவர் சாவியைக் கொடுத்து விட்டார்.

நாங்கள் குடிவந்து இரண்டு இரவுகள் கழிந்தன. என் நண்பர்களில் இருவர் மட்டும் இரவில் பாயோடு பாயாக ஒண்டிக் கொண்டு கிடப்பார்கள். நானும் மற்ற இரண்டு பேரும் மட்டும் அரட்டை அடித்து விட்டுக் கடைசி வண்டியான திருச்சி பாஸஞ்சர் போகும் ஓசை கேட்ட பிறகுதான் படுக்கச் செல்வோம்.

அன்று எனக்கு மனதே சரியில்லை. வீட்டுக்காரப் பெரியவர் சொன்ன கதை என் மனத்தில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டே இருந்தது. அதை மறப்பதற்காகக் கதைப் புத்தகம் ஒன்றை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த அமைதியான இரவில் கடிகாரம் 'டக்டக்'கென்று அடிக்கும் ஓசையும் 'டங்டங்'கென்று அரை மணிக்கு ஒருமுறை மணியடிக்கும் சப்தமும் தெளிவாகக் கேட்டன.

என்னையறியாமல் தூக்கம் வந்தது. விளக்கை அணைத்தேன். காற்று வருவதற்காக ஒரு ஜன்னல் கதவைத் திறந்து வைத்து விட்டுப் படுத்தேன்.

குழப்பமான என் மன நிலையுடன் தூக்கத்தின் தாக்கத்தால் சுழலும் கண்களும் சேர்ந்து என்னைக் குறட்டை விடச் செய்தன.



மணி அப்பொழுது என்ன இருக்குமோ தெரியாது. பயங்கர நிசப்தம் எங்கும் சூழ்ந்திருந்தது.

அந்த நிசப்தத்தைப் பிளந்து கொண்டு,

'தூண்டிற் புழுவினைப் போல் வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக எனது நெஞ்சம் துடித்ததடி'

என்று மெல்லியக் குரலில் ஒரு பட்டு இளங்காற்றிலே மிதந்து வந்து அந்தப் பங்களா எங்கும் வியாபித்தது.

என் நண்பர்கள் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர். என்னால் படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் முடியவில்லை. இமைகளை மூடவும் முடியவில்லை.

வரவர அந்தப் பாட்டின் ஓசை அருகிலிருந்து கேட்பது போலிருந்தது. படார் என்று காற்றில் ஜன்னல் கதவு சாத்திக் கொண்டது. பாட்டின் ஒலி நின்று விட்டது. யாரோ அறையில் நடமாடும் ஓசை கேட்டது. என் இதயமே நின்றுவிட்டது போன்ற உணர்ச்சி அடைந்தேன். காலடி ஓசை என்னருகே கேட்டது. 'ஓ'வென்று கத்தலாமென எண்ணினேன். நெஞ்சு வறண்டு போயிருந்ததால் அப்படிச் செய்ய முடியவில்லை.

அந்தக் காரிருளில், அழகொளி வீச நிற்கும் ஒரு பெண்ணின் உருவம் தோன்றியது.

அவ்வுருவம் என் பாதத்தருகே சிறிது நேரம் மௌனமாக நின்றது. பிறகு என்னை நெருங்கி வந்து என்னுடைய மார்பருகே குனிந்தது. எங்கிருந்தோ அந்த அறையில் மங்கிய வெளிச்சம் ஒன்று வீசியது.

நாக்குழற, ''நீ யார்?'' என்று வினயமாகக் கேட்டேன்.

அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது. அதேசமயத்தில் மெல்லிய சிரிப்பின் சப்தமும் அவளிடமிருந்து கேட்டது.

''நான்... யாரா? சொல்லட்டுமா?'' என்றாள் அவள்.

அது பேயினுடைய குரலாயில்லை; பூதத்தினுடைய பேச்சாயில்லை; மோகினி என்ற அஞ்சத்தக்க உருவத்தின் ஓசையாகவும் இல்லை. யாழினின்று எழும் இன்பகீதம் போன்றிருந்தது; குழலின் இனிய நாதமாயிருந்தது. அந்த இனிய பேச்சின் ஒலி என் பயத்தைச் சிறிது

போக்கியது. முன்பே உள்ளத்திலிருந்த ஆவல், அவள் பதிலைக் கேட்பதற்குத் தூண்டியது.

“இப்பொழுது என்னைக் கண்டு நீங்கள் பயப்படுகிறீர்கள். நான் உங்களைத் தழுவிக் கொள்கிறேன் என்றால் அலறுகிறீர்கள். ஆனால் பத்து வருஷத்துக்கு முன்னால் நான் நல்ல நிலையில் இருந்தபோது, என் பெற்றோருடன் இருந்தபோது என்னைப் பார்த்தீர்களானால் நீங்கள் என்னை அடையத் துடித்திருந்திருப்பீர்கள். ஐயோ! அது ஒரு காலம், இது ஒரு காலம்!

எனக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும்போது என் தந்தை இந்த வீட்டைக் கட்டினார். கட்டும்போதே பலவிதத் தடைகளைக் கூறினார்களாம். ‘ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கிறது’, ‘தனியாக இருக்கிறது’ என்றெல்லாம் கூறினார்களாம். என் தந்தை ஒரே பிடிவாதமாகத் தனிமையை விரும்பி இங்கே கட்டினார். நிலைப்படி சரியில்லை. ஜன்னல்கள் சரியில்லை என்று கூறினார்கள். இப்பொழுது இருப்பது போல் இவ்வளவு அழகாக எப்பொழுதுதான் இருந்தது? இவ்வளவு அழகான தோட்டம் உண்டா? இந்தச் சாலையில் இவ்வளவு அடர்த்தியாக மரங்கள்தாம் வளர்ந்திருக்குமா? வீடு எப்பொழுதும் ‘கலகல’வென்று இருக்கும்.

நான் சிறுவயதிலேயே மிகவும் அழகாக இருப்பேனாம். பிறகு என் அழகை நானே வியந்தேன் என்றால் ஆச்சர்யமல்லவா? குடும்பத்துக்கு ஒரே பெண். அதனால் சிறப்பாக வளர்க்கப்பட்டேன். நான் பிறந்த நாளிலிருந்தே என் தந்தை என் கல்யாணச் செலவுக்காகப் பணம் சேர்த்துக் கொண்டே வந்தாராம். என்னுடைய பதினாறாவது வயதில் சுமார் இருபதினாயிரம் ரூபாய் கல்யாணத்திற்காக மட்டும் சேர்ந்து விட்டது.

வரன் தேட அப்பா முற்பட்டார். ஒன்றும் சரியாக அமையவில்லை. காரணம், எனக்குச் செவ்வாய் தோஷமாம்! அது என்ன தோஷம் என்று இன்னமும் விளங்கவில்லை. அப்பா பார்க்கும் வரன் ஒன்றுகூடப் பிடிக்கவில்லை. என் அண்ணனுடன் அடிக்கடி ஒருவர் என் வீட்டிற்கு வருவார். அழகாய் இருப்பார். தன் கரத்தில் எப்பொழுதும் பாரதியாரின் ‘கண்ணன் பாட்டு’ புத்தகத்தை வைத்துக் கொண்டிருப்பார். அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்தேன்.

எனக்குள்ள குரல் வளத்தால் இனிமையாகப் பாடினேன். பாட்டைக் கேட்கவே அவர் தினமும் என் வீட்டிற்கு வருவார். ‘தூண்டிற் புழுவினைப்போல்’ பாட்டை எப்பொழுதும் பாடுவேன். எனக்கு



அவரைப் பிடித்திருந்தது. வீட்டுக்குத் தெரியாமல் நான் அவரைச் சந்திப்பேன். எங்களிடம் காதல் அரும்பியது. தந்தையிடம் சொல்லி அவரையே மணந்து கொள்வது, அல்லது ஒருவருக்கும் தெரியாமல் இருவரும் ஓடிவிடுவது என்று முடிவு செய்து கொண்டோம்.

இதன் இடையில்தான் இந்தப் பாழும் ஜுரம் என்னைப் படுத்த படுக்கையாக்கிவிட்டது. நாளுக்கு நாள் அது அதிகமாயிற்று. என் தந்தை எவ்வளவோ டாக்டரை வரவழைத்துப் பார்த்தார். ஆனால், ஒரு மாதம் வரை காய்ச்சல் என்னை ஆட்டிவிட்டு மறைந்தது. நானும் மெல்ல எழுந்து பழைய நிலையை அடைந்தேன். அவரைப் பார்க்க வேண்டுமென்ற அவா எனக்கு அதிகமாகியது. தைரியமாக என் அண்ணனிடமே ‘அவர் ஏன் வருவதில்லை?’ என்று கேட்டு விட்டேன்.

‘என்னை நல்ல வழியில் திருப்ப வேண்டுமானால் கட்டாயம் எனக்கு இன்னும் ஒரு மாதத்தில் கல்யாணம் செய்து விட வேண்டும்’ என்று என் அத்தைமார்கள் பிடிவாதமாய் நின்றனர். நான் முடியவே முடியாதென்று பிடிவாதம் பிடித்தேன். ஆனால், எனக்குக் கல்யாணம் நடப்பதற்கு வேண்டிய பலமான ஏற்பாடுகள் நடந்தன.

உண்மைக் காரணத்தை என் அண்ணனிடம் சொன்னேன். அவன் சிரித்துக் கொண்டே, ‘உன் காதலன் ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஊரை விட்டே ஓடி விட்டான்’ என்றான். நான் மனம் மாறி விடுவேன் என்னும் எண்ணத்தில் அப்படிச் சொல்லியிருக்கிறான். விடிந்தால் கல்யாணம். இரவெல்லாம் யோசித்தேன். இந்த உடலும் உயிரும் இனி யாருக்காக என்று என்னையே கேட்டுக் கொண்டேன். ஒரு கணம் சிந்தித்தேன். ஒருவருக்கும் தெரியாமல் தோட்டத்திற்குச் சென்றேன். கல்யாணத்தன்று இரவு எல்லாரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். இப்பொழுதாவது கிணறு பாழடைந்து கிடக்கிறது. அப்பொழுது தண்ணீர் நிரம்பி மிக அழகாய் இருந்தது. தடாலெனக் குதித்து விட்டேன். இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. இரண்டு முறை மேலுக்கு வந்தேன். கரையேறிவிட எத்தனித்தேன். முடியவில்லை. மூழ்கியே போய்விட்டேன். அவ்வளவுதான் தெரியும்.

பிறகு ஒரு வாரம் கழித்து எனக்கு உயிர் வந்தது. நேரே வீடு வந்தேன். ஆனால், என்னை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. என் தந்தையிடம் நின்றேன். தாயிடம் போனேன். என்னை நினைத்து எல்லாரும் அழுது கொண்டிருந்தனர். ‘அழாதே அம்மா!’ என்றேன். அவர்களுக்கு என்னை அடையாளமே தெரியவில்லை.

பகலெல்லாம் எங்கெங்கோ சுற்றியலைவேன். பொழுது போகாது நான் முன்பு காதலித்தவரைத் தேடி அலைந்தேன். பழைய காதலனைக் கண்டு பிடித்து விட்டால் என்றும் பிரியாமல் கூடியிருப்பேன். என் இதயத்தில் உள்ளதை யாரிடமாவது சொல்லி மனக் குறையை நீக்க வேண்டுமென்பது என் அவா. ஆனால், இந்த வீட்டுக்குக் குடிவரும் எல்லாரும் என்னைக் கண்டவுடன் நடுங்குகிறார்கள். நான் யார் மேல் ஆசை வைத்து என் கதையைச் சொல்லலாமென்று போகிறேனோ அவர்கள் என்னை வேண்டாமென்று தள்ளி விடுகிறார்கள். கோபம் வந்தால் நான் அவர்கள் கழுத்தை அமுக்கி...'' என்று கூறிக் கொண்டே அந்த உருவம் என்னை நெருங்கியது. என்னை அறியாமல் 'ஓ'வெனக் கூவிவிட்டேன்.

''என்ன... என்ன... என்ன சமாசாரம்?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தோடி வந்தார்கள் நண்பர்கள். கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு பார்த்தேன்.

''எல்லாரையும் கேலி செய்த நான் ஏமாந்து விட்டேனே! நல்ல பெண் மோகினியப்பா!'' என்றேன். ''நன்றாய்ச் சொன்னே! பெண்ணாவது மோகினியாவது! இந்த வீட்டை வாடகைக்கு விட்டவன் அளந்த கதையை நினைத்துக் கொண்டே தூங்கினால் மோகினியும் வரும் மோகமும் வரும். போப்பா; போய்ப் படுக்கலாம்'' என்றான் ஒரு நண்பன்.

''தூண்டிற் புழுவினைப்போல்... பாட்டின் குரல் இனிமையாகக் கேட்டதே. அது எப்படி?'' என்று நான் மறுபடியும் நண்பனைக் கேள்விக் கேட்டேன்.

''சரிதான்... நேற்று பாரதி விழாவில் சிறுமியொருத்தி பாடினாளே, அந்தப் பாட்டை இரவெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தாயோ என்னவோ? உன்னைப் போன்ற ஆசாமிகளுக்கு ஏற்ற கதையைத்தான் அந்தப் பரங்கிமலை ஆசாமி சொல்லியிருக்கிறான்!' என்றான் என் நண்பன் கேலியாக.

''சரி, இந்த மலை வீட்டில் இருப்பதா வேண்டாமா?'' என்று கேட்டேன். ''பொழுது விடிந்ததும் பேசிக் கொள்ளலாம்'' என்றான் நண்பன்.

விடிவெள்ளி அப்பொழுதுதான் முளைத்துக் கொண்டிருந்தது.

• • • •



# பொல்லாத மனசு

சிறந்த சிறுகதை என்பது எது?

ஒரு கதையைப் படித்து முடித்ததும், அது வாசகனின் உள்ளத்துக்கு மகிழ்ச்சி தந்தால், உடனே மறந்து போகாமல் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்காவது அவன் நினைவில் நின்றால், அதே கதையை மீண்டும் படிக்க வேண்டும் என்னும் விழைவை உண்டாக்கினால், அதைச் சிறந்த சிறுகதையாக ஏற்கலாம்.

இந்த இலக்கணத்துக்கு முற்றிலும் பொருந்திய சிறுகதையே கலைமாமணி விக்கிரமன் வழங்கிய 'பொல்லாத மனசு'.

கதை நிகழும் இடம் காவிரிக்கரை ஓரத்தில் உள்ள ஊர். அங்கே பழனியம்மாள் என்னும் பருவப் பெண்ணுக்கும், பூசாரியான சின்னக் கவுண்டனுக்கும் காதல், சாதியில் - பொருள் வசதியில், பொருந்தாக் காதல் இது என்று ஊர்ப் பஞ்சாயத்து எச்சரித்தும் காதலர் புரிந்து கொள்ளாமல் - பிரிந்து செல்லாமல் 'கருமமே' கண்ணாய் இருந்ததால், சின்னக் கவுண்டனின் பூசாரி வேலை போச்சு! இவையெல்லாம் உண்மைக் காதலைப் பாதிக்குமா? காதல் மட்டும் நின்று போகாமல் வளர்ந்தது.

ஒருநாள் பழனியம்மாளுக்காக நாகலிங்கப் பூ பறிக்க மரத்தில் ஏறி, கிளை முறியக் கீழே விழுந்து கை முறிந்தது, சின்னக் கவுண்டனுக்கு. அவன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டபோது, பழனியம்மாளும் அவனுடன் வந்து அவனைக் கவனித்துக் கொண்டாள்.

அடுத்தக் கட்டிலில் இருந்த சாமி, இவரையும் கணவன் - மனைவி என்று நினைக்க, கவுண்டன் தன் கதையைக் கூறி, பழனியம்மாள் மனைவியல்லள் - காதலி; ஆனால் இனி மனைவியாவாள் என்பதை உறுதியுடன் கூறுகிறான்.

பூசாரி வேலை போகும் என்று எச்சரித்த பின்பும் அதைப் பொருட் படுத்தாமல் காதலில் ஆழ்ந்தமைக்குக் காரணம் தன் 'பொல்லாத மனசு' என்கிறான் கவுண்டன்.

அந்த பொல்லாத மனசு, சரியாகி வெளியேறிய பிறகு திருத்தணியிலே பழனியம்மாளைத் திருமணம் செய்து கொள்ளும் திட்டம் தீட்டுகிறது.

கடைசி வரை காதலியை கைவிடாத தன் நல்ல மனசைப் 'பொல்லாத மனசு' என்று அவன் கூறுவது எவ்வளவு பொருத்தம்!

விக்கிரமனின் கதாநாயகன் கிராமத்தான் அவன் காதல், ஒருவகையில் காதலுக்காக அரசைத் துறந்த எட்வர்டு காதல் போன்றது என்று போகிற போக்கில் உணர்த்துவது கதையின் சிறப்பு அம்சம்.

காதலால் சாதாரண மனசு பொல்லாத மனசாகி, பல நல்ல வசதிகளைத் துறப்பதில், அரசனும் ஆண்டியும் ஒன்றே என்கிற உயர்ந்த தத்துவத்தை இக்கதையில் அருமையாய் விளக்கியிருக்கிறார், ஆசிரியர்.

இந்தக் கதை படிக்கும் வாசகனை மகிழ்வித்து, அவன் மனத்தில் பதிந்து, மீண்டும் அசை போடச் செய்யும் ஆற்றல் உடையது. அதனால்தான் கதை எழுதப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகும் நூலாகும் சிறப்பும் பெற்றுள்ளது.

**- டாக்டர் பூவண்ணன்**



1946

# 7. பொல்லாத மனசு

ஜெனரல் ஆஸ்பத்திரி 'கிளைவ் வார்டில்' மணி எட்டடித்தது. ஆஸ்பத்திரி ஓரமாக ஓடும் மின்சார ரயிலின் 'கடபுடா' ஓசையைத் தவிர வேறு சந்தடியின்றிப் பயங்கர மௌனத்தில் ஆழ்ந்திருக்கும் அந்த வார்டில் எப்போதாவது சிலர் இருமும் ஒலி மௌனத்தைக் கலைக்கும். அதுபோன்ற சமயங்களில் என் உறக்கம் குலைந்து எழுந்து உட்கார்ந்து கொள்வேன். மங்கலான வெளிச்சத்தில் அடுத்த கட்டிலில் களைப்பு தீர, சின்னக் கவுண்டன் பீடி பிடித்துப் புகையை ரகசியமாக விட்டுக் கொண்டிருப்பான். கீழே அவன் மனைவி, துணைக்காக வந்தவள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பாள்.

இருபதாவது நூற்றாண்டு முதிர முதிர புதுப்புது வியாதிகள் மனிதனுக்கு உண்டாவது போல் எனக்கும் முழங்காலில் எலும்பு சம்பந்தமாக ஏதோ பெயர் கொடுத்து ஆபரேஷன் செய்ய 'கிளைவ் வார்டில்' கிடத்தினார்கள். வந்து மூன்று நாள்களுக்குள்ளேயே ஆஸ்பத்திரி வாழ்க்கை போதும் போதும் என்றாகி விட்டது.

பக்கத்துப் படுக்கையில் சின்னக் கவுண்டனும் அவன் மனைவியும் இல்லாவிடில் நிச்சயம் பைத்தியம் பிடித்த நிலைதான் எனக்கு வந்திருக்கும். ''சாமி என்ன வேணுங்க... வலிக்குதா?'' என்று அன்பாகக் கேட்பாள். பகல் வேளைகளில் அவன் மனைவி அன்பாக உபசரணைகள் செய்வாள். மணி ஐந்தானதும், எங்கள் வீட்டிலிருந்து மதிப்புக்காகவேணும் வந்து பார்த்துச் செல்பவர்களுக்கும், எந்நேரமும் கணவனுடனேயிருந்து ஆஸ்பத்திரியில் கணவன் படும் வேதனையில் பங்கு கொள்ள வந்திருக்கும் சின்னக் கவுண்டன் மனைவியைப் பார்க்குந்தோறும் 'இதல்லவா உண்மைத் தொண்டு!' என எனக்குத் தோன்றும். பேச்சு வாக்கில், ''கவுண்டா... கண்ணகி, நளாயினி என்றெல்லாம் ஏட்டில் படித்திருக்கிறோம். இங்கே கண்கூடாக உன் மனைவி இருக்கிறாளே? ஊரிலிருந்து உன்னுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து இரவு பகல் கண்விழித்து ஒத்தாசை செய்ய வேண்டும் என்று உன் மனைவிக்கு என்ன அக்கறை? எங்கள் வீட்டில் சாயங்காலம் ஐந்து மணிக்கு பிளாஸ்கில் காப்பியுடன் முகத்தில் பவுடர் பூசிப் பொட்டிட்டுக்

காட்சி சாலையில் பார்க்க வருபவர்கள்போல் வந்துவிட்டு முதலைக் கண்ணீர் விட்டுப் போகிறார்களே'' என்றேன் நான்.

தலையணையில் சாய்ந்து படுத்திருந்த கவுண்டன் நிமிர்ந்து உட்கார்ந்தான். முறுக்கி விடப்படாமல் தாழ்ந்து அடர்ந்து இருக்கும் மீசையும், கூரிய கண்களும், வெட்டி விடப்பட்ட தலை மயிருமுடைய சின்னக் கவுண்டனின் உருவம் காண்போரைக் கவரும்.

''சாமி, என்ன சொன்னீங்க... இரவு பகல் கண் விழித்து ஒத்தாசை செய்ய வேண்டும் என்று மனைவிக்கு என்ன அக்கறை என்றீங்களே, ரொம்ப சரி அது. மனைவிக்கே அக்கறை இல்லைன்னா மற்றவங்களுக்கு என்ன அக்கறை? இவ இன்னும் மனைவியாகல்லை... அக்னி சாட்சியா தொட்டுத் தாலி கட்டலை... அவள் மனசின் காரணமாக இப்படி என்னுடன் கஷ்டப்பட வேண்டும் என்றிருக்கிறது. என்னதான் சொல்லுங்க, எல்லாத்துக்கும் இந்தப் பொல்லாத மனசுதான் காரணமுங்க'' என்று கூறிவிட்டு இருமினான் கவுண்டன்.

மனைவியில்லையா அவள்? பின் யார்? இவ்வளவு அக்கறையாகப் பணிவிடை புரியும் 'பிறர்' கூட இந்தக் காலத்தில் இருக்கிறார்களா என்று எண்ணி ஆவலுடன் மேற்கொண்டு செய்தியை எதிர்பார்ப்பவன் போல் கவுண்டன் முகத்தைப் பார்த்தேன். என் குறிப்பை அறிந்து கொண்டவன் போல் சின்னக் கவுண்டன் மேற்கொண்டு தன் மனத்தில் இருப்பதை என்னிடம் கொட்டி விடத் துணிந்தவன் போல் மெல்ல எழுந்து என் படுக்கையருகேயுள்ள ஸ்டூலில் வந்து உட்கார்ந்தான். அனைவரும் உறங்கும் வேளையில் உரக்கப் பேசி பிறர் தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம் என்ற எண்ணம் போலும்.

என் கால் வலியையும் ஒருமணி நேரம் மறந்திருக்கலாமென்று எண்ணினேன்.

''சாமி இவ என்னோட மனைவின்னு... கட்டின பொண்டாட்டின்னு தான் இதுவரை நினைச்சிருப்பீங்க. இப்ப நான் அப்படி இல்லைன்னு சொல்லலை. ஆனா, கலியாணம்னு ஒரு சடங்கு இருக்கே! 'மஞ்சள் கயிற்றை'க் கழுத்தில் முடிச்சுப் போட்டால்தான் உண்மைக் கணவன் - மனைவின்னு நாடு சொல்கிறது. ஏடு அப்படியே எழுதியிருக்கிறது. எங்களைப் போல் இப்படியிருந்தாலோ 'ஓடி வந்தவர்கள்' என்று கூறுகிறது சமூகம்.

''ஓடி வந்தவர்களாயிருந்தால் பரவாயில்லை சாமி! முற்றும் துறந்தவர்களாகி விட்டோம். இருவருக்கும் வாழ்க்கையில் வெறுப்பு



ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. வாழ்வில் இன்ப துன்பங்களைத் துறந்து விடவில்லை. ஆனால், எனக்காக அவள் பிறந்த வீட்டுச் சுகங்களையும் நஞ்சக்காணியையும், அவளுக்காக நான் தொழிலையும் பிறர் அன்பையும் துறந்து விட்டோம். சாமி! காதலுக்காக ராஜ்யத்தைத் துறந்தார் எட்வர்டு ராஜான்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, 'காதல்'னா என்னன்னு எங்களுக்குத் தெரியாது. எல்லாம் ஏட்டில் படிச்சதுதான். நானாவது எட்டாவது வரை படிச்சிருக்கேன். ஆனா, அவ அது கூடப் படிச்சதில்லை. இயற்கையா எங்க மனசு ஒண்ணுபட்டுட்டுது.

''இவ பெயர் பழனியம்மா. கவலையாலும் வேளா வேளைக்குச் சரியான சாப்பாடு இல்லாமையாலும் இப்போ வாடி வதங்கியிருக்கா. கொழுகொழுன்னு ராசாத்தி மாதிரி என் கண்ணுக்குப் படுவாள் அப்போ. எங்க ஊருக்குப் பக்கத்திலே காவிரிக் கரை ஒரமா சின்ன ஊர் ஒண்ணு இருக்குங்க. அதான் சாமி எங்க பரம்பரை ஊர். ஊர் மாரியம்மன் கோயிலுக்குப் பூசை செய்வதுதான் எங்க பரம்பரைத தொழில். அதிலும் பாகம் வேறு. எங்க தாத்தா காலத்திலே கோயில் பூஜைக்குப் பாத்யதை கொண்டாடிப் பெரிய வழக்கு நடந்ததாம். கடைசியிலே பஞ்சாயத்து செய்து எங்க தாத்தா ஆறு மாசமும், எதிர்க்கட்சிக்காரர் ஆறு மாசமும் பூஜை செய்ய வேண்டும் என்று திட்டமாச்சு. பொல்லாத வேலை! இதற்குப் போட்டி வேறே! உண்மையா சாமிக்குப் பூஜை செய்து தொண்டு செய்ய ஆசை இருந்தா இப்படியா 'பிரிவினை' செய்யும்படி வரும்? ருசி இல்லாமலில்லை. வருடா வருடம் மாரியம்மன் பண்டிகையிலே பூசாரிக்கு ஆளுக்கு ஐநூறுக்கு மேலே வரும்படி கிடைக்கும். அதுவே வருடச் செலவுக்கு ஆச்சே?

''தினம் காவிரிக் கரைப் பூந்தோட்டத்துக்குப் போய் குடலையில் மஞ்சள் அரளி, மல்லிகை, செவ்வரளி, வில்வம், துளசி ஆகியவை பறிச்சிட்டு வரணும். பிறகு கோயில் மண்டபத்தில் தொடுத்து வைச்சுக் கதவு திறந்து விளக்கேத்தி வைச்சுட்டுத்தான் மீதி வேலை. மற்றொரு பூசாரி பூ கொண்டு வர ஆள் வச்சிருந்தான். நான் 'இதுக்கெல்லாமா ஆளு? கடவுள் கொடுத்த கால் இருக்கிற வரை அவுங்க அவுங்க வேலையை அவுங்களே செய்யணும்னு ஒரு மைல் நடந்து போவேன். காவிரிக் கரைக்கு ஊரிலேயிருந்து குடி தண்ணீருக்குப் பெண்கள் எல்லாம் ஒரு மைல் நடந்து வந்துதான் எடுத்துச் செல்லணும். பட்டணத்துலே வீட்டுக்கு வீடு பைப். இல்லாட்டி தெருவுல பைப். அதுலே தண்ணி எடுக்கவே கஷ்டப்படுகிறார்கள். கிராமத்துல பார்க்கணுமே, பெண்கள் கோஷ்டி கோஷ்டியமாக இடுப்பில் குடத்துடன் கிளம்பி, நீர் மொண்டு திரும்பும் காட்சி! பார்க்கப்

பார்க்கத் தெவிட்டாதது. பூப்பறிக்கப் போவதும், தண்ணி எடுக்க பழனியம்மா வருவதும்தான் எங்கள் நிம்மதி மனத்தைக் கலைத்தது. கலக்கமும், கவலையும், படபடப்பும் அறியாத மனத்தில் ஒரு வேகத்தை, இன்னதென்று கூற முடியாத உணர்ச்சியை உண்டாக்கியது. பழனியம்மா மனத்தை என்னை விட முதலில் கவர்ந்தது நாகலிங்கப்பூ தான். அதனுடைய அமைப்பு பெண்ணுள்ளத்தைக் கவராமல் இருக்க முடியுமா? நாகலிங்க மரம் உயர்ந்து வளர்ந்த மரம். மத்தவங்களுக்கெல்லாம் எட்டாது. தினம் மத்தவங்க வருவதற்கு முன்பு மரத்தின் மீதேறி அந்த மலரைப் பறித்துத் தயாராய் வைத்திருப்பேன். எங்கள் சந்திப்பை அது வளர்த்தது. அன்பை வளர்த்தது. பெண்கள் எல்லாம் நீர் எடுத்துப் போன பிறகு பழனியம்மா தனியே வருவாள்.

''ஊர்ப் பேச்சு கேட்க வேண்டுமா? இந்தக் கிராமக் கிராதகர்கள் வம்பும், தும்பும் வளர்க்க ஆரம்பித்தனர். லேசாக என் காதிலும் போட்டார்கள். பழனியம்மாவின் தந்தையும், என் தந்தையும் தனித்தனியே என்னிடம் என் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும்படி கூறினார்கள். ஆற்றுக்கு நீரெடுக்க வர பழனியம்மாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. எங்களைத்தான் தடை செய்தார்களே தவிர, எங்கள் உள்ளத்தைத் தடை செய்ய முடியவில்லை. எவ்வளவோ தடவை நாங்கள் சந்தித்தோம். என் தந்தை எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். 'தம்பி... இந்த வருஷமோ, அடுத்த வருஷமோ கண்ணை மூடிடுவேன். இந்த மாதிரியெல்லாம் வேண்டாம்டா. வேறே நல்ல குலமா, குணமான பெண்ணைக் கல்யாணம் கட்டி வைக்கிறேன்' என்று இதமாகவும் சொல்லிப் பார்த்தார். நான் பிடிவாதமாக 'முடியாது' என்ற சொல்லி விட்டேன். கிழவரானாலும் கவுண்ட ஜாதியில் வந்தவரல்லவா? கோபமும் வீர குணமும் எங்கே போகும்? 'டேய் பயலே! அப்படியா சேதி... இந்தச் சொத்திலே தம்படி காசு கிடைக்க ஒட்டாமே அடிச்சிடுவேன்' என்று மிரட்டினார். அதிகம் பேசினால் கைகலப்புக் கூட ஏற்பட்டிருக்கும்.

''ஊரில் இது போன்ற சம்பவம் புதுசு. வயது வந்த அறியாப் பொண்ணு மனசைக் கெடுத்துட்டான் பாவின்னு சிலர் என்னைச் சபித்தனர். ஏனெனில் பழனியம்மாவும் என்னைப் போலவே பிடிவாதமாக அவள் தந்தையிடம் என்னைத்தான் கல்யாணம் கட்டிக்குவேன் என்று கூறிவிட்டாள். அதென்ன பெரியவர்கள் இஷ்டப்படி நடப்பதா, சிறிசுகள் அவங்க இஷ்டப்படி நடப்பதா? என்ற கோபம். ஊர் பஞ்சாயத்தார்களுக்குள் விவாதம் முற்றிப் பஞ்சாயத்தே ஒரு நாள் கூடிவிட்டது. என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள்.



''ஊருக்குப் பெரிய மனுஷன் எனப்பட்டவர்கள் அன்பாகவும், அதட்டியும், உருட்டியும், மிரட்டியும் என் எண்ணத்தை மாற்றச் சொன்னார்கள். பெண்ணின் மாமன்காரன் ஆத்திரமும் ஆவேசமும் நிரம்பிய குரலில், 'டேய்... 'பழனி, பழனி'ன்னு அவ மனசைக் கெடுத்தியோ, பூசாரி வேலைக்கு உலை வச்சிடுவேன்... அதோட இல்லை, உன் உசிரு உங்கிட்டே இராது. ஜாக்கிரதை' என்று கருவினான். எனக்கென்ன ஆண்பிள்ளை இல்லையா? கோபம் துடித்தது. உள்ளம் உருக பூசாரியம்மனுக்குப் பூசை செய்து மனசு பண்பட்டிருந்தாலும் அதட்டலுக்கும் மிரட்டலுக்குமா இந்த மனசு பயந்துடும்? பொல்லாத மனசாச்சே? 'டேய் என்ன சொன்னே.... பூசாரி வேலை தானேடா? போனாப் போகட்டும்டா... காடாறு மாசம் நாடாறு மாசம்னு ஆறு ஆறு மாசம் இரண்டு பேர் பூசை செய்யறதை ஒத்தரே செய்யட்டும்டா... என்னமோ சொன்னியே 'உசிரு' உங்கிட்டே இல்லைன்னு... இப்ப காட்டுடா உசிரு எவங்கிட்டேங்கிறதை' என்று பாய்ஞ்சேன் பாரு. கூடியிருந்தவர்கள் அப்படியே என்னைக் கட்டிப் பிடித்திருக்காவிடில், அது மிரண்டதுக்கு காடு கொள்ளாமல்தான் போயிருக்கும்.

''பூசாரி வேலை எனக்குக் கிடையாது. ஒழுக்கம் தவறிவிட்டவனுக்குப் பூசாரி வேலை யோக்கியதை இல்லைன்னு கூறித் தீர்ப்பளித்து விட்டார்கள் பஞ்சாயத்தார். ஒழுக்கம் நான் தவறினேனோம்! அப்படிச் செய்துவிட்டாலாவது என் மனசு மாறிடாதான்னு எண்ணம்.

''எதேச்சையா பழனியம்மா மறுநாள் ஒருவருக்கும் தெரியாமல் என்னைச் சந்தித்தாள். சிறு குழந்தை போல் விம்மினாள். தகப்பன் அவளைக் கட்டி வைத்துக்கூட அடித்தானாம். 'ஓடுகாலி' என்பன போன்ற வாயில் வராத சொற்களால் வைதானாம். இந்த வீட்டை விட்டே அடிச்சுத் துரத்திடுவேனென்றானாம். இவ்வளவையும் விம்மிக் கொண்டே சொல்லி விட்டு, 'ஐயோ! உங்கப்பா சொத்தையெல்லாம் உங்க பேருக்குக் கொஞ்சங்கூடக் கொடுக்க மாட்டேனுட்டாங்களாமே! என்னாலேதானா இவ்வளவு வரணும்? ஐயோ என்னை மறந்துடுங்களேன்' என்று விம்மினாள். தோளில் சாய்ந்து கெண்டு சட்டென்று அவள் முகவாய்க் கட்டையைப் பிடித்துத் தலையை என் முகத்துக்கு எதிரே நிறுத்தினேன். 'பழனி! அப்பன் கட்டி வைச்சு அடிச்சானே... ஓடிப் போவோம்னு சொன்னேனே... அப்பவெல்லாம் நீ என்னை மறந்துடறேன்னு சொல்லறதுதானே. என்னை மறந்துடறதுதானே'' என்றேன். அவள் கண்களில் நீர் 'பொல பொல'வென உதிர்ந்தது.

''வேலை போச்சு, ஊரில் ஏச்சும் அதிகமாச்சு. ஆனால், இந்தப் பொல்லா மனசு மாறவில்லை. நாகலிங்கப் பூவைப் பறித்து அவளுக்கு

எப்படியாவது அளிக்கத் தவறுவதில்லை. அன்று போதாத வேளையோ நல்ல வேளையோ... மழை பெய்து விட்டிருந்தது. பழனியின் தம்பி எதேச்சையாக அந்தப் பக்கம் வந்திருந்தான். 'தம்பி' என்று கூப்பிட்டேன். அவன் ஆவலுடன் ஓடி வந்தான். 'இதோ... நாகலிங்கப்பூ பறிச்சுத் தரேன். அக்காவிடம் கொடு' என்று மரத்தின் மீது பரபரப்புடன் வேகமாக ஏறினேன். பெய்த மழையால் உதிர்ந்த இதழ்களற்ற பூக்கள் தான் எட்டிய கிளையில் அகப்பட்டன. உச்சியில் ஏறிவிட்டேன். கிளை முறிந்து, படார் என்ற சப்தத்துடன் கீழே கிளையும் நானும் வீழ்ந்தோம். 'அய்யய்யோ' எனக் கூவி, தம்பி ஊருக்குள் ஓடினான். நல்ல அடி. சிறிது நேரம் நினைவின்றிக் கிடந்தேன். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று ஏகக்கூட்டம் கூடிவிட்டது. பழனியம்மாவும் கும்பலில் ஒரு மூலையில் இருந்தாள் போலும்! எல்லாரும் முதலைக் கண்ணீர் விட்டனர். வலியால் நான் துடித்து வேதனைப்படுவதைக் கண்டு சிலருக்கு ஆறுதல். 'ஏண்டா சின்னக் கவுண்டா, அந்த உயர மரத்தில் ஏறலாமா?' - இதுவா ஆறுதல்?

''பக்கத்து ஊரிலிருந்து டாக்டர் வரவழைக்கப்பட்டார். தொட்டுப் பார்த்தார். எலும்பு முறிவு என்று கண்டுபிடிக்க அவருக்கு ஒரு மணி நேரம் ஆச்சு! பட்டணத்திலே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத்தான் கொண்டு போக வேண்டும் என்று கூறி விட்டார். நல்லவேளை கால் முறியமல் வலக்கைதான் முறிந்திருந்தது.

''ஜெனரல் ஆஸ்பத்திரி என்றவுடன் எனக்கு அழுகை வந்து விட்டது. எப்படிப் போவது, யார் துணைக்கு வருவார்? அப்பாவோ தள்ளாதவர். என்னதான் என் மேல் கோபமிருந்தாலும் பிள்ளை அடிபட்டுக்கிடக்கும்போது உணர்ச்சியற்று நிற்பாரா? 'உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகவிட்டால் இன்னும் இருநாளில் சீழ் பிடித்து விடும். கையைத் துண்டிக்க வேண்டி வரும்' என்று பயமுறுத்தினார் அந்த டாக்டர்.

''கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்தது. 'பாத்தியா... மாரியம்மனுக்குப் பூஜை செய்து அபசாரமா நடந்ததுக்கு அம்மா தண்டனைக் கொடுத்துட்டாள்!' என்று ஓரிருவர் கூறிச் சென்றது என் காதில் விழுந்தது. அறியாதவர்கள் என எண்ணிச் சும்மாயிருந்தேன்.

''இரட்டை மாட்டு வண்டி ஒன்று கொண்டு வரப்பட்டது. என்னை வண்டியில் ஏற்றினார்கள். கூட யார் வருவது என முடிவாகவில்லை. அப்பா பச்சைக் குழந்தைபோல் அழுது கொண்டே வண்டியிலேறப் போனார். குடுகுடுவென பழனியம்மாள் ஓடி வந்தாள். என் அப்பாவை



...ச் சொல்லி, 'மாமா... நீங்க இருங்க; ஊரிலே நாங்க இருவரும் பொல்லாதவர்களாகி விட்டோம். பழிக்கு ஆளாகி விட்டோம். எனக்காகத்தானே அவர் மரத்தில் ஏறிக் கையை முறித்துக் கொண்டார். நான் போறேன் பட்டணம்?' என்று கூறிக் கண்களைத் துடைத்துக் கொண்டு வண்டியில் ஏறிக் குறுக்குக் கம்பியைப் போட்டாள்.

''எல்லாரும் அசந்து நின்றார்கள். பட்டணம் வந்தோம். இடையில் எவ்வளவோ கஷ்டம். நான் படும் வேதனையைக் கண்டு அவள் துடிப்பதோடன்றி கஷ்டமறியாத, வெளியே எங்கும் போய் அறியாத அவள் அந்த ரயிலில் கூட்ட நெருக்கடியில் என்னை அழைத்து வந்து இரவும் பகலும் இங்கே தொல்லைப்பட வேண்டும் என்று அவளுக்கு என்ன தலையெழுத்தா?'' என்றான் சின்னக் கவுண்டன்.

அவன் குரல் அதைச் சொல்கையில் தழுதழுத்தது. கொஞ்சம் இருமினான். 'எல்லாம் இந்த மனசுதான் காரணம்' என்று என்னை அறியாமல் கூறினேன்.

''சாமி! இந்தப் பொல்லாத மனசு இன்னும் என்னென்ன திட்டமிட்டிருக்குத் தெரியுமா... கை சரியான பிறகு ஊருக்குப் போகப் போவதில்லை. திருத்தணி போய் முருகன் சந்நிதியிலே நாங்கள் கடவுள் சாட்சியாக தம்பதியாகப் போறோம்'' என்றான் - அவன் முகத்தில் களிப்புப் பொங்க.

''கவுண்டா! என்னை மறந்துவிடாதே. கல்யாணத்துக்குக் கூப்பிடு'' என்றேன். மணி 'டாண்... டாண்' என்று பத்து அடித்தது. பழனியம்மாள் கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

● ● ● ●

# புத்துயிர்

சிறுகதை எழுதுவதற்கு முன் அதற்கு நல்லதொரு நிலைக்களம் அமை
வேண்டும். அந்தக் களத்தில் உலவும் கதாபாத்திரங்களுடன் வாசக
ஒன்றிவிடச் செய்ய வேண்டும். இப்படியொரு கதை அமையுமான
அதைப் படித்து முடித்தவுடன் இவ்வளவு நேரம் நாம் எங்கிருந்தோ
கதையில் வரும் ரகுராமானாகவோ அல்லது தங்கமாகவோ நா
மாறிவிட்டிருந்தோமா என்னும் உணர்ச்சிதான் மேலோங்கி நிற்கு
கதையைப் படித்து முடித்தவுடன் மௌனமாகி விடுவோம். சிந்தனை
சுருள் சுருளாக விரியும்.

அந்த மாதிரியான ஓர் அனுபவம் 'புத்துயிர்' என்னும் இக்கதையை
படித்தவுடன் கட்டாயம் வாசகர்களுக்கு ஏற்படும்.

நிலைக்களம்: கோதாவரி தீரத்திலுள்ள அமலாபுரம் என்னும் கிராம
கோதாவரியிலோ பெருவெள்ளம். இதன் மத்தியில் இரண்
கதாபாத்திரங்கள். இடையிடையே ஆசிரியரும் வந்து ''அப்படி ஒரு தடவை
வெள்ளம் வந்து மக்களுக்குத் தொந்தரவு கொடுத்த சமயம் இந்த கதையி
ஒரு ரகுராமனுக்கும் - தங்கத்துக்கும் மட்டும் சிறிதுநேரம் சொர்க்க இன்பத்
ஊட்டியது'' என்று கட்டியம் கூறும்போதே கதை களைகட்டி விடுகிற
'மேலே போ மேலே போ' என்று படிக்க ஆவலைத் தூண்டுகிறது.

பாத்திரங்களே தங்கள் கதையைக் கூறுவதும், கூறிக் கொண்டே கதை
நகர்த்துவதும் ஒரு யுக்தி. அது தமிழ்ச் சிறுகதை உலகிற்குப் புதியதன்
ஆனால், படிக்கும்போதே அதே கதாபாத்திரமாக நம்மை மாறச் செய்யு
விக்கிரமனின் மாயா ஜாலச் சக்தியை நாம் பாராட்டியே ஆக வேண்டும்

''தங்களைக் கண்டவுடன் பழைய எண்ணங்கள் சக்தி இழந்து நிற்கின்றன
என்று தங்கம் கூறும்போது, வார்த்தைகளின் சக்தி இழப்பை நாம் நன்
காண்கிறோம்.

வளமான சொற்களைச் சிக்கனமாகக் கையாண்டு வாசக அன்பர்களையு
சிறிது நேரம் சொர்க்க இன்பத்தை அடையச் செய்யும் இப்'புத்துயிர்' ப
தடவை படிக்க வேண்டிய ஒரு சிறந்த கதை.

– நா. ராமச்சந்திரன்





# 8. புத்துயிர்

பிரபல ஆசிரியர்கள் தங்கள் கதைகளுக்கு முன்னுரையாக எழுதுவதுபோல எழுத எனக்கு நோக்கமில்லை. ஆனாலும் கதாநாயகன் மிஸ்டர் ரகுராமனையும், கதாநாயகி (ஆனால், கதாநாயகனுடைய நாயகியல்லள்) திருமதி தங்கத்தையும் உங்களுக்கு அறிமுகம் செய்தாக வேண்டும். மேலும் கதை நடக்கும் ஊர் - நடந்த தேதி - கிழமை - நேரம் எல்லாவற்றையும் முன்கூட்டியே கூறாமல் திடுதிப்பென்று கதையை ஆரம்பித்து உங்களைத் திக்குமுக்காடச் செய்யும் நோக்கமும் எனக்குக் கிடையாது.

எதிர்க்கரை தெரியாத அளவுக்கு அகலமாகக் காட்சி அளிக்கும் கோதாவரி நதிக்கரையை ஒட்டிய ஊர் அமலாபுரம். கோதாவரியில் வெள்ளம் வரும் சமயமெல்லாம் ஊரை ஒரு பார்வை பார்க்காமல் போகாது; அப்படி ஒரு தடவை வெள்ளம் வந்து மக்களுக்குத் தொந்தரவு கொடுத்த சமயம் இந்தக் கதையில் வரும் ரகுராமனுக்கும் - தங்கத்துக்கும் மட்டும் சிறிது நேரம் சொர்க்க இன்பத்தை ஊட்டியது.

அதெப்படி என்கிறீர்களா? கேளுங்கள்...

ரகுராமன் சொல்கிறார்

தமிழ்நாட்டில் உத்தியோகத்துக்கு இடமா இல்லை? பின் எதற்காக பி.டபிள்யூ.டி. இலாகாக்காரர்கள் இங்கு மாற்றித் தொலைக்க வேண்டும்? பாஷை புரியாத ஊர். பரிவாகப் பேசும் மனித சஞ்சாரமற்ற இடம். விதியை எண்ணி மேல் இடத்து அதிகாரியைச் சபித்துக் கொண்டே இங்கே வந்து சேர்ந்தேன். என்னைப் போன்ற அதிர்ஷ்ட மற்றவன் ஒருவரையும் உலகில் பார்க்க முடியாது.

நான் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவனல்லன். சேர்ந்தநல்லூர் பண்ணை யென்றால் பிரபலமாயிற்றே! பண்ணையார் பாஸ்கரனின் சாக்ஷாத் புதல்வன் நான்தான். பணத்தில் பிறந்த நான் நூறு ரூபாய் சம்பளத்துக்காக இப்படி கஷ்டப்பட வேண்டி வந்திருக்கிறது. புது என்ஜினீயர் ஒருவர் வரப் போகிறாராம். தமிழராம் அவர். ஐயோ பாவம். நான் படும்பாடு

போதாதென்று அவர் வேறு வர வேண்டுமா, என்ன!

என் வாழ்க்கையில் இப்பொழுது எனக்கு எவ்வித உற்சாகமுமில்லை. சென்னையை விட்டு எப்பொழுது தந்தையிடம் கோபித்துக் கொண்டு வந்து சேர்ந்தேனோ அதற்கு முன்பே என் மனக்கோட்டையெல்லாம் இடிந்து விட்டது.

இடிந்த கோட்டைகள் முழுதும் அழிந்து போயிருக்கக் கூடாதா! அடிக்கடி தோன்றி என் ஆத்திரத்தைக் கிளப்புகிறது; என் உள்ளத்தை வேதனையுறச் செய்கிறது.

நான் சொல்கிறேன்

மனத்தில் நிம்மதியின்றி முடுக்கிவிட்ட பொம்மைபோல் எல்லா வேலைகளையும் செய்து வந்த ரகுராமனுக்கு, கோதாவரி வெள்ளத்தன்று புத்துயிர் ஏற்பட்டது.

அந்த வாரம் பெய்த பெருமழையால் கோதாவரி கட்டு மீறியது. அமலாபுரத்துத் தெருக்களில் வெள்ளம் புகுந்துவிட்டது. அநேக வீடுகள், ஆடு மாடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே வெள்ளக்காடாகக் காட்சி யளித்தது.

ஒரு முக்கியச் செய்தியை எடுத்துக் கொண்டு முழங்கால் அளவு ஜலத்தில் வேகமாக புது என்ஜினியர் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான் ரகுராமன். என்ஜினீயர் அவ்வூருக்கு வந்து நான்கே நாள்கள்தாம் ஆகியிருந்தன.

ரகுராமன் மெல்லத் தட்டுத் தடுமாறிச் சென்று என்ஜினீயர் வீட்டுக் கதவைத் தட்டினான். பங்களாவைச் சுற்றி முழங்காலளவு நீர் நிரம்பி யிருந்தது. பிசுபிசுவென இன்னும் மழை தூறிக் கொண்டிருந்தது.

உயிருக்கு அஞ்சி மக்கள் பக்கத்து ஊருக்கு ஓடி விட்டதால் ஊர் அமைதியாக இருந்தது. அந்த அமைதியை எடுத்துக்காட்டுவதுபோல் கோதாவரியின் வெள்ளம் 'ஹோ'வென்று பெரும் இரைச்சலுடன் ஓடிக் கொண்டிருந்தது.

மழை நிற்கும் அறிகுறியே காணவில்லை. சிறிது நேரத்துக்கொரு தடவை மின்னல் ஒளி கண்சிமிட்டி வெளிச்சம் காட்டி மழையை மேலும் கூப்பிடுது போலிருந்தது.

''ஸார், ஸார்!'' என்று பலமுறை கூப்பிட்டான் ரகுராமன்.



பத்து நிமிஷம் கழித்து, ''யாரது?'' என்று ஒரு மெல்லிய குரல் வந்தது. தொடர்ந்து கதவும் திறக்கப்பட்டது.

''அவரில்லையே; அவசரமாகக் காலையில் போனவர் வரவில்லையே'' என்று அந்தக் குரல் சொல்லிற்று. வீணையின் நாதம் போன்றிருப்பினும் அவளுடைய குரல் மழையால் கம்மிப் போனது போன்றிருந்தது.

''இல்லை... மிக அவசரச் செய்தி. அவரைப் பார்த்துக் கொடுத்தாக வேண்டும்'' என்று இழுத்தாற்போல் சொன்னான் ரகுராமன்.

அந்த மழை இருட்டில் ஓர் உருவம் மற்றவருக்குத் தெரியவில்லை.

''ஓ... பி.டபிள்யூ.டி. இன்ஸ்பெக்டரா? 'அவர்' கூடச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். உள்ளே வந்து ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருங்கள்'' என்று அவள் கூறிவிட்டு மின்சார விளக்கைச் சட்டென்று ஏற்றினாள்.

என்ன 'ஷாக்'கா அடித்து விட்டது? ஏன் இருவரும் அப்படி வெறித்துப் பார்க்கிறார்கள்? அசையாப் பொம்மைப் போல் நின்று விட்டார்கள்.

ரகுராமன் சொல்கிறார்

எவ்வளவு நேரம் அப்படியே நின்றேனோ எனக்குத் தெரியாது. சட்டென்று நானே சமாளித்துக் கொண்டேன். முதலில் வெட்கமாகவும், பிறகு சிறிது அச்சமாகவும் போய்விட்டது. என்ஜினீயர் வீட்டில் வந்து அப்படி வெறிச்சென்று அவர் மனைவியைப் பார்த்துக் கொண்டே ஒருவன் நிற்பதென்றால் எவ்வளவு கேவலம்? நான் வேண்டுமென்றா அப்படி நின்றேன்?

வெளியே ஒரு மின்னல் மின்னியது. அந்தகாரம் சூழ்ந்த என் வாழ்விலும் ஒரு கணம் புத்துயிர் ஏற்பட்டது.

அவள் இப்பொழுது என்ஜினீயர் மனைவியாகி விட்டாள். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய பெரிய 'கெஜடட்' அதிகாரியின் மனைவியாகி விட்டாள். திருமதி பாலகிருஷ்ணனாக ஆகிவிட்டாள். இதெல்லாம் எனக்கு முன்பே தெரியுமா? தெரிந்திருந்தால் இப்படி மரியாதைக் குறைவாக ஸ்தம்பித்து நின்றிருப்பேனா?

போகட்டும்; அவர் இதை மரியாதைக் குறைவாகவோ, வித்தியாச மாகவோ நினைத்துக் கொள்ளவில்லை.

என்னைப் போலவே அவளும் தான் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

## தங்கம் சொல்கிறாள்

அமலாபுரத்துக்கு மாற்றல் என்று என் கணவர் கூறினார். அவ் எப்படியிருக்குமோ என்னும் கவலை வேறு; மேலும் எனக்கு வாழ்க்கையிலேயே ஒருவிதமான பிடிமானமுமில்லாமலிருந்தது. எனக்குக் கல்யாணமானதே இருபது வயதில்தான்.

நீங்கள் சிரிக்கலாம். இருபது வயதுக்குக் குறைந்து இப்பொழுதெல்லாம் எங்கே கல்யாணம் நடக்கிறது? என் தந்தை என்னை உயர்நிலைப் பள்ளிப் படிப்பு படிக்க வைக்காமலிருந்தால் ஒன்றும் நேர்ந்திருக்காது.

கல்யாணமாகி இரு வருடங்கள் குதூகலமோ களிப்போ இல்லாதிருந்தேன். என் கணவர் என்னை மகிழ்விக்கப் படாதபாடுபட்டார்.

அவையெல்லாம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. வேதனை நிறைந்த எண்ணம் உள்ளத்திலிருக்கும் வரை கலகலப்பாக எப்படி இருக்க முடியும்? சில நாள்கள் சென்று கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தேன். சென்றதையெல்லாம் மறந்தேன்.

குதித்தாடிய அந்த நாள். குதூகலம் நிறைந்த அந்தக் காலம் - குறும்பாகப் பேசிக் கொட்டமடித்த அந்தத் தினங்கள் - மணிக்கணக்காகப் பேசிப் பேசிப் பொழுதுபோக்கிய அந்த வேளைகள் அவ்வளவையும் மறந்து சில ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன.

மின்சார விளக்கை ஏற்றி அவர் உருவத்தைக் கண்டு ஸ்தம்பித்த ஒரு கணத்தில் அந்தப் பழைய நினைவுகள் பறந்தோடி வந்தன.

ரகுராமனா என் முன் நின்றவர்? ஆமாம்! அவரேதான்.

என் பழைய சிநேகிதர். இதுபோல் கதவைத் திறந்து ஒரு கணம் அவரை விழுங்கி விடுவதுபோல் பார்த்துச் சிலைபோல் நின்றதை யாராவது பார்த்திருந்தால், ஏன்... தோட்டக்காரனே கண்டிருந்தால் என்ன நினைப்பான்?

‘ஆயிரம் ரூபாய் சம்பளக்காரன் மனைவியைப் பாருடா!’ என்று நினைக்க மாட்டானா?

நல்லவேளை; தோட்டக்காரன் வெள்ளத்தில் தன் வீட்டைக் காப்பாற்றிக் கொள்ளப் போய் விட்டான்.

தனியே வெறிச்சென்று ஜன்னல் வழியே தொலைவில் ஓடும் கோதாவரியின் பெரு வெள்ளத்தில் மனத்தைப் பறி கொடுத்து,



பொழுது போகாமல் உட்கார்ந்திருந்த எனக்குப் பொழுது போகும் வழி கிடைத்து விட்டது.

ரகுராமன் என் சிநேகிதர். துணிச்சலுடன் சொல்கிறேன். உண்மையை மறக்கலாம். உள்ளத்து உணர்ச்சியை மறைக்க முடியுமா?

என் தந்தை காஞ்சிநாதன் பி.ஏ.பி.எல்-ஐ மயிலாப்பூரில் தெரியாதவர்களே கிடையாது. புரட்சியாகப் பேசியும், சீர்திருத்தம் கூறியும் பிரமாதப்படுத்துவார். ஆனால் சொந்த வீட்டிலோ..?

ரகுராமனின் சிநேகிதம் எப்படி ஏற்பட்டது என்று கேட்காதீர்கள். நான் எப்படியென்று கூறுவது? களை பொருந்திய அவர் முகம் கண்டு மயங்கினேன். எப்படியோ எங்கள் நட்பு கொஞ்சம் கொஞ்சமாக ஒருவரையொருவர் நெருங்காமலேயே வளர்ந்து கொண்டு வந்தது.

## ரகுராமன் சொல்கிறார்

தங்கத்தை எப்பொழுது முதன்முதலில் சந்தித்தேன் என்பது ஞாபகமில்லையெனினும், அந்தத் துறுதுறுப்பான கண்கள் என்னையே மீண்டும் மீண்டும் திரும்பித் திரும்பிக் கண்டது மட்டும் என்னும் என் நினைவில் உள்ளது.

நானும் அப்பொழுது மயிலாப்பூரில்தான் இருந்தேன். பி.ஏ., பரீட்சைக்குப் படித்து வந்தேன். அப்பா, அம்மா எல்லாரும் பட்டண வாசம்தான் செய்தார்கள்.

தங்கத்துக்கும் எனக்கும் நட்பு வளர ஆரம்பித்தது. நாங்கள் நெருங்கிப் பழகியோ - கடிதம் எழுதியோ காதலை வளர்க்கவில்லை. எங்களை அறியாமல் ஓர் உணர்ச்சி எங்களைப் பிணைத்தது.

என் தந்தை ஒருநாள் என் கல்யாணப் பேச்சை எடுத்தார். நான் விஷயத்தைக் கூறினேன். அப்பா கோபிக்கவில்லை. சரியென்று தங்கத்தின் தந்தையை அணுகி ஜாதகம் கேட்டார். அவர்கள் வடமாக்களாம். நாங்கள் வாத்திமர்களாம். ஒருவருக்கொருவர் பெண் கொடுத்துச் சம்பந்தம் செய்ய மாட்டார்களாம். என் தந்தையும் சாதிப் பிரிவு விட்டு சம்பந்தம் செய்யத் துளிக்கூடி இஷ்டப்படவேயில்லை.

## தங்கம் சொல்கிறாள்

சமூக சீர்திருத்தவாதியென்று என் அப்பாவுக்குப் பெயர்.

பிராமணர்களுள் உப பிரிவினர் ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டார்கள். அவர் மட்டும் விதிவிலக்கா!

அப்பாவிடம் துணிந்து என் விருப்பத்தைக் கூற, விளைவு மறுநாளே பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டேன்.

அடுக்களையை விட்டு அகலக்கூடாதென்ற தடை உத்தரவு பலமாயிருந்தது. "குழந்தை! சமையல் வேலையெல்லாம் பழகிக்கோ" என்று பரிவாகப் பேசுவார் தந்தை.

என் அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ வரும் வரன்களெல்லாம் சரியில்லாமலே போய்க் கொண்டிருந்தது. ரகுராமனைச் சந்திக்க முடியாதது எனக்குப் பித்துப் பிடித்தது போலவே இருந்தது.

கடைசியில் எனக்கும் இவருக்கும் கல்யாணமும் நடந்தது. கல்யாணமாகி வெகு நாள்கள் என் உன்மத்தத்தைக் கண்டு என் கணவர் பெரிதும் கலக்கமே அடைந்து விட்டார்.

வாழ்க்கையே கசந்து போன எனக்கு இப்பொழுது இவரைக் கண்டவுடன் பழைய நினைவுதான் தோன்றியது. இரு குழந்தைகளுக்குத் தாயானஎனக்குப்பழையவிட்டுப்போனசம்பவங்களைநினைவுபடுத்திக் கொண்ட இன்று ஒரு நாளாவது சற்றுக் குதூகலமாயிருக்க எண்ணம். அவர் பேசுவாரோ, மாட்டாரோ!

ரகுராமன் சொல்கிறார்

திடீரென்று தங்கத்தைப் பிறகு பார்க்கவே முடியவில்லை. வீட்டிலேயே அவளுக்குச் சிறைவாசம் என்று அறிந்தேன்.

உள்ளுக்குள் வேதனை. ஆனால், வெளிக்குச் சந்தோஷமாக இருந்தேன். ஒருநாள் சொல்லிக் கொள்ளாமல் கோயமுத்தூர் வந்து சேர்ந்து விவசாயக் கல்லூரியில் சேர்ந்தேன். என் தந்தை என்னைத் தேடிப் படாத பாடுபட்டார். பிறகு ஒரு கடிதம் எழுதிச் செய்தியைத் தெரிவித்தேன்.

விவசாயக் கல்லூரியை விட்ட பிறகு குடும்பத்தைக் காப்பாற்ற அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்தேன். ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்னை மாற்றினார்கள். பல ஊர்களைச் சுற்றினேன்.

துறுதுறுப்பான முகங்களைக் கண்டால் தங்கத்தின் நினைவுதான் தோன்றும். இன்று எதிர்பாராமல் தங்கத்தைச் சந்தித்து விட்டேன். அவள் என்னை நினைவில் வைத்திருக்கிறாளோ இல்லையோ?



சே! ஞாபகமில்லாவிட்டால் இப்பொழுது நம்மை உள்ளே வந்து உட்காரச் சொல்வாளா?

எனக்குப் பழைய கதையைத் தொடர்ந்தாற்போல் தெரிந்து கொள்ள ஆசைதான். திடீரென ஏற்பட்ட இந்தச் சந்திப்பு சொர்க்கத்தில் கூட கிடைக்காததுதான்.

தங்கம் பேசுகிறாள்

கண்காணாத காட்டிலே உங்களை மீண்டும் சந்தித்தது தெய்வ சங்கல்பமே. வாழ்க்கையின் ஜீவநாடியான நாள்கள் ஓடிவிட்டன. உங்களைக் கண்டவுடன் பழைய எண்ணங்கள் பீறிட்டு வருகின்றன.

உங்களைச் சந்தித்தது என் வாழ்க்கையில் ஒரு ஜீவ ஒளியைக் கொடுத்தது. நம்மை அந்தக் காலத்தில் ஒரு சக்தி பிணைத்தது; பிரிக்கவும் செய்தது.

இப்பொழுது நானோ என்ஜினீயரின் வாழ்க்கைத் துணைவி. நீங்களோ சிறு உத்தியோகஸ்தர். நான் பெரிய உத்தியோகஸ்தரின் மனைவியென்ற மமதை எனக்கு இல்லை. பழைய பாசம் எப்படிப் போகும்?

உங்கள் கதையைக் கேட்டால்தான் என் நெஞ்சம் ஆறுதலடையும். ஆறாண்டுகளாக அடிக்கடி உங்களைப் பற்றி எண்ணிய என் வறண்டு போன வாழ்வில் இந்த நேரத்தில் உங்களைச் சந்தித்தது சொர்க்க இன்பம்தான்.

நாம் இப்பொழுது குழந்தைகளல்லர். இன்பத்தின் சுழலில் கட்டுப் பட்டு இருந்த வாலிபக் காலமன்று. வாழ்க்கையின் மறுபாதியை நாம் மெதுவாக அணுகிக் கொண்டிருக்கிறோம்.

எவ்வளவோ இன்பங்கள்தான் எனக்கு அளிக்கப்படுகின்றன. பணக் குறைவா? ஆள் குறைவா? கணவரது அன்புக்குக் குறைவா? ஆனால், பாலிய பாசத்தின் மீது வீழ்ந்த ஓர் அடி இருக்கிறதே... அது என் இதயத்தை விட்டு அகலவேயில்லை.

எப்படியோ சமாளித்து மறந்து போகத்தான் பார்த்தேன். வேதனை மறந்தாலும் வேகம் மாறவில்லை.

உங்களுடன் பேசும் இந்த இரண்டு மணி நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க நினைக்கிறேன்.

ரகுராமன் பேசுகிறார்

தங்கம்! நீ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மை. நீ என்று உரிமையுடன் சொல்கிறேன். என்ன நினைக்கிறீர்களோ, அதையே தான் நானும் நினைக்கிறேன். என் கதை ஒன்றுமே சுவை இல்லை. உன்னை அடைய முடியாது போன பிறகு கோவைக் கல்லூரியில் சேர்ந்தேன். அரசாங்க அலுவலை அள்ளித் தலைமேல் போட்டுக் கொண்டு ஊர் ஊராய்ச் சுற்றுகிறேனே... அதுதான் கதை.

எனக்குப் பேச வார்த்தையே வர மாட்டேன் என்கிறது. பிரிந்தவர் கூடினால் என்ன பேசுவது?

தங்கம் பேசுகிறாள்

அது சரிதான். 'வளவள' என்று பேசுவதில் என்ன இருக்கிறது? வார்த்தைகளே மனிதனை வதைக்கின்றன.

உங்களைக் காண முடியாதபடி சமூகம் தடுத்தது. ஆனால், இன்று நீங்கள் வந்ததை இயற்கையால் கூடத் தடுக்க முடியவில்லை.

பின்னுரை

மழை இன்னும் பெய்து கொண்டிருக்கிறது. அதோ அவ்விருவரும் மௌனமாக ஒருவரையொருவர் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரமும் நின்று விட்டது.

கோதாவரியில் வெள்ளம் சுழன்று ஓடுகிறது. நிமிடத்திற்கு நிமிடம் அளவு உயர்கிறது. வீட்டை வெள்ளம் சூழ்கிறது. உள்ளே தண்ணீர் புகுந்து விட்டது. மௌனமொழி பேசிக் கொண்டிருக்கும் அவர்கள் இருக்குமிடத்தை வெள்ளம் சூழ்கிறது. அச்சத்துடன் நடுங்கி ஒருவரையொருவர் நெருங்குகின்றனர். மௌனம் கலைகிறது. மின்னல் ஒளியில் ஒருவரையொருவர் ஆர்வத்துடன் பார்க்கின்றனர். அவர்கள் இதயம் அதை உணர்கிறது.

அவர்கள் மனத்தில் களங்கம் கிடையாது. புத்துயிர் பெற்று பழைய நட்பை எண்ணி ஆனந்தப்படும் அவர்களுடைய அனுபவம் சொர்க்கத்தில் கிடைக்குமா?

● ● ● ●



# புது வெள்ளம்

இலக்கியத்தின் அருட்கொடை சிறுகதை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆயிரம் பக்கப் புதினம் எழுதலாம்; ஐம்பது பக்கச் சிறு புதினம் எழுதலாம். ஆனால், சிறுகதை எழுதுவது கற்பனை மலையை சிந்தனை உளி கொண்டு செதுக்குவதாகும். சிறிது கவனம் தவறினாலும் அதன் அழகும் சொற் கட்டுக்கோப்பும் கெட்டுவிடும். அதிலும் நடந்த ஓர் உண்மை நிகழ்வைச் சுவையான சிறுகதையாக வடிப்பது அபூர்வம். அதன்படி இந்தப் புது வெள்ளத்தை காவிரிக் கரையிலிருந்து கண்ணெதிர் வெள்ளமாக்கி நம் கரத்தில் தவழ விடுகிறார் கலைமாமணி விக்கிரமன்.

கதை, காவிரியின் இனிய புது வெள்ளத்தில் தொடங்கி முரட்டுத்தனமான வெள்ளத்தில் முடிந்திருக்கிறது. படிப்பவர் மனத்தில் சோகத்தை ஏற்றி விட்டிருக்கிறது. அதிகம் ஏட்டுப் படிப்பு படிக்காத சுயம்புவாக உருவான ஒரு புல்லாங் குழல் கலைஞனின் வாழ்வின் நிகழ்வுகள்தான் 'புது வெள்ளம்'. தன்னைப் போல தன் மகனும் ஏரோடும் பயிரோடும் நின்று விடாமல் படித்து நல்ல வேலைக்குச் சொல்ல வேண்டும் என்று விரும்பும் தந்தை. புல்லாங்குழல் இசையில் தன்னை மறந்து லயித்து தானறியாமல் பெரிய கலைஞனான பாஸ்கரன். பிற்காலத்தில் மேலும் பிரபலமாக வருவான் என்று கணித்து மகளைக் கட்டிக் கொடுக்க ஆசைப்படும் தாய்மாமா. இசையாய் வாழும் பாஸ்கரனுக்கு இசைந்த துணையாய் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பும் கோலக்கிளி பாரிஜாதம். நாகத்தையும் தன் மயக்கும் இசையால் லாகவமாக அடக்கி விடக்கூடிய பாஸ்கரனையும், அறியாமையால் தங்களோடு தண்ணீரில் மூழ்கடித்து முடித்து வைத்த நண்பர். அவர்களைக் காப்பாற்ற முயற்சி செய்த படகோட்டி.

இப்படி இந்த புது வெள்ளத்தில் வரும் அத்தனை பேரும் நம்மோடு வாழ்ந்தவர்கள்; வாழ்பவர்கள்தான். மேலே முழு வெள்ளியைக் காய்ச்சி உருக்கி வார்த்து கீழே தண்ணீரெல்லாம் வெள்ளியாக மாற்றின ரசவாதம். அழகாகப் படமெடுத்து ஆடும் நாகத்தின் படத்திலேயும் வெண்மதியின் வெள்ளிக் கிரணம் பட்டு பளிச் பளிச்சென்று மின்னின அழகு.

சிறுகதையில் இத்தனை அழகான வர்ணனை அதிசயமாக இருக்கிறது... படிக்க இனிக்கிறது. சென்ற தலைமுறையில் வெளிவந்த, நாளைய தலைமுறையும் படித்து இன்புற்று ஒரு பாடப் பகுதியாக எற்றுக் கொள்ள வேண்டிய இந்த 'புது வெள்ளம்' கலைமாமணி விக்கிரமன் புகழ் மகுடத்தில் மின்னும் வைரமணி.

– மேகலா சித்ரவேல்

1948

# 9. புது வெள்ளம்

கொடுமுடியிலிருந்து காவிரியைக் கடந்து அக்கரை செல்வதற்காகப் படகில் ஏறி உட்கார்ந்தோம். படகில் என்னையும் நண்பரையும் தவிர வேறு யாரும் இல்லை. வானத்தில் வட்ட முழுமதி வெள்ளியைக் காய்ச்சி உருக்கி வார்த்து வாரி இறைத்துக் கொண்டிருந்தது. சுழலுடன் வேகமாகச் செல்லும் ஆற்றில் அசைந்தாடிப் போகும் படகில் தண்ணீரெல்லாம் வெள்ளியாக மாறிய ரசவாதக் காட்சியை மெய்மறந்து பார்த்து லயித்திருந்தோம். புது வெள்ளத்தின் தனிச் சோபையில் ஈடுபட்ட நண்பர் மௌனத்தைக் கலைத்தார். ''நல்ல பாட்டாகப் பாடிக் கொண்டே இந்த வேளையில் சென்றால் எவ்வளவு இன்பமாக இருக்கும்?'' என்றார்.

நான் குபீரெனச் சிரித்துவிட்டேன். மறுகணம் சிரிப்பு நின்றது. ''உங்களைப் போலத்தான் சென்ற வருஷம் பாஸ்கரனும் எண்ணினான். இந்த நடுக் காவிரியைக் கேளுங்கள். ஓடும் தண்ணீரைக் கேளுங்கள். அவை பாஸ்கரனின் குழலோசையைப் பிரதிபலிக்கும். மேலே பார்த்து ஏதோ சிரிக்கிறதே, நிலா - அதுகூட பேசாமல் கூசாமல் கதை சொல்லும்'' என்றேன். என் நண்பருக்கு ஒன்றும் விளங்கவில்லை. புதிர் போட்டது போலிருந்தது அவருக்கு.

''என்னப்பா விழிக்கிறாய்? புல்லாங்குழல் பாஸ்கரனைக் கேள்விப் பட்டதில்லையா? அவனைத்தான் கேள்விப்படவில்லையென்றாலும், சென்ற வருஷத்து புதுவெள்ள சமயம் படகு கவிழ்ந்ததே, அதைப் பற்றிப் பேப்பரிலாவது படித்திருக்கவில்லையா?'' என்றேன். வேகத்துடன், 'இல்லை' என்பதுபோல் தலையை ஆட்டினார் நண்பர்.

புங்கனூரில் பாஸ்கரன் பத்து வருடங்களுக்கு முன் சாதாரண மனிதனாகவே இருந்தான். ஆனால், பொழுது போகாத வேளையில் எப்பொழுதோ செய்யப்பட்ட மூங்கில் குழலிலிருந்து நாதத்தை எழுப்பிக் கொண்டிருப்பான். தன் மகனைப் படிக்க வைத்து எப்படியாவது ஈரோட்டுக்கு அனுப்பி ஏதாவது உத்தியோகத்தில் சேர்ந்து நல்ல முறையில் வாழச் செய்ய வேண்டும் என்பது தந்தையின்



எண்ணமாக இருந்தது. கிராமத்தில் இந்த மாட்டையும் ஏரையும் ...ரையம் கட்டி அழுதது போதும் போதும் என்றாகி விட்டது.

பாஸ்கரனுக்கோ அதிலெல்லாம் பிடித்தமில்லை. சுதந்திரமாகக் கோயில் காளையைப் போல் திரிவான். காவிரி ஆற்றில் தண்ணீரில் பாய்ந்து ஓடி நீண்டிருக்கும் வேரில் உட்கார்ந்து கொண்டு குழலூதிக் காலம் கழிப்பான். சும்மா ஊதிக் கொண்டிருந்த மூங்கில் குழாய், குழலாகவே மாறி இனிய நாதத்தைப் பரப்ப ஆரம்பித்தது. ஊருக்குள்ளேயே வந்து பாஸ்கரன் திண்ணையில் உட்கார்ந்து குழல் ஊத ஆரம்பித்து விட்டால் ஊர்ப் பிள்ளைகளுக்குக் குஷிதான். அவனைச் சுற்றி பெருங்கூட்டம் கூடி விடும்.

இவன்தான் உருப்படாமல் தறுதலையாக இருக்கிறான் என்றால் ஊர்ப் பிள்ளைகளையெல்லாம் ஏன் கெடுக்கிறான் என்று சில பெரியவர்கள் முணுமுணுப்பார்கள். பாஸ்கரன் அவற்றையெல்லாம் இலட்சியம் செய்வதில்லை. தன் வீட்டுப் பசு, எருதுகளை ஆற்றில் குளிப்பாட்டுவது, தூங்குவது, புல்லாங்குழல் ஊதுவது தவிர வேறு எதிலும் அவன் ஈடுபடுவதில்லை.

''நான் இருக்கிறவரையில்தாண்டா இப்படியெல்லாம் உனக்கு ராஜா மாதிரி வேளா வேளைக்கு எல்லாம் நடக்கும். அப்புறம் நீயே புரிஞ்சுக்குவே!'' என்று நெஞ்சு தழுதழுக்க பாஸ்கரனின் தந்தை அடிக்கடி கூறுவார். மனிதன் மாறுகிறானோ இல்லையோ, காலம் ஒரே நிலையில் இருப்பதில்லை. மாறிக் கொண்டே ஓடிக் கொண்டே இருக்கிறது.

பாஸ்கரனின் குழலில் இனிமை பொங்கியது. பூர்வ ஜென்ம விட்டகுறை தொட்டகுறை என்று கூட ஊரார் மெல்ல மெல்லப் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். அவன் புல்லாங்குழலிலேயே மகுடி வாசிக்க ஆரம்பித்தால் அசல் மகுடியினால் கூட அவ்வளவு சிறப்பாக வாசிக்க முடியாது. அந்த வட்டாரங்களில் எந்தக் கல்யாணம் நடந்தாலும் பாஸ்கரனின் குழல் கச்சேரி வைக்கத் தவற மாட்டார்கள். ஆனால், மகுடி மட்டும் வேண்டாம்பா என்று கூறிவிடுவார்கள். ஏனெனில் ஓர் இடத்தில் அவன் மகுதி ஊதி எங்கிருந்தோ நாகப்பாம்பு ஒன்று கல்யாண வீட்டினுள் வந்து படமெடுத்து ஆட ஆரம்பித்து விட்டது. பாஸ்கரனின் திறமையை எல்லாரும் மிக மிகப் புகழ்ந்தாலும், நாகப் பாம்புக்கு நடுங்காமலிருக்க முடியுமா?

பாஸ்கரனின் மாமன் மகள் பாரிஜாதத்திற்குக் குழலோசை மீது ஆசையா, பாஸ்கரனின் மீது ஆசையா எனத் திட்டப்படுத்திச் சொல்ல

முடியாதபடி இருந்தது. பெரியவளாகி விட்டபடியால் அவள் சிறுமி சிறுமிகள் போல் வெளியே வந்து பாஸ்கரனின் குழலோசை இன்பத்தில் ஈடுபட முடியாமல் வீட்டிற்குள்ளேயே அடைந்திருந்து காற்றிலே மிதந்து வரும் மெல்லிய கீதத்தையும் மனத்திரையில் இலேசாக நடமாடும் அவன் முகப் பொலிவையும் எண்ணி இன்புறுவாள். வேதனையும் மெல்ல மெல்லத் தோன்றி மறையும்.

'முறைப் பெண்' என்பார்களே அதன்படி பாரிஜாதம் பாஸ்கரனின் முறைதான். பாஸ்கரனுக்கு இதிலெல்லாம் ஏது நினைவு? அவனது களங்கமற்ற இதயம் கலையொன்றிலேயே நினைவாக இருந்தது. இந்த உலகம் ஈடுபடும் போகப் பொருளிலோ, இனிய பொழுது போக்கிலேயோ, ஆடம்பர அழகிலேயோ மனத்தைப் பறி கொடுக்கவில்லை. குழல்தான் அவன் உயிர்.

முன்பு முணுமுணுத்துக் கொண்டிருந்த அவன் தந்தை கச்சேரி மூலம் ஏதோ பண வரவைக் கண்டவுடன் முணுமுணுப்பை நிறுத்தினார். ஆனால், அவன் வளமுடன் வாழ்வதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. பாஸ்கரனின் துரதிர்ஷ்டத்தை என்னவென்பவது, கோவை 'ஜில்லா' முழுவதும் மக்களை அல்லல்படுத்திய பிளேக் நோய் பாஸ்கரனின் தந்தையைப் பற்றியது. பிளேக் பீடித்த பத்தாம் நாள் இறந்தார்.

பாஸ்கரனின் துக்கத்தை எடுத்துச் சொல்ல முடியாது. குடும்பத்தில் நெருங்கி ஒட்டிக் கொண்டிருந்தவன்போல விம்மி விம்மியழுதான். இனி என்ன செய்வது என்ற எண்ணத்தில் அவன் மனம் ஆழ்ந்தது. நல்ல வேளையாக முன்பெல்லாம் அவன் மீது அலட்சியமாயிருந்த அவன் மாமன் திடீரெனப் பரிவு காட்டினார். பாஸ்கரனின் பெயரும் புகழும் ஓங்குவதைக் கண்டும், இன்னும் பிரபலமாக அவன் வருவான் என்பதைத் திட்டமிட்டுக் கொண்டும் தன் பாதுகாப்பில் வைத்துக் கொள்ள முடிவு செய்தார். பாரிஜாதத்தையும் அவனுக்குக் 'கட்டி'க் கொடுத்துவிடும் எண்ணமும் இருந்தது அவருக்கு.

(இதற்குள் நாங்கள் ஏறியிருந்த படகு கரையை அடைந்தது. 'கதை அவ்வளவுதானா?' என்றார் நண்பர். 'ரொம்ப நன்றாக இருக்கிறது. கதை இல்லை ஒய்... கதை இல்லை... நிஜமாக நடந்தது... இன்னும் துக்க கரமான பின்பகுதியையும் கேளுங்கள்' என்று கூறி, படகிலிருந்து இறங்கி இருவரும் ஆற்றங்கரை வெண் மணலிலேயே சிறிது நேரம் உட்கார்ந்தோம்)

கிளிபோன்ற பாரிஜாதத்தின் குலுங்கும் அழகை அவன் கண்டதில்லை. அசந்து நின்று விட்டான். கிளிக் கூண்டுக்கருகிலேயே வந்து விட்டோமே





என எண்ணி ஆச்சர்யப்பட்டான். உலகம் தெரிந்த அவனுக்கு இனி குழல் மட்டும்தன் உயிரில்லை. குழலின் இனிய இசையைப் போல அழகு ததும்பிய பாரிஜாதத்துக்கும் பங்கு உண்டு என முடிவு செய்தான்.

தானாக ஆக வளரும் கிளி தன்னிடம்தான் நிச்சயம் ஒப்படைக்கப்படப் போகிறது என அறிந்தவுடன் பாஸ்கரனின் உடலில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அதிலிருந்தே பாஸ்கரனின் குழல் வாசிப்பில் பொலிவு ஏற்பட்டது. நேரம் போவது தெரியாமல் குழலூதுவான். மக்களும் சளைக்காமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த வருஷம் குடகில் நல்ல மழை. இங்கும் பலத்த மழைதான். காவிரி இரு கரையும் அணைய ஓடிக் கொண்டிருந்தது. பெரும் பெரும் வைக்கோல் போர்களும், மரங்களும் வெள்ளத்தில் அடித்து வரும்.

அந்தப் புது வெள்ளத்தைப் புத்துணர்ச்சியுடன் பாரிஜாதமும், பாஸ்கரனும் ரசித்து ரசித்து இன்புற்றத்தை எப்படி வார்த்தையால் கூறி விளக்குவது?

பௌர்ணமியன்று நாமக்கல் பாறையில் பெரிய கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். முதல் நாளே, நாள் நன்றாக இருந்தபடியால் புறப்பட்டுப் போகலாம் என பாஸ்கரனின் மாமன் கூறி விட்டார். பாரிஜாதத்துக்கும் உள்ளுக்குள்ளேயே பெரும் ஆசைதான், தானும் போக வேண்டுமென்று. ஆனால், மணமாகாமல் அவர் கூடப் போனால் ஊர் வம்பளக்குமே எனப் பயந்து சும்மா இருந்து விட்டாள்.

ஆற்றிலே சிறிது வெள்ளம் தணிந்திருந்தாலும் வேகமும் இழுப்பும் சுழலும் குறையவில்லை. ஒரு வாரமாகப் படகு ஓட்டாதிருந்த படகோட்டிகள் அன்றுதான் மீண்டும் ஓட்டத் தொடங்கியிருந்தனர். பாஸ்கரனுடன் நான்கைந்து தோழர்களும் உடன் வந்தனர்.

பக்க வாத்தியக்காரர்கள் நேரே நாமக்கல்லுக்கே வந்து சேர்ந்து விடுவார்கள்.

படகுக்குத் தேவையான ஆட்கள் கிடைத்துவிட்டார்கள். பௌர்ணமிக்கு முதல் நாளாதலால் முழுமதி வானத்தில் காய்ந்து கொண்டிருந்தது. அந்த நிசப்தமான வேளையில் 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் ஓடியது ஆறு. 'சளக் சளக்' என்ற துடுப்புச் சப்தத்தைத் தவிர வேறு ஒலியே எழவில்லை. பாஸ்கரனுக்கு வட்ட மதியையும், ஓடும் நதியையும் கண்டவுடன் உற்சாகம் பிறந்து விட்டது. குழலூத ஆரம்பித்து விட்டான். 'மகுடி மகுடி' என்று நண்பர்கள் உற்சாகத்துடன் கூவினர்.

மேலும் ஆற்றின் நடுவே, படகில் மகுடி வாசித்தால் எங்கே நாகம் வரப் போகிறது என்று துணிவுடன் பாஸ்கரன் ஊத ஆரம்பித்தான். ஆகா... விளக்கணையும் போதல்லா ஒளி இன்னும் சுடர் விட்டுப் பெரிதாக எரிகிறது?

அன்றும் அவன் வாசித்தது பேரின்பமாக இருந்தது. இலக்கியத்திலும், புராணத்திலும் மகா புருஷர்கள் வாசித்தது பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், அன்றைய அந்த வாசிப்பு - இனிமை - அழகு!

படகோட்டியும் குழலின்பத்தில் மெய்மறந்து, ஆற்றின் இழுப்புக்கு எதிர்த்துடுப்புப் போடுவதில் உண்டான அலுப்பையும் அறியா திருந்தான்.

குழலில் பிறந்து வரும் மகுடியின் இசையை வேறெங்கு இவ்வளவு தைரியமாகக் கேட்க முடியும் என்று நண்டார்கள் புகழ்ந்தனர். பாஸ்கரனை என்ன சொல்லிப் புகழ்வது என்றே தெரியவில்லை அவர்களுக்கு.

படகு நடு ஆற்றை நெருங்கிக் கொண்டிருந்தது.

'உஸ்... உஸ்' என்னும் ஒலி கேட்டது. நண்பர்கள் கூர்ந்து கவனித்தனர். படகின் ஓரமாகத் தலையெடுத்து அழகாக ஆடும் நாகம். அதன் படத்திலே வெண்மதியின் வெள்ளிக்கிரணம் பட்டுப் பளிச் பளிச் என்று மின்னியது.

''ஐயோ'' என்று கூவினர் வீராதி வீர நண்பர்கள். பாஸ்கரன் மெல்லப் பார்த்தான். மகுடியை நிறுத்தவில்லை.

ஆனால், ஆழ்ந்த இசையின்பத்தில் ஈடுபடக் கூடிய பொறுமையுள்ள நண்பர்கள் உண்மை ரசிகர்களாக இல்லாததால் ஆபத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இங்கும் அங்கும் எழுந்து ஒதுங்கினர். குழல் வாசிப்பு தடைப்பட்டது. மெய்மறந்து ஆடிய நாகம் சீறியது.

நடு ஆறு, துடுப்புக்கு எட்டாத ஆழம் - வேகமல்லவா அங்கு! படகுக்காரன் கூவினான். படகு ஆடியது, குலுங்கியது, தடுமாறியது. ஒரு கணம் விவரிக்க முடியாத அளவு அல்லோலகல்லோலமாகியது. உடனே மறுகணம் பெருஞ்சுழலில் படகு கவிழ்ந்தது. 'ஐயோ' என்று உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் இட்ட ஓலம் திசையெல்லாம் பரவியது.

நாகம் எப்படி வந்ததோ சொல்ல முடியாது. வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட பாம்பு தப்பிவிடப் படகில் ஏறியிருக்கலாம். ஆனால்,



படமெடுத்த நாகத்துக்கு அவர்கள் அஞ்சாதிருந்திருந்தால் பாஸ்கரன் தனது திறமையான நாதத்தால் லாகவமாக அதை அடக்கியிருப்பான்.

உயிரின் கடைசி ஓலம் கரையின் கிராமம் ஒன்றிற்கு எட்டியது. கிராமமே திரண்டு வந்துவிட்டது.

படகுகளுடன், வலைகளுடன் திறமையான நீச்சலாட்களுடன் பாஸ்கரனைத் தேட ஆள் விட்டார் மாமா.

''ஐயோ... பாஸ்கரா!'' என அவர் அலறியது இன்னும் என் காதில் ஒலிக்கிறது.

பயங்கரமாக ஓடும் புது வெள்ளத்தின் சுழலில் புத்துணர்ச்சி பொங்கப் பாடிய பாஸ்கரரின் - ஏன் மற்றவர்களின் - உடலை இலேசில் கண்டு பிடித்து விட முடியுமா?

(நண்பர் பெருமூச்சு விட்டார். அவர் கண்களில் நீர் தளும்பியது. 'பாரிஜாதம்' என்ன ஆனாள்?' என்று வறண்ட குரலில் கேட்டார்).

என்ன ஆனாள்? சிறிது காலம் புது வெள்ளத்தின் சுழலையும், பேரொலியையும் கண்டு கேட்டு பேயடித்தவள் போல் கரையிலேயே காலங் கழித்தாள்.

புது வெள்ளம் வடிந்தது. மனித சுபாவம்தானே? அவள் என்ன ஆனாள்? காவிரியில் குதித்து மாண்டாளா? அல்லது வருத்தம் மாறினாளா? எனக்குத் தெரியாது. இது கதை இல்லை. உண்மைச் சம்பவம், பொய் எழுதக் கூடாது. வேறு யாராவது அறிந்திருந்தால் சொல்லுங்கள்.

● ● ● ●

# நிம்மதி

இந்தக் காலத்து இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் ஹரிக்கேன் லாந்தர் விளக்கைப் பற்றி அவ்வளவாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. விளக்கின் ஒரு பக்கத்தில் கம்பியை வளைத்து கட்டை விரல் மாதிரி நீட்டி வைத்திருப்பார்கள். அதை அமுக்கினால் கண்ணாடி உயரும். இடையில் ஏற்படும் இடுக்கின் வழியாகத் தீக்குச்சிக் கொண்டு விளக்கை ஏற்ற வேண்டும். விளக்கினுள் மேல் பாகத்தில் படிந்து விடும் கரிப்புகையைச் சரியாகத் துடைத்து சுத்தம் செய்யாவிட்டாலும் அல்லது திரி கொடுக்கிற அளவுக்கு விளக்கில் மண்ணெண்ணெய இல்லாவிட்டாலும் விளக்கு எரியாது. குபுக் குபுக்கென்று குதித்து அணைந்துவிடும். போதுமான எண்ணெயோடு சரியாக எரிய ஆரம்பித்துவிட்டால் புயல் அடித்தால்கூட அணையாது. அதனால்தான் அதற்கு 'ஹரிக்கேன்' விளக்கு என்று பெயர். அந்தக் காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு, மூன்று ஹரிக்கேன் விளக்கு, கோழி முட்டை போன்ற கிளாஸ் பொருத்திய பெட்ரூம் விளக்கு, சமையல் அறையில் கை விளக்கான சிம்னி விளக்கு இருக்கும். சிம்னி விளக்குக்குக் கிளாஸ் கிடையாது.

அலுத்துக் களைத்துப் பசியோடு நரசிம்மன் வீடு திரும்பியபோது மணி எட்டு இருக்கும். வீட்டில் வெளிச்சமே இல்லை. எப்போதும் சுவாமி மாடத்திற்கருகே எரியும் குத்து விளக்குக் கூடத் திரி எரிந்து போய் விட்டது. மீனா ஓடிச் சென்று ஹரிக்கேன் விளக்கை ஏற்ற முயன்றாள்; ஒன்று, இரண்டு, மூன்று எனத் தீக்குச்சிகள்தான் தீர்ந்து போயின. விளக்கு எரிந்தால்தானே? எண்ணெய் இல்லை. விளக்கில் மட்டுமல்ல; புட்டியிலும் எண்ணெய் இல்லை. கை விளக்கான சிம்னி விளக்குதான் ஆபத்துதவி. அந்த மங்கிய ஒளியில் பெயருக்கு ஏதோ சாப்பிட்டுவிட்டுப் படுத்தான் நரசிம்மன்.

1949ஆம் ஆண்டு எழுதப்பட்ட கதை 'நிம்மதி'. மாதச் சம்பளம் வாங்கும் ஒரு நடுத்தர வர்க்கத்து மனிதனின் வறுமை நிலையையும், அன்றாடம் வீட்டில் ஏற்படும் நிம்மதியற்ற சூழ்நிலையையும் பக்கத்தில் நின்று பார்ப்பதுபோல் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

அருமையான கதை. மனித மன இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுவதில் ஆசிரியரின் தனித்திறமை தெரிகிறது. வீண் ஆர்ப்பாட்டமோ வார்த்தை ஜாலமோ இல்லாமல் இயல்பான, எல்லாருக்கும் புரியும்படியான எளிய நடை, அறுபதாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்றாலும் கூட இன்றும் படித்து, ரசித்து மகிழக்கூடிய கதை, 'நிம்மதி'.

**– மாயூரன்**





# 10. நிம்மதி

*"அப்பப்பா, என்ன கூச்சல்! இந்த வீட்டில் ஒரு நிமிஷம் கூட நிம்மதியில்லையா?" என்று கூவினான் நரசிம்மன்.*

*கையில் செய்தித்தாளுடன் 'காமிரா' உள்ளினின்று கோபாவேசத்துடன் கூவிக் கொண்டே அந்த அவன் முகத்தில் ஆத்திரம் ஜ்வலித்தது. தொட்டிலில் படுத்துக் கொண்டிருந்த குழந்தை நிமிஷத்துக்கு நிமிஷம் அழுகையை அதிகமாக்கிக் கொண்டிருந்தது.*

*"ஆபீஸிலே எட்டு மணி நேரமும் உழைத்துவிட்டு இங்கே கொஞ்ச நேரம் நிம்மதியாயிருக்கலாம்னா இந்த வீட்டிலே கொஞ்சம் கூட முடியவில்லையே! குழந்தையைக் கொஞ்ச நேரம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாலென்ன? அதைவிட என்ன வெட்டி முறிக்கிறாப் போலேயாம்?" என்றான் நரசிம்மன் உரத்த குரலில்.*

*சமையல் உள்ளிருந்து கைக் காரியத்தை அப்படியே போட்டு விட்டு வந்தாள் மீனா.*

*"வெட்டி முறிக்காத போனாலும் எனக்கும் வேலைன்னு ஒண்ணுமில்லையா? இப்படி ஒரு நிமிஷம் வீட்டிலே இருக்கிறதுக்குள்ளே அழுகையைப் பொறுத்துக்காமே அங்கலாய்த்துக் கொள்கிறேளே! பொழுது விடிஞ்சா நாள் முழுதும் அதோடேயே பொழுதைக் கழிக்கும் எனக்கு எப்படி இருக்கும்?" என்றாள்.*

*நரசிம்மனின் கோபம் இன்னும் அதிகமாயிற்று.*

*"குழந்தையும் நீயும் எப்படியாவது போங்கள்! நன்றாகத் தூங்கித் தொலைந்த பிறகு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே போய்விட்டான்.*

*சந்தோஷமானவர்களுக்கும் சங்கடம் உள்ளவர்களுக்கும் தஞ்சம் அளிக்குமிடம் கடற்கரையல்லவா? மணலில் அழுத்தி அழுத்திக் கால் பதிய நடந்து சென்று ஓர் ஒதுக்குப்புறமாகப் பார்த்து உட்கார்ந்தான் நரசிம்மன். பட்டாணி சுண்டல் விற்பவன் இரண்டு, மூன்று முறை அந்தப் பக்கம் போய் அவன் பொறுமையைச் சோதித்தான்.*

மூன்றாவது முறை அந்த 'நைப்பாஸ்' அவனைச்சும்மா விடவில்லை. "இந்தப்பா!" என்று கைதட்டிக் கூப்பிட்டான். அரையணா கடலை வாங்கி வைத்துக் கொண்டான். எவ்வளவுக்கெவ்வளவு சுவாரஸ்யமாக வாங்கினானோ, அவ்வளவுக்கவ்வளவு அந்தச் சுவாரஸ்யம் கையில் கடலை வந்த பிறகு போய்விட்டது.

பலவித யோசனைகள் பின்னலிட்டன. உண்மையில் எவ்வளவு பெரிய கூச்சலிடையேயும் நிம்மதியாக இருப்பதென்றால் இருக்கலாம். ஆனால், மனத்தில் அலை கடலென எழுந்து மோதும் அந்த வேதனைகள் அவனுடைய நிம்மதியைக் குலைத்துவிடும்.

சம்பளமாக முழுசாக வரும் எழுபது ரூபாயில் அந்த ஈட்டிக்காரன் - ஆறுமாத வட்டிக்காரன் - காபூலிவாலா இருக்கிறானே, அவன் தயாராக வந்து அலுவலகம் எதிரே காத்துக் கொண்டிருக்கும்போது, முழுசாக இருபது ரூபாய் அவனுக்கு அழுதுவிட்டு மீதி ஐம்பது ரூபாயுடன் வீடு திரும்பும்போது மனத்தில் அமைதி ஏது?

அந்த இருபது ரூபாய்... இதுவரை நான்கு மாதம் செலுத்தியாகி விட்டது. இன்னும் நூற்று அறுபது ரூபாய் - இருநூறு ரூபாய் கடன் வாங்கியதற்கு இருநூற்று நாற்பது ரூபாய். இதை நினைக்கும்போதே அவனுக்கு ஆத்திரம் வந்தது.

இப்பொழுது கத்தியதே ஒரு குழந்தை, அந்தச் சங்கரியின் பிரசவத்திற்காகத்தான் அவன் காபூலிவாலாவிடம் கடன் வாங்கினான். பிரசவத்திற்கு முன் பணத்துக்கு என்ன செய்வது என்று ஏங்கிக் கொண்டிருந்தபோது இந்தக் காபூலிக்காரன் 'பிரத்யட்ச'மானான். ஒரு நகை நட்டு ஈடு வைக்காமல் வள்ளிசாக நூற்றி எண்பது ரூபாயை எண்ணிக் கொடுத்தான். இருநூறு ரூபாய்க்கு எழுதி வாங்கிக் கொண்டான்.

எப்படியாவது பணம் கிடைத்து மீனா சுகப்பிரசவம் ஆகிவிட்டால் போதும் என்றிருந்தது நரசிம்மனுக்கு.

அதே மீனா சுகப்பிரசவமாகி எந்தச் சங்கரியைக் கொஞ்சினாளோ, அதே சங்கரி தொட்டிலில் படுத்துக் கொண்டு அழும்போது, நரசிம்மனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சுகமாகப் பிழைத்து எழுந்தால்போதும் என்று ஏங்கிய அதே மீனாவைக் கண்டால் இன்று வெறுப்பு.

அதற்குச் சமாதானமாகத் தனக்குத் தானே 'நிம்மதி' என்ற வார்த்தையை அவன் உபயோகிக்கிறான். உண்மையில் 'நிம்மதி' பண



அளவில் தான் - வறுமை இருள் மறையும் வரையில்தான் என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன?

நன்றாக இருட்டி விட்டது. தூரத்தே ஹைகோர்ட் 'லைட் ஹவுஸி'லிருந்து ஒளி சுழன்று வந்தது. மினுக் மினுக்கென்ற பழைய எலக்ட்ரிக் விளக்குகள். இந்த மெர்க்குரி விளக்குக்கிடையே ஒளியிழந்து நின்றன. ஜனக்கடல் கலைந்து போய், அலைகடலின் பேரொலி அந்தப் பிராந்தியத்தில் அதிகமாயிற்று.

துண்டை உதறிக் கொண்டு எழுந்தான் நரசிம்மன். அப்பொழுதும் பல பல யோசித்து ஒரு முடிவுக்கும் வராத குழப்ப நிலை. கையிலிருந்து கடலையைக் கூட, ஏனோ அப்படியே வீசி எறிந்தான்.

வீட்டிற்குள் நுழையும்போது மணி எட்டு. வெளிச்சமின்றி இருளோ என்றிருந்தது. வழக்கமாக, எப்போதும் சுவாமி மாடத்துக்கருகே எரியும் குத்து விளக்கில்கூடத் திரி எரிந்து போய்விட்டது. நரசிம்மனின் ஆத்திரம் அதிகமாகியத.

கால் செருப்புச் சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்த மீனா, ஓடோடியும் சென்று ஹரிக்கேன் விளக்கை ஏற்ற முயன்றாள். ஒரு குச்சி, இரண்டு குச்சி, மூன்று குச்சிகள்... எரிந்தால்தானே?

வெளியே இருந்து உள்ளே நுழைந்ததால் நரசிம்மனுக்கு நன்றாக வியர்த்திருந்தது. பசி, பழைய ஆத்திரம் இரண்டும் சேர்ந்தன.

"மூதேவி பிடித்து விட்டதா, வீட்டில்? நாள் முழுதும் உழைக்கிறேன், உழைக்கிறேன் என்றாயே... அந்த லட்சணம் இதுதானா?" என்று கூவினான் அவன்.

மீனா பதில் பேசவில்லை. விளக்கை ஆட்டிப் பார்த்தாள். எண்ணெய் இல்லை. கைவிளக்கான சிம்னி விளக்குத்தான் ஆபத்துதவி. அதைக் கொளுத்தினாள். மண்ணெண்ணெய் புட்டியை எடுத்துப் பார்த்தாள். ஒரு துளிகூட இல்லை.

"காலையில் கூடச் சொன்னேன். எண்ணெய் இல்லையென்று..." என்று ஆரம்பித்தாள் மீனா.

"இல்லையா? துளிக்கூட இல்லையா? இப்போதுதானே வாங்கினேன். அதற்குள்ளேயா ஆகிவிட்டது?" என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு.

உண்மையில் எண்ணெய் வாங்கி ஒரு வாரம் ஆகியிருந்தது.

''அதற்குள் ஆகாமல் என்ன செய்யும்? குடித்துவிட்டேனா?'' என்றாள் மீனா.

அவளுக்கு ரோசம் என்பதில்லையா? எப்படித் தீரும் எண்ணெய்? என்று கேட்டால் இந்தப் பதில்தானே கூற வேண்டும்? ஆனால் சமயம் சரியா என்று அவள் கவனிக்கவில்லை.

''வரவரக் கழுதைக்கு வாய் அதிகமாகிவிட்டது. மூதேவி! வீட்டைக் கவனிக்கிறதே இல்லை!'' என்றான் நரசிம்மன்.

மீனா விம்மினாள். இலை போடப்பட்டது. ஏதோ கடனுக்காகச் சாப்பிடுவது போல அந்த மங்கிய விளக்கொளியில் சாப்பிட்டுவிட்டு, 'அப்பாடா!' என்று எழுந்தான் நரசிம்மன்.

பாயை விரித்துப் படுத்துவிட வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

அதற்குள் சங்கரி இரவு ஆகாரத்துக்காக விழித்துக் கொண்டாள்.

தாயும் அருகிலேயில்லை. அழுகை பொங்கி வந்தது அவளிடமிருந்து விசும்பும் ஒலி கேட்டது.

''சனியன்!'' என்று நரசிம்மனின் உதடுகள் முணுமுணுத்தன. பாயை வாரிச் சுருட்டிக் கொண்டு திண்ணைக்குப் போய்விட்டான். முதலில் தூக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்தாலும் பிறகு நல்ல தூக்கம்.

காலை விடிந்ததும் சங்கரிக்கு வயிற்றுப் போக்கு. மீனா இதுபற்றி கணவனிடம் ஒன்றுமே சொல்லவில்லை. குழந்தையை டாக்டர் சிதாரமையிடம் கொண்டு போய்க் காட்டினாள்.

நரசிம்மனை அவருக்குத் தெரியும். அவர் குழந்தையைப் பரிசோதித்தார். வயிற்றுப் போக்குக்கு மருந்து கொடுத்து, ''அம்மா! குழந்தைக்கு வயிற்றில் கட்டி...'' என்றார்.

பதறிவிட்டாள் மீனா. ''டாக்டர், டாக்டர்! எத்தனை மாசக் கட்டி? பயமில்லையா? டாக்டர்! என்ன மருந்து கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''பயப்படாதே அம்மா! இப்பொழுதுதான் அதற்கான அறிகுறி கண்டுள்ளது. நல்ல வேளை. எதேச்சையாய்ப் பார்த்தோம். இல்லாவிடில் வளர்ந்த பிறகு மருந்து கொடுப்பது சாத்தியமா? நரசிம்மனிடம் சொல்லுங்கள் - ஐந்து ரூபாய் மருந்து நாலு பாட்டில் வாங்கிக் கொடுத்தால் போதும்'' என்றார்.



கலங்கிய கண்களுடன் வீடு திரும்பினாள் மீனா. கோபத்துடன் அவளை வரவேற்றான் நரசிம்மன். ''எங்கே போயிருந்தே, உன் செல்லக் குழந்தையை எடுத்துண்டு?'' என்று கேட்டான்.

ஓவென்று அழுதேவிட்டாள் மீனா. ''குழந்தைக்கு வயிற்றில் கட்டியாம்...'' என்றாள் விம்மலிடையே.

அவனுக்கு இது 'சொரேர்' என்று தைத்தாலும் கூட 'செலவு' என்ற பூதம் மீண்டும் ஏதோ ஒரு புது உருவில் வந்திருப்பதாகத் தோன்றியது. அவன் பதிலே பேசவில்லை. கொல்லைப்புறம் போய்விட்டான்.

அன்று ஆபீஸிலிருந்து வரும்போது திடமான முடிவுடன் வந்தான் நரசிம்மன். மீனாவைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவைப்பது என்பதுதான் அந்த முடிவு.

'அவள் திரும்பி வருவதற்குள் இந்தக் கடன் தொல்லைகளும் தீர்ந்து விடும். ஏதோ குழந்தைக்குக் கட்டி என்கிறார்களே... அதையும் அவர்களே பார்த்து அனுப்ப மாட்டார்களா? கொஞ்ச நாளைக்குத்தான் நிம்மதியாக இருக்கலாமே!' இவ்வாறு அவன் எண்ணினான்.

நரசிம்மன் இதை அவளிடம் நாசூக்காகச் சொல்லும்போது மீனாவுக்கு வருத்தமாகவே இருந்தது. ஆனால், தன் கணவருடைய அலட்சிய புத்திக்கு இந்த மாறுதல் ஒரு மருந்தாயிருக்கட்டுமே என்று அவள் ஊருக்குப் போகச் சம்மதித்தாள்.

மீனா ஊருக்குப் போய் ஒரு வாரமாயிற்று. வீடு ஒரே சூன்யமாயிருந்தது. விளக்கும் சரிவர ஏற்றப்படவில்லை.

ஹரிக்கேன் விளக்கைத் தூக்கினால் சிம்னி கழன்றது. மேல் பர்னரைத் தூக்கினால் திரியை எட்டுவதற்குள் நெருப்புக் குச்சி அணைந்தது. தினம் ஒருமுறை குடித்தனக்காரப் பையனைக் கூப்பிட்டு அந்த விளக்கை ஏற்ற சொல்லும்போதுதான் நரசிம்மனுக்குத் தனது பழைய முட்டாள்தனம் நினைவுக்கு வந்தது.

மீனா வீட்டை விட்டுப் போன பிறகும் அவனுக்கு நிம்மதியில்லை என்றால்..?

ஒருநாள் அவன் எழுந்து வாசல் பக்கம் வரும்போது, வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது. அவன் தங்கை, தங்கையின் குழந்தைகள், தங்கையின் கணவர் எல்லாரும் இறங்கினார்கள்.

நரசிம்மன் ஒருகணம் சிலையாய் நின்றான்.

மறுகணம் சமாளித்துக் கொண்டு, ''வாம்மா காவேரி! ஒரு கடிதம் போடக் கூடாதா? நான் ஸ்டேஷனுக்கு வந்திருக்க மாட்டேனா?'' என்றான் அவன்.

''போடணும்னுதான் நினைச்சேன். என்னவோ திடீர்னு அந்த ஊர் பிடிக்கலை. அப்பாடான்னு ஒரு மாசம் எங்கேயாவது இடம் மாறினாத் தேவலைப்போல இருந்தது. நினைச்சேன்; அவரிடம் சொன்னேன். சொன்ன மறுநாள் கிளம்பிவிட்டோம்'' என்றாள் காவேரி.

நரசிம்மனுக்கு ஒன்றுமே பேச வரவில்லை.

''அண்ணா! மீனா எங்கே?'' என்றாள் அவள்.

''குழந்தைக்குக் கட்டி... அவள் பொறந்த வீட்டிலிருந்து வந்து அழைச்சுண்டு போயிருக்கா. நீ வருவது தெரிந்தா அவளை அனுப்பாம இருந்திருப்பேன்'' என்றான் அவன், மனச்சாட்சிக்கு விரோதமாய்.

காவேரி வந்தபிறகு வீடு கலகலப்பாக இருந்தது. இந்தக் கலகலப்பு நரசிம்மனுக்கு இப்பொழுது பிடித்தது.

இரு வாரங்கள் கழிந்தன. காவேரி படுக்கை பெட்டிகளையெல்லாம் கட்டிக் கொண்டிருந்தாள்.

''ஏன், இதற்குள் கிளம்பி விட்டாய்?'' என்றான் நரசிம்மன்.

''எவ்வளவு நாள் இங்கே தங்குவது? சும்மா இட மாற்றம் இருக்கட்டுமே என்று வந்தோம். தங்கியாகிவிட்டது. புறப்படுகிறோம்'' என்றாள் காவேரி.

காவேரியும் போன பிறகு நரசிம்மனுக்கு இருப்பே கொள்ளவில்லை வீட்டில். பாதி நாள் அவன் வீட்டுக்கு வர மாட்டான். இத்தனை நாளும் போகாத சிநேகிதிர் வீடு, தூரத்து உறவினர் வீடு. இவற்றுக்கெல்லாம் சென்று 'டிகானா' போடுவான்.

அன்று நரசிம்மன் காரியாலயத்துள் நுழைந்ததும். ''மிஸ்டர் நரசிம்மன்! கோயமுத்தூர் பிராஞ்சுக்கு நீங்கள் போக முடியுமா?'' என்று கேட்டார் மானேஜர்.

ஏதோ சொப்பன லோகத்திலிருப்பதுபோல் நரசிம்மன் தலையை ஆட்டினான். ''நீங்கள் அங்கே போய் அந்த ஊழல்களைச் சரிப்படுத்திப் பழைய மானேஜரை 'ரிலீவ்' செய்து விட வேண்டும்'' என்றார் மானேஜர்.



மறுநாள் 'புளூ மவுண்ட'னில் கோயமுத்தூருக்குப் போவதற்குப் பதிலாகப் பொள்ளாச்சிக்கு பயணமானான் நரசிம்மன்.

ராத்திரி ஏழு மணிக்குப் பொள்ளாச்சி வந்து சேர்ந்தது ரயில். பிசுபிசுவென மழை பெய்து கொண்டிருந்தது. இருந்தாலும் அவன் மனத்தில் இப்பொழுது ஏதோ ஒரு நிம்மதி குடி கொண்டிருந்தது. கோயமுத்தூருக்குப் போகிறேன் என்று அவன் ஒப்புக் கொண்டதற்குக் காரணம் உத்தியோக உயர்வு மட்டுமன்று. மீனாவின் பிறந்தகம் பொள்ளாச்சியில் இருக்கிறது என்பதற்காகவும்தான்!

'கடக் கடக்' என்ற சப்தத்துடன் வாசலில் வண்டி நின்றதும், மீனா அரிக்கேன் விளக்குடன் வந்து கதவைத் திறந்தாள்.

அவளைத் தொடர்ந்து வந்த அவள் தகப்பனார், ''மாப்பிள்ளையா!'' என்றார் வியப்புடன்.

நரசிம்மன் திடுதிடுவென்று உள்ளே சென்றான். தொட்டிலில் சங்கரி படுத்துக் கொண்டிருந்தாள். அவளை வாரி எடுத்துக் கொண்டான் அவன்.

''என்ன திடீர்னு கருணை!'' என்றாள் மெல்லிய குரலில் மீனா.

''ஊம்... இனிமேல் எல்லாம் நமக்கு இங்கேதான். இப்பதாண்டியம்மா எனக்கு நிம்மதியாச்சு!'' என்று சொல்லிக் கொண்டே குழந்தையை முத்தமிட்டான் நரசிம்மன்.

அரைத் தூக்கத்திலே திடீரென விழித்துக் கொண்ட சங்கரி வீறிட்டழுதாள்.

ஆனால், அந்த அழுகை இப்பொழுது நரசிம்மனுக்கு இன்பமாக இருந்தது.

● ● ● ●

# செவ்வந்திப்பூ சிங்காரி

பொழுது விடிந்து, பொழுது போனால் வாழ்க்கையின் நிதர்சனங்களாக, நித்த நித்தம் நம் கண்முன் ஆயிரமாயிரம் கதைகள் நடக்கின்றன. நடந்து காட்டுகின்றன. அந்தக் கதைதாம், வாழ்க்கையின் பாசமாகவும், நேசமாகவும், சத்தியமாகவும், தருமமாகவும், தவமாகவும், தத்துவமாகவும், சோதனையாகவும், சாதனையாகவும் ஆகின்றன; ஆக்கப்படுகின்றன. அப்போதுதானே வாழ்க்கை வாழ் வாங்கு வாழுகின்ற உண்மையான வாழ்க்கையாகவும் அமைந்திட முடியும்.

இதுவேதான் இலக்கியம்!

சிங்காரி அழகானவள் மட்டுமல்லள்; அன்பானவளும்கூட! அதனால்தான், அவள் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகவே ஆகிறாள்; சுகுணாவுக்குச் சிங்காரியென்றால் உயிர்!

அவள் சாமான்யமான சிங்காரியா? ஊகூம்! அவள் செவ்வந்திப்பூ சிங்காரி! அவள் சராசரிப் பெண்; கன்னிகழியாப் பெண். ஆகவேதான், அவளுக்கும் காதல் வருகிறது; இளவட்டம் சுந்தரமூர்த்தி அவள் கழுத்திலே மூன்று முடிச்சுப் போட நேர்ந்தது சுவையான கதைதான்.

அன்புத்தந்தை சாமிநாத நாயக்கர், அருமை மகள் சிங்காரி, நேசக் கணவன் சுந்தரமூர்த்தி ஆகிய முப்பெரும் புள்ளிகள் வடிவமைத்த வாழ்க்கை முக்கோணத்தில், கதை சுவையாக ஆரம்பமாகிச் சுவையுடனே தொடர்ந்து, சுவை சொட்ட நிறைகிறது.

சிங்காரியின் புருஷன் சுந்தரமூர்த்தி, நல்ல பிள்ளைதான்; ஓரிடத்தில் வேலைக்கு அமர்ந்தான்; ஒருநாள், மேஸ்திரியிடம் கோபித்துக் கொண்டு, நாலைந்து நாள்கள் கடமைப்பணிக்குச் செல்லவில்லை.

மாமனார் கண்டிப்புப் பேர்வழி! 'இதெல்லாம் நல்லா இல்லை; கல்யாணம் கட்டியாச்சு; நாலு காசு சம்பாதிக்க யோக்கியதை இல்லைன்னா, ஊரிலேதான் மதிப்பாங்களா? கிடைத்த வேலையையும் செய்யாமப் போனா எனக்குன்னா அவமானமாக இருக்குது?' என்று கத்துகிறார்.



சுந்தரமூர்த்தி ரோசம் உள்ளவன்; யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் மறைந்து விடுகிறான். ஒருமாதம் கழித்துத்தான் சிங்காரிக்குப் போன உயிர் மீள்கிறது. மணிப்பூரிலிருந்து சுந்தரமூர்த்தியின் கடிதம் வருகிறது. தொடர்ந்து பணமும் வரத் தொடங்குகிறது. இப்பொழுது அவனுக்குப் பிழைக்கத் தெரிந்துவிட்டது.

வழக்கமாக மூன்று மணிக்கு அவர்கள் வீட்டுக்கு வரும் சிங்காரி, அன்றைக்கு ஐந்து மணிக்குத்தான் வருகிறாள். சும்மா வரவில்லை; ஆசைக் கணவனுடன் வருகிறாள். முகத்தில் சந்தோஷம் பொலிகிறது!

''சிங்காரி, இனிமேல் எங்களை மறந்திடுவே!'' இவ்வாறு அந்தக் குடும்பத்தின் தலைவி சொன்னதுதான் தாமதம்.

உடனேயே ''அதெப்படிங்க உங்களை மறக்க முடியும்? அத்தானை இனித் திரும்பி மணிப்பூர் போகக்கூடாதென்று சொல்லி விட்டேன். இனி என் பிழைப்பே பூந்தோட்டத்திலேதான்!'' என்று உணர்ச்சிப் பெருக்கோடும் நன்றிப் பெருமிதத்தோடும் கூறுகிறாள் சிங்காரி.

சிங்காரி புதுமையான பெண்; இந்த உண்மைக்கு மனிதநேயமும் மனிதாபிமானமும் கொண்ட அவளுடைய அழகான கதையே சாட்சி!

வாழ்வு ஒரு பிரச்னை அன்று! அது ஓர் உன்னதம்; உண்மை; சத்தியம்!

இன்றைய சமுதாயத்திற்கு அவசியமான நல்லதொரு செய்தியைக் கொண்ட, பாராட்டுதலுக்கு உகந்த நல்லதொரு சிறுகதையைக் கலைமாமணி விக்கிரமன் அவர்கள் மிகவும் நறுவிசாக வழங்கியிருக்கிறார்.

**- பூவை எஸ். ஆறுமுகம்**

1949

# 11. செவ்வந்திப்பூ சிங்காரி

மணி நாலுக்கு மேலாகிவிட்டது. சிங்காரியை இன்னும் காணவில்லை. வழக்கமாக மூன்று மணிக்கே வந்து 'அம்மா' என்று கதவை இடித்துச் சிரித்துச் சிரித்துப் பேசி அந்த அரைமணி நேரத்தை ஐந்து நிமிஷம் போல் எண்ணச்செய்யும் அவளை இன்னும் காணவில்லை. பெண் சுகுணா, 'இன்றைக்குச் சினிமாவுக்குப் போக வேண்டும். பூந்தோட்டத்தையே தலையில் வைத்துக் கொள்ளப்போகிறேன்' என்று குதித்துக் கொண்டிருந்தாள். வாசலுக்கும் உள்ளுக்குமாக சிங்காரியைக் காணவில்லையே என்று அலைந்து கொண்டிருந்தாள்.

சிங்காரி என்றால் எங்களுக்கெல்லாம் உயிர். சிரித்துப் பேசும் சுபாவமும், 'அம்மா' என்னும் குரலில் ஒலித்துக் கனியும் அன்பும் அவளை எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே எண்ணச் செய்து விட்டன.

செவ்வந்திப்பூ பூக்கும் நாள்களில் உதிரியாகவும், மாலையாகவும் கட்டிக் கூடையை அவள் இடையில் சுமந்துவரும் அழகொன்றே போதும். அதனாலேயே 'செவ்வந்திப்பூ சிங்காரி' என்று அழைக்க ஆரம்பித்து விட்டாள் சுகுணா.

சுகுணா அப்பொழுது ஐந்து வயதுக் குழந்தை. செவ்வந்திப்பூ வாங்கித் தந்தால்தான் ஆச்சு என்று பிடிவாதம் பிடித்தாள். சிங்காரிக்கு என்ன தோன்றியதோ, என்னவோ... அவள் கூடையில் அப்பொழுது பூ எல்லாம் தீர்ந்துவிட்டது. நேரே வீட்டுக்குப் போய்த் தோட்டத்துச் செடிகளிலிருந்து மீதியிருந்ததையும் பறித்துக் கொண்டு வந்து சுகுணாவிடம் கொடுத்தாள்.

அந்த நாளிலிருந்து ஒரு வருஷமாகச் சிங்காரி வராத நாளில்லை. மணி மூன்றடித்ததும் அவள் குரல் கேட்பதுபோக, அன்று ஐந்து மணி வரையில் காணோமே என எண்ணிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுதுதான் சிங்காரி என்னிடம் தான் வளர்ந்த கதையையும் வாழ்ந்த கதையையும் மனம்விட்டு ஒருநாள் உருக்கமாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.



சிங்காரியின் தகப்பனார் சாமிநாத நாயக்கர் கட்டட வேலை செய்பவர். பாலாற்றுச் 'சலசல' ஓசையை அடுத்துள்ள பாலூரில், சாமிநாத நாயக்கரைத் தெரியாதவர்களே கிடையாது. வீடு கட்டும் வேலை அந்தச் சுற்று வட்டாரத்தில் எங்கு நடப்பதானாலும் சாமிநாதன் இல்லாமல் கடைக்கால் ஓர் அங்குலம்கூட எழாது.

சிங்காரியைப் பெற்று ஏழாண்டு வளர்த்து அவள் தாயார் இறந்தாள். சாமிநாத நாயக்கருக்கு தம் மகளை வளர்ப்பதோடு, வயிற்றுக்கு உணவு சமைக்கும் பெரும் பாரமும் தலையில் விழுந்தது. காலையில் எழுந்ததும் அநேகமாக எட்டு எட்டரைக்குள்ளாக வேலைக்குப் போக வேண்டியிருக்கும்.

சிங்காரி எழுந்து, இருள் மறையும் அந்த விடிவேளையில் மண் குடத்துடன் பாலாற்றுக்குப் போய் ஊற்றெடுத்து தோண்டி நீர் மொண்டு வீடு வருவாள். அதற்குள் அவள் தந்தை அடுப்பு மூட்டி வைத்திருப்பார். அதிலிருந்து இலையில் சோறு விழும் வரையில் இருவரும் சக்கரமாகச் சுழல்வார்கள். மகளுக்குத் தாயில்லையே என்னும் ஏக்கமில்லாமல் சாமிநாதன் வளர்த்து வந்தார்.

பாலூர் வட்டாரத்தில் கிடைக்கும் வேலை வயிறு வளர்க்கும் அளவுக்கு ஊதியம் அளிக்கவில்லை. சிங்காரியும் துறுதுறு என வளர்ந்து விட்டாள். பதினேழு வயதுப் பருவம் அவளைப் பெயருக்கேற்றபடி ஆக்கிவிட்டது. இரண்டு முழு ஜீவன்கள் வாழ வேண்டியதோடு, மகளுக்குக் கல்யாணம் செய்விக்க வேண்டிய மகத்தான பொறுப்பும் வேறு.

பட்டணத்தில் மிலிடரி காண்ட்ராக்டர்களிடம் சென்று வேலை செய்தால் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று யாரோ சொன்னதன் பேரில் சாமிநாத நாயக்கர் பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவர்கள் போய்ச் சேருவதற்கும் அரிசி ரேஷன் வருவற்கும் சரியாக இருந்தது. ஆகவே கை நிறையக் கூலியும் பணமும் இருந்தும், வயிறு நிறைய ஒருவேளை சாப்பாட்டுக்கே திண்டாட்டமாகப் போய் விட்டது. ரேஷனின் கொடுக்கப்பட்ட அரிசி ஒரு வாரத்துக்குக் காணவில்லை.

பல்லாவரத்தில் அரிசி கிடைக்கிறதென்று யாரோ சொன்னார்கள். உடனே கிளம்பினாள் சிங்காரி. அரிசியைக் கோணிப் பை ஒன்றில் வாங்கி இடுப்பில் வைத்துக் கொண்டு கோட்டை ஸ்டேஷனில் இறங்கிய சிங்காரியை, போலீஸ்காரர் பிடித்து விட்டார். அவளைப் போல் அரிசி கொண்டு வந்து அங்கு கூட்டமாக நிற்பவர்கள் ரொம்பப் பேர்.

ஒருகணம் வெலவெலத்துவிட்டது சிங்காரிக்கு. ஐயோ! என்ன ஆகுமோ? எப்பொழுது விடுவார்களோ? ஒருவேளை இதற்காகத் தண்டனை ஏதாகிலும் அளித்து - தான் பெண்பிள்ளை என்பதற்காகத் தன் தகப்பனாரைப் பிடித்துக் கொண்டால்..?

இதை நினைத்தபோது சிங்காரிக்கு அழுகை அழுகையாக வந்தது. போலீஸ்காரர்களின் குத்தூசிப் போன்ற கேலிப் பேச்சு வேறு; தன்னைப் போலவே அகப்பட்டுக் கொண்ட மற்றவர்களின் வாடிய முகம் வேறு; எல்லாம் சேர்ந்து சிங்காரியைக் கலக்கின.

இதற்குள் தகப்பனார் சாப்பிட வந்திருப்பாரே என்று நினைத்தபோது தான் துக்கம் தாங்க முடியவில்லை.

அப்பொழுது தன்னைச் சுட்டிக்காட்டி ஒரு வாலிபன் அந்தப் போலீஸ்காரரிடம் ஏதோ பேசுவது தெரிந்தது. அவனை அதற்கு முன் ஒரு தடவை பார்த்திருப்பதாக அவளுக்கு நினைவு. வாரிவிட்ட அந்தக் கிராப்பு; அரும்பிய மீசை; மெல்லிய மல் ஜிப்பாவுடன் கூடிய அவன் எதற்காகத் தன்னைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறான் என்பது தெரியவில்லை.

போலீஸ்காரரும், அந்த வாலிபனும் இவளருகே வந்தார்கள்.

"ஏ புள்ளே! இவரு உங்க மனுஷரா? நான்தான் அரிசியைக் கொண்டு வந்தேன் என்கிறாரே" என்றார் போலீஸ்காரர்.

இவளைப் பதில் பேசவிடாமலே அவன் - சுந்தரமூர்த்தி, "ஆமாய்யா... நான்தான் சொல்கிறேனே! நம்பிக்கை இல்லையா? நாங்கள் இரண்டு பேருமாகத்தான் கொண்டு வந்தோம். வயசுப் பெண் கேஸ் நடக்கிற வரையில் எதற்கு ஐயா உட்கார்ந்திருக்கணும்? அதுவரையில் நானிருக்கிறேன். அவளை விட்டு விடுங்க" என்றான். சிங்காரிக்கு ஒருகணம் மகிழ்ச்சியும், மறுகணம் வேதனையுமாக இருந்தது.

"தம்பி! உண்மையோ, பொய்யோ? பெண் பிள்ளையாய் இருந்தால் பத்து ரூபாய் அபராதத்தோட விட்டு விடுவார்கள். மாஜிஸ்ட்டிரேட் உன்னைப் பார்த்தவுடன் ஒரு வாரம் போட்டுடுவாரே!" என்றார் போலீஸ்காரர்.

"பரவாயில்லை..." என்ற பதிலைக் கேட்டவுடன் திடுக்கிட்டாள் சிங்காரி.

'தனக்காக யாரோ ஒருவன் ஒரு வாரம் சிறைத் தண்டனை இருப்பதா? வேண்டாம். நாமே இருந்து விடுவோமே!' என்று எண்ணினாள்.



ஆனால், 'உம், ஓடிப் போ புள்ளே!' என்னும் அதட்டல் சப்தம் கேட்டதும் அவள் தன்னையறியாமலே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தாள்.

ஒருமுறை தனக்காகப் பரிந்து வந்த அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனும் அந்தக் கூட்டத்தின் மத்தியிலிருந்து பார்க்காமல் இருக்க முடியுமா?

வீட்டுக்குப் போய் சேர்ந்தாள். தகப்பனார் அங்கே மகளைக் காணாது வாயிலுக்கும் உள்ளுக்குமாக நடந்து தவித்துக் கொண்டிருந்தார்.

சிங்காரி அந்தப் பதைபதைக்கும் வெயிலில் வீட்டுக்குள் நுழைந்தாள். உடனே விவரத்தைக் கூறினாள். மகள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி வந்ததற்குச் சந்தோஷமடைந்தார். அரிசி போனது பற்றிச் சற்றும் கவலைப்படவில்லை.

ஆனால், சிங்காரியினால் அந்த வாலிபனின் உருவத்தை மட்டும் மறக்க முடியவில்லை.

நாள்கள் சென்றன. ஓடி மறந்தன என்றுகூடக் கூறலாம். வேலை முன்போல் லாபகரமாக இல்லை. ஆகவே, பாலூருக்கே வந்து விட்டார்கள் தந்தையும் மகளும். கையில் ரொக்கம் கொஞ்சம் சேர்ந்திருந்தது. வீடும் சிறு தோட்டமுமாக வாங்கிக் கொண்டார்கள். இனி அவருடைய அபிலாஷை மகளுக்குக் கல்யாணம் செய்து வைத்து மகிழ வேண்டியதுதான்.

சிங்காரிக்கு மிகவும் வியப்பாக இருந்தது என்னவென்றால் நிச்சயம் செய்திருந்த கணவர், முன்பே அவள் இதயத்தில் வரித்திருந்த, தனக்காகக் குற்றத்தை ஏற்க முன்வந்த சுந்தரமூர்த்தியே என்பதுதான்.

தந்தையிடம் என்னவென்று சொல்ல? சுந்தரமூர்த்தி சிங்காரியின் தூரத்து உறவாகவும் இருந்தான் என்றால் சிங்காரியின் சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்?

கல்யாணமாகி இரண்டு மாதம் வாழ்க்கை மிக மகிழ்ச்சியுடன் சென்றது.

கொத்து வேலையைத் தவிர வேறு வேலையே செய்தறியாத சுந்தரமூர்த்திக்கு, அந்த வட்டாரத்தில் வேலை ஏதும் கிடைக்கவில்லை. மாமனார் வீட்டில் ஜம்மென்று சாப்பிட்டு, மடிப்புக் கலையாமல் சொக்காய் போட்டுக் கொண்டு காலங்கழித்து வந்தான். ஆனால், சாமிநாத நாயக்கர் கண்டிப்புப் பேர்வழி.

இடைஇடையே இடித்து இடித்து ஏதோ கூற ஆரம்பித்தார். சிங்காரியும் தந்தையின் அந்தச் சொற்களுக்கு ஏதாவது பதில் கூறி அடக்கியே வந்தாள்.

ஓரிடத்தில் சுந்தரமூர்த்தி வேலையை ஒப்புக் கொண்டு, நடுவில் நாலைந்து நாள் மேஸ்திரியிடம் கோபம் என்று போகாமலிருந்ததைக் கேள்விப்பட்டார் நாயக்கர். கோபம் பொத்துக் கொண்டு வந்தது அவருக்கு.

சிங்காரியைக் கூப்பிட்டார். "இதெல்லாம் நல்லா இல்லை. கல்யாணம் கட்டியாச்சு. நாலு காசு சம்பாதிக்க யோக்யதை இல்லைன்னா ஊர்லே தான் மதிப்பாங்களா? கிடைத்த வேலையையும் செய்யாமப் போனா, எனக்குன்னா அவமானமாக இருக்குது!" என்று கத்தினார்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த சுந்தரமூர்த்தியின் காதில் இது விழுந்தது. வெடுக்கென்று எழுந்து உள்ளே வந்தான். அவனும் பதிலுக்கு ஏதேதோ பேசிவிட்டான்.

ஆனால், கடைசியில் சிங்காரியின் தகப்பனார், "அவ்வளவு ரோசமுள்ளவன் ஏதாவது வேலை வெட்டி செய்யணும்" என்று சொன்னது அவன் மனத்தைக் கலக்கியது; உடம்பைக் குலுக்கியது.

என்ன நினைத்தானோ என்னவோ! வெளியே போனான். அன்று வரவில்லை. மறுநாள், அதற்கு அடுத்த நாளும் காணவில்லை. சிங்காரி அழுதழுது முகம் வீங்கினாள். சாமிநாத நாயக்கரும் எங்கெல்லாமோ தேடினார். 'அப்படி என்னதான் சொல்லிவிட்டேன்? அவன் நல்லதுக்குத்தானே சொன்னேன். சும்மா கிராப்பு வாரிக்கிட்டு, மல் ஜிப்பா மடிப்புக் கலையாம போட்டுக்கிட்டா ஒண்ணும் நடக்காது. உலையிலே அரிசி வந்து குதிக்காதுன்னு அவன் நல்லதுக்குத்தானே சென்னேன்?' என அங்கலாய்த்தார்.

ஒரு மாதம் கழித்து மணிப்புரியிலிருந்து சுந்தரமூர்த்தி ஒரு கடிதம் எழுதியிருந்தான். ஏதும் வருத்தப்பட வேண்டாமென்றும், அங்கு பெரிய சாலையொன்று போடும் வேலை நடக்கிறதென்றும், நல்ல சம்பளம் கிடைப்பதாகவும் எழுதியிருந்தான்.

மாதம் இரண்டு கடிதாசிதான் போட முடிந்தது. மாதா மாதம் ஏதாவது பணமும் வரும். கல்யாணமாகி நான்கு மாதங்களிலேயே புருஷன் தன்னைவிட்டுச் சம்பாதிப்பதற்கென்று வடக்கே தூர தேசம் போனது சிங்காரிக்கு அடங்காதத் துயரமாகிவிட்டது.



துயரத்தை மறக்க வீட்டுத் தோட்டத்திலே செடிகள் பயிரிட்டாள். அழகான ரோஜா, செவ்வந்திப்பூ காலத்தில் கண்ணைப் பறிக்கும் மஞ்சள் நிறப்பூ. இவை குலுங்கக் குலுங்கப் பூக்கும் என்று பயிரிட்டிருந்தாள். பட்டணத்திற்குக்கூட அனுப்பும் அளவுக்குத் தோட்டம் செழிப்பாகி விட்டது. ஆகவே, அவள் 'அவ்வளவு தொலைவு போய் சம்பாதிக்க வேண்டாம்; இங்கே தோட்டத்துப்பூ ஒன்றே நாம் இருவரும் சாப்பிடப் போதுமான பணம் தரும்' என்று அடிக்கடி எழுதுவாள்.

எங்கள் வீட்டிற்குத் தினமும் முதன் முதலில் பூவைக் கொடுத்து விட்டுத்தான் நாலரைக்கு வரும் பாசஞ்சரில் காஞ்சிபுரத்துக்குப் பூவைக் கொடுத்து அனுப்புவாள். அப்படிப்பட்டவள் அன்று வராதது என்னவோ போலிருந்தது.

மணி ஐந்தடித்தது. வீட்டு வாசலில் 'கடக் கடக்' என்று வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. 'யாரது?' என்று பார்க்க நாங்கள் எல்லாரும் ஓடினோம். வண்டியினின்று சிங்காரி குதித்து ஓடி வந்தாள். நாங்கள் "பூ எங்கே? வண்டியில் வருகிறாயே! எங்கேயாவது போய் வந்தாயா?" என்று கேட்பதற்குள், அவளே, "அம்மா, அம்மா! அவரு நாலரை பாஸஞ்சருக்கு வந்துட்டாரு, அம்மா! வண்டியிலே இருக்காரு. ஸ்டேஷன்லே பூ கொடுத்துட்டுத் திரும்பினேன். பெட்டி படுக்கையோட நம்ப ஊரு ஸ்டேஷனிலே யாரு இறங்குராருன்னு பார்த்தேன். அவர்! 'அத்தான்' என்று அலறிப்புட்டேன். அந்த தேசத்திலே நல்ல மழையாம். ஆறு மாசம் வேலை நடக்காதாம். பார்த்துட்டுப் போக வந்தாராம்" என்றாள். அவள் முகத்தில் சந்தோஷம் பொலிந்தது.

"சிங்காரி! இனிமேல் எங்களே மறந்திடுவே..." என்றேன்.

"அத்தானையும் பூ வியாபாரத்தையும் நான் விட மாட்டேன் அம்மா!"

"நீ செவ்வந்திப்பூ தரலைன்னா பூவே வெச்சுக்க மாட்டேன்" என்று சிணுங்கினாள் சுகுணா.

"அதெப்படிங்க உங்களை மறக்க முடியும்? அத்தானை இனித் திரும்பி மணிப்பூர் போகக்கூடாது என்று சொல்லிவிட்டேன். இனி பிழைப்பே பூந்தோட்டத்தில்தான்" என்றாள் செவ்வந்திப்பூ சிங்காரி.

● ● ● ●

# அன்பும் ஆசையும்

சிறுகதை என்றால் என்ன என்று இதுவரை யாராலும் அறுதியிட்டு வர்ணிக்க முடியவில்லை. வர்ணனைக்கு அடங்காத அத்தன்மைதான் சிறுகதையின் சீரிளமைத் திறன்.

சதுரமாய் முடிகிற கதைகளுடன் எவ்வித முடிவுமில்லாத 'எக்ஸிஸ்டென்ஷியலிஸ' பாணிக் கதைகளும் சம அந்தஸ்துடன் போட்டியிடுவதைக் காண முடிகிறது. சஸ்பென்ஸுடன் முடிகிற கதைகளுக்குக் கிடைக்கும் வரவேற்பு ஓர் உணர்வுக் கீற்றுடன் முடிகிற கதைகளுக்கும் கிடைக்கிறது.

'அன்பும் ஆசையும்' என்னும் இச்சிறுகதை, முற்றிலும் வித்தியாசமானது. அன்பின் விளைவிற்கும் ஆசையின் விளைவிற்கும் இடைப்படும் சன்னமான வேறுபாட்டினை, கயிற்றில் நடக்கும் சாகசத்துடன் வெளிக் கொணர்ந்திருக்கிறார் ஆசிரியர் விக்கிரமன். கதையின் ஊடு நூலுக்கும் பாவு நூலுக்கும் நிறத்தில் பேதம் தெரியாதுபோல் தோன்றினாலும், கதையாய் நெய்தபின் தெரிகிற வண்ணக் கலவையின் ஜொலிப்பு உள் மனத்தில் ஆழப்பதிகிறது.

மிக வலிமையான சம்பவங்கள், கனமான பாத்திரங்கள், கவர்ச்சிகரமான நிலைக்களன் ஆகியவற்றைக் கொண்டு யாராலும் ஒரு நல்ல கதையை வெளிக்கொண்டு வந்துவிட முடியும். நல்ல வெளிச்சத்தில் தெளிவான போட்டோ எடுப்பது மாதிரியான எளிதான செயல்தான் இது. ஆனால் சன்னமான உணர்வு மாறுபாட்டை அடித்தளமாக்கி, நெஞ்சில் நிற்கிற சிறுகதையை எழுதுவதற்குப் புலமையும் திறமையும் அதிகம் வேண்டும். மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் மிகத் தெளிவான போட்டோவை உருவாக்குவது போல்தான் இது.

'Tip of the ice berg' என்பார்கள். புலனாகிற நுட்பங்களை விட புதைந்து போயிருக்கிற விஷயங்கள்தாம் அனந்தராமனின் அன்பின் ஆழமும், சேஷாத்ரியின் ஆசையின் வலிமையும் - செய்திக்கு வலிமை சேர்க்கவல்லன.

இந்தச் சிறுகதையின் சிறப்பும் அதுதான். சொல்லிக் காட்டுகிற விஷயங்களின் வலிமையைவிட, கோடிகாட்டுகிற விஷயங்களின் வலிமையே மிகுந்திருக்கிறது - ஒரு சிறு ஆலவிதையில், பெரிய மரம் ஒளிந்திருப்பது மாதிரி.

- ஜெயரதன்



1949

# 12. அன்பும் ஆசையும்

**'சுள்' என்று வெயில் அடித்துக் கொண்டிருந்தது. வீட்டில் அயர்ந்து தூங்கவும் இந்தப் பொல்லாக் குழந்தைகள் விடுவதில்லை. வெளியே யாவது போகலாம் என்று துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பினேன்.**

**நண்பன் அனந்தராமனைப் பார்த்து நீண்ட நாளாகியிருந்தது. 'வா வா' என்று வருந்தியழைப்பவர் வீடுகளுக்கு எங்கு அடிக்கடி போக முடிகிறது? திருவல்லிக்கேணி சென்று நண்பன் வீட்டுக் கதவைத் தட்டினேன்.**

**அனந்தராமன் கதவைத் திறந்தான். ''வா அப்பா... அத்தி பூத்தது போல்...'' என்று புன்முறுவலுடன் வரவேற்றான். இருவரும் கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்தோம். அனல் போன்ற அந்த வெயிலில் வந்து 'குளுகுளு' என்ற கூடத்து நிழலில் உட்கார்ந்தவுடன்தான் நிழலின் 'அருமை' தெரிந்தது.**

**''சந்துரு'' என்று கூப்பிட்டான் அனந்து. ''ஏம்பா...'' என்று குதித்தோடி வந்தான் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன். குறுகுறுப்பான முகமும், தெளிவான பேச்சும் என் மனத்தைக் கவர்ந்தன. 'அப்பா' என்று அனந்துவைக் கூப்பிட்டதும், 'அனந்துவுக்கு என்ன உறவு இந்தப் பையன்? அனந்துவைப் பார்த்து நீண்ட நாளாகிறது. ஒருவேளை அவன் மகனாகவே இருக்கலாமோ?' என்று கூட எண்ணினேன்.**

**''சந்துரு... அம்மாவைத் தயாரித்துத் தரச் சொல்லி, மாமாவுக்கு சர்பத் கொண்டு வா பார்க்கலாம்'' என்றான் அனந்து. அவனும் குதித்தோடினான் உள்ளே.**

**அனந்துவைத் திரும்பிப் பார்த்தேன் நான். ''அனந்து... பையன் ரொம்பச் சுட்டியாக இருக்கிறான்... உனக்குக் குழந்தை பிறந்து ஐந்து வருடம் சொல்லாமே இருக்கியே... பையன் கல்யாணத்துக்குத்தான் சொல்லுவியோ?'' என்றான்.**

**அனந்து இடி இடியென்று சிரித்தான்.**

''என் மகனா? என் மகன்தான் ராஜு. இவன் எங்கள் வயிற்றில் பிறக்காவிடினும் எங்கள் மகனாகவேதான் இவனைப் பாவிக்கிறோம். மனைவியும் பெற்ற பிள்ளையாகவே அன்பு பாராட்டுகிறாள்... குழந்தை இல்லாக் குறைக்குக் குழந்தையாகவும்... அன்பின் ஆட்சிக்கு அன்புக் குரியவனாகவும் இருக்கிறான்... இவன்'' என்றான் அனந்து.

நான் மௌனமாக இருந்தேன். பெற்ற பிள்ளைகள் கடமையை மறக்கும் இக்காலத்தில், பெற்றோர் மகன் என வாஞ்சை காட்டாத இக்காலத்தில் இப்படியும் இருக்கிறதே என ஆச்சர்யப்பட்டுக் கொண்டே சிறிது நேரம் மௌனமாக இருந்தேன்.

அதற்குள் சர்பத் வந்தது. இருவரும் குடிதோம். குடித்த டம்ளரை உடனே உள்ளே கொண்டு வைக்கச் சென்றான்.

''பையன் ரொம்ப கெட்டிக்காரனா இருப்பான் போலிருக்கிறது'' என்று மறுபடியும் பேச்சைத் தொடங்கினேன் நான்.

ஹூம் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு அனந்து, ''கெட்டிக் காரனாகத்தான் விளங்க வேண்டும் என்பது எங்கள் ஆசை. அவன் நல்ல காலம்தான் இங்கு கொண்டு சேர்த்திருக்கிறது. உலகத்தில் ஆசையால் ஒரு பொருளை விரும்புபவர்களும் உண்டு. அன்பால் ஒரு பொருளை விரும்புபவர்களும் உண்டு'' என்றான்.

''என்னப்பாபுதிர் போடுவதுபோல் பேசுகிறாயே... அப்படியென்றால் இந்தப் பையன் உன்னிடம் வந்தடைந்தது அவனுடைய நன்மைக்கு என்று சொல்லு'' என்றேன்.

''என்னைப் பத்தி நானே பெருமையாகச் சொல்லிக் கொள்ளக் கூடாது. இந்தப் பையன் மூலம் தனக்கு நன்மை தேடிக் கொள்ள எண்ணிச் சிலர் முயன்றார்கள். ஆசை அவர்களை உந்தியது. பலன் கிடைக்காது எனத் தோன்ற ஆரம்பித்ததும் இவனைச் சந்தியில் விட்டு விட்டனர். இவன் உயிர் பிழைத்து வாழ்கிறானே, அந்த ஒரு நன்மை தான் இவன் என்னிடம் வந்தது'' என்றான் அனந்து.

மேற்கொண்டு இது பற்றிக் கேட்க விரும்புபவன் போல் நிமிர்ந்து உட்கார்ந்தேன். ''ராஜு! ஆறு வருடன் பின்னாலே நினைவுபடுத்திக் கொள். பர்மாவிலிருந்து உயிருக்கு அஞ்சி ஓடி வந்தார்களே அது நினைவு இருக்கிறதா?''

''சந்துருவின் அப்பா சபேசன் என் மனைவிக்கு எட்டிய உறவு. உறவோ - நட்போ மனத்துக்குப் பிடித்தவர்களோடு நாம் கலந்து பழக



வேண்டும். ஆனால், சபேசன் இங்கு இருக்கும் வரையில் யாரிடமும் 'ஒட்டி'க் கொள்வது கிடையாது. நிறைய சம்பாதிக்கிறோம் என்ற பெருமையோ, அல்லது எல்லாருடனும் பழகினால் ஒட்டிக் கொண்டு விடுவார்கள் என்ற பயமோ - அவர் எந்த உறவினருடனும் பழகாமல் இருந்தார்.

ரங்கூனிலே இன்னும் அதிகச்சம்பளத்திலே உத்தியோகம் கிடைத்தது. குடும்பத்துடன் அங்கு போய் விட்டார். அவரை நான் பார்த்தது கூடக் கிடையாது. எப்போதாவது மனைவி போய் வருவாள். ரங்கூன் போன பிறகு அவரைப் பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால், அவர்களுடன் அவரது நெருங்கிய சொந்தக்காரப் பையன் ஒருவன் இருந்து வந்தான்.

சபேசய்யருக்கு ரொம்ப நாள் குழந்தையே பிறக்காமல் இருந்தது. இந்தப் பையனும் அங்கு ஒட்டிக் கொண்டு இருந்தான். அவனையே ஸ்விகாரம் எடுத்துக் கொள்ளப் போவதாகப் பேச்சும் இருந்ததாம்.

'மாமா சொத்துக்கு மருமான் கர்த்தா' என்று அவன் பிற்பாடு சொத்து முழுதும் தனக்குத்தானே என்பதற்காக மிகவும் நெருங்கி அந்தக் குடும்ப உயிராகவே பழகி வந்தான்.

குறைந்தது ஐம்பதாயிரமாவது தேறும் என்ற எண்ணத்தின்மீது இன்பக் கோட்டைகள் கட்டி வந்தான் அவன்.

ஜப்பான் படையெடுப்புப் பயமுறுத்தல் கீழ்நாட்டுத் தீவுகளில் ஏற்படும் சமயம். சபேசய்யருடைய மனைவி, கருவுற்று இந்தச் சந்துருவைப் பெற்றெடுத்தாள்.

என்னதான வெளிக்குச் சந்தோஷத்தைக் காட்டினாலும் உள்ளுக்குள் அவனுக்குத் 'தனக்குப் போட்டி'யாகப் பிறந்த இவனைக் காண வெறுப்புணர்ச்சி ஏற்படாதிருக்குமா?

குழந்தையைப் பிரசவித்து அவர் மனைவி காலமானாள். பிறந்த குழந்தையை வைத்துக் கொண்டு பாவம் சபேசன் என்ன கஷ்டப் பட்டிருப்பாரோ? குழந்தை சந்துரு வளர்வதற்குள் ஜப்பான் தாக்குதல் நெருங்கி வந்து விட்டது. ஆயிரக்கணக்கான சோகக் கதைகளைச் சிருஷ்டித்த அந்தத் தாக்குதலால் பிரிக்கப்பட்ட குடும்பங்கள், அழிந்து குடும்பங்கள் ஏராளம்.

சபேசனும், அந்தப் பையன் (பையனென்ன! இருபத்தெட்டு வயதாகியிருக்கும் அப்போ), குழந்தை மூவருமாகக் கடைசியில் நடந்தே இந்தியாவுக்குக் கிளம்பினார்கள்.

ஐம்பதினாயிரம் - அறுபதினாயிரம் பணம் இருக்குமென்று எதிர்பார்த்தானே அவன்... கடைசியில் சபேசய்யர் இரண்டாயிரம் ரூபாயையும், குழந்தை சந்துருவையும் இவனிடம் ஒப்படைத்தார். ஆனால், அதுவும் எவ்வளவு தூரம் உண்மையென்பது யாருக்குத் தெரியும்?

அவன் - சேஷாத்ரி - சொல்லித்தான். ஒரு மைலா இரண்டு மைல், ஆயிரத்துக்கு அதிகமான தொலைவு நடந்து வந்து சேர்வதென்றால், வழியிலே எவ்வளவு பயங்கரங்கள். திக்கற்று விழுந்த பிணங்கள். சொந்த மனைவி செத்து விழுவாளாம்.

கணவன் பிணத்துடன் அங்கேயே பிரலாபித்துக் கொண்டிருந்தால் முடியுமா? தன் ஆசை மனைவியைக் கைவிட்டு மேற்கொண்டு முன்னேற வேண்டியதுதான்.

இப்படியெல்லாம் துன்பச் சுழல்களைத் தாண்டி சபேசனும், சந்துருவும், சேஷாத்ரியும் கல்கத்தா வந்து சேர்ந்தனர்.

கல்கத்தா வந்தவுடன் இருவரையும் - அப்பாவையும் மகனையும் விஷ சுரம் பிடித்தது. சேஷாத்ரி அவர்களை விட்டுவிட்டுத் தன் ஊரான மாயவரத்துக்கு வந்துவிட்டான்.

என்ன கல்நெஞ்சம்! ஆனால், அதற்கு அவன் சொல்லும் காரணம் சமாதானம் ஒருவிதமாக இருக்கிறது.

ஒருநாள் என் பெயருக்கு கல்கத்தா ஜெனரல் ஆஸ்பத்திரியினின்று தந்தி ஒன்று வந்தது.

'உடனே வரவும்' இதுதான் வாசகம். நான் ஏன் போக வேண்டும் என யோசனை செய்யாமல் உடனே விரைந்தேன். சபேசன் இறந்து மூன்று நாளாகி விட்டன.

சந்துரு - இந்தப் பையனுக்கு - உடம்பு குணமாகிவிட்டது. இவனை உடனே டிஸ்சார்ஜ் செய்து அழைத்துப் போகும்படி கூறினார்கள்.

நோயாலும், பலவீனத்தாலும் வாடி வதங்கி இருந்தபோதிலும் சந்துருவின் முகம் என்னைக் கவர்ந்தது. என் விலாசம் யார் கொடுத்தார்கள் என்று ஆஸ்பத்திரியில் கேட்டேன்.

''இருவரையும் ஆஸ்பத்திரியில் சேர்க்க ஒருவர் வந்திருந்தார். அவரும் 'எவாக்குவி'தான். அவர் கொடுத்தார்'' என்றார்கள்.

என் கண் கலங்கியது.



தோளில் இவனைச் சாத்திக்கொண்டு அன்றைய மெயிலில் ஏறினேன்.

''கமலா! உனக்கு ஒரு குழந்தை'' எனக் கூவிக் கொண்டே உள்ளே நுழைந்தேன். என் மனைவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. 'குழந்தை பெறத் தவம் செய்தோம் கிடைத்தது இதோ!' என்றான் அவன் இதய பூர்வமாக.

சேஷாத்ரி ஒரு தடவை வந்திருந்தான். தானே திண்டாடுவதாகவும் இந்தச் சிறு குழந்தையை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்பதற்காகவே ஆஸ்பத்திரியில் உங்கள் விலாசம் கொடுத்ததாகவும் கூறினான்.

அவன் எவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும் பணத்தின் மீது ஆசையால் சந்துருவை விரும்பியவன், பணமில்லை எனத் தெரிந்தவுடன் ஆசை பறந்தோடி விட்டது.

எங்களுடையது அப்படியன்று; இயற்கையான அன்பு இக்குழந்தை மீது விழுந்துவிட்டது. எங்கள் மகன் போலவே காப்பாற்றி வருகிறோம்'' என்று கூறி பேச்சை நிறுத்தினான் அனந்து.

''அப்பா... காபி கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டு ஓடி வந்தான் சந்துரு.

அன்பையும், ஆசையையும எண்ணி ஆச்சர்யப்பட ஆரம்பித்தேன் நான்.

● ● ● ●

# கந்தப்பன் காளை

சிறுகதைகளை நான் எழுதியபோது கீழ்க்காணும் யுக்தியைக் கையாண்டேன். 'சுவையான ஓர் ஆரம்பம்; சிக்கலைக் காட்டும் நடுப்பகுதி; எதிர்பாராத அல்லது திருப்தியான முடிவு'. இதற்காக என் சிறுகதைகளை வலுக்கட்டாயமாக இந்த விதிகளுக்கு உட்படுத்தினேன் என்றும் சொல்லலாம்.

இந்த விதிகளின்படி ஓரிரண்டு சிறுகதைகள் பிரசுரத்திற்குத் தகுதி பெற்று வெளியாயின. அதற்குப் பிறகு எனக்கே இந்தப் பாணி லேசாகத் திகட்டியது. அந்த நேரத்தில் முந்தைய எழுத்தாளர்கள் எழுதிய பல கதைகளைத் தேடித் தேடிப் படிக்க ஆரம்பித்தேன்.

அந்த வரிசையில் கலைமாமணி விக்கிரமன் அவர்கள் எழுதிய கதைகள் எனக்குப் பல பாடங்களைச் சொல்லித் தந்தன.

இதோ இந்த, 'கந்தப்பன் காளை' சிறுகதையும் எனக்கு ஒரு பாடம்தான். எப்படி?

'ஜல்... ஜல்...' என்று தொடங்கும் கதையின் முதல் வரியே மிகப் பெரிய ஒரு கிராமக் காட்சியை என்னுள் விரித்து வைத்தது. அந்தக் கிராமத்திற்குள் புகுந்து விட்டதை உணர்ந்தேன். கதைக்குள் நானும் ஒருவனானேன்.

அடுத்து -

கந்தப்பன் - அவனது தொழில்.

கந்தப்பனுடைன காளை மாடு, வீரம் - அதனுடைய கம்பீரம்.

மாட்டு வண்டி - அது எழுப்பும் ஓசை.

''வீராட்டி.. ட்ரியோ'' என்னும் கந்தப்பனின் பாஷைக்குக் காளை மாடு ஓடுகிறபோது எனக்குக் கிடைத்த குதூகலம் இருக்கிறதே... விவரிக்க முடியவில்லை.

அந்தக் காளை மாட்டைக் கந்தப்பன் பெற்ற விதத்தைச் சுருக்கமாகச் சொல்லி - காளை மாட்டின் மூலம் கந்தப்பனின் வாழ்க்கைத் துணைவி



கிடைத்த விவரத்தை விளக்கி - கந்தப்பன் குடும்பம் சீராக நடைபயிலும் போதுதான் - ஆரம்பிக்கிறது அவலம். ஒரு தீ விபத்து மூலம்!

கந்தப்பன் காளை மாட்டைக் காப்பாற்ற தீயினுள் பாய்ந்து, காளையும் அவனும் வெளியேறுகிறபோது கிடைத்த 'அப்பாடா' என்னும் உணர்வு அடுத்த நொடியில் காளை சரிந்து விழ - 'ஐயோ' என்று கூக்குரலிட வைக்கிறது.

சோகம் அடிவயிற்றில் ஒரு பந்தாகச் சுருண்டு எழுந்து நெஞ்சை அடைக்கிற நெகிழ்ச்சி, ஏதோ எனக்கே ஏற்பட்ட ஓர் அவலமாய்த் தகிக்கிறது.

இப்படி ஒரு காளைக்கும் - கந்தப்பனுக்கும் ஏற்பட்ட பந்தத்தை நமக்குள் ஊடுருவ விட்டு - கந்தப்பன் பாடும்...

'மாலையோ மங்குதடா!  
மருக்கொழுந்தும் வாடிடுமே  
சாலையோ தொலைவிலையே வீரா  
சடுதியாய் எடு ஓட்டம்!'

பாட்டின் மூலம் - 'கந்தப்பன் காளை' சிறுகதை மூலம் - நிலைபெறச் செய்துவிட்டார், கலைமாமணி விக்கிரமன்.

சிறுகதை என்பது சில வரம்புகளுக்குள்தான் இருக்க வேண்டும் என்னும் 'என் யுக்தி'யை உடைத்து - ஒரு சிறுகதை, படிக்கிற வாசகரின் உள் மனத்தையும் தொட வேண்டும் என்பதைப் புரிய வைத்த கலைமாமணி விக்கிரமன் அவர்களை வணங்குகிறேன்.

**- நாகராஜகுமார்**

1949

# 13. கந்தப்பன் காளை

'ஜல் ஜல்' என்று சலங்கை சப்தம் கேட்டால், கந்தப்பனின் ஒற்றை மாட்டு வண்டி வருகிறது என்று உடனே சொல்லி விடலாம்.

கந்தப்பனுக்கு அவனது காளை மாட்டின் மீது உயிர் என்று சொல்லலாம். காளை மாட்டின் மீது அவனுக்கு அபரிமிதமான காதல் இருந்தது. தினம் காலையில் பலபலவெனப் பொழுது விடியும் சமயம் கந்தப்பன் வண்டியைப் பூட்டிக் கொண்டு பூந்தோட்டம் ஸ்டேஷனுக்குப் போய் விடுவான்.

அவனுக்கு அந்த ஒற்றை மாட்டு வண்டியால்தான் பிழைப்பு. போட் மெயில் ரயிலில் காலை ஏழு மணிக்கும், பாசஞ்சரில் ஆறு மணிக்கும் வந்து அந்த ஸ்டேஷனில் இறங்கும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் தொழிலைத் தான் அவன் செய்தான் என்றாலும், அவனைப் போல கௌரவமாகத் தொழிலை நடத்துபவர் அந்த வட்டாரத்திலேயே இல்லை எனலாம்.

"வீரா! ட்ர்... ட்ரியோ" என்று கூறிவிட்டால் போது. கந்தப்பனின் அந்தப் பரிபாஷையைக் கேட்டுப் புரிந்து கொண்டது போல் 'வீரன்' பறப்பான். 'ஜல் ஜல்' என்னும் சதங்கை சப்தம், 'கணீர் கணீர்' என்று ஆடும் கழுத்திலுள்ள மணியோசை, 'கடபுட' என்று ஓடும் வண்டியோசைக்குத் தாளமிடுவது போலிருக்கும்.

அதுவும் புதுப்பட்டிக்குப் போகும் பாதையில் - பஞ்சாயத்துப் போர்டார் அப்பொழுதுதான் பெரிய மனது வைத்துப் போட்டிருந்த சாலையில் - வண்டி போகும்போது, இளஞ் சூரியனின் காலைக் கதிர்கள், அடர்ந்து இருபுறமும் வளர்ந்திருக்கும் மரங்களின் இடுக்குகளின் வழியாய் மெல்லிய தங்க ரேகைகளைப் பரப்பிச் சூழ்நிலை இன்பத்தைக் கொடுக்கும்போது, யார்தான் கந்தப்பனின் வண்டியில் ஏறிச் சவாரி செய்யாமலிருப்பார்கள்?

"பெரியகுளம் போகணும், என்ன கேக்கிறே?" என்று அவர்கள் கூலி பேச ஆரம்பித்தால், "சாமி! இந்த வாயில்லா ஜீவன், நான், என் பெண் ஜாதி வயிறு கழுவ என்ன தேவையோ அதைப் பார்த்து உங்க இஷ்டம் போல் கொடுங்க" என்று கூறிவிடுவான் கந்தப்பன்.



விளையாட்டுப் போலிருக்கிறது. அது நடந்து இன்றைக்கு நாலு வருஷங்களாகிவிட்டன. புஞ்சைப்பட்டியில் அந்த வருஷம் மஞ்சு விரட்டு நடக்கப் போகிறது என்ற பேச்சு ஒரு மாதத்துக்கு முன்னமேயே எங்கும் எழுந்துவிட்டது.

இந்த வருஷம் மஞ்சு விரட்டுக்குக் கிராமத்துக் காளைகள் எல்லாம் கலந்து கொள்ளப் போவதாகப் பேச்சு இருந்தது. புதிதாக ஊருக்கு வந்திருந்த சிங்காரவேலு முதலியார் அப்பொழுதுதான் வாங்கியிருந்த காளையைப் பற்றி பிரமாதமாகப் புகழ்ந்து பேசினார். அதுவும் ஓங்கோல் காளை. கம்பீரமாக நாலரை அடி உயரமிருக்கும். அதன் இரு கொம்புகளும் வளர்ந்து கூர்மையாகச் சிறந்த தற்காப்பு ஆயுதமாகத் தோற்றமளித்தன. அடர்ந்த மயிருடைய வாலும், புஷ்டியான உடலும் பார்ப்போரைச் சிறிது நடுங்கும்படியே செய்தன. முதலியார் இதற்கு முன்பு மஞ்சு விரட்டைப் பார்த்ததில்லை. மகள் கண்ணம்மாவும் சிறிது நிலபுலன்களும்தான் அவருக்கு ஆஸ்தி. போன யுத்தம் ஆரம்பிக்கும் முன்னமேயே சிங்கப்பூரிலிருந்து சிறிதளவு சொத்துடன், தன் ஒரே மகள் கண்ணம்மாவுடன் கிளம்பி வந்தவர் அவர். ஊர் நாட்டாண்மைக்காரரிடம், "அந்த முரட்டு மாட்டை எவராலும் பிடித்து அடக்க முடியாது; நிச்சயம். அப்படி யாராவது பிடித்துவிட்டால் அப்படிப்பட்டவன் பெரும் வீரனாகத்தானிருக்க வேண்டும். அவனுக்கு அந்த மாட்டையே தந்து விடுகிறேன்" என்றார்.

தாரை, தப்பட்டைகள் முழங்க மாடுகள் தொழுவத்திலிருந்து அவிழ்ந்து விடப்பட்டன.

உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றிருந்த கந்தப்பன், அந்த மாட்டைப் பிடிக்கத் திட்டமிட்டான். அந்தக் காளை துள்ளிக் குதித்து சட்டென்று அடங்கும் சமயமாக அதன் வாலைப் போய் டக்கென்று பிடித்துக் கொண்டான். அது துள்ளிக் குதித்தது. சுற்றிச் சுற்றித் திரும்பியது. அதன் கண்களில் கோபக் கனல் பறந்தது. வேடிக்கை பார்க்க வந்த மக்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர். திடீரென அதன் முதுகின் மேல் தாவிக் குதித்து அதன் கொம்புகளை இறுகப் பிடித்துக் கொண்டு விட்டான். இதைக் காளை எதிர்பார்க்கவேயில்லை. சட்டென்று நின்றுவிட்டது. வாயில்லாவிடினும் அதற்கு அறிவு இல்லையா, என்ன?

பூமாலை மேல் பூமாலை விழுந்தது கந்தப்பனுக்கு. சிங்காரவேலு இதற்கு முன்பு கந்தப்பனைக் கண்டதில்லை. காளையை வெற்றி வீரன் போல் கை பிடித்து வணக்கம் செய்த கந்தப்பனை ஒரு தடவை ஏற

இறங்கப் பார்த்தார். அவன் ஆகிருதியும், வீரமும், குணமும், அழகும் அவர் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

வெற்றியை மணந்த கந்தப்பனுக்குப் பேஷான காளை கிடைத்தது மல்லாமல், சிங்காரவேலு முதலியாரின் மகளும் கிடைத்தாள் என்று கூற வேண்டுமா?

**நா**ள்கள் ஓடிச் சென்றன. கண்ணம்மாளும் கந்தப்பனும் நடத்தும் இலட்சிய வாழ்க்கை ஊர் மக்களையே பெரிதும் கொண்டாடும்படி செய்தது. சிங்காரவேலு முதலியார் திடீரென்று ஒருநாள் மாரடைப்பால் இறக்கவே, வீட்டின் பாரம் முழுவதும் கந்தப்பன் மேல் விழுந்தது.

எந்தத் தொழிலும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஒற்றை மாட்டு வண்டி செய்து, காளையைக் கட்டி 'ஜாம் ஜாம்' என்று ஓட்டுவதில்தான் அவன் மனம் ஈடுபட்டது. கந்தப்பனிடம் தோற்றுப் போன காளை எஜமானனுக்கு அடங்கி ஒடுங்கி தன் பிரியம் முழுவதையும் அவனிடம் வைத்திருந்தது. தனக்குத் துணையாக இருக்கும் கண்ணம்மாளும், வாழ வைக்கும் காளையும்தான் இரு கண்கள் என்று எல்லாரிடமும் பெருமையாகச் சொல்வான் கந்தப்பன்.

அந்த வட்டாரத்திலுள்ள அனைவருக்கும் சொல்லப் போனால் கொஞ்சம் காசுள்ளவருக்கெல்லாம் கந்தப்பன் காளை மீது கண். "கந்தா! காளை பேஷான காளை. அது இருக்கிற இடத்தில் இருக்கணும். அதற்குச் சரியானபடி தீனி போடணும். உனக்குக் கட்டுமா? பேசாமல் எனக்குக் கொடுத்து விடு" என்று எவ்வளவோ பேர் கேட்டார்கள். கந்தப்பனா விற்பான்?

"எனக்கு உண்ண உணவிருக்கிறதோ இல்லையோ... வீரனுக்கு வைக்கோல் - தவிடு - பருத்திக் கொட்டை வாங்காத நாளே கிடையாதே. அதற்கு மிஞ்சித்தான் எனக்கு" என்று கூறுவான் கந்தப்பன்.

கந்தப்பனின் வீடு ஓலைக் கூரையானாலும் பெரிய வீடுதான். வைக்கோல் போருக்குப் பக்கத்தில் வீரன் கட்டப்பட்டிருந்தது. திடீரென அன்று அடுப்புத் தீ, அருகிலிருந்த வைக்கோல் போரில் பிடித்துக் கொண்டது. இதைக் கவனியாது வேலை மும்முரத்திலிருந்தனர் கந்தப்பன் தம்பதி. சட்டெனக் கூரை முழுவது ஒரு கணத்தில் பரவிய தீயைக் கண்டு அலறிப் புடைத்து வெளியே ஓடிவந்தனர். கந்தப்பன் உடனே 'வீரனை' நினைத்துக் கொண்டான். 'சடசட'வென வெடித்து எரியும் அத்தீயோசையிலும், 'அம்மா'வென அலறும் அந்தக் காளையின் அபய ஒலி கந்தப்பனின் இதயத்தை உலுக்கியது.



கந்தப்பன் தீயினுள் பாய்ந்தான். 'கந்தப்பா... கந்தப்பா...' என்று ஏகக் கக்குரல். குடிசையின் முற்றத்தில் ஏகப்புகை. கண்ணே தெரியவில்லை. விநாடிக்கு விநாடி தீ அதிகமாகிக் கொண்டே வந்து விட்டது. கந்தப்பன் காளையின் இருப்பிடத்தைப் பிடித்து விட்டான். அப்பொழுதிருந்த வேகத்தில் பலமாகத் தும்பை இழுத்தறுத்து, காளையையும் இழுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டான்.

வெளியே வந்து சுருண்டு விழுந்தவன்தான். காளையின் கொம்புகள் எரிந்து கொண்டிருந்தன. பல இடங்கள் வெந்து விட்டன; அதனால் நிற்க முடியவில்லை; கீழே சாய்ந்து விட்டது.

இரு வண்டிகள் கந்தப்பனையும், காளையையும் சுமந்து, பக்கத்து ஊர் ஆஸ்பத்திரிக்குச் சென்றன. நினைவு வந்த பிறகு 'வீரா... வீரா' என்றே முனகிக் கொண்டிருந்தான் கந்தப்பன்.

தீக்காயங்கள் ஒருவிதமாகக் குணமாகிக் கந்தப்பன் பிழைத்துக் கொண்டான். வீரன் மட்டும் இறந்துவிட்டது.

பிழைத்து எழுந்த கந்தப்பன், செய்தி கேட்டுச் சித்தம் கலங்கி விட்டான். காளை கட்டப்பட்டிருக்கும் இடத்திற்குச் சென்று ஏதேதோ புலம்பினான்.

சில நாள்களில் காலை வேளையில் ஒற்றை மாட்டு வண்டியைத் தானே இழுத்துச் செல்லுவான். 'வீரா... ட்ர்... டிரியோ...' என்று சாட்டையால் தன்னையடித்துக் கொள்வான்.

**இ**ப்பொழுதெல்லாம் ஆற்றங்கரைப் பக்கத்திலே, உட்கார்ந்து கொண்டு கந்தப்பன் புதுப்பாட்டு ஒன்றைப் பாடுகிறான். அதுதான் அவன் இதயத்துக்கு இன்பத்தையளிக்கிறது போலும்.

'மாலையோ மங்குதடா!
மருக்கொழுந்தும் வாடிடுமே
சாலையோ தொலைவிலையே வீரா
சடுதியாய் எடு ஓட்டம்!'

● ● ● ●

# கதையும் கல்யாணமும்

அழகுப்பட்டிக் கிராமத்தின் வீதிகள் தெரிகின்றன. வெள்ளம் வந்தால் கொல்லைக் கதவைத் தட்டிக் குசலம் விசாரித்துவீட்டுச் செல்லும் காவிரியின் பேரலைகள் தெரிகின்றன.

மானத்தைக் காட்டுவதற்காகவே மனிதப் பிறவியை எடுத்தது போன்ற ஆவேசத்துடன் வீச்சரிவாளை வீசிக்கொண்டு அலையும் முறுக்கு மீசை மனிதர்கள். மகிழ்ச்சி, வேதனை, சோகம் போன்ற எந்த ஒன்றாக இருந்தாலும் 'கூவிக் கூப்பாடு போட்டு ஊரைக் கூட்டிவிடுகின்ற போலித்தனமற்ற உணர்வுகள். முரட்டுத்தனத்தின் உச்சங்கள், மனிதாபிமானத்தின் ஈரக் கசிவுகள், 'காதலிப்பதே பாவம்' என்று கருதி, அதைக் கத்தரிப்பதற்காக 'கத்தி'க் கவரப் பாயும் பெரிசுகள், இந்தக் கரும்பாறைக் கூட்டத்துள் ஊற்றாய்ச் சுரந்து, காதலால் பெருகி நிற்கும் சிறுசுகள். கள்ளிப்பாலாக இல்லாமல் கறந்த பாலாய் நுரையும், கதகதப்புமாக வெளிப்படும் உண்மைகள்...

இந்தக் கதையை எழுதியபோது விக்கிரமனுக்கு 21 வயது. பணவாசனை மனிதர்களின் நடுவே வாழ்ந்த இவருக்கு, இப்படி ஓர் அருமையான மண்வாசனைக் கதையை எழுத எப்படி முடிந்தது? நான் மலைக்கவில்லை. பூமிக்குள் ஊன்றும் விதைக்கு, 'மண்ணைப் பிளந்து கொண்டு வெளியே வா' என்று யார் பாடம் சொல்லித் தருகின்றார்கள்? அதற்கு அவசியமே இல்லை. அந்த விதைக்குள் அந்த வித்தையும் ஆண்டவனால் நிரப்பப்பட்டிருக்கிறது.

அதைப்போன்று அந்த வித்தையை, தன் எழுத்துக்குள் அடக்கிய விதை எழுத்தாளர் கலைமாமணி விக்கிரமன்.

நான் கிராமத்து மண்ணிலும், சேற்றிலும் புரண்டவன். என்னவர்களை எனக்குப் புரியும். இந்தக் கதையில் வரும் மாரிசாமியும், வடிவேலுவும், சாமி முதலியும், நல்லம்மாவும், முத்தையனும் ஏதோ ஒரு சமயத்தில் என்னோடு தொடர்பு கொண்டிருந்தவர்களாக உணர்ந்தேன்.

உபதேசிப்பது கதையன்று; உணர்த்துவதே கதை. இந்த உணர்த்துதல் ஒன்றாலேயே இது ஒரு சிறந்த கதையாகின்றது.

**- கலைமாமணி டாக்டர் வாசவன்**



1949

# 14. கதையும் கல்யாணமும்

கருநீலக் கடலைக் கிழித்துக் கொண்டு கப்பல், 'எஸ்.எஸ். ரமோலா' வந்து கொண்டிருந்தது. கரேன்களின் தாக்குதலும், கலகக்காரர்களின் தாக்குதலும் அதிகமாகி அன்றாட வாழ்க்கைக்குப் பெருத்த இடையூறு உண்டாக்கிவிட்ட சமயத்தில், இவ்வளவு காலமாக பர்மாவே பிறந்த நாடென்றிருந்த பல இந்தியக் குடும்பங்கள் பரபரப்புடன் கப்பலேறின. சொத்துச் சுதந்தரத்தை உதறித் தள்ளிவிட்டு விலை மதிக்க முடியாத உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி வந்தன.

அசைந்தாடும் கப்பலின் மேல் தட்டில் அங்கும் இங்குமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர் சிலர். வானத்தே பிறைச் சந்திரன் கம்பீரமாகக் காட்சியளித்தான். 'மினுக் மினுக்'கென்று மின்னும் நட்சத்திரங்களை அண்ணாந்து பார்த்த வண்ணமாகப் படுத்திருந்தான் வடிவேலு. அவனருகே முழங்காலைக் கட்டிக் கொண்டு எங்கோ யோசனையில் இருந்தான் மாரிசாமி. கடலலைகளைத் தொட்டுத் தவழ்ந்த மெல்லிய காற்று இவர்களையும் தொட்டுத் தழுவிச் சென்ற வண்ணம் அவர்களுடைய பழைய சிந்தனைகளைக் கிளறி விட்டுக் கொண்டிருந்தது.

''பதினைஞ்சு வருஷம் எவ்வளவோ சீக்கிரமா ஓடிப் போயிட்டாப்பல இருக்கு...'' என்றான் அண்ணாந்து பார்த்தவாறு வடிவேலு. அவர்களுடைய இதயத் திரையில் பழைய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறி விழுந்தன.

''ஏன் ஓடாது? பதினைஞ்சு வருஷமில்லை; நூறு வருஷம்கூட ஓடிடும். எல்லாம் இந்த மனசைப் பொறுத்துதான் இருக்கிறது. ஓர் இடம் பிடிச்சுப் போயிடிச்சுன்னா அந்த இடத்துக்கு வர்றதுக்கு முந்திய நிலையும், அதற்குப் பிந்திய நினைப்பும் கணக்கெடுக்கும்போது ரொம்ப நாளாகி இருந்தாலும் காணும்போது மிகக் குறைவாக இருப்பதாகவே தோன்றும்'' என்றான் மாரிசாமி. இப்பொழுது அவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''ஆமாம் மாரி.. நீ நல்லாப் பேசறே... நீ கூட... இந்தியாவிலேர்ந்து வந்தவன்தானா... நான் என்ன நெனைச்சிருந்தேன் தெரியுமா?

...மாவிலே பொறந்து பர்மாவிலேயே வளர்ந்த நீயே பர்மாவை விட்டு வரும்போது நான் மட்டும் வர்றதிலே ஒண்ணும் ஆச்சர்யமில்லைன்னு எண்ணினேன். நீயும் நம்ப பக்கத்திலேர்ந்து போனவன்தானா?'' என்றான் வடிவேலு.

''ஆமாம், ஆமாம்; எல்லாரும் இந்தியாவிலேர்ந்து போனவங்கதான். வயிற்றுப் பிழைப்புக்காகப் போனவங்க மாதிரி நான் இங்கே ஜீவனம் நடத்த வரவில்லை. கால வித்தியாசம் இங்கே கொண்டு தள்ளியது. அதனால் இந்த வாழ்க்கை வெறுத்துப் போகவில்லை. கல்யாணம் காட்சி - உற்றார் உறவினரெல்லாம் இல்லாமல் நிம்மதியாக இவ்வளவு காலத்தையும் தள்ளிவிட்டேன்...'' என்றான் மாரிசாமி. அவன் குரலில் அழுத்தம் நிறைந்திருந்தது.

வடிவேலு எழுந்து உட்கார்ந்து கொண்டான். ''ஓ... அப்படிச் சொல்லு... நம்ப வர்க்கம்தான் நீயும்... மனுஷனுக்கு ஒவ்வொரு சமயம் வருகிற கோபம் எவ்வளவு காரியங்களை மாற்றி விடுகிறது தெரியுமா? என் சிற்றப்பன் எனக்கு சொத்து இல்லைன்னார்... 'சொத்து வேண்டாம், நீயும் வேண்டாம்' என்று உதறித் தள்ளி, துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு கிளம்பியவன்தான் நான்'' என்றான் வடிவேலு. அவன் உணர்ச்சிப் பொங்கச் சம்பவங்களை ஒரு விநாடியில் கற்பனை செய்து கொண்டு கூறிவிட்டான்.

''ஹூம்...'' என்று பெருமூச்சு விட்டான் மாரிசாமி.

''சொத்து, சுதந்திரம் என்று போராடினாயப்பா நீ... எனக்கு அந்தக் கவலையெல்லாம் இல்லை... நான் என் சொந்தத் தகப்பனை விட்டு, ஊரை விட்டு, உற்றாரை விட்டு வந்த கதையே வேறு...'' என்றான். அவன் கண்களில் தளும்பிய கண்ணீர் அந்த மங்கிய நிலவொளியில் அசல் முகத்தைப் போன்று ஜ்வலித்தது. வடிவேலு இன்னும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''செந்துறையில் இறங்கி மூணு கல்லு ஆற்றங்கரையோரமாப் போனா அழகுப்பட்டி கிராமம் இருக்கிறது. அழகுப்பட்டி சாமி முதலின்னா அந்த வட்டாரங்களிலே தெரியாதவர்களே கிடையாது. நாங்கள் மூன்று பேர்தான். அவர் சொத்து அனைத்துக்கும் சுகமநுபவிக்கத் தயாராக இருந்தோம். என் அண்ணனும், என் தங்கையும், நானும் அந்தக் கிராமத்திலேயே மதிப்பாக வளர்ந்தோம்.

என் தங்கை மேலே எனக்கு உசிரு. 'நல்லம்மா நல்லம்மா' என்று அவளிடம் பிரியமாய் இருப்பேன்.



நல்லம்மா பேருக்கேற்ற குணசாலி. அழகுங்கூட. என் அண்ணனுக்கு இதெல்லாம் கவலையில்லை. அவருக்குக் கல்யாணம் ஆனவுடன் அவர், மாமனார் விட்டோடேயே போய் விட்டார்.

நானோ 'துடுக்குக்காரன்' என்றும் 'மாங்குடி முண்டன்' என்றும் பெயரெடுத்தேன். எதிலும் ஓர் அலட்சிய சுபாவமிருந்தது. இளமை வேகத்தில் உடலில் ஓடும் ரத்தம் துடுக்குத் தனத்தையும், தைரியத்தையும் வளர்த்தது. என்னுடைய முறுக்கிவிட்ட மீசையைப் பார்க்கும் என் அப்பா கூட, 'டேய் வஸ்தாது மாதிரி இதெல்லாம் என்னடா கேவலம்... சீ! அடக்க ஒடுக்கமாய் இரு' என்பார்.

வீட்டின் கொல்லைக் கதவைத் திறந்தால் கூப்பிடு தூரத்தில் காவிரி ஓடிக் கொண்டிருப்பது தெரியும். வெள்ளம் வரும் சமயம் வீட்டுக் கொல்லைக் கதவை மோதிச் செல்லும்.

அன்று அந்தி மறையும் சமயம். நல்லம்மா இடுப்பில் குடத்துடன் முத்தையனுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நல்லம்மாவின் துணிச்சலைப் பற்றி வியந்து சிறிது கோபம் வந்தாலும் உடனே தளர்ந்து விட்டது. நான் கண்டு கொள்வதாகவே இல்லை. நல்லம்மாவின் மனசு எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

இந்தச் சமயத்தில்தான் பென்ஷன் வாங்கிக் கொண்டு, பாஸ்கர முதலியாரின் குடும்பம் பட்டணத்திலிருந்து வந்து சேர்ந்தது. அந்த விடுமுறையின்போது அவரது அக்கா மகன் சுந்தரமும் வந்திருந்தான். பட்டணத்துப் பிள்ளை; நாசூக்கான உடை; களையான முகம்; இருந்தாலும் ஏறிப் போயிருந்த அந்த மண்டைக் கர்வம். நான் ஒரு நிமிஷத்தில் அவனைப் பற்றித் திட்டமாக அறிய முடிவு செய்துவிட்டது.

பாஸ்கர முதலியாரும், அப்பாவும் திண்ணையிலே நேரம் போவது தெரியாம பேசிக் கொண்டிருப்பார்கள். நாலடியார் முதல் நாங்குனேரி பெருமாள் கோயில் ஸ்தல புராணம் வரை எத்தனையோ பேசித் தள்ளுவார்கள். இப்படி வளர்ந்த உறவுதான் நல்லம்மாவுக்குச் சுந்தரத்தைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற திடமான முடிவுக்குக் கொண்டு வந்தது அப்பாவை. லட்சணமான பையன் என்று முணுமுணுத்தது அப்பாவின் வாய்.

''இப்போ எத்தனாவது படிக்கிறான் பையன்?'' என்றார் அப்பா.

''இப்போ பத்தாவது படிக்கிறான். படிச்சு முடிச்சு மேலே பி.ஏ. வரை படிக்க வெச்சிடுவேன். எனக்கென்ன குழந்தையா குட்டியா? எனக்கு மட்டும் பொண்ணு இருந்தால் நம்ப சுந்தரத்தை விட்டா வேறு

பையனுக்குக் கட்டிக் கொடுப்பேன்? என் பிள்ளை மாதிரி இப்போ என் சொத்தெல்லாம் இவனுக்குத்தானே?'' என்று ஒரு வார்த்தைக்கு ஒன்பது வார்த்தைகள் பேசினார். அத்துடன் அவரது வீர பிரதாபங்களைப் பற்றிய பேச்சும் நடந்தது.

சுந்தரத்துக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கவேயில்லை. என் தங்கையின் உள்ளம் எனக்குத் தெரியாதா? அவள் விரும்பும் முத்தையனையும் எனக்குத் தெரியாதா? தங்கமான பிள்ளை. அவனுக்கு என்ன குறைச்சல்? இந்த இரண்டெழுத்து இங்கிலீஷ் தெரயாது. அவ்வளவுதான். இந்தத் தறுதலைப் பிள்ளை மாதிரி சிகரெட் குடிக்கத் தெரியாது. அவனும்தான் கிராப் வச்சிண்டிருந்தான். மெல்லிய அரும்பு மீசையும், இரண்டு பாறைகள் வைத்தது போன்ற அகன்று உருண்டு திரண்ட மார்பும், அந்த மார்பை ஒட்டிப் போடப்பட்ட மெல்லிய மல்ஜிப்பாவும் என் தங்கையின் 'கணவன்' மேல் எனக்குள்ள மதிப்பை அதிகப்படுத்தின.

வேண்டாத புருஷனிடம் வாழ்க்கைப்பட்டு வேதனையோடு வாழ்நாளைக்கழிப்பதைவிட, பல வேதனைக்குட்பட்டு விரும்பியவனை மணந்து சுகமாகக் காலங்கழிக்கக்கூடாதா? என் கண்ணெதிரே என் செல்லத் தங்கையை அந்தப் பட்டணத்தானுக்கு - அந்தக் கிறுக்கனுக்குக் கொடுக்க விடுவேனா?

கண்ணீரும் கம்பலையுமாக நல்லம்மா மனம்விட்டு, ''அண்ணா! நீயாவது இதற்கு ஒரு வழி செய்யக் கூடாதா?'' என்று கேட்டு என் ஆசைத் தீயில் இன்னும் ஆர்வ எண்ணெயை வார்த்தபிறகு என் மனம் சும்மாயிருக்குமா? அப்பாவிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். பலனில்லை. கல்யாணப் பந்தற்கால் நாட்டப்பட்டது. நானும் ஓடியாடி எல்லா வேலைகளும் செய்தேன். முத்தையன் அந்த ஊரிலேயே இல்லை. மதுரைக்குப் போய் விட்டான்.

மாப்பிள்ளை அழைக்கும் நாள். இந்தப் பட்டணத்தான் செஞ்சது இந்தப் புது வழக்கம். அன்று காலையில் அப்பா பிரமாதத் திட்டமிட்டிருந் தார். சாமி ஊர்வலத்துக்கு வருவது போன்ற கியாஸ் விளக்குகள். நானோ பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டேன். 'இந்தக் கல்யாணத்தை நடக்கவிடாமல் செய்யாவிடில் நான் மாரிசாமி இல்லை' என்று சபதமிட்டேன். இந்தப் பட்டணத்துப் பிள்ளையின் கர்வத்தை ஒடுக்கி அனுப்ப வேண்டும் என்ற வைரித்தனம் என் மனத்தில் திடமாக வைரம் பாய்ந்து விட்டது. மேளக்காரன் கன ஜோராக வாசித்துக் கொண்டு வந்தான்.



ஊரே திரண்டு கூடியிருந்தது. என் ஆட்களும் சமயத்தை எதிர் பார்த்திருந்தனர். ஒருவரையும் அடையாளம் தெரியாதபடி செய்திருந்தேன். ஊர்வலத்தைக் கலைத்து மாப்பிள்ளையைத் தூக்கிக் கொண்டு போய் விடுவது; இல்லாவிடில் அவனுக்கு அந்த ரோட்டுத் தாரால் நன்றாக மீசை, தாடி போட்டுவிடுவது என்று திட்டமிட்டேன்.

கோயிலிருந்து கிளம்பி மெல் ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தது சாரெட்டு. இந்த அழகில் சுந்தரம் கார் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தானாம்; துடைப்பக்கட்டை!

அங்கேயோ ஒவ்வொரு விநாடியும் தன் தலையெழுத்தை எண்ணி விம்மிக் கொண்டிருந்தாள் தங்கை நல்லம்மாள்.

ஊர்வலம் குறிப்பிட்ட இருட்டான திருப்பத்தில் திரும்பும்போது குபீரென நம் கறுப்பு முகமூடிக்காரர்கள் பாய்ந்தனர். ஒரே குழப்பம். அதிலே நான் செய்த பெரிய தவறு ஒன்று. மாப்பிள்ளைப் பையனை நானே போய் அவன் மூக்கைப் பிடித்து ஆட்டி, 'சிகரெட் பிடிக்கும் நாயே இந்தா சுருட்டு' என்று புகையிலைச் சுருளைத் திணித்தேன். இதனால் ஊர்வலத்தில் கலாட்டா செய்தது நானென்று தெரிந்துவிட்டது.

இந்தப் பெருத்த குழப்பம் பெரும் பரபரப்பை மூட்டி விட்டது. சுந்தரம் நிச்சயம் இனி இந்த ஊரில் இருக்க முடியாது என்று சொல்லி விட்டானாம். பாஸ்கர முதலியார் குழப்பம் செய்தவன் நான் என்றறிந்ததும் என் பெயரில் உடனே போலீஸில் புகார் கொடுத்து விட்டார். நான் இரவு அங்கு தங்கியிருந்தால்தானே!

காலையில் எழுந்து ஊர்ப்பக்கமாக வந்து கொண்டிருந்தேன். என் வீட்டு வாசலில் போலீஸ் கூட்டம். என்னைக் கைது செய்து அழைத்துப் போனார்கள். ஆ! அந்தப் பாஸ்கர முதலியார் உறுமிய உறுமல்!

கோர்ட்டிலே - அன்றே - மாஜிஸ்டிரேட் முன்பு கம்பீரமாகப் பேசினேன் பாரு! இன்னமும் நன்றாக நினைவில் இருக்கிறது அது. 'பிடிக்காதவனுக்குப் பெண்ணைக் கல்யாணம் கட்டிக் கொடுக்கும் அநியாயத்தைத் தீர்க்க அப்படிச் செய்தேன்' என்றேன்.

25 ரூபாய் அபராதம் போடப்பட்டது. பூ! 25 ரூபாயில்லை; 2500 ரூபாய் ஆனாலும் செலுத்த மாட்டேனா? சபதமல்லவா நிறைவேறியது!

வீட்டுக்குள் நுழைந்தேன். தகப்பனார் 'ஜிவுஜிவு'க்கும் முகத்துடன் காத்துக் கொண்டிருந்தார். என் அண்ணன் உட்கார்ந்திருந்தான். தங்கை நல்லம்மா நின்று கொண்டிருந்தாள்.

''ஏ... கோடாரிக் காம்பே... என்னதுக்கடா என் வயிற்றில் பிறந்தே?'' என்று என்னென்னவோ கர்ஜித்தார்.

நான் இன்னும் உரத்த குரலில் பேசினேன். 'அப்பா... என்னை கோடாரிக் காம்பென்றோ, வேறு என்ன வேணுமோ பேசுங்கள். என் அருமைத் தங்கையை ஆபத்திலிருந்து தப்ப வைத்தேன். அவள் வாழ்நாள் முழுதும் படப்போகும் துன்பத்திலிருந்து தப்ப வைத்தேன். அவள் விரும்பிய முத்தையனை உடனே மணக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்றேன். உடனே, 'முத்தையன் மதுரையில் இருக்கிறான்... தந்தி அடியுங்கள்' என்றும் கூறினேன்.

'பொய்... பொய்... எனக்கு ஒருத்தர் மேலும் பிரியம் இல்லை' என்று விம்மினாள் நல்லம்மாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. தலை சுழன்றது. அதே சமயம் என் அண்ணன் குபீரென என்மீது பாய்ந்து என் முகத்திலும், முதுகிலும் 'பட்பட்' என்று தாக்கினான். என் கிழத் தகப்பனாரும், 'சண்டாளன் கௌரவத்தைக் குலைத்த கழுதை' என்று காலால் எட்டி எட்டி உதைத்தார்.

'வெடுக்'கென்று எழுந்தேன். நான் அருமையாகக் கருதிய என் தங்கையை நோக்கினேன். அவள் தலை குனிந்திருந்தாள்.

'அடி... கள்ளி! இப்படியா மாறினாய்? உன் நன்மைக்காக எப்பேர்ப் பட்ட காரியம் செய்தேன். நீ வாழ்நாள் முழுதும் சுகமாக இருக்க எனக்கு வரும் ஆபத்தையும் பொருட்படுத்தவில்லையே... இப்பொழுது நீ யார் மேலும் அன்பு இல்லை என்கிறாயே' எனப் படபடப்புடன் பேசிக் கொண்டே போனேன்.

என் அண்ணன் மறுபடியும் கோபக் குரலில், 'போடா கழுதை! பெரிய சீர்திருத்தக்காரன்! ஆபத்தைக் காத்தானாம். வீட்டை விட்டு ஓடிப் போ கழுதை. ஊர் காரி உமிழ்கிறது. இதனால் ஒரு பெண்ணின் வாழ்க்கையையே கெடுத்தாய்... ஜாக்கிரதை!' என்று கழுத்தைப் பிடித்து ஒரு நெம்பு நெம்பினார்.

அப்போது வைத்த வைராக்கியம்தான்; ஊரிலிருந்து சென்னை வந்தேன்.

ஒரு லுங்கிக் கடையில் சிறு வேலை கிடைத்தது. மறு வாரமே பர்மா போகும் பாக்கியம் கிடைத்தது. பர்மா சென்று சேர்ந்தேன். அப்பொழுது எனக்கிருந்த நிலையை இப்பொழுது நினைக்கும்போது உடல் சிலிர்க்கிறது. ஊரை வெறுத்தேன்; உற்றாரை வெறுத்தேன்;



எல்லாரையுமே வெறுத்து விடக்கூடிய வெறுப்பு உணர்ச்சி ஒரு கணப் பொழுதில் அந்தக் களங்கமற்ற என் உள்ளத்தில் - யாருக்கும் தீங்கு நினையா என் உள்ளத்தில் - வந்து புகுந்துவிட்டது.

பர்மா வாழ்க்கை மிகவும் நன்றாகத்தானிருந்தது. ஒரு கடிதம் கூட நான் ஊராருக்கும், உற்றாருக்கும் போடவில்லை. இந்த யுத்தம் வந்ததே, அப்பொழுதுகூட அசைந்தேனா நான்? பர்மாவிலேயே இடம் மாறிக் கொண்டிருந்தேனே தவிர, பயந்து இந்தியா திரும்பவில்லை.

ஆனாலும் காலம் மனிதனை ஒரே நிலையில் இருக்கச் செய்வதில்லை. கடந்த ஆறு மாதங்களாகவே, என் மனதே சரியாயில்லை என்று சொல்லியிருந்தேனே! ஏன் என்று எனக்கே புரியவில்லை.

என்னதான் நல்லம்மா தனக்கு யார் மேலும் பிரியமில்லை என்று சொல்லிவிட்டாலும் அப்பாவும் அண்ணனும் என்னை அடித்து விரட்டி விட்டாலும் பதினோரு வருஷமாய்ப் பிரிந்த பாசம் என்னை இப்பொழுது தான் அழுத்தத் தொடங்கியது.

அப்பா இருக்கிறாரோ, போயிட்டாரோ? பழைய சம்பவங்களை நினைக்கும்போதே கதை மாதிரிதான் இருக்கு. நல்லம்மா என்ன ஆனாளோ... என நினைக்கும்போது அவள் கல்யாணத்துக்காக நான் பாடுபட்டது வெறும் வீண்தானா என்ற எண்ணம் இப்பொழுது தோன்றி வேதனையை வளர்த்து என் நினைவை அழகுப்பட்டிக்கு அழைத்துச் செல்கிறது. இன்னும் நான்கு நாள்தான்...'' என்று கூறி முடித்தான் மாரிசாமி.

கண்கலங்கியிருந்த வடிவேலுவின் முகம் இப்பொழுது மாறி யிருந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

''மாரியண்ணே! கதைன்னு சொல்லி நெஞ்சு உருக்கற சம்பவத்தைச் சொன்னீங்க. இப்போ இந்த அலை கடலைப் போல உங்க நெஞ்சு தவிக்கிறது எனக்குத் தெரியும். நீங்க இந்தச் சம்பவத்தைச் சொன்ன பிறகு நான் பிற்பாடு சில சொல்லி முடிச்சுடறேன் அண்ணே!

நீங்க பர்மாவுக்கு கண்காணாமே போயிட்டீங்க. ஒரு பொருள் இல்லாது இருக்கும்பொழுதுதான் அதைப் பற்றிய நினைவு வருகிறது. நீங்க போனப்புறம் உங்க வீட்டிலே எல்லாரும் உங்களையே நினைக்கத் தொடங்கினாங்க.

பாஸ்கர முதலியாரே ஒரு நாளைக்கு உங்கள் அப்பாவிடம் வந்தார். நல்லம்மாவை எப்படியாவது முத்தையனுக்கே கல்யாணம் செய்து

வைத்து விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்தப் பையன் சுந்தரம் ஏற்கெனவே நல்லம்மாவைக் கட்டிக்க மாட்டேன் என்று பிடிவாதம பிடித்தானாம். இவர்களாகவே அவனைப் பலவந்தப் படுத்தி இருக்கிறார்கள்.

நல்லம்மாவுக்கு முத்தையன் பேரில் ஆசையென்பதை ஒரு நாளும் மறைக்க முடியாது. அது உங்கள் தகப்பனாருக்கும் தெரியும். அன்று கல்யாண கலாட்டா ஆனவுடன் அவளை இவர்கள் பயமுறுத்தி முத்தையன் மீது ஆசையென்பதை வெளியில் தெரியப்படுத்தினால் வெட்டிப் போட்டுடுவேன் என்றார்களாம்... அதனால்தான் 'எனக்கு யார் மீதும் ஆசையில்லை' என்று அவள் கூறினாளாம். அப்பொழுது அவள் இதயம் வெடித்துவிடும் போலிருந்ததாம்.

முத்தையன் - நல்லம்மா திருமணம் மிகவும் ஜோராக நடந்தது. எல்லாரும் உன்னைத்தான் நினைத்துக் கொண்டார்கள். உன் துணிவை அப்பொழுது போற்றிப் பயன் என்ன?

கல்யாணமாகி மூன்று வருஷம் கழிச்சு உங்கப்பா தவறிட்டார். முத்தையனும் மதுரைக்குப் போய்ச் சேர்ந்தான். இரண்டு குழந்தைகள்.

நீங்க கதை சொல்ல ஆரம்பிச்சபோது முதலில் இது ஏதாவது பொழுது போக்கு கதையாயிருக்கும்னு நினைச்சேன். ஆனால், எட்டு வருஷங்களுக்கு முன் முத்தையன் சொன்னதும் இதுவும் ஒத்துப் போன போது எனக்கே ஒரு படபடப்பு உண்டாச்சு.

முத்தையன் வீட்டுக்கு எதிர்வீட்டிலிருக்கும்போது, நாங்கள் ரொம்பவும் பழகிப் போனோம். உங்க தங்கச்சியையும் நன்றாகத் தெரியும்" என்றான் வடிவேலு.

அவன் முகத்தில் புதுத் தெளிவு தோன்றியிருந்தது.

"ஆ... நல்லம்மாவுக்கும் முத்தையனுக்கும் கல்யாணமாகி விட்டதா?" என ஆச்சர்யத்தால் கூவினான் மாரிசாமி. அவன் முகத்தில் அவனுடைய இலட்சிய வெற்றியின் பிரதிபலிப்பு ஒரு கணம் தோன்றி மறைந்தது.

'எஸ்.எஸ். ரமோலா' கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருந்தது.

● ● ● ●



# இரு கடிதங்கள்

கதையில் இடம் பெறும் இரு முக்கியக் கடிதங்களின் வழியே, கதையின் காலம் 1949ஆம் ஆண்டு என அறிய முடிகிறது. இக்கதை எழுதப்பட்டு சற்றொப்ப 60 ஆண்டுகள் கடந்து விட்டன.

'சிந்து நதியின் மிசை நிலவினிலே' என்னும் காதலும் இயற்கையும் இயைந்த, பாரதியின் இசைப்பாடலைப் பாடும் ஓர் அழகிய இளம் பெண்ணுடன் வெண்ணிலா இரவு, ஏரி ஒன்றில் ஒருவன் தோணியொன்றில் மிதந்துச் செல்கிறான். ஜாம்ஷெட்பூருக்கு அருகிலிருக்கும் அந்த திம்னாநாலா ஏரியில் 62 ஆண்டுகளுக்குப் பின் அதை வாசிக்கும் கணங்களில் நானும் மிதக்கிறேன். அப்படியென்றால் இக்கதையை அன்று வாசித்த வாசகர்கள், கற்பனை ஏரியில் எப்படி மிதந்திருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள்...

வேலைத் தேடி அலையும் தமிழக கிராமத்து ஓர் இளைஞனுக்கு, ஜாம்ஷெட்பூரில் நிறுவனம் ஒன்றில் வேலை கிடைக்கிறது. புதிய வேலை புதிய வாழ்க்கை அனுபவங்களைத் தருகிறது. அன்பான மேலதிகாரி. அவருக்கு அழகான ஒரு பெண். அவர், அந்த இளைஞனைத் தனக்கு மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்புகிறார். அவர் மகளும், அவனைத் தன் கணவனாகவே கற்பனை செய்து பழகுகிறாள். ஆனால், அவனின் மனநிலை வேறு மாதிரி இருக்கிறது. இதுதான் கதையின் மையம்.

அறம், சிரம் தாழ்ந்து எங்கெங்கோ பதுங்கிக் கிடக்க, நல்லன அல்லாதனவெல்லாம் எங்கும் நிறைந்திருக்கும் ஓர் அவலம் நிறைந்த சமூகச் சூழலில் நாம் இன்று வாழ்கிறோம். ஆனால், அன்றைய உறவுகளும், நட்பும் எத்தனை தூய்மையாய் இருந்திருக்கின்றன! நல்லவர்களுக்கிடையே நிகழும் அன்பெனும் மகாயுத்தம் எவ்வளவு மகத்தானது! வாசித்துப் பாருங்கள்; வசீகரிக்கப்படுவீர்கள், இலக்கிய பீஷ்மர் விக்கிரமனின் சீரிளமைத் திறம் மிகுந்த எழுத்துப் படையலில்!

- எஸ். ராஜகுமாரன்

# 15. இரு கடிதங்கள்

'சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்'

என்ற பாட்டைக் குரலெடுத்துக் கம்பீரமாகப் பாடினாள் வஸுமதி. தோணி மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. பாட்டுக்கு ஏற்றாற் போலவோ என்னவோ முழு நிலவு. சந்திரனுடைய வட்ட வடிவமான உருவம் அந்த ஏரியின் நீரில் குலுங்கி அசையும்போது, கருநீல ஏரியின் மற்றொரு சந்திரன் தான் உதித்து விட்டானோ என்று எண்ணும்படி இருந்தது. வஸுமதியின் அந்தப் பாட்டு, நிசப்தமாக இருந்த அந்தப் பகுதியில் கம்பீரமாக எதிரொலித்துக் கண்ணுக்கெட்டிய தொலைவில் தெரிந்த கரை மீது மோதி கரையின் ஓரம் நின்று கொண்டிருக்கும் பச்சை மரங்களின் மீது மோதிப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

''வஸு! நீ பாடும் பாட்டில் இரண்டைத் தவிர மீதியெல்லாம் சரி'' என்றான் கல்யாணராமன். அவன் கைகள் துடுப்பைத் துழாவிக் கொண்டிருந்தன. அந்த ஏரிக்கு வந்து, படகோட்டி இன்பப்பொழுது போக்க வேண்டும் என இருவருமிட்ட திட்டம் அன்று நிறைவேறியதில் நிறைந்தது மனது.

''என்ன இரண்டு சரியில்லையாம்?'' என்றாள் வஸுமதி. அவள் கடைக்கண் அவன் பக்கம் திரும்பியது. ஆவல் நிறைந்த அவள் உள்ளத்தின் சாயை அந்தச் சிவப்புக் கன்னங்களிலே பிரதிபலித்தது.

'' 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' என்பதை 'திம்னாநாலா ஏரியின் மிசை நிலவினிலே' என்றும் 'சேர நன்னாட்டிளம் பெண்களுடனே' என்பதற்கு 'வஸுமதி அழகு நல்லாளுடனே' எனவும் மாற்றி அமைத்துப் பாடினால்...'' என்றான் மிருதுவான குரலில் கல்யாணராமன்.

வஸுமதி 'கலீர்' என்று சிரித்துவிட்டாள். சிரிப்புக்கு எதிரொலியாக அவளது வளையல்கள் குலுங்கின. மறுபடியும் ஒருமுறை அவள் கல்யாணராமனைத் திரும்பிப் பார்த்தாள்.



கல்யாணராமனும், வஸுமதியும் திம்னாநாலா ஏரிக்குப் போக வேண்டும் என்று விரும்பிய உடனேயே... இராமசாமி, 'அவர்கள் விரும்பிய இடத்திற்கு அழைத்துச் செல்' என்று டிரைவருக்கு உத்தரவிட்டு விட்டார்.

ஜாம்ஷெட்பூரிலிருந்து எட்டு மைல் தொலைவிலிருந்தது அந்த ஏரி. வளைந்து வளைந்துச் செல்லும் சாலையின் வழியாகக் கார் செல்லும்போது இயற்கைக் காட்சியைக் கல்யாணராமன் ரசிக்க, வஸுமதியின் இளம் உள்ளம் என்னென்னவோ இன்பக் கனவுகள் கண்டன. மலையின் மீது செல்லும் சாலையில் கார் திரும்புவதால் அவன் ஸ்பரிசம் சிறிது அவள் மீது படும்போது உண்டாகும் அந்தக் 'கிளுகிளுப்பு' இன்பக் கனவுக்குச் சுருதி சேர்ப்பது போலிருந்தது.

கல்யாணராமன், தமிழ்நாட்டிலிருந்து வேலை கிடைக்காமல் வடக்கே சென்ற வாலிபர்களில் ஒருவன். சென்னைக்கு ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஜாம்ஷெட்பூரில் தொழிற்சாலையில் வேலை ஒன்றுக்கு வாய்ப்பிருக்கிறது என்பதை அறிந்தவுடன், அவனும் விண்ணப்பம் போட்டு வைத்தான். நேர்காணல் ஒன்றுக்கும் அழைப்பு வந்தது.

''எப்படியோ அம்மா! நம்ம காசு என்று நாலு சம்பாதிச்சாத்தான் கௌரவமாக வாழலாம்... உன் கடைசிக் காலத்தில் அதைக் கூட நான் செய்யவில்லையென்றால், என்னைப் படிக்க வைக்க நீ பட்ட துன்பத்துக்குப் பிரதிபயனாக நான் என்ன மாற்றுத் தொண்டு செய்ததாகும்? என் பள்ளிச்சம்பளத்துக்கு நீ பலர் வீட்டுப் படிக்கட்டுகளை மிதித்து ஏறியிறங்கிப் பட்ட இடருக்கு இது கூடச் செய்யாவிடில், மகன் செய்ய வேண்டிய கடமையனின்று தவறினேன் என்று உலகம் பழிக்காதா?'' என்று உணர்ச்சியுடன் பேசிவிட்டு நன்னிலம் கிராமத்தை விட்டுப் புறப்பட்டான்.

எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும், மகன் தூர தேசத்துக்குப் போயாவது சம்பாதித்தாக வேண்டுமோ என்றுதான் அந்தப் பெற்ற மனத்தில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. 'அவர் இருந்திருந்தால், இப்படியா நேரும்? என் ஒரே செல்வ மகனைச் சென்னையில் மேலே படிக்க வைத்திருக்க மாட்டாரா?' என்று அவள் எண்ணும்போது, ஏக்கத்தால் குழி விழுந்த அவள் கண்களிலிருந்து நீர்த் துளிகள் தளும்பி, வற்றியொட்டிப் போயிருக்கும் கன்னத்திலே வடியும்.

ஒரே ஒரு காலியான இடத்துக்கு நாற்பது பேருக்கு மேல் நேர் காணலுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவரவர்களுக்குப் பெரும் சிபாரிசு. திக்குத் தெரியாத காட்டில் அகப்பட்டதைப் போல் திருதிருவென விழிக்கும்படியான இடத்தில் கல்யாணராமனுக்கு, அவனுடைய நெஞ்சுத் துணிவுதான் துணை; சிபாரிசு.

வாரி விடப்பட்ட அழகான தலையையும், பரந்த விசாலமான நெற்றியையும் அந்த நெற்றியில் சுருண்டு விழும் சிறு தலைக்கேசத்தையும், அமைதியான முகத்தையும் 'ஆபீஸர்' இராமசாமி கவனித்தார். சட்டென்று அவருக்கு என்ன தோன்றியதோ என்னவோ, அவருடைய உள்ளத்திலே கல்யாணராமனின் உருவம் பதிந்து விட்டது. நாற்பது பேரில் கல்யாணராமனை மட்டும் தேர்ந்தெடுத்தது எல்லாருக்கும் ஆச்சர்யத்தை அளித்தது. 'இவன் அதிகத் திறமை வாய்ந்தவனாக இருக்க வேண்டும்' என்று சிலர் பேசிக் கொண்டனர். இன்னும் சிலர், 'அவர் ஊர்க்காரன் போலிருக்கிறது' என்று காதில் படாமல் வம்பளத்தனர்.

எப்படியோ கல்யாணராமனுக்கே, தான் தேர்ந்தெடுக்கப்பட்டது வியப்பாகவும், நடக்க முடியாதது நடந்து விட்டதாகவுமிருந்தது. அன்றைக்கு அவர் ஆசீர்வாதத்தால் தான் எல்லாம் நடக்கிற என்றும், ஆறு மாதத்தில் 'நிரந்தரம்' ஆகிவிடும் என்றும், பிறகு தாயை இங்கேயே வரவழைத்துக் கொள்வதாயும் அமைதி நிறைந்த ஜாம்ஷெட்பூரில் அவர்கள் கொடுக்கும் 'குவார்டர்ஸ்'ஸில் ஜம்மென்கு குடித்தனம் நடத்தலாமென்றும், தன் கஷ்டம் விடிந்தது என்றும் உருக்கமாகக் கடிதம் எழுதினான். அந்தக் கடிதம் அவன் தாயாரின் உள்ளத்து மகிழ்ச்சியைக் கொழுந்து விட்டு நெஞ்சு வரை எழச் செய்தது.

'கண்ட இடத்தில் சாப்பிடாதே... வேளா வேளைக்குக் குளிச்சுச் சாப்பிடு... நான் வரும் வரை உடம்பைப் பார்த்துக்கோ' என்று எதிர் வீட்டுப் பெண்ணை விட்டுக் கடிதம் எழுதச் சொல்லி, மூன்று முறை அதைப் படிக்கச் சொல்லிக் கேட்டு, தபாலில் சேர்ப்பாள்.

கல்யாணராமனிடம் இராமசாமிக்கு தனிவித அன்பு ஏற்பட்டது. ஆயிரம் ரூபாய் வாங்கும் ஆபீஸராயினும் அவருக்கு எளிய இதயம் இருந்ததால், சுலபமாகக் கவர்ச்சி நிறைந்த அந்த இளம் முகத்திலே லயித்துப் போனார். பிரியமாக வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடுவார். பெரும் ஆபீஸரின் தயவு கிடைப்பதென்றால்...

"கல்யாணம்! இன்று நான் வர நாழியாகும். நீயே இந்தப் 'பைலை' வீட்டிலே போய் வைத்துவிட்டுப் போ. போகும்போது வஸுமதியிடம் இந்தப் பத்திரிகையைக் கொடு... காரிலேயே போ" என்பார் சில நாள். கல்யாணராமன் தட்ட மாட்டான். இந்த மாதிரியான வாய்ப்பு கிடைக்க வேண்டுமே!

"நீ மட்டும் தனியாகவா இருக்கிறாய், வஸு? இந்த இடத்தில் எப்படிப் பொழுது போகிறது?" என்று அவன் தான் பேச்சைத் தொடங்கினான். பதிலை அறிய ஆவலில்லாமல், அவன் கண்கள் அந்த



அறையில் சுற்று முற்றும் சுழன்றன. மணியால் போடப்பட்ட படம், நூலால் போடப்பட்ட படம். இவை ஒவ்வொன்றின் அடியிலும் 'வஸுமதி' என்று எழுதப்பட்டிருப்பதை ஒருமுறைக்கு இருமுறை படித்தான்.

முதல் சந்திப்பிலேயே வஸுவின் உள்ளம் சட்டென்று திடுக்குற்று, ஏதோ மாறுதலைத் தனக்குள்ளே உண்டாக்கிக் கொண்டது. பதினேழு வருஷ காலமாக அவள் உள்ளத்திலே ஓடிவந்த அதே ரத்தத்தில் இன்று ஏதோ புதிய ஜீவன் ஏற்பட்டுவிட்டது போல் தோன்றியது.

கல்யாணராமனுக்கு ஆபீஸ் நேரம்போக, இராமசாமியின் வீட்டுக்குச் சென்று பேசிக் கொண்டிருப்பதுதான் வேலை. பாரதியாரின் கவிதையில் இருந்து ஏதாவது அழகாகப் பாடி விளக்குவான். இயற்கையாக அமைந்த இனிமையான குரலில் பாரதியாரின் பாடலைப் பாடும்போது, இரண்டு உள்ளங்களிலும் விதவிதமான உணர்ச்சிகள் தோன்றும். இசை இன்பத்திலே ஆழ்ந்து, கல்யாணராமனின் திறமையிலும், அவன் மீதுள்ள அன்பிலும் இராமசாமி தனக்குள்ள நம்பிக்கையை மேலும் அதிகம் வளர்த்துக் கொள்வார். பாரதியின் பாட்டிலுள்ள இன்பத்தை விட, அவன் பாடும்போது அவன் உருவத்தில் தன் மனத்தைப் பறிகொடுத்து, அதை அடியமைப்பாகக் கொண்டு இன்பக் கோட்டை கட்டி, அதனால் உண்டாகும் இன்பத்தைப் பெரிதும் ரசிப்பாள் வஸுமதி.

கல்யாணராமனுடைய உள்ளத்திலே நிமிஷத்துக்கு நிமிஷம் ஆவல் பொங்கும். தன் மீது மேலதிகாரிக்கு ஏற்பட்டுவிட்ட பிரியத்தையும், பேரபிமானத்தையும் அதனால் தன் வேலை உயர்வு பெற்று, தான் நன்றாக வாழப் போவதற்கு இது அஸ்திவாரம் என்பதைப் பற்றியும் நினைப்பான். 'இவர்தான் வாழ்வின் தந்தை' என்ற எண்ணம் தோன்றும். அவனுடல் புல்லரிக்கும்.

வஸுமதியும் கல்யாணராமனும் பழகுவதை அவர் தடை செய்ய வில்லை. அவருடைய அந்தரங்கமான விருப்பமும் அதுவே. தன் செல்வ மகளுக்கு ஒரு குறைவும் வராதவாறு இதுவரை கண்ணும் கருத்துமாக இருந்த அவர் திட்டம் தீமையைத் தேடுமா?

அலுவலகத்திலேயே எல்லாருக்கும் பொறாமைதான்; மேலிடத்து அபிமானம் பெற்று விட்டான் இவன் என்னும் வயிற்றெரிச்சல் உள்ளவர்களுக்கு, திம்னாநாலா ஏரிக்கு இருவரும் செல்ல இராமசாமியே கார் அளித்தார் என்பது தெரிய வந்தால்...

"வஸு... நாளை கல்யாணமாகி நீ கணவருடன் வரும்போது, இதை விடப் பூரண நிலவை இன்னும் நன்றாக அனுபவிப்பாய்" என்றான் கல்யாண ராமன். அவன் என்ன நினைத்துக் கூறினானோ?

வஸுமதிக்கு இந்த வார்த்தை வேதனை கலந்த இன்பமாகப்பட்டது. 'நாளை கல்யாணமாகி நீ கணவருடன் வரும்போது என்கிறாரே... இது என்ன வார்த்தை? இவருடனே இதே நிலையில் வரப் போகத் திட்டமிடும் எனக்கு...' என்றெண்ணும்போது, சிறு வியர்வைத் துளிகள் அரும்பின. மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

''வஸு! என்ன மௌனம்? இதோ பார்! நடு ஏரிக்கு வந்து விட்டோம். மலையின் உச்சியில் தெரியும் அந்த மாளிகைக்கு அடிக்கப்பட்டிருக்கும் கோபி நிற வர்ணத்தின் மீது வெள்ளி நிறப் பூர்ணிமையின் ஒளிக்கதிர்கள் விழுந்து...'' என்று கல்யாணம் அவள் முகத்தை, படகு புறப்பட்ட கரைப்பக்கம் திருப்பினான். அவனது ஸ்பரிசம் அவள் உடலில்பட்ட அந்த முதல் முறையில், அவள் உடல் குலுங்கியது; அவளையறியாவது ஒரு படபடப்பு உண்டாகியது. 'குப்'பென்று இன்னும் வியர்த்தது.

மெல்ல கல்யாணத்தின் கரங்களைத் தொட்டாள். துடுப்பைத் தள்ளிக் கொண்டிருக்கும் அந்த உடலில் ஏற்கெனவே வியர்த்து இருந்தது. இவள் தீண்டல் அவனுக்கு ஒரு மாறுதலையும் உண்டாக்கவில்லை. ஆழமான அந்த ஏரியும் பரந்த அந்த நீலவானும், ஜ்வலிக்கும் நட்சத்திரம் புடை சூழ்ந்த சந்திரனும், குன்றும் குன்றின் மீது நின்ற 'எல்லோ ஹவுஸ்' பங்களாவும் அவன் மனத்திரையில் புகுந்து அவனை இயற்கைத் தேவி யின் இன்பப் படைப்பின் வியப்பில் மூழ்கடித்துக் கொண்டிருந்தன.

வஸுமதி அன்று ஒன்றும் பேசவில்லை. எவ்வளவோ பேச நினைத்தாள். ஒரு வார்த்தையும் நெஞ்சுக்குழிக்கு மேல் வரவில்லை.

இந்த நிலையில் திடீரென ஒருநாள் தந்தி ஒன்று வந்தது. கல்யாண ராமனின் தாயார் மூன்று நாள்களாக படுத்த படுக்கையாய் இருப்பதாகவும், சுயநினைவே இல்லையென்றும் தெரிந்தது.

ஏனோ இராமசாமிக்குத் தன் சொந்தச் செய்தி போல் வருத்தம் உண்டாகியது. அவனை ஊருக்கு வழியனுப்ப ரயில் நிலையத்திற்கு அவர் வந்திருந்தார். வஸுமதியும் வந்திருந்தாள். அவள் கண்களிலே நீர் தளும்பிக் கீழே குதிக்கத் தயாராக நின்றது.

''வரேன் வஸு! ஒரு வாரம்தான்... மறந்து விடாதே'' என்றான் கல்யாணம்.

''ஸார்! மன்னிச்சுக்குங்கோ... ஆபீஸிலே இவ்வளவு வேலையையும் விட்டு உங்கள் கௌரவத்தையும் பார்க்காமல், என்னை ரயிலேற்ற வரும் அளவுக்கு நான் என்ன அவ்வளவு தொண்டா செய்திருக்கிறேன்? இதற்கு நன்றியை, எந்தப் பிரதி உபகாரம் மூலம் எப்படித் தெரிவித்துக் கொள்வேன்?' என்றான் கல்யாணம் நெஞ்சு தழுதழுக்க.



வண்டி புறப்பட முதல் மணி அடித்தாகிவிட்டது. ''நன்றி தெரிவிக்க நாள் நெருங்கி விட்டது, கல்யாணம்! ஊர் போய் அம்மா உடம்பைப் பார்த்துவிட்டு, சட்டுபுட்டென்று அம்மாவையும் அழைத்து வந்து விடு... உன் பிரதி உபகாரம் எல்லாம் இருக்கிறது'' என்றார் சற்றே புன்சிரிப்புடன். அவர் முகம் மலர்ந்திருந்தது. இதைக் கூறி விட்டு வஸுவை அவர் நோக்கினார். அவள் உதடுகளில் நாணங்கலந்த புன்சிரிப்புத் தோன்றியது. அதை பிரதிபலிக்கும் கண்களுடன் கல்யாண ராமனை நோக்கினாள். மறு மணியும் ஒலிக்கவே வண்டி நகர்ந்தது.

நன்னிலம் கிராமத்து வீட்டுத் திண்ணையில் அமைதியாக ஆலோசனையில்அமர்ந்திருந்தான்கல்யாணம். 'தபால்... கல்யாணராமன்' என்று தபால்காரன் ஒரு கவரைக் கொடுத்துச் சென்றான். சற்றுக் கனமான அந்தக் கடிதத்தை ஆவலுடன் பிரித்தான். நிம்மதியற்று, கவலையும் வருத்தமும் நிரம்பியிருந்த அவனுக்கு அந்தக் கவரைப் பார்க்கும்போது ஏதோ பாதிப் பளு நீங்கியது போலிருந்தது-

முத்து முத்தாக எழுதியிருந்தது. 'அவள்' எழுத்துதான். கவரின் மேலே 'ஸ்ரீ கல்யாணராமன் அவர்களுக்கு' என்ற வரிகளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். 'பாவம், நல்ல பெண்!' என்று தான் அவன் உதடுகள் முணுமுணுத்தன. உறையைக் கிழித்து முதலில் அவன் கடிதத்தைப் படித்தான். அவனுடைய முக பாவத்திலிருந்து... அப்படி யென்ன அந்தக் கடிதத்தில் பிடித்தமில்லாதது எழுதப்பட்டிருக்கும்?

அடுத்த கடிதம் இராமசாமியே எழுதியிருந்தார். ஆவலுடன் படிக்கத் தொடங்கினான்.

ஜாம்ஷெட்பூர், 20.1.1945

சிரஞ்சீவி கல்யாணராமனுக்கு... அநேக ஆசீர்வாதம். நீ ஊர் போய் உடன் கடிதம் போடுவாயென எதிர்பார்த்தேன். அல்லது மறுவாரம் தாயாருடன் வந்து சேர்வாய் என எதிர்பார்த்தேன். நீ பெற்றுச் சென்ற பதினைந்து நாள் லீவு கழிந்து மேற்கொண்டு பத்து நாள்களாகி விட்டன. நீ இல்லாதது இங்கு 'வெறிச்' என்றிருக்கிறது.

நீ உடனே வந்து விடுவாய் என்ற நம்பிக்கையில் தானிருக்கிறேன். முதல்நாள் 'இன்டர்வியூ'வின் போதே உன்மீது தனிப் பாசம் எனக்கு ஏற்பட்டு விட்டது. உன்னை என் ஒரே மகள் வஸுமதிக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட வேண்டும் என்று அன்றே திட்டமிட்டேன். என் உயர்ந்த அந்தஸ்துக்கும் உன் எளிய வாழ்வுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வு களை என் உள்ளம் சிறிது கூடப் பார்க்கவில்லை. தாய்க்கு ஒரே மகனான உன்னை, என் ஒரே மகளுக்கு விவாகம் செய்வித்து என்னுடனே

இருக்கச் செய்யத் திட்டமிட்டேன். தன் பத்தாவது வயதிலேயே தன் தாயை அவளுக்குத் தாயாகவும் நானிருந்து வளர்த்தேன். வஸுமதியை என் கண்ணெதிரிலேயே அவள் தன் வாழ்க்கையை நடத்த விட வேண்டும் என்ற பேரவா உன்னைக் கண்டவுடன் வலுத்தது. உறுதியும் படுத்திக் கொண்டேன்.

வஸுமதியின் மனத்தையும் அறிந்து இருவரையும் பழக விட்டேன். ஊருக்குப் போய் நீ தாயாருடன் வந்தவுடன் இங்கேயே கல்யாணம் நடத்த நாள் பார்க்கும் அளவுக்கு எண்ணக் காற்றாடியை உயரப் பறக்க விட்டேன். ஆனால், போய்ச் சேர்ந்து ஒரு கடிதம் கூடப் போடவில்லை. உன் நினைவாகவே இருக்கிறாள் வஸுமதி. என் மாப்பிள்ளையாகி, உயர்ந்த வேலை ஒன்றில் உன்னை உயர்த்திக் காணத் திட்டமிட்ட எனக்கு, போய்ச் சேர்ந்து ஒரு கடிதம் கூடப் போடாதது சற்று ஏமாற்றமாயிருக்கிறது.

தாய்க்கு உடம்பு எப்படி உள்ளது? உடன் தாயாரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு வருவாய் என்று நம்புகிறேன். செலவுக்கு இத்துடன் நூறு ரூபாய்க்கு 'செக்' இணைத்துள்ளேன். உன் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கும்...

உன் பிரியமுள்ள
இராமசாமி.

கடிதம் கல்யாணராமனின் கையினின்று நழுவித் திண்ணை முகப்பில் விழுந்தது. மெல்ல லேசாக வீசிய காற்று அதைப் புரட்ட முற்பட்டது. அவன் கண்கள் ஏதோ நடவாதது நடந்ததைக் காட்டுவது போன்று உற்று நோக்கின. எண்ண விசிறி விர்ரென்று சுழன்றது. அதன் வேக அளவு தெரியவில்லை. எத்தனை நேரம் அப்படியிருந்தானோ?

''கல்யாணம்! என்னடா அப்படியே அசந்து உட்கார்ந்துட்டே! கடிதம் ஏதோ பறந்து போச்சு பாரு!'' என்றாள் அந்தப் பக்கம் வந்த அவன் தமக்கை.

'விர்'ரென்று உள்ளே எழுந்து போனான் கல்யாணராமன். மறுகணம் காகிதம், பேனாவுடன் எழுதத் தொடங்கினான். கொட்டும் அருவியைப் போல் துள்ளித் துள்ளி எழுத்துகள் வந்தன. என்ன எப்படி எழுதியிருப்பான்?

நன்னிலம், 24.1.1945

அன்புள்ள, மரியாதைக்குரிய ஸார் அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் எண்ணம்... இந்த ஏழையை எண்ணிக் கட்டியிருந்த கோட்டை... இந்தப் பேதையை நினைத்துக் கண்டிருந்த கனவு, நிறைவேறாதபடி செய்துவிட்ட என்னை மன்னித்து விடுங்கள்.



நான் திரும்பவும் அங்கு வர வேண்டாம் என்ற எண்ணத்துடன் இங்கு வரவில்லை. சிறிது நேரம் முன்வரை அந்த எண்ணமில்லை. களங்கமில்லாது வஸுமதியுடன் பழக, தங்கள் அன்பு கலந்த இன்சொல் கேட்க, கண்ணும் கருத்துமாய் அலுவலகத்தில் வேலை செய்ய மீண்டும் புறப்பட்டு வரவே எண்ணியிருந்தேன்.

என் உயிருக்குயிரான தாய், நான் வந்த மூன்றாம் நாள் இறந்தாள் என்ற துயரத்தை எண்ணி மனம் வெம்பிப் போயிருந்தாலும், தாய் இறந்த மறுவாரம் என் ஒரே சகோதரியின் கணவர் காலமான செய்தி பேரிடியாக என்னை இறக்கி அமிழ்ந்துவிட்ட போதிலும், துன்பக் கடலின் பேரொலியை மறக்க, அங்கே வஸுமதியின் இனிய இசையைக் கேட்க வரத்தான் எண்ணியிருந்தேன்.

ஆனால், உங்கள் கடிதம்... உங்கள் கடிதத்துடன் இணைந்திருந்த வஸுமதியின் கடிதம்... என் எண்ணத்தை மாற்றி விட்டன. என் நெஞ்சு என்றுமே எண்ணியிராததை... கனவிலும் கருதியிராததைப் படித்தபோது, அதை அறியாமல் பழகியதை நினைக்கும்போது, தவறாக என்னை வைத்துப் பலப்பல எண்ணும்படி நான் நடந்து கொண்டதை எண்ணும் போது, என்னையே நான் குறைக் கூறிக் கொண்டு அதுபோல் நேரும்படி செய்ததற்கு மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உங்களைத் தந்தையாகக் கருதினேன். ஆயிரம் மைலுக்காப்பாலிருந்து வறுமை மாற்ற வந்த என்னைத் தேர்ந்தெடுத்து, உங்கள் அபிமானக் கையை நீட்டி அரவணைத்து, வீட்டிலே என்னை நீங்கள் சுதந்தரமாகப் பழக விட்டதை எண்ணி, கண்கண்ட தந்தை எனவே மதித்தேன். ஓர் அதிகாரியின் பெரும் தயவு கிடைத்து விட்டது என்று பெருமகிழ்ச்சியடைந்தேன்.

வஸுமதியுடன் களங்கமில்லாமல் பழகினேன். தங்களைத் தந்தையாகக் கருதி, அவளை என் தங்கையாகக் கருதிப் பழகினேன். சொந்தத் தங்கை உடன்பிறப்பாக இல்லாவிடினும், அபூர்வமாகக் கிடைத்ததை எண்ணிச் சகோதர பாசத்தைக் காட்டினேன்.

திம்னாநாலா ஏரியில் தோணி விடும்போது என் மனம் என்ன கோட்டை கட்டியது தெரியுமா? இந்த வருஷம் வஸு என்னுடன் தோணியில் வர அவளைச் சுமக்கும் இத்தோணிக்குத் துடுப்புப் போடுகிறேன்; அடுத்த ஆண்டு அவளை அணைத்து நிற்கும் கணவரையும் அமர்த்தித் துடுப்புப் போட்டு ஏரியில் இன்பமாகச் செல்லுவேன் என எண்ணினேன்; கனவு கண்டேன். அவளைத் தொட்ட ஒவ்வொரு சமயமும் ஸ்பரிசத்தில் சகோதரத் தன்மையிருந்தது; அதை அவள் கூட

அறியவில்லை; அவள் அறிந்திருந்தாள் என மிகவும் பேதைமையாக நம்பினேன்.

அம்மாவையும் பார்த்து விட்டு, இங்குக் கல்யாணம் நிச்சயமானால் கல்யாணத்தையும் முடித்துக் கொண்டு தாய் - மனைவி சகிதம் ஜாம்ஷெட்பூர் வந்து உங்களுக்குத் தொண்டு செய்ய, ரயிலேறும் போது நீங்கள் காட்டிய அன்புக்கு அழியாத நன்றி செலுத்தத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், தங்கை போல் கருதிய வஸுவை நான் மணப்பது என்பது பற்றிய தங்கள் கடிதம்... அதற்காகத் தாங்கள் காட்டி வந்த அன்பைப் பற்றிய தங்கள் கடிதம்... என்னைத் திடுக்குறச் செய்து விட்டது.

நான் திடமாக முடிவு செய்து விட்டேன். கணவனையிழந்து வறுமையால் வாடும் அக்காவை விட்டு அங்கு வர மாட்டேன். கல்யாணத்துக்குத் தயாராக நிற்கும் அவள் பெண்ணை நான் மணக்காமல், வேறு வரனுக்குக் கொடுக்கப் பணமில்லாமல் திண்டாட விட்டு விட்டு வேறு பெண்ணை மணக்க நான் ஒப்ப மாட்டேன்.

எனக்கு அங்கு ஐநூறு ரூபாய் வருமானம் வேண்டாம். மீண்டும் அங்கு வந்து தங்களை ஏமாற்றிய உள்ளத்திற்கு முன்பாகத் தலை நிமிர்ந்து நடமாட என்னால் முடியாது.

தயவுசெய்து மன்னித்து விடுங்கள் அப்பா! உள்ளூர் கூட்டுறவு பாங்கிலேயே இருபது ரூபாய் வேலை கிடைக்கும். அது போதும்; என் அக்கா பெண்ணை மணந்து நிம்மதியாக வாழ்க்கை நடத்த அது போதும். ஆனால், நான் ஒரு நன்றி கெட்டவன்; நம்பியவரை ஏமாற்றியவன் நான்; என்ன செய்வேன்? தங்கையாகப் பழகியவளை மணப்பதா? தங்களது நம்பிக்கையும், அன்பும் நிறைந்த உள்ளம் வாடத் தங்கள் முன் நடமாடுவதா? மன்னித்து விடும்படி மீண்டும் கேட்டுக் கொள்கிறேன் அப்பா!

அதனால்... இதோ என் ராஜினாமா. ஏற்றுக் கொள்ளுங்கள்.

தங்கள் ஆசியை என்றும் விரும்பும்,
கல்யாணராமன்.

● ● ● ●



# மீண்ட நாதம்

கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர். நல்ல இலக்கியமாய், இனிய இலக்கியத் தொகுப்பாய் விளங்குபவர். ஏராளமான சரித்திர, சமூக நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதிப் புகழ் பெற்றவர். அறுபதாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து எழுத்துத் துறையில் அரிய சாதனை புரிந்து நவீன இலக்கிய வளர்ச்சிக்கும் பத்திரிகைத் துறைக்கும் பெருந் தொண்டாற்றி வரும் டாக்டர் விக்கிரமன் அவர்களின் இந்தச் சிறுகதைத் தொகுப்பு மேலும் அவரிடம் ஆரம்ப கால எழுத்தாற்றலையும் அந்தக் காலத்துச் சமூக வாழ்க்கையையும் வெளிப்படுத்தும் அரிய நூலாக அமையும்.

62 ஆண்டுகளுக்கு முன்பு 1950ஆம் ஆண்டில் 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளியான 'மீண்ட நாதம்' என்னும் சிறுகதை அழுத்தமான ஓர் இனிய செய்தியை ஒரு நல்ல மனைவியின் அரிய பண்பை வெளிப்படுத்துகிறது.

அண்ணன் தன் தங்கையின் மீது உயிராய் இருக்கிறான். அவளுக்குத் திருமணம் செய்கிறான். ஆனால் பாவம், அவள் பிரசவத்தின்போது உயிர் இழக்கிறாள். தங்கை வீணை வாசிப்பதைக் கேட்டு மகிழ்ந்தவன், அவளின் மறைவுக்குப் பின்னர் வீணை இசையையே கேட்க விரும்பாதவனாகி விடுகிறான். ஆனால் அவன் மனைவி வீணை வாசிக்கக் கற்றிருந்தாலும், தான் விரும்பும் ஒன்றைத் தன் கணவன் விரும்பாதபோது அதனை இழக்கத் தயாராகிறாள். அவர்கள் வாழ்வில் அப்பொழுதும் மகிழ்ச்சி நாதம் மௌனமாய் மனத்துக்குள் ஒலிப்பதை நாம் கேட்கிறோம். தன் கணவன் விரும்பும்போது தனக்கும் வீணை மீட்டத் தெரியும் என்பதை வீணையை எடுத்துப் புஷ்பா மீட்டும்போது அவள் அவனுக்காக வாழ்ந்த வாழ்க்கையை அறிகிறோம்.

'மீண்ட நாதம்' ஒரு நல்ல சிறுகதை. கலைமாமணி விக்கிரமன் அவர்களின் சிறுகதை ஒவ்வொன்றும் வாழ்வின் ஒவ்வொரு சுருதியை மீட்டும் என்பதுதான் உண்மை.

– ஏ. நடராஜன்

1950

# 16. மீண்ட நாதம்

அன்று ரேடியோவிலே யாரோ ஒருவரின், வீணைக் கச்சேரி. கேசவமூர்த்தி ஆபீஸிலிருந்து வந்தவன், கோட்டைக் கூட கழற்றாமல் அப்படியே சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் கண்ணை மூடிக் கொண்டான். ரசிக்கும் தன்மையில் மூழ்கினானோ அன்றைய அதிகப்படி வேலையில் களைத்துப் போய் மெய்மறந்து சாய்ந்திருந்தானோ அல்லது கற்பனையுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தானோ தெரியாது.

ஆனால், அந்த மூன்றுமேதான் அப்பொழுதைய நிலையிலிருந்தது. இரண்டாங் கட்டிலிருந்து ஏதோ வேலையாக வந்த புஷ்பா, கணவர் வழக்கத்துக்கு விரோதமாக சீக்கிரமாக வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்திருப்பதைக் கண்டாள். ரேடியோ உரத்த குரலில் கத்துவதே அவருக்குப் பிடிக்காது. அதுவும் வீணைக் கச்சேரியென்றால் செவி சாய்க்காதவர். அன்று ரேடியோவின் அருகில் சிறிது அதிகமான ஒலியை அது கிளப்பிக் கொண்டிருக்க, அதைச் சகித்துக் கொண்டிருக்கிறாரே என்பனதக் காணும்போது அவளுக்கு வியப்பாக இருந்தது.

"என்ன உடம்பு சரியில்லையா?" என்று சொல்லிக் கொண்டே, ரேடியோவைச் சட்டென்று நிறுத்தினாள் புஷ்பா.

திடுக்கிட்டு விழித்தவன் போல், எங்கோ வானவெளியிலிருந்து பிடித்துத் தள்ளப்பட்டவன்போல் கண்ணைத் திறந்தான் மூர்த்தி.

"ஏன் ரேடியோவை நிறுத்துகிறாய்?" என்றான் கேசவமூர்த்தி. அன்று அவனுடைய போக்கே விசித்திரமாக இருந்தது.

"உங்களுக்கு வீணைக் கச்சேரி என்றால் பிடிக்காதே. அதுவும்... நீங்கள் இப்பொழுது வருவீர்கள் என்பது தெரியாமல்... உரத்த குரலில் பாடும்படி வைத்துவிட்டேனே என்பதற்காக நிறுத்தினேன்" என்றாள் கவலை தோய்ந்த முகத்துடன்.

கேசவமூர்த்திக்கு மனசே சரியில்லை. அவன் எண்ணங்கள் பின்னுக்குச் சென்றன. 'தனக்குச் சங்கீதமே பிடிக்காது என்றல்லவா ஆகிவிட்டது? ஒரு காலத்தில் எவ்வளவு ஈடுபாடு இருந்தது! அதுவும்



வீணையின் இனிய நாதத்தில் அமிழ்ந்து நேரம் போவதே தெரியாமல், அதன் மோக லாகிரியில் சுழன்று கொண்டிருந்தோமே...' என எண்ணும்போது அவனுக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

"கலையை மறந்தோமே என்பதன்று, ரசிகத்தன்மை அற்றுப் போய் விட்டோமோ என்பதற்குமன்று. ஆனால், வைராக்யமாக அன்று செய்த முடிவு, அருமைத் தங்கைக்காக - அவள் நினைவுக்காக ஏற்பட்ட வெறுப்பல்லவா அது?

அவன் தங்கை காஞ்சனாவின் இசையிலுள்ள ஈடுபாட்டிற்கும் குரல் வளத்திற்குமாக அவளுக்கு வீணை கற்றுக் கொடுக்க வேண்டுமென்று அவன் திட்டமிட்டான்.

தாய் தந்தையற்று தன் பாதுகாப்பில் இருக்கும் ஒரே தங்கையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தான். அவன் அத்தை ஒருத்திதான் துணை. இவனுக்கும் நல்ல உத்தியோகம். அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டுத் தான் மணப்பது எனவும் தீர்மானித்திருந்தான்.

பெயருக்கேற்றபடி பொற்கொடிபோல் வளர்ந்த காஞ்சனாவின் மிருதுவான விரல்களால் எழுப்பப்படும் வீணையின் நாதம், அந்த வீடு முழுவதும் பரவி, இன்ப ஒலியை எழுப்பும்.

ஒரு தடவை உள்ளூர் சபாவில், மிகவும் வற்புறுத்தியதன்பேரில் ஒப்புக் கொள்ளப்பட்ட கச்சேரியின் மூலம் காஞ்சனாவின் வீணைத் திறமை ஊர் முழுதும் பரவியது.

அவளை மணப்பதற்குத்தான் மிஸ்டர் இராமமூர்த்தி பி.ஏ. கொடுத்து வைத்திருந்தாள். விடுமுறையைக் கழிக்க அந்த ஊரிலுள்ள அக்கா வீட்டிற்கு வந்த இடத்தில், ஜாதகப் பொருத்தமும், பெற்றோர்களின் சம்மதமும் கிட்டின.

கல்யாணமானவுடன் புதுதில்லி வாசத்துக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், கேசவமூர்த்தி அவ்வளவு சீக்கிரத்தில் தங்கையைப் பிரிந்து விடுவானா?

ஒரு மாதம் பொறுத்து அனுப்புவதாகக் கேட்டுக் கொண்டான். தன் உயிர் முழுவதையும் ஒரே தங்கையின் மீது வைத்திருக்கும்போது, அவ்வளவு லேசாகவும் பிரிய முடியுமா?

ஆனால், அந்த ஒரு மாதத்திற்குள்ளாக, இராமமூர்த்திக்கு சென்னைக்கு மாற்றலாகியது. திருச்சியினின்று சென்னைக்குத் தங்கையைக் கொண்டு விடும் அவசியம் ஏற்பட்டது. காஞ்சனா குடும்ப வாழ்வில் புகுந்தாள்.

தங்கையை விட்டுப் பிரியும்போது கேசவமூர்த்திக்குக் கண்களில் பாசத்தால் நீர் தளும்பியது.

''காஞ்சனா! அடிக்கடி வந்து உன்னைப் பார்த்துப் போகிறேன்; வீணை வாசிப்பதை மட்டும் விடாதே... பழக்கம் விட்டுப் போய் விட்டால் அதை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது'' என்று தழுதழுத்த குரலில் கூறிப் பிரிந்தான்.

இராமமூர்த்தி - காஞ்சனா வாழ்க்கை தொடங்கியது. காஞ்சனா வந்தவுடனே இராமமூர்த்தியுடனிருந்த அவன் தாயார் கிராமத்திற்குச் சென்று விட்டாள்.

புதுக்குடும்ப பாரம் இளங்கொடியின் மீது விழுந்தது. அதிலே காஞ்சனா வந்த விசேஷமோ என்னவோ இராமமூர்த்திக்கு ஆபீஸில் வேலை அதிகமாகியது. வீடு வர எட்டரை மணி ஆகும்.

அந்தத்தனி வீட்டில் மாலை நான்கு மணிக்கே வேலைகளையெல்லாம் முடிததுக் கொண்டு தனியாகக் கொட்டு கொட்டென்று உட்கார்ந்திருப் பாள். ரசிக்க ஆளில்லாமல் வீணையை எவ்வளவு நாள் வாசிப்பாள்?

சில நாள்களில் தனிமையைக் குறித்து மனவேதனையின் பிரதிபலிப்பாகக் கண்ணிலிருந்து இரண்டு சொட்டு நீர்த்துளிகள் வீணையின் நரம்புகளில் விழுந்து அந்த ஒலியோடு சேர்ந்து தெறிக்கும்.

வீணை வாசிப்பதையே நிறுத்திவிட்டாள் காஞ்சனா.

இராமமூர்த்திக்கு அதைப் பற்றி என்ன? 'அப்பாடா' என வீட்டுக்கு வரும் அவனுக்கு நாற்காலியில் சாய்ந்து கொண்டால் போதும் போலிருக்கும்.

கேசவமூர்த்தி தங்கையைப் பார்க்க அன்று வந்திருந்தான். அவளுடைய வாழ்க்கையைப் பற்றிக் கேட்டான்.

வீணையைத் தொட்டு ஒரு மாதமாகியது என்பதை அவன் அறியும்போது வருத்தம் தாங்கவில்லை.

மாப்பிள்ளை இராமமூர்த்தியை அதைப் பற்றித் தனியே பேச்சு வாக்கில் கேட்டு விட்டான்.

தினசரி மாலையில் சீக்கிரம் வருவதற்கு முயலக்கூடாதா என்றும் கேட்டான். இராமமூர்த்தி பதில் பேசவில்லை. சிரித்துக் கொண்டே சும்மாயிருந்து விட்டான்.



கேசவமூர்த்தி வந்து போனபிறகு மறுபடியும் மாலை வேளையில் வீணையின் நாதம் அந்த வீட்டில் எழுந்தது. ஆனால், ஒரு நாளாவது அதைக் கேட்டு ரசிக்க இராமமூர்த்தி வீட்டில் இருக்க மாட்டான்.

அன்று ஆபீஸிலிருந்து வழக்கம்போல் வீட்டிற்கு வந்தான் இராமமூர்த்தி. மனசு சரியாயில்லை அன்று அவனுக்கு.

காஞ்சனாவுக்கு வழக்கத்திற்கு விரோதமாக நீண்ட நேரம் தன்னை மறந்து வீணையில் லயித்திருந்தாள். இராமமூர்த்தி வந்து பலமாகக் கதவைத் தட்டிய பிறகே திறந்தாள். நடையிலும் வேகமில்லை; அலுத்துப் போன ஒரு களைப்பு.

தடார் என்று கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான். இலையில் சோறு போடப்பட்டபோதுதான் இராமமூர்த்திக்கு ஆத்திரம் அதிகமாகியது.

தூக்கம் கண்ணைச் சுழற்ற, உடல்நிலையும் சரியாக இல்லாத நிலையில் காஞ்சா தள்ளாடிப் பரிமாறுவது மனசு சரியாக இல்லாத இராமமூர்த்தியின் ஆத்திரத்தை அதிகமாக்கியது. அதற்கு ஏற்றாற்போல் குழம்பிலும் உப்பு இல்லை.

''உப்பை எங்கே போட்டாய்... அந்த வீணையிலே போட்டாயோ?'' என்றான் கடுமையாக.

காஞ்சனா பதில் பேசவில்லை.

''மீதி நேரத்தில் குஷியாக இருப்பது. நான் வீடு வந்தவுடன் முகத்தை உம்மென்று தூக்கிக் கொள்வது. வீணையும் பாட்டுமாக இருப்பது போல நான் வந்த பிறகு இருக்கக் கூடாதாக்கும்?'' என்றான் மறுபடியும் தொடர்ந்து.

நெஞ்சிலே அடக்கி வைத்திருந்த ஆத்திரம் அன்று காஞ்சனாக்கு அடக்கவே முடியவில்லை.

கண்ணீரும் அழுமையும் கலந்து பெருக ஆத்திரக் குரலில் ஏதேதோ கொட்டிவிட்டாள்.

ரசிப்புத் தன்மையற்றவர்களிடம் அற்புதமான கலையை எப்படிப் பயன்படுத்துவது என்ற பொருள்கூட அதிலே தெரிந்தது. கேட்டபோது தான் இராமமூர்த்தியின் கை நீண்டது.

ஓர் அடி கன்னத்தில், சிவந்த கன்னத்தில் அடிபட்ட இடம் ரத்தச் சிவப்பாகியது.

இரவு முழுவதும் விம்மலும் குமுறலுமே. மறுநாள் அதற்கு மறுநாளும் தணியவே இல்லை. பிறகு இராமமூர்த்தி எவ்வளவோ சமாதானப்படுத்தினான்.

முழு வெற்றியும் கிடைக்கவில்லை. அந்த வீணை கவனிப்பாரற்ற நிலையிலே கிடந்தது.

இதன் நடுவில் காஞ்சனா கர்ப்பிணி என அறிந்த கேசவமூர்த்தியும் அவளை ஊருக்கு அழைத்துச் சென்றான். இனி இப்போதைக்குத் திரும்பி வருவதில்லை என்ற பிரசவ வைராக்கியத்துடன் சென்றாள் காஞ்சனா. என்ன இருந்தாலும் குழந்தைதானே!

ஒருநாள் ஆபீஸிற்குத் தந்தி வந்தது. இராமமூர்த்தி அவசரமாகத் திறந்து படித்தான். திடுக்கிட்டான். செயலற்றுப் போனான்.

'காஞ்சனாவுக்கு அபார்ஷன் அபாயம். புறப்படவும்'.

வயிற்றைக் கலக்கியது. அவனால் அன்றிரவே கிளம்ப முடியவில்லை. மறுநாள் காலையில் கிளம்பினான். தன் நினைவில்லை. வெறும் மரக்கட்டை போலச் செயலற்று வருத்தம் பொங்க அவன் திருச்சியை அடைந்தான்.

வெளிறிப் போன முகத்துடன் ஆஸ்பத்திரியில் கிடந்தாள் காஞ்சனா. கண்கள் பார்வையற்றுக் குழி விழுந்து கிடந்தன.

அன்று இரவு ஜன்னி வேறு கண்டுவிட்டது. ஜன்னியிலே அப்பப்பா என்ன பிதற்றல்! 'இனிமேல் நான் போக மாட்டேன் அங்கே. அண்ணா! அந்த வீணையை இங்கே கொண்டு வந்து விடு'.

இந்த வார்த்தையைக் கேட்கும்போது குழந்தைபோல் முகத்தை மறைத்துக் கொண்டு கதறினான் இராமமூர்த்தி.

கேசவமூர்த்தியின் நிலையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

எல்லாரையும் தவிக்கவிட்டு இந்த உலகை விட்டே காஞ்சனா சென்று விட்டாள்.

கேசவமூர்த்திக்குப் பித்துப் பிடித்தது போலாகிவிட்டது. அந்த வீணையை எடுத்து வந்துவிட்டான். கூடத்தின் நடுவே மேஜை மீது அது இருந்தது.

கல்யாணமாகி புஷ்பா வீடு வந்த பிறகு பல தடவைகளில் அவனிடம் வீணை சும்மாவே புழுதி படிந்திருப்பதைப் பற்றிக் கேட்டிருக்கிறாள்.



அவன் பதில் சொல்வதில்லை. ஆனால், அவனது போக்கிலிருந்து, வீணை - சங்கீதம் இவை மீது அவனுக்குப் பிரியம் இல்லை என்பது தான் அவ்வீணை சும்மாயிருப்பதற்குக் காரணம் என நினைத்தாள் புஷ்பா.

ஆனால் அன்று, பழைய நினைவுகளைக் கிளறிவிட்ட அந்த ரேடியோவினால், கேசவமூர்த்தி பழைய சம்பவங்களை அப்படியே புஷ்பாவிடம் கொட்டி விட்டான்.

காஞ்சனா இறந்தபிறகு வாழ்க்கையிலே நாதமே போய்விட்டது என்று சொல்லும்போது கண்ணீர் விட்டு விட்டான்.

ஆனால், புஷ்பா நேரே வீணையிடம் சென்றாள். அதன் உறையைக் கழற்றினாள். தூசு தும்பைத் துடைத்தாள்.

நடுக்கூடத்திலே வீணையுடன் உட்கார்ந்தாள். அவளுடைய மெல்லிய விரல்கள் வீணையின் கம்பிகளின் மீது தவழ்ந்தன.

கேசவமூர்த்திக்கு ஆச்சர்யமாக இருந்தது.

'புஷ்பா வீணை வாசிப்பாளா?' என்று வியந்தான்.

பழைய எண்ணங்களிடையே வட்டமிட்டுக் கொண்டிருந்த குழம்பிய மனத்தில், அந்த புதிய நாதம் புகுந்து ஒரு புத்துயிரைக் கொடுத்தது.

காஞ்சனாவின் இனிய முகம் தோன்றியது. அதே சமயம் அவள் நினைவுக்காக வீணையை மூடி வைப்பதை விட, நாதத்தை எழுப்பிக் கொண்டிருக்க வேண்டும் என முடிவு செய்தான்.

அன்றிலிருந்து கேசவமூர்த்தி இழந்த வாழ்வின் நாதம் மீண்டும் அந்த வீட்டில் புகுந்து ஒலித்தது.

● ● ● ●

# பட்டாபிராமன் புனர்ஜன்மம்

உயர்ந்த நட்புக்கு நகமும் சதையும், ஒருயிர் ஈருடல் என உவமை சொல்வார்கள். இந்தக் கதை நனவோடை யுக்தியில் சொல்லப்பட்டிருப்பதால் கதையைப் படிக்கும்போது நாமும் ஒரு பாத்திரமாகி நமக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதில் வியப்பில்லை.

பட்டாபிராமன் இறந்து போனவர்களில் ஒருவன் என்பது நிச்சயம். ஆனால், இறந்து போனவன் நண்பனிடம் நேரில் வந்து தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திவிட்டு நான் மறுநாள் கல்கத்தா போகும் விமானத்தில் போகப் போகிறேன் என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன? உயிருக்கு உயிராகப் பழகிய நண்பனின் மறைவினால் ஏற்பட்ட அதிர்ச்சியின் பிரமையே நண்பனின் உருவில் வந்து போனது.

பெற்ற தாயின் வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டுத் தன்னைக் காதலித்தவளைத் திருமணம் செய்து கொள்ள முடியாமல் தவித்து மரணமடைந்த நண்பன் பட்டாபி. தன்னை பீஷ்மராக உருவகம் செய்து கொண்ட பட்டாபிக்கு இல்லாத உணர்வு இவனுக்கு மட்டும் ஏற்படுவானேன்? அது நட்பின் ஆழம். பட்டாபியின் காலில் அடிபட்டால் இவன் கண்ணில் நீர் வரும் அளவுக்கு ஆழமான நட்பு.

சிறுகதை மன்னன் ஓ. ஹென்றியின் கதைகள் முடியும்போது வாசகர்களின் மனத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். உதாரணம் கடிகாரச் செயின் - வெள்ளிச் சீப்பு கதை. அதுபோன்ற பாதிப்பை இந்தக் கதையும் ஏற்படுத்தியுள்ளது.

பேய் - பிசாசுக் கதைகளில் வருவதுபோல் பட்டாபியின் மரணத்தையே நினைத்து, நினைத்து பாதிக்கப்பட்டிருந்த நண்பனுக்கு பட்டாபியின் மனோரதம் எப்படியும் நிறைவேற வேண்டும் என்பதால் அவனுக்குப் புனர்ஜன்மம் அளித்து பட்டாபியின் எண்ணங்களுக்காகக் கனவுலகில் வாழ்கிறான். பேய் - பிசாசுகளின் நம்பிக்கைக்கூட இப்படிப்பட்ட அபரிமிதமான கற்பனைகள், மன பாதிப்புதான் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கும் ஆசிரியர் விக்கிரமனின் சாமர்த்தியத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நண்பனைப் பொறுத்தவரை பட்டாபி உயர்ந்த நட்பையும், நண்பனின் உணர்வுகளையும் உள்ளங்கை நெல்லிக் கனியாகக் காட்டியிருப்பது கதையின் சிறந்த அம்சம்.

**- ஜெயா வெங்கட்ராமன்**





# 17. பட்டாபிராமன் புனர்ஜன்மம்

**அன்று எனக்கு மனசே சரியாக இல்லை. கவலையே அறியாது வளர்ந்துவிட்ட எனக்கு, இந்தத் திடீர் அனுபவம் தாங்க முடியாததாக இருந்தது.**

**கார்ப்பரேஷன் தெரு விளக்குகள் புதுமணப் பெண்களைப் போல தலையைக் குனிந்து ஒரு குரல் அழுத வண்ணம் வெளிச்சம் அளித்துக் கொண்டிருந்தது. பஸ் ஹாரன் சப்தமும், டிராமின் கடபுடா ஒலியும், மக்களின் இரைச்சலும் சேர்ந்து அன்று என் வேதனையை இன்னும் அதிகமாக்கின.**

**தினமும்தான் இந்தக் கார்ப்பரேஷன் தெரு விளக்குகள் ஒளி கொடுக்கின்றன. டிராமும், பஸ்ஸும் ஓலமிடுகின்றன; ஆனால், அன்று இவையெல்லாம் எனக்குப் புது அனுபவமாகவும் வேதனை வித்தாகவும் இருந்தமைக்குக் காரணமில்லாமல் போகவில்லை.**

**சென்ற வாரம் சென்னையில் பிரபல வர்த்தகக் கம்பெனி ஒன்றின் மேல் மாடி இடிந்து விழுந்ததன் காரணமாக நான்கு குமாஸ்தாக்களும், இரண்டு கூலியாட்களும் உருத்தெரியாமல் நசுக்குண்டு போன பரிதாபச் செய்தி உங்களுக்கு நினைவிருக்கிறதா?**

**அந்த நால்வரில் என் உயிருக்குயிரான நண்பன் பட்டாபிராமனும் ஒருவனாயிருந்தபோது, என் இதயம் எப்படி வேதனை அடையாமல் இருக்க முடியும்?**

**குறிப்பிட்ட நீண்ட விடுமுறைக்குப் பின் சம்பவம் நடந்த தினத்தன்று நான் ஊரிலிருந்து திரும்பி வந்திருந்தேன். பட்டாபிராமனை அன்று மாலையில்தான் சந்திக்கலாம் என்றிருந்தேன். அவனைக் கடைசியில் இந்தக் கோலத்தில் காண வேண்டியிருந்ததால் - திடீரென இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதால் - உள்ளத்திலுண்டான அதிர்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?**

**பட்டாபிராமன் பி.ஏ., என் பால்ய நண்பன். 'அ, ஆ' கற்றுக் கொள்ளப் பள்ளியில் சேர்ந்தது முதல் கடைசியாகக் கல்லூரியில்**

இருவரும் பிரியும்வரை ஒன்றாகவே படித்து வந்தோம். 'இரட்டையர்' என்று எங்களை எல்லாரும் கூறிப் பெருமைப்படுமளவுக்கு நண்பர்களாக இணை பிரியாதிருந்தோம்.

கம்பீரமான தோற்றமும், கவர்ச்சியான நிறமும், வாரிவிட்ட அமெரிக்கன் கிராப்பும், அகன்ற நெற்றியுமுடைய அவனை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் தோன்றும். சதா அவனுடன் சுற்றிக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து என் நண்பர்களெல்லாம், 'டேய், நீ அவனுடன் செல்வது எப்படியிருக்கிறது தெரியுமா? ரோஜாப்பூவைச் சுற்றி வண்டு வட்டமிடுவதுபோல் இருக்கிறது' என்று கேலியாகக் கூறுவார்கள். எங்கள் நிற வேறுபாட்டிற்காக அவர்கள் அப்படிக் கூறினாலும் உண்மையிலேயே நானும் அவனும் மலரும் வண்டும்போல் பிரிக்க முடியாதவர்களாகவே வாழ்ந்து வந்தோம்.

இப்படி அற்ப ஆயுளில் அவன் மாண்டுவிடப் போகிறானென்று நான் நினைத்தேனா? அல்லது அவன்தான் நினைத்திருப்பானா? புத்திசாலித் தனமும், அழகும், கம்பீரத் தோற்றமும் கவர்ச்சிகரமான பேச்சும் அளித்த ஆண்டவன், வாழ்க்கையில் அவனுக்குக் குடும்ப சுகத்தையோ - நிம்மதியையோ அளிக்கவில்லை.

அவனுடைய சிறு வயதிலேயே அவன் தந்தை இறந்தார். பிரமாத சொத்து ஒன்றும் வைத்துச் செல்லாவிடினும் அவன் தாயார் மிகச் சிக்கனமாகவும், சாமர்த்தியமாகவும் குடித்தனம் நடத்தி அவனை பி.ஏ. வரையில் படிக்க வைத்தாள்.

வேலை தேடுவதற்காகப் பட்டாபிராமன் சென்னைக்கு வந்தான். சுலபத்தில் வியாபாரக் கம்பெனியொன்றில் நல்ல வேலையும் கிடைத்தது. அவனுக்கு முன்பே நான் சென்னையில் வேலையில் சேர்ந்து விட்டேன். என் பிரிய நண்பன் சென்னைக்கே வந்துவிட்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

என்ன காரணத்தினாலோ நாளடைவில் அவனுடைய மன அமைதி குலைந்தது. தன் மன நிம்மதியின்மையையும் - ஆயாசத்தையும் அவன் ஒளிவு மறைவின்றி என்னிடம் கூறுவான். படபடப்பு, வேகமறியா அவனுக்குப் பரபரப்பும் ஆயாசமும் உண்டாயின. களங்கமற்ற அவன் உள்ளத்தில் கவலைகள் வந்து மூண்டன. உலகிலேயே காதலும் போரும் முக்கியமானவையாக இருக்கும் போது, பட்டாபிராமனின் வாழ்க்கையிலும் அந்தக் காதல் வந்து முளைக்காமலிருக்குமா, என்ன?



கிளியென்பார்களே! மாதுளைத் தளிர் என்பார்களே! தங்கப் பதுமையென்பார்களே! இவையெல்லாம் - இந்த உவமைகளெல்லாம் ஜானகி விஷயத்தில் தோற்றுத்தான் போகும். உவமை கூற முடியா அழகி, உவமை கூற முடியாத அழகனான பட்டாபிராமன் மேல் காதல் கொண்டாள். காரியாலயத்துக்கு அவன் போகும்போதும் வரும்போதும் அந்தக் கிளி ஜன்னலருகே காட்சியளித்து, அவனுடைய ஆசைத் தீயை வளர்த்தது.

ஒருதலைக் காதலாக அவன் காதல் இருந்துவிடப் போகிறதோ என்று எண்ணி, நான் ஒரு நாள் பட்டாபியிடம், "ஜானகி, ஜானகி என்கிறாயே, அவளுக்கு உன் மேல் பிரியமுண்டா?" என்று கேட்டு விட்டேன்.

"ஹும்... ஜானகிக்கா என் மீது பிரியமில்லை என்கிறாய்? இதோ பார்!" என்று என் முன்னே ஒரு கத்தைக் கடிதங்களை எடுத்துப் போட்டான். மணி மணியான எழுத்துகளில் ஜானகி காதல் கதை பேசி இருந்தாள். உள்ளத்தையே கொட்டி இருந்தாள். இவ்வளவு துணிவுடன் கடிதம் எழுதுமளவுக்கு அவர்கள் காதல் வளர்ந்தது குறித்து எனக்கும் சந்தோஷம்தான்!

"அது மட்டுமாடா? அவள் அப்பாவுக்கு ஒரே பெண். பெயிண்ட் கம்பெனி ஒன்றில் அவருக்கு வேலை. ஜானகி என்னைச் சுட்டிக்காட்டி 'இவரைத்தான் மணப்பேன்' என்று கூறிவிட்டாள். அவள் தந்தை என்னை அணுகி, 'என்ன சீர் செய்வதானாலும் தயார். உங்கள் தாயாரின் சம்மதத்தைக் கேட்டு வாருங்கள்!' என்று சொல்லி விட்டார்.

"பிள்ளையின் மனத்தை அறியாத தாயார் இருந்து என்னடா பயன்? முதலில் 'சரி, பார்க்கலாம்' என்றவள் பிறகு, 'அவர்கள் நம்ம ஜாதி இல்லைடா... சம்பந்தம் பண்ணலாமா?' என்று மறுத்துவிட்டாள். 'ஜானகியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம் என்றால் எனக்குக் கல்யாணமே வேண்டாம்' என்றேன். 'அப்பா, பட்டாபி! நீ எனக்கு ஒரே பிள்ளை. எவ்வளவோ கஷ்டப்பட்டு உன்னை வளர்த்தேன். உங்கப்பா வைத்துப் போன கடனை அடைத்து உன்னை பி.ஏ. வரையில் உழைத்துப் படிக்க வைத்தேன். உனக்கு நல்ல இடத்தில் கல்யாணம் செய்வித்து குடியும் குடித்தனமுமாக நீ சௌக்யமாக இருப்பதை நான் பார்க்க வேண்டுமடா! நம்ம ஜாதியை விட்டு வேற ஜாதியில் பெண் எடுக்க மனது இடம் கொடுக்கவில்லை. எனக்கு என்ன... உன்னைத் தவிர இன்னொரு பிள்ளையா இருக்கிறான்? உனக்குப் பிடிவாதமாக அந்த இடத்தில்தான் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று இஷ்டமிருந்தால் என்னை ஒன்றும் கேட்க வேண்டாம். நீயே

நிச்சயதார்த்தம் செய்து கொள்; நீயே போய்த் தாலியைக் கட்டி விடு! நான் வரவில்லை!' என்று சொல்லிவிட்டாள். எனக்கு ஆத்திரம் ஒரு பக்கமும் அழுகை ஒரு பக்கமுமாகப் பொங்கி வந்தது.

'கடைசியாக ஒன்று சொல்வேனம்மா! என்ன ஜாதிப் பிரிவு நமக்குள்ளேயே வேண்டியிருக்கிறது? அவர்களே சம்மதிக்கையில் நமக்கென்ன? கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால் நான் ஜானகியைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்; இல்லாவிடில் பீஷ்மரைப் போல, இளங்கோவடிகளைப் போல, சுபாஷைப் போல பிரம்மச்சாரியாகவே இருந்து காலத்தைக் கழிப்பேன்' என்று சபதம் செய்து விட்டேன்.

ஒரு சமயம் தாயின் சொல்லுக்கு விரோதமாக, ஜானகியைத் துணிந்து மணந்து விடுவது என்று தோன்றும். கடைசியில் இரண்டாவது எண்ணம்தான் ஜெயித்தது. ஜானகியை நான் பார்ப்பதைக் கூட நிறுத்திக் கொண்டேன். நல்ல காலந்தானோ என்னவோ, அவள் தந்தையைக் கல்கத்தாவுக்கு மாற்றி விட்டார்கள். என் சபதம் அவளுக்கும் தெரியும். ஆனால், அவளால் என்னைப் போல் உறுதி எடுத்துக் கொள்ள முடியுமா?'' என்றான் பட்டாபி ஒருநாள் கடைசியாகச் சந்தித்தபோது.

**நா**ன் அவன் தாயாரிடம் வாதாடிப் பார்த்தேன். பழங்காலத்துப் பெரியவர்களின் எண்ணத்தை - நம்பிக்கையை மாற்ற முடியுமா? முடியவில்லை. அதற்குப் பிறகு நான் சொந்த வேலை நிமித்தமாக வெளியூர் சென்று வந்த அன்றுதான் இந்தக் கோரச் சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம் நடந்த தினத்தன்று காலையில் நான் அவனைக் காரியாலயத்தில் சந்திக்கச் சென்றேன். அவன் இல்லை.

இந்த மன வேதனையுடன் அன்றிரவு நான் அறையில் விளக்குக் கூட ஏற்றாமல் உட்கார்ந்திருந்தேன். அறைக் கதவு மெல்லத் திறந்தது.

மனத்தில் வேதனையடைந்துள்ள ஒருவனுக்குச் சிறு சப்தமும் பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கும் அல்லவா? எனவே, நான் திடுக்கிட்டு விட்டேன். திடுக்கிட்டதற்கேற்றாற்போல் ஓர் உருவம் வெகு சுவாதீனமாக உள்ளே நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது. விளக்கைப் பொருத்தினேன்.

என்னால் நம்பவே முடியவில்லை. உடலெல்லாம் வியர்த்தது. குபீரென உடலில் ரத்தம் வேகமாகப் பரவித் தணிந்தது. இதயம் படபடத்தது. "யார்... ர்..? ப... ட்... டாபி... யா?'' எனக் குழறினேன்.



"பயப்படாதேடா! நான்தான்; சாக்ஷாத் பட்டாபியேதான். ஆனால் புது குணங்கள் - கொள்கைகள். இப்போது நான் நசுக்குண்டதாக ஊரே பேசிக் கொள்கிறது. நல்லவேளை, நான் ஊரில் இல்லை. திக் பிரமையில் என் தாயும் செத்தவன் நான்தான் என அடையாளம் கூறி யிருக்கிறாள். பாவம், அழுது அழுது அவள் பாதி இறந்திருப்பாள். ஒரே மகன்; கஷ்டப்பட்டு வளர்த்த மகன்; செல்வமாக நல்ல இடம் தேடி மணம் புரிவித்து ஆசையோடு பார்க்க வேண்டிய மகன். ஆம், நண்பா! நான் இறந்ததாகவே இருக்கட்டும்; என் சபதம் நிறைவேறியதாகவே இருக்கட்டும். நாளைக் காலை நான் கல்கத்தாவுக்கு விமானத்தில் போகிறேன். அங்கு போய் ஜானகியைச் சந்திப்பேன். மறுநாளே அவளை மணந்து கொள்வேன். பிறகு வடக்கேயே காலங்கழிப்பேன். புது வாழ்வு வாழ ஆசைப்பட்டேன்; கிடைத்து விட்டது. பயப்படாதேடா! உன்னை மறக்க மாட்டேன். போய் வருகிறேன்!'' என்று கூறிவிட்டு, அவ்வுருவம் கிளம்பிச் சென்றது.

ஒன்றும் தோன்றாமல் பேயடித்தவன்போல் நான் உட்கார்ந்திருந்தேன். மறுகணம திடீரென எழுந்து ஓடித் தெருவெல்லாம் பார்த்தேன். ஆள் நடமாட்டமேயில்லை.

பட்டாபியா வந்திருப்பான்? கனவா, நனவா என்றுகூடப் புரியவில்லை. இரவெல்லாம் உறக்கமில்லாமல் தவித்தேன். பொழுது விடிந்ததும் பட்டாபியின் தாயிடம் ஓடினேன். சோகத்தில் ஆழ்ந்திருந்த அந்த அம்மாளைப் பார்த்து வேறெதுவும் பேசாமல் மீனம்பாக்கத்துக்குக் கூட சென்றேன்.

கல்கத்தாவுக்குச் செல்லும் விமானம் வந்துவிட்டது. பிரயாணிகள் எல்லாரும்தான் ஏறப் போகிறார்கள். பிரயாணிகளின் பட்டியலில் பட்டாபிராமன் என்ற பெயரையே காணோம். எல்லாப் பிரயாணிகளும் ஏறியாகிவிட்டனர். வெகு வேகமாகச் சுழலும் விசிறிகளுடம் விமானம் கிளம்பியது. ஆனால், பட்டாபி மட்டும் வரவே இல்லை.

'ஆனால் நேற்று? பட்டாபிராமன் புனர்ஜன்மம் எடுத்து விட்டான் என்று எண்ணினோமே, அது பொய்யா?' என்ற நினைப்புடன் வானில் விமானம் மறையும்வரை நான் அங்கேயே நின்று கொண்டிருந்தேன்.

● ● ● ●

# பூங்கோதையின் கணவன்

''பூங்கோதையின் கணவன்' என்னும் சிறுகதையை கலைமாமணி விக்கிரமன் 1950ஆம் ஆண்டில் எழுதியிருக்கிறார்.

இன்றும் பூங்கோதைகளும் இருக்கிறார்கள்; பூங்கோதையின் கணவன்களும் இருக்கிறார்கள்தானே! என்ன பெரிய மாற்றம் வந்து விட்டது? ம்கூம்... ஒன்றுமில்லை.

இதுதான் கதையைப் படித்ததுமே, என் மனத்தில் தோன்றிய முதல் எண்ணம்.

என்னவாம் பின்னே? 'பையனுக்கு நிறையவே சீர் செய்ய வேண்டும்; பையன் மெடிக்கல் காலேஜில் படிக்கப் பிரியப்படுவதால், அதற்காகும் செலவைப் பெண் வீட்டார் ஏற்க வேண்டும்; படிப்பு முடிகிற வரைக்கும் பெண், தாய் வீட்டிலேயே இருக்க வேண்டும்' என்பதுதான் இந்தக் கதையில் வருகிற திருமண நிபந்தனைகள்!

இந்தக் கதையைப் படித்துவிட்டு யாராவது 'அடடே! நல்ல யோசனையாக இருக்கிறதே' என்று தோன்றிவிடப் போகிறதே என்பதுதான் என் பயம்!

1950ஆம் ஆண்டில் எழுத்தாளரின் கற்பனையில் மெடிக்கல் காலேஜ் படிப்புக்கு ஐயாயிரம் ரூபாய் போதுமானதாக இருந்திருக்கிறது! இப்போது, ஐம்பது லட்சம்கூடப் போதாதே!

இப்படியெல்லாம் நம்மை நினைக்க வைக்கிற அளவுக்குச் சுவையாகக் கதையை எழுதியிருக்கிறார் கலைமாமணி விக்கிரமன். இயல்பான உரையாடல்களும், ஆற்றொழுக்குப் போன்ற நடையும், கதைக்கு வலிவும் பொலிவும் சேர்க்கின்றன.

சமுதாயக் கொடுமையை என்ன நாசுக்காக எடுத்துக்காட்டுகிறார்? எப்படிச் சொன்னால் மக்கள் ரசிப்பார்களோ, எப்படிச் சொன்னால் மக்கள் திருந்துவார்களோ... அந்த விதத்தில் கதையைச் சொல்கிறார். கதையும் சரி, கதைக்குத் தேர்ந்தெடுத்த கருவும் சரி, சிறப்பாக உள்ளன.

- அரசு மணிமேகலை





# 18. பூங்கோதையின் கணவன்

பிறந்த வீட்டிற்கு வந்திருந்த சமயம் பொழுது போகாமல் மொட்டை மாடியின் மீது நின்று கொண்டு, தொலைவில் தெரியும் ரயில்வே ஸ்டேஷனையும் அதற்கப்பால் தெரியும் நீல ஏரியையும் பார்த்துக் கொண்டிருந்தபோது பூங்கோதையின் நினைவு வந்தது.

'வந்து இரண்டு நாள்கள்தாமே ஆகியிருக்கின்றன? நாளைக்குக் கேட்போம். நாளைக்குக் கேட்போம்' என்று நாளைத் தள்ளிக் கொண்டிருந்தேன். கடைசியில் இனியும் அம்மாவிடம் பூங்கோதையைப் பற்றிக் கேட்காமல் இருக்க முடியாது என்று என் மனம் தீர்மானித்து விட்டது.

''ஏன் அம்மா! எதிர்வீட்டுப் பூங்கோதை எங்கே? அந்த ஜன்னல் அருகே யாரையும் காணோமே? வீடு ஏன் பூட்டிக் கிடக்கிறது?'' என்று கேட்டேன்.

''அவளுக்குக் கல்யாணமாகி விட்டது; புக்ககம் கூடப் பட்டணத்தில் தான்!'' என்றாள் தாயார்.

''கல்யாணத்துக்கு ஒரு கடிதம் கூடப் போடவில்லை பார்த்தாயா, அம்மா! சிநேகிதம் எல்லாம்...'' என்று நான் கூறுவதற்குள்,

''இல்லை, இல்லை. நான்தான் அவளுக்கு உன் விலாசத்தைக் கொடுத்தேன்; கடிதம் வந்து சேரவில்லை போலிருக்கிறது!'' என்றாள் தாயார்.

நான் கல்யாணம் கடிதம் கிடைக்காமல் போனதைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், உடனே பூங்கோதையின் விலாசத்தை வாங்கிக் கொண்டேன்.

அன்று மாலையே என் பெண் சுகுணாவுடன் பூங்கோதையைச் சந்தித்தேன்.

பூங்கோதை என்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டாள். என்னால்தான் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கன்னங்கள் ஒட்டி, கவலைக் கோடுகள் அவள் முகத்தில் படர்ந்திருந்தன.

கூடத்தில் அவள் தகப்பனார் இராமநாதன் உட்கார்ந்திருந்தார். "வா!" என்று அவர் என்னை வரவேற்றார்.

நான் வந்த ஆனந்தத்தில் பூங்கோதைக்கு என்ன செய்வது என்று கூடப் புரியவில்லை. என் பெண் சுகுணாவை அழைத்து அன்புடன் அணைத்துக் கொண்டாள். "உன்னை அப்படியே உரித்து வைத்திருக்காளடி! ஆனால், மூக்குத்தான் அப்பாவின் மூக்கு!" என்றாள்.

"நீ எப்போது அவரைப் பார்த்திருக்கிறாய்?" என்றேன்.

"ஏன்... உன் கல்யாணத்தின்போதுதான்! அடுத்த தீபாவளிக்கு, அதற்குப் பிறகு பொங்கலுக்குக்கூட வந்திருந்தாரே! நீதான் என் கல்யாணத்துக்கு வராமல் என்னையே மறந்து விட்டாய்! நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறப்பேனா?" என்றாள்.

"அப்படியெல்லாம் நினைக்காதே, கோதை! உன்னை மறந்து விட்டிருந்தால் இப்போது தேடி வந்திருப்பேனா? அது இருக்கட்டும்! உன் கணவர் வெளியே போயிருக்கிறாரா, குழந்தைகள் ஏதாவது உண்டா, உனக்கு?" என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே போனேன்.

அவள் முகம் கறுத்தது. "ராஜி வா! மாடிக்குப் போகலாம்" என்று அவள் என்னை அழைத்துக் கொண்டு போனாள்.

சுகுணா தெருவில் விளையாடப் போய்விட்டாள்.

மாடியில் மனம் விட்டு இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். என் மகள் சுகுணா வீட்டுக்குப் போகத் தொந்தரவு செய்யத் தொடங்கிய பிறகே எனக்குச் சுய நினைவு வந்தது.

"அடிக்கடி நீ வந்து போனால்தான் என் மனத்துக்கு ஆறுதல் அளித்தது போலிருக்கும்" என்றாள் பூங்கோதை.

இதைச் சொல்லுபோது அவளை அறியாமல் இரு துளி நீர் முத்துகள் கீழே விழுந்ததை நான் கண்டேன்.

"பாவம் பூங்கோதை! அவளுக்கு இப்படியா நேர வேண்டும்" என்ற எண்ணத்துடன் வீடு சென்ற எனக்கு மனதே சரியாக இல்லை.

பூங்கோதையின் பெற்றோர் சுமாரான வசதி படைத்தவர்கள். பூங்கோதை ஒரே பெண். எனக்குக் கல்யாணமாகும்போது அவள் தாயார் அவளுக்கும் கல்யாணம் செய்து விட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்.



பூங்கோதைக்கு அப்பொழுதிலிருந்தே வரன் பார்த்து வந்தார்கள். சுலபமாக முடியும் தறுவாயிலிருக்கும் வரன்களை அவள் தந்தை தட்டிக் கழித்து வந்தார். கடைசியில் தூரத்து உறவு ஒருவரின் பிள்ளை கிடைத்தான். அந்த வரனையே தேர்ந்தெடுப்பதென்று அவள் தந்தை தீர்மானித்தார்.

பூங்கோதையை மணப்பதற்கு அவர்கள் வீட்டில் சில நிபந்தனைகளைப் போட்டனர். 'பையனுக்குச் சீர் நிறையச் செய்ய வேண்டும்; பையன் மெடிக்கல் காலேஜில் படிக்கப் பிரியப்படுகிறான். அதற்காகும் செலவைப் பெண் வீட்டாரே ஏற்க வேண்டும். அதுவரை பெண் பிறந்த வீட்டிலே இருக்க வேண்டும்'.

இராமநாதனுக்கு இந்த நிபந்தனைகள் எல்லாம் ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. 'மருமகன் டாக்டருக்குப் படித்துப் பாஸ் செய்தால் பிரபல டாக்டராகப் போகிறான். அதனால் நமக்குத்தானே லாபம்? ஐந்து வருஷம் வரை பெண் வீட்டோடு இருந்தால் தப்பு ஒன்றுமில்லை; கோதைக்குச் சின்ன வயசுதானே? அவர்கள் சொல்வதுபோலப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டால் படித்துக் கொண்டே இருப்பாள். நாளைக்கு டாக்டர் கணவனுடன் பழக படித்திருந்தால் நல்லதுதானே' என்று எண்ணி, பிள்ளை வீட்டாரின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு ரொக்கமாகக் காலேஜ் படிப்புக்கென ரூபாய் ஐயாயிரம் எண்ணிக் கொடுத்து விட்டார்.

கோதையின் தாயாருக்கு இதில் துளிக்கூடப் பிரியம் இல்லை. ஆனால், இராமநாதன் ஒன்றைச் செய்யத் தீர்மானித்துவிட்டால் அதை யாராலும் தடுக்க முடியாது.

கல்யாணமான இரண்டு மாதங்களுக்கெல்லாம் இராமநாதன் பட்டணத்துக்கே போய்விட்டார். பெண்ணை அங்கே படிக்க வைத்துக் கொண்டு, தம் சொந்த வீட்டில் தங்கியிருந்தார். மாப்பிள்ளை வீடும் அங்குதான். ஆனால், ஒருநாள் கூடச் சம்பந்தி வீட்டுப் பக்கத்தில் இவர் பெண்ணை அனுப்ப வேண்டுமே! - கிடையாது. அதனால் மருமகனின் படிப்புக்குக் குந்தகம் நேரிட்டால் என்ன செய்வது? - அதற்காக அவ்வாறு செய்து வந்தார்.

முதல் தீபாவளி. பூங்கோதை பருவ வயதிலிருந்தாள். தீபாவளி நெருங்க நெருங்க அவளுக்கு இயற்கையாக உண்டான ஓர் ஆர்வம் அந்த நாளை எதிர்நோக்கியது. முன்கூட்டியே இராமநாதன் மாப்பிள்ளையைத் தீபாவளிக்கு அழைத்திருந்தார்.

தீபாவளிக்கு முதல் நாள், இராமநாதன் மாப்பிள்ளை வீட்டுக்குக் காரை அனுப்பினார். கார் அரைமணி நேரம் கழித்துத் திரும்பி வந்தது.

ஜன்னல் வழியே தெருவை நோக்கிக் கொண்டிருந்த கோதையின் கண்கள், காரின் பின் சீட்டைத் துழாவின. ஆனால்...

ஆனால் என்ன? ''அவர் வீட்டில் இல்லை, ஸார்!'' என்று டிரைவர் சொன்னான்.

மறுபடியும் இராமநாதனே காரில் கிளம்பிப் போனார். ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பி வந்தார். அவர் முகத்தில் ஈயாடவில்லை. கோதைக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளுடைய கனவு கலைந்தது.

இந்தச்சம்பவத்தைச்சொன்னபிறகு, ''இன்று மூன்று வருஷமாகிறது. இன்னும் நான் அவரைப் பார்க்கவில்லை. அவர் யாரோ ஒரு பள்ளிக்கூட சிநேகிதியுடன் சுற்றுகிறாராம். வீட்டிற்குக் கூட வருவதில்லையாம். எனக்குக் கல்யாணம் இல்லையென்று நானா அழுதேன்? கல்யாணம் என்று ஒன்றைச் செய்து கொண்டு இப்படித் திண்டாடும்படி ஆண்டவன் ஏன்தான் என் தலையில் எழுதினானோ!'' என்றாள் அவள்.

இதைக் கேட்டதும் நான் அழுதே விட்டேன். அதற்கு மேல் அவளுடைய சோகக் கதையை அவள் வாய் மூலமாகக் கேட்க விரும்பாமல் நான் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

என் டாக்டர் சிநேகிதி சுசீலா, எல்.ஐ.எம். படித்தவள். மலையாளிப் பெண். என் குழந்தையை எடுத்துக் கொண்டு நான் அவளிடம் அடிக்கடி மருந்து வாங்கப் போவேன். அப்படிப் போகும்போது ஏற்பட்ட ஒரு பழக்கம் சிநேகமாக ஆகிவிட்டது.

அவளும், வயதான தாயுமாக அந்த வீட்டில் குடித்தனம் இருந்தனர். பகல் வேளைகளில் அடிக்கடி நான் அங்கு சென்று பேசிக் கொண்டிருப்பேன். நல்ல தமிழ் பேசும் வாலிபன் ஒருவன் அப்போது அங்கே வருவான்.

'ஹலோ!' என்று குதூகலமாக அவனுடன் பேசக் கிளம்பி விடுவாள் சுசீலா. நானும் அத்துடன் விடைபெற்றுக் கொள்வேன்.

ஒருநாள் கல்யாணங்களைப் பற்றிப் பொதுவாகப் பேச்சு வந்தபோது ஆடவர்கள் வரதட்சணை என்றும், படிப்புக்கென்றும் கேட்பதைப் பற்றி நான் அங்கலாய்த்தேன். அத்துடன் பூங்கோதையின் சோகக் கதையையும் கூறினேன்.



டாக்டருக்குப் படிப்பதற்காக ஐயாயிரம் வேண்டும். பெண் அந்த ஐந்து வருடங்களும பள்ளியில் படிக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் போட்டுவிட்டு, பிறகு திரும்பிக் கூடப் பார்க்காமல் இருக்கும் கோதையின் கணவரைப் பற்றி கூறினேன். கட்டிய மனைவி இருக்க வேறு யாருடனோ அந்த 'மகராசன்' சுற்றுவதாகவும் சொன்னேன்.

சுசீலா எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்தாள். நான் வழக்கம்போல் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

திடீரென உறவினர் முறையார் ஒருவர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போக வேண்டியிருந்ததால், நான் என் கணவருடன் கிளம்பி வெளியூருக்குச் சென்று பத்து பன்னிரண்டு நாள்கள் கழித்து வந்தேன்.

வரும்போது டாக்டர் சுசீலா வீட்டைப் பார்த்தேன். எப்பொழுதும் காலை வேளைகளில் நோயாளிகளின் கூட்டம் 'ஜே ஜே' என்றிருக்கும் அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது.

'எங்கே போயிருப்பாள்?' என்று யோசித்துக் கொண்டே நான் என் வீட்டை அடைந்தேன். என் தாயார், என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். மிகவும் கஷ்டப்பட்டுக் கொச்சைத் தமிழில் எழுதப் பட்டிருந்த அந்தக் கடிதத்தை டாக்டர் சுசீலா எழுதியிருந்தாள். எனக்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டது. கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

படித்து முடித்ததும், ஒரு பக்கம் சந்தோஷமும் இன்னொரு பக்கம் வருத்தமும் உண்டாயின.

என்னதான் தைரியமாக இருந்தாலும் பெண்ணுள்ளம் சில சமயங்களில் ஏமாந்து விடுகிறது. அதற்கிணங்க, பூங்கோதையின் கணவன் சுந்தரமூர்த்தியைச் சந்திக்க நேரிட்டபோது அவனது பசப்பு வார்த்தைகளாலும், கவர்ச்சிகரமான பேச்சினாலும் சுசீலா மயங்கி விட்டாளாம்.

சுந்தரமூர்த்தியும் தனக்குக் கல்யாணமாகவில்லையென்றும் சுசீலாவையே கல்யாணம் செய்து கொள்வதாகவும் வாக்களித்தானாம். இதை எழுதிவிட்டு, 'நல்ல சமயத்தில் நீ வந்து உன் தோழியின் துயரக் கதையைக் கூறினாய். எனக்குச் சந்தேகம் வலுத்து விசாரிக்க, உன் தோழியின் கணவன்தான் என்னை ஏமாற்றப் பார்த்தவன் என்று தெரிந்தது. எப்படியோ பெரும் பாதகம் செய்வதிலிருந்து நான்

தப்பினேன். இந்தச் சென்னை நகரில் என்னைப் போன்ற இளம் பெண் துணிந்து டாக்டர் தொழிலைத் தனியே செய்வது ஆபத்துதான். நான் தாயாருடன் சொந்தக் கிராமம் செல்கிறேன். எங்கிருந்தாலும் நோயாளிகளுக்குத் தொண்டு செய்யலாமல்லவா? உனக்கு என் இதயப்பூர்வமான நன்றி!' என்று அவள் கடிதத்தை முடித்திருந்தாள்.

கதை, நாவல்களில் வருவது போன்ற இச்சம்பவத்தால் என் மனம் குழம்பிற்று. குழம்பிய உள்ளத்துக்கு ஏதாவது மாறுதல் வேண்டுமென்பதற்காக அன்று மாலை என் கணவருடன் நான் சினிமாவுக்குச் சென்றேன்.

படம் தொடங்கும் சமயத்தில் ஒரு தம்பதி எங்களுக்கு முன் இருக்கையில் வந்து அமர்ந்தார்கள். அவர்கள் வேறு யாருமல்லர்; பூங்கோதையும் அவள் கணவனும்தான்!

படம் முடிந்து வெளியே வரும்போது அவள் என்னை நெருங்கி, "ராஜி, என் கலி நீங்கிவிட்டதடி! என் கணவர் திடுதிப்பென்று மனம் மாறி ஒருநாள் வந்து விட்டாரடி. அந்தப் பழைய காதலி இவரை ஏமாற்றி விட்டாளாம். மன்னிப்புக் கேட்காத குறையாய், அழ மாட்டாத குறையாய் என்னிடம் எல்லாவற்றையும் சொன்னாரடி!" என்றாள்.

அவளது சோபையிழந்த முகத்தில் அப்பொழுது புதுப்பொலிவு பொங்கியது.

நான் ஒரு மௌனப் புன்னகையுடன் அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன்.

• • • •



# கல்யாணத் திருட்டு

ஆங்கிலத்தில் ஒரு ரசமான துணுக்கைப் படித்த ஞாபகம் வருகிறது.

ஜேப்படி தம்பதி; அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை பிறந்தது. பிறந்த அந்தக் குழந்தையை நர்ஸ் கையில் எடுக்கும்போது, அந்தக் குழந்தை நர்ஸின் கையிலிருந்த மோதிரத்தை லாகவமாகக் கழற்றித் தன் கையில் பொத்திக் கொண்டது. 'பார்த்தீர்களா... நம்ம குழந்தை பிறக்கும்போதே நம்மை விடக் கில்லாடியாய் இருக்கு!' என்று அதிசயப்பட்டாளம் ஜேப்படி மனைவி.

'காற்றிலேறி விண்ணையும் சாடுவர் காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே!' என்றார் பாரதியார்.

பஸ்ஸில் கண்டக்டர் ஜோதிமுத்துவுக்கும் வாயில் புடைவை மோகினி பாரிஜாதத்துக்கும் காதல் முகிழ்ந்தது.

ஒரு பெண்ணைத் தலையில் கட்ட 'அம்மாவுக்கு அபாயம்' என்று பொய்த் தந்தி வர, அதைக் கண்டு ஓடும் ஜோதிமுத்து உண்மையை அறிந்து சென்னைத் திரும்பினான்.

பலன் - வேலை போயிற்று.

காதலியின் அன்னை சவ அடக்கத்துக்காக ஜோதிமுத்து ஜேப்படி செய்ய உதவுகிறான்.

பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டு சிறைத் தண்டனை அடைகிறான். விடுதலை ஆனதும் காதலி பாரிஜாதம் விஷம் அருந்துவதைத் தடுத்துக் காப்பாற்றுகிறான் ஜோதிமுத்து.

கடைசியில் கதையின் உச்சகட்டமாகத் திகழ்வது தன் காதலியின் மாமாவிடமிருந்து தன் திருமணத்துக்கான மாங்கல்யம் உள்ள பர்ஸை ஜோதிமுத்து திருடுவதுதான்.

கடைசியில் திருந்திய ஜோதிமுத்து - பாரிஜாதம் திருமணம் திருத்தணியில் முடிவதோடு கதை முடிகிறது.

பஸ்ஸில் ஒரு பஸ் கண்டக்டர் தமக்கு நேர்ந்த அனுபவத்திலிருந்து கூறிய ஒரு நெஞ்சை உருக்கும் சம்பவத்தைக் கதையாக உருவாக்கித் தந்திருக்கிறார் கதைச் செம்மல் விக்கிரமன்.

சிறுகதைக்குரிய இலக்கணம் அனைத்தும் பொதிந்துள்ள இக்கதை நம்மை நெகிழ்விக்கிறது. ஜேப்படி திருடனுக்கு 'Poetic justice' ஆகத் தண்டனை வழங்கியதோடு திருந்த வைத்திருப்பது கதைக்கு மெருகூட்டுகிறது.

'பேராசிரியர் கல்கியின் வாரிசு விக்கிரமன்' என்பதை நாவல்களில் மட்டுமன்று; தம் சிறுகதையிலும் நிரூபித்திருப்பதைக் கண்டு பெருமைப் படலாம்.

சிறுதையைப் பற்றிக் குறிப்பிடும் 'மணிக்கொடி' பரம்பரை ந. சிதம்பர சுப்பிரமணியம், ''சிறுகதைக்குக் காலம், இடம், சம்பவம் ஆகியவற்றில் ஒருமைப்பாடு இருக்க வேண்டும். இலக்கிய வகைகளிலே சிறுகதை மிக நுட்பமானது. சிறிய வரம்புக்கு உட்பட்டது. வாழ்க்கையின் சிறிதான அம்சத்தையே காட்ட வல்லது! ஒரு மின்னல் வெளிச்சத்தில் நாம் எதைக் காண்கிறோமோ, அதைக் காட்டக் கூடியது. ஏக்கம், ஏமாற்றம், பெருமூச்சு, கண்ணீர், புன்சிரிப்பு, நடுக்கம் - இவைதாம் சிறுகதைக்கு விஷயமாக இருக்க முடியும்'' என்கிறார்.

'சிறுகதைச் சேக்கிழார்' விக்கிரமன், சிறுகதைக்குரிய லட்சணங்கள் அனைத்தும் 'கல்யாணத் திருட்டு' என்னும் சிறுகதையில் துலங்க வைத்து மெச்சும்படிப் படைத்திருப்பது தனிச் சிறப்பு.

– 'கல்கி' பி.எஸ். மணி (குண்டுமணி)





# 19. கல்யாணத் திருட்டு

**கடைசி 'டிரிப்' அடித்தபின் பஸ்ஸை ஷெட்டிற்குள் விட்டுவிட்டு நானும் டிரைவர் சந்திரனும் வெளியே வந்தோம்.**

**அன்று இருள் சூழ்ந்திருக்கவில்லை. பூர்ண நிலவு நாள். பஸ் எனும் கூண்டுக்குள் குறுக்கும் நெடுக்குமாகப் போய் வந்து கொண்டிருந்த எனக்கு வெளிக்காற்றும், தார் ரோட்டு நடையும் இதமாக இருந்தன. நாள் முழுவதும் எல்லாரையும் ஏற்றிச் சென்ற நாங்கள் ஒரு மைலுக்கு மேல் வீட்டிற்கு நடக்கத்தான் வேண்டியிருந்தது.**

**''ஜோதிமுத்துவைப் பற்றி... பாதி சொன்னே, மீதியை விட்டு விட்டாயே...'' என்றேன் சந்திரனிடம். இப்பொழுது தோளிலே சில்லறை குலுங்கும் பை இல்லை; கையை ஹாயாக வீசலாம்; மனசையும் ஓட விடலாம்; சந்திரன் ஏதாவது பேச மாட்டாரா... என்றிருந்தது.**

**''ஜோதிமுத்து கெட்டிக்காரப் பேர்வழிப்பா. நான் டிரைவர். அவன் கண்டக்டர். இந்தப் புரசைவாக்கம் ஸ்டாண்டிலே இப்பவும் கும்பல்; அப்பவும் கும்பல். எங்களுக்கு அப்போ நாலு டிரிப் காலையில் 'ரஷ்' வேளையில் உண்டு. அந்த எட்டரை மணி சுமாருக்கு வரும் 'டிரிப்'பிலே ஜோதிமுத்துவுக்கு ரொம்பக் குஷி.**

**''வாத்தியாரே கொஞ்சம் மெல்லப் போ'' என்பான்.**

**''வாத்தியாரே கொஞ்சம் நிறுத்திக்கோ'' என்பான்.**

**எல்லாம் வாயில் புடைவை மோகினிக்காகத்தான். 'ஐயோ, ஆண்டவனே! இப்படி ஏன் இந்தப் பெண் பிள்ளைங்க படிக்கப் போகிறேன்னு ஆம்பளைங்க உள்ளத்தையே கிறங்க அடிச்சுடறாங்களோ தெரியலை' என்று எண்ணிக் கொள்வேன்.**

**கையிலே ஒரு பை; காலிலே ஒரு ஸ்லிப்பர்; மூக்கிலே கண்ணாடி இல்லை, உடம்பைப் பிடித்தாற்போன்ற 'வாயில்' புடைவை இத்தியாதியுடன் அந்தப் பெண்தான் ஜோதிமுத்துவை மயங்க வைத்தவள்.**

**புரசைவாக்கம் ஸ்டாண்டிலேயே ஸூட், ஹேட் போட்டவங்களுக்கே இடம் கிடைக்காதபோது, இந்தக் கொழர்தைக்கா இடம் கிடைக்கப்**

போவுதுன்னு ஜோதிமுத்து சொல்வான். அந்தப் பெண்ணுக்காக அவன் சொல்கிறபடியெல்லாம் பாதியிலே பஸ்ஸை நிறுத்தி ஓட்டுவேன்.

நான் ஒரு தடவை சொன்னேன்: ''ஜோதி! நாம்ப செய்யறது நல்லால்லே... யாராவது ஒரு பாஸஞ்சர் என்னிக்காவது கேட்டுட்டான்னா என்ன பண்றது?'' என்றேன்.

ஜோதி சிரித்துக் கொண்டே சொன்னான்: ''அன்னிக்கே இந்த வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுட்டுப் போயிடுவேன்'' என்று.

அவனுடைய இந்தத் துணிவான பதில் என்னைத் திடுக்கிட வைத்தது. இவனையும் ஒருத்தி காதலிக்கிறாளே... திடீர்னு வேலைக்கு முழுக்குப் போட்டுடறானாமோ..!

அந்தப் பொண்ணு பேரு சொல்லலையே... பாரிஜாதம்! வயது பத்தொன்பதுக்குக் குறையாது. டிரெயினிங் ஸ்கூல்லே படிச்சுட்டிருக்காம். ஜோதி ஒன்றும் ஒளிக்காமல் எல்லாவற்றையும் என்னிடம் சொல்லுவான்.

''இன்னும் ஒரு வருஷம்தான்! அப்புறம் ராஜா சோறு! அது வாத்தியாராய்ப் போயிடும்; நானும் சம்பாதிச்சு அதுவும் சம்பாதிச்சா...'' என்பான், உள்ளத்திலே கள்ளங்கபடு இல்லாமல்.

ஜோதிமுத்துவுக்குத் திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில் போகும் வழியிலே ஒரு கிராமம் சொந்த ஊர். ஒன்பதாவது வரையில் படித்த அவனுக்குப் பள்ளிக்கூட சிறைவாசம் கட்டோடு பிடிக்காததால், பட்டணம் போய்ப் பிழைத்துக் கொள்கிறேன் என்று வீட்டில் சொல்லிவிட்டு வந்து விட்டான். ஆள் கம்பீரமாக வாட்டசாட்டமாக இருப்பான். தலையிலே 'வாஸ்லைன்' தடவி வாரி விட்டு, மொற மொறவென்று இஸ்திரி போட்ட சட்டையை மாட்டிக் கொண்டு டியூட்டி இல்லாத நாள்களில் அவன் சுற்றுவதைப் பார்ப்பவர்கள், இவன் கண்டக்டர் தொழிலுக்காகப் பிறந்திருக்கக்கூடாது என்பார்கள்.

எங்கெல்லாமோ வேலைக்கு அலைந்து, கடைசியில் எங்கள் பஸ் கம்பெனியில் அவனுக்குக் 'கிளீனர்' வேலை கிடைத்தது; பிறகு கண்டக்டராகப் பிரமோஷன் ஆயிற்று.

நானும் என் ஐந்து வருஷ சர்வீஸில் எத்தனையோ கண்டக்டர்களைப் பார்த்துவிட்டேன். ஜோதிமுத்துவின் தோற்றமும் சிரித்துப் பேசி வந்த புதிதில் இருந்த சுபாவமும் என்னைக் கவர்ந்து விட்டன.

**பா**ரிஜாதம் புரசைவாக்கத்தில் ஓட்டேரிக்குப் போகும் வழியில் ஒரு தெருவில் வாசித்து வந்தாள். தகப்பனார் இல்லை. வயதான தாய்



மட்டும்தான். இனி பாரிஜாதம் பாஸ் செய்து வேலைக்குப் போய்தான் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்.

பாரிஜாதத்தின் மாமன் ஒருவன் நீலகிரியில் இருந்தான்; கல்யாணமாகி இரண்டு, மூன்று குழந்தைகளுடன் பெரிய 'குடும்பி'யா யிருந்தான்; அப்படியும் மாதம் முப்பது ரூபாய்க்குக் குறையாமல் பிரதி மாதமும் அனுப்பி வந்தான். அந்தக் காலத்தில் பாரிஜாதத்தின் தகப்பனார்தான் அவனை முன்னுக்குக் கொண்டு வந்தாராம். வருஷா வருஷம் சேலைகள் வேறு எடுத்துத் தருவான்.

சிறு தையல் மெஷின் ஒற்றை வைத்துக் கொண்டு அதனால் கிடைப்பதன் மூலமும், மாமாவின் பணத்தின் மூலமும் கஷ்டத்துடன் வாழ்க்கையைத் தள்ளி வந்தார்கள். பள்ளிக்கூடத்தில் 'ஸ்காலர்ஷிப்' கிடைத்துக் கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் ஜோதிமுதுவின் 'மோகன வடிவம்' அவளைக் கவர்ந்துவிட்டது. என் காலத்தில் இந்த மாதிரி காதல் - கீதல் ஒன்றும் ஏற்படுவதில்லை. இந்த ரேஷன் அரிசிக் காலத்தில்தான் உதயமாகிறது எல்லாம்!

பாரிஜாதம் - ஜோதிமுத்து இவர்களுடைய காதல், நாவல் கதைகளில் வர்ணிப்பதுபோல வளர்ந்து வந்தது.

ஊரைவிட்டுக் கிளம்பி வந்த பிறகு ஜோதிமுத்து என்ன செய்கிறான், எப்படி வாழ்கிறான் என்பது அவனது வீட்டார்களுக்குத் தெரியவில்லை. ஊரிலிருந்து கடிதம் வந்தால் பதில் போட மாட்டான். திடீரென ஒருநாள், 'அம்மாவுக்கு அபாயம்; உடனே வரவும்' என்று தந்தி வந்தது. ஜோதி முத்துக் குழம்பிப் போனான்; பதறினான்; லீவுக்காக முதலாளியிடம் ஓடினான்; கையை விரித்தார் அவர். ஆத்திரம் ஆத்திரமாக வந்தது ஜோதிக்கு. அப்போது ஆறு மணி. என்னிடம் ஓடி வந்தான். ''வாத்தியாரே! தாமதிக்க நேரமில்லை; அவசரத்திற்கு இல்லாத லீவு வேறு எதற்கு... அதுகிட்டே கூடச் சொல்லிக் கொள்ள நேரமில்லை. நீ அதை பஸ்ஸிலே பாத்தியானா சொல்லிவிடு'' என்று கூறிவிட்டு விரைந்தான் ஸ்டேஷனை நோக்கி. நான்காவது நாளே குனிந்த தலையுடன் ஆபீஸ் வாசலில் நின்று கொண்டிருந்த ஜோதிமுத்துவைக் கண்டவுடன் திடுக்குற்றேன்.

''என்ன தம்பி, அம்மாவுக்கு எப்படி சௌக்யம்?'' என்றேன்.

ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் ஜோதி. ''உடம்பா... என்னை விளையாட்டுக்காட்டியிருக்கிறான்என்மாமன்காரன். பங்காளிக்காரனுவ

இல்லையா? அம்மாவுக்கு எப்படியோ ஏதோன்னு நான் ஓடினா அம்மா அங்கே குத்துக்கல்லுப் போல இருக்கா. என்ன விஷயம்னு கேட்டேன். எல்லாரும் குபீருன்னு சிரிச்சுப் போட்டாங்க. 'என்ன இது வேடிக்கை... வேலை வெட்டியை விட்டு வந்துட்டேன்... நல்லா இருக்கா உங்களுக்கு?' என்று கூவினேன். 'என்னடா, ஒரு கடுதாசி உண்டா? சௌக்ய சமாச்சாரம் உண்டா? சும்மா வான்னா வருவியா தம்பி? இப்படிச் செஞ்சாத்தான் வருவே... இங்கேயே இரு... மேலையூரான் மவளைப் பேசி வச்சிருக்கோம்' என்று என்னென்னமோ பேசிக்கிட்டே போனாவுக. அங்கே இருந்தா விஷயம் விபரீதமாப் போயிடும்னு அடுத்த பஸ்ஸுக்கே திருநெல்வேலி வந்து ரயிலேறிட்டேன்'' என்றான் ஜோதிமுத்து. 'வேலை இல்லை' என்று சொல்லி விட்டாராம் முதலாளி.

ஜோதிமுத்து தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறினான். எங்கெங்கெல்லாமோ சுற்றி யிருக்கிறான். இரண்டு வருஷங்களாகப் பஸ்ஸிலே 'ரைட், ஹோல்டான்' போட்டவன் வேறு என்ன வேலையைச் செய்ய முடியும்?

ஒருவாரம் கழித்து என்னைச் சந்தித்தான். பஸ்ஸிலேதான். பாரிஜாதத்தின் தாயாருக்கு ரொம்பவும் உடம்பு அதிகமாய் விட்டதாகவும் தன்னைத்தான் அவள் நம்பியிருப்பதாகவும், ஓரிடத்திலும் வேலை கிடைக்கவில்லையென்றும் கண்ணீர் விடாத குறையாகக் கூறினான். நான் அதிகமாக அவனிடம் பேச்சுக் கொடுக்க முடியவில்லை. 'டிரைவரிடம் பேச்சுக் கொடுக்காதே அப்பா. ஆக்ஸிடெண்ட் ஆகிடப் போறது' என்று யாரோ ஒரு பிரயாணி முணுமுணுப்பது காதில் விழுந்தது.

சடக்கென்று ஜோதிமுத்து பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்றான். அவன் இறங்கிப் போய் ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் பஸ்ஸிலே பர்ஸைக் காணோம் என்று ஒருவர் கூக்குரலிடுவது காதில் விழுந்தது. ஜோதிமுத்துவை நான் சந்தேகிக்க முடியுமா?

ஆறு மாதங்கள் வரை ஜோதிமுத்துவை நான் சந்திக்கவே இல்லை. ஒருநாள் எதேச்சையாக மூர் மார்க்கெட் அருகே அவனைச் சந்தித்தேன். 'வாத்தியாரே' என்று கதறியே விட்டான். இருவரம் ஒதுக்குப்புறமாகச் சென்று புல் தரையில் அமர்ந்தோம். இந்த ஆறு மாதங்களில் தான் ஜோதிமுத்து எப்படியெல்லாம் மாறிப் போய்விட்டான்!

பாரிஜாதத்தின் தாய் இறந்துவிட்டாள். பிணம் தூக்குவதற்குக் கூடப் பணமில்லை. எங்கேயோ போய்ப் பணம் கொண்டு வருகிறேன்னு கிளம்பிய ஜோதிமுத்து, பத்து நிமிடங்களில் திரும்பி வந்தான்.



ஜேப்படி செய்வது அப்போது இரண்டாவது தடவையாம். ஒருவரது பையிலே கனமாக இருந்த பர்ஸை லாகவமாக அபகரித்து பர்ஸிலிருப்பதை எடுத்துக்கொண்டு, பர்ஸைக் குப்பைத் தொட்டியிலே போட்டு வந்துவிட்டான். பிறகு பாரிஜாதத்தின் தாயாரின் காரியங்கள் 'ஜாம் ஜாமென்று' நடந்தேறின. அதன் பிறகு ஜோதிமுத்துவுக்குப் பாரிஜாதத்தின் வீடுதான் அடைக்கலம்

கல்யாணம் செய்து கொண்டு விடலாம் என்று ஜோதிமுத்து பாரிஜாதத்தை வற்புறுத்தியிருககிறான். 'இன்னும் மூன்று மாதங்கள் தான்; அப்புறம் பரீட்சை முடிந்துவிடும்; முடிந்தவுடன் திருத்தணிக்குச் சென்று கல்யாணத்தை முடித்துக் கொள்வோம்' என்றாளாம் பாரிஜாதம். பரீட்சை முடிவதை ஆவலுடன் எதிர்பார்த்தான். அதற்குள் முடிந்த வரை பலரது ஜேபியைப் பதம் பார்த்தான்.

ஜேப்படி ஜோதிமுத்து என்று அவளுக்குத் தெரியாவிடினும் பிரியக் காதலன் ஜோதிமுத்தாகவே பாரிஜாதம் கண்களுக்குப்பட்டது. அங்கே வேலை செய்கிறேன்; இங்கே காண்டிராக்ட் என்றெல்லாம் பாரிஜாதத்திடம் பொய் சொல்லி வந்தான். எப்படியோ செலவுக்குப் பணம் வந்து விடும்.

ஆனால், ஒருநாள் பார்க் ஸ்டேஷன் அருகே ஒருவர் பையில் ஜோதி முத்து கையைப் போடும்போது பர்ஸும் கையுமாகப் பிடிபட்டான். இரண்டு, மூன்று நாள்கள் வரை ஜோதிமுத்துவைக் காணாத பாரிஜாதம் துடியாய்த் துடித்தாள். கடைசியில் அவன் கைது செய்யப்பட்டு மூன்று மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்தவுடன் அவள் தலை சுழன்றது. மூன்று மாதம்... மூன்று மாதம் என்று அவள் விம்மினாள். அதே குழப்பத்துடனேயே பரீட்சை எழுதினாள். பரீட்சை முடிந்தது. முடிவு வர இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேலிருந்தது. இதுவும் சோதனையா என்று உருகிப் போய் விட்டாள் பாரிஜாதம்.

பரீட்சை முடிவு வந்தது. பரீட்சையில் பாரிஜாதம் தேறவில்லை. அவளுக்கு இந்த உலகமே ஆடுவது போலிருந்தது. அவள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாலும் ஏதோ பயங்கர அவமான உணர்ச்சி அவளைப் பயமுறுத்தியது. பல்லைக் கடித்துக் கொண்டு பல நாள்களைத் தள்ளியும் அந்த வீடு, அந்தத் தெரு எல்லாம் அவளைப் பார்த்துக் கெக்கலிக் கொட்டிச் சிரிப்பது போல் உணர்ந்தாள்.

ஒருநாள் காலை... அவள் தன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு, ஒரு டம்ளரில் சிறிது காபியை ஊற்றினாள். மடியிலிருந்து ஒரு சிறு

பொட்டலத்தை எடுத்து அதில் போட்டாள். அவள் கை நடுங்கியது, அந்தச் செயலைச் செய்ய. உள்ளம் மட்டும் திடமாக இருந்தது. சாத்தப்பட்டிருந்த கதவை யாரோ தட்டினார்கள். அந்த வீட்டின் வேறொரு பாகத்தில் குடியிருப்பவர் வீட்டுப் பெண் ஏதோ கேட்கக் கூப்பிட்டாள். பாரிஜாதம் அவளைத் தனியே அழைத்துச் சென்றாள். அவள் அந்த அறையை விட்டு வெளியே போவதற்கும், சந்தடியின்றி ஜோதிமுத்து அந்த அறையினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. டம்ளரிலிருந்த காபியை எடுத்தான்.''

டிரைவர் இந்த இடத்தைச் சொல்லும்போது சிறிது நிறுத்தினார். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி, புகையிலைத் துண்டையும் பாக்கொன்றையும் போட்டுக் கொண்டார்.

''ஐயோ... இதென்ன இந்த இடத்தில் நிறுத்திவிட்டீர்கள்; நாவல் கீவல் எழுதக் கற்றுக் கொள்கிறீர்களா? ஜோதிமுத்து அந்த விஷம் கலந்த காபியைக் குடித்தான்; சுருண்டு விழுந்தான். பாரிஜாதம் அறைக்கு வந்தாள்... என்ன சோகக் கதையைக் கூறிவிட்டீர்கள்!'' என்று நான் துடியாய்த் துடித்தேன்.

''பொறுமையில் உனக்குப் பரிசு கொடுக்க வேண்டும்!'' என்று கூறிவிட்டு போட்ட வெற்றிலையைக் குழப்பாமலேயே உமிழ்ந்துவிட்டு ''அதென்ன அப்படி அவசரப்பட்டுட்டே... நாவல், கீவல் நான் படிக்கலை, தம்பி! ஜோதிமுத்து விஷம் குடிச்சுச் செத்துப் போயிருந்தா... நான் மூர் மார்க்கெட்டியில் அவனுடைய ஆவியுடன்தான் பேசியிருக் கணும். ஆனால், ஜோதி சாகவில்லை; சிநேகிதியுடன் பேசிவிட்டு வந்த பாரிஜாதம் திரும்பவும் அறைக்குள் நுழைந்தபோது, ஜோதிமுத்து அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். திடுக்குற்று அவள் உடல் பூராவும் சிலிர்த்துப் போனாலும், அவளுக்கு ஏதோ அந்தச் சமயம் அவனைக் காணவே வெறுப்பாக இருந்தது. ஒன்றும் பேசவில்லை. டம்ளரில் இருந்த காபியை எடுத்து 'முருகா!' என்று சொல்லி 'மடக் மடக்'கென்று குடித்து விட்டாள்.

குடித்த பிறகு அவள் முகத்தில் ஒரு தெளிவு படர்ந்தது; ஜோதி முத்துவின் தோள்களில் தன் கையைப் போட்டுக் கொண்டு அவன் மேல் சாய்ந்தவண்ணம் 'எப்பொழுது வந்தீர்கள்?' என்றாள். ஈடேறாது போகும் தங்கள் காதலைப் பற்றி பிரஸ்தாபித்தாள். 'அடுத்த ஜன்மத்திலாவது சந்திப்போம்' என்று தழுதழுத்த குரலில் கூறினாள். 'என்ன இப்படிப் பேசுகிறாயே' என்று ஜோதிமுத்து பயத்துடன் விசாரிப்பான் என எண்ணினாள். ஆனால், அவனோ புன்முறுவலுடன்



அவளது தலையைக் கோதிக் கொடுத்தான். ஒரு மணி நேரம் ஓடி மறைந்தது.

பாரிஜாதத்துக்கு வயிற்றைக் கலக்கவில்லை; மயக்கம் வரவில்லை; உடல் நீலம் பூக்கவில்லை. தான் சாப்பிட்ட விஷம் ஒன்றும் செய்ய வில்லையே, விஷம் கூடவா சதி செய்கிறது என அவள் விழித்தாள்.

''என்ன கண்ணு விழிக்கிறே? விஷம் ஒண்ணும் செய்யவில்லை?'' என்று மெதுவாகக் கேட்டான் ஜோதிமுத்து அவள் தாடையை லேசாகத் தட்டிய வண்ணம். ''இப்படியெல்லாம் அசட்டுத்தனமான காரியம் செய்யலாமா? அதோ பார் மூலையை!'' என்று காட்டினான். நீலம் பூத்த காபி மூலையிலே தேங்கி நின்றது.

அப்பொழுதுதான் விடுதலையான ஜோதிமுத்து, நேரே பாரிஜாதத்தின் வீட்டை நோக்கி விரைந்து வந்தவன் ஜன்னல் வழியாக பாரிஜாதமிருக் கிறாளா என்று பார்த்தபோது பாரிஜாதம் செய்த காரியத்தைத் தெளிவாக அறிந்து கொண்டான். அவள் அந்த அறையை விட்டு வெளியே போனபோது அந்த விஷக் காபியைக் கொட்டிவிட்டு வேறு பாத்திரத்திலிருந்த காபியை அதில் ஊற்றி வைத்துவிட்டு ஒன்றும் தெரியாதவன் போல் இருந்து விட்டான்.

அவனுக்கு அவள் பிழைத்தாள்; அவளுக்கு அவன் கிடைத்தான்.

''இந்த ஜேப்படித் தொழிலே வேண்டாம். கள்வன் பொண்டாட்டி என்றைக்கும் பயந்துதான் வாழணும்; இந்த வயிற்றை வளர்க்க அது ஒன்றுதானா வழி? இருவரும் பிச்சையெடுப்போம்'' என்று ஜோதிமுத்துவுக்கு உபதேசம் செய்யுமளவுக்கு உற்சாகமடைந்து விட்டாள் பாரிஜாதம்.

''சே... சே... ஜேப்படியா? நீ கூடவா என்னைத் திருடன்னு நினைக்கிறே? எவனோ கையைப் போட்டு எந்தச் சோமாறியோ எடுத்துக் கிட்டுப் போக எனக்கு மூன்று மாத தண்டனை'' என்று விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

பாரிஜாதத்துக்குக் குஷி தலைகால் புரியவில்லை. ''அடுத்த ஞாயிறு திருத்தணி போய் நமது கல்யாணத்தை முடித்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறினாள். ஆடினாள்; பாடினாள்.

தன் ஒரே மாமனுக்கும் கடிதம் எழுதி போட்டாள். தாய் இறந்தபோது உடல்நிலை சரியாக இல்லாமல் ஆஸ்பத்திரியிலிருந்த மாமாவைத் தன் கல்யாணத்துக்காவது அவசியம் வருமாறு வற்புறுத்தினாள்.

ஜோதிமுத்துவுக்கு இது பெரிய பிரச்னையாகப் போய்விட்டது. 'கல்யாணமும் அவசியம்; ஆனால், கல்யாணமென்றால் தாலிச் சரடாவது நாம் வாங்க வேண்டாமா? அவளெதிரே நம் கௌரவம் குறைந்ததாகக் காட்டிக் கொள்ளலாமா?' என்று யோசனை செய்தான்.

'சரி வழி கிடைக்காமல் போகிறதா?' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

அன்றிரவு எட்டு எட்டரை மணி இருக்கும். பேசின் பிரிட்ஜ் ஸ்டேஷன் திருப்பத் தெருவில் ஜன சந்தடியே இல்லை. பெட்டியை எடுத்துக் கொண்டு ஒருவர் அப்போது வந்து போன ரயிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார்.

ஜோதிமுத்துவின் கழுகுக் கண்களுக்கு அவர் பட்டுவிட்டார். எத்தனையோ பைகளைப் பார்த்துவிட்ட அவனுக்கு அன்று ஏனோ இதயம் படபடத்தது.

விளக்குக் கம்பம் தாண்டி மரத்தின் இருளில் நின்றிருந்த ஜோதிமுத்துவை அவர் நெருங்கினார். ஜோதிமுத்து சட்டென்று 'ஸார்' என்றான். அவர் திரும்பிப் பார்த்தார். அவன் இருளில் இருந்தான். அவர் ஒளியில் இருந்தார். 'மணி என்ன ஆச்சு ஸார்?' என்று கேட்டுக் கொண்டே இருளோரமாகவே நடந்தான். அவரும் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

அந்தச் சமயம் பார்த்துக் குபீரெனப் பாய்ந்தான்; பர்ஸ் இடம் மாறியது. அவர் சமாளித்துக் கொண்டு 'பிடி, பிடி, திருடன்...' என்று கூவுவதற்குள் ஜோதிமுத்து இருளில் புகுந்து சந்தில் மறைந்து எங்கோ போய் விட்டான்.

இரவு ஒன்பதரை மணிக்கு மேல் ஜோதிமுத்து வீட்டிற்குள் நுழையும்போது பாரிஜாதத்திடம் யாரோ சற்று வயதான ஒருவர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். சட்டென்று ஜோதிமுத்துவின் முகம் சுண்டி விட்டது.

பாரிஜாதம் மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள். ''இன்னும் காணுமேன்னு பார்த்தேன்... வந்துட்டீங்களா!'' என்று பாரிஜாதத்தின் முகம் சட்டென்று மாறியது.

''பாருங்கோ... எந்தப் படுகாலிப் பயலோ இவருகிட்டே வேலையைக் காட்டிப்புட்டான். இவரு என் மாமா... ஐயோ அதைச் சொல்லலையா...



அம்மா செத்துப் போனப்போ கூட வர முடியவில்லை. கல்யாணத்துக் குன்னு ஆசையோட வந்த இவருடைய பர்ஸை, அடிச்சுப்புட்டானே படுபாவி'' என்றாள் பாரிஜாதம் அழமாட்டாத குறையாக.

''பாரிஜாதம் வருத்தப்படாதே... நல்ல வேளையா புடவை யெல்லாம் பெட்டியில்தான் இருக்கு. பெட்டியைப் பறிக்காமெ போனானே... ஆனா, மாங்கல்யம் போச்சு. அவசரமா ஊருக்குக் கிளம்பறச்சேதான் ஆசாரி கொண்டு கொடுத்தார். வாங்கிப் பர்ஸிலே வைச்சேன். ஹூம்... அதை எடுத்த புண்ணியவான் அதை வித்தோ... அதை எவ கழுத்திலாவது கட்டியோ வாழட்டும்'' என்றார் பாரிஜாதத்தின் மாமா.

ஜோதிமுத்துவுக்கு நெஞ்சே வெடித்து விடும் போலாகிவிட்டது. அவன் இதயத்தை யாரோ பிழிவது போலிருந்தது. பாரிஜாதத்தின் கண்கள் தன்னைப் பார்த்து, 'நீதான் குற்றவாளி' என்று குற்றம் சாட்டியது போலிருந்தது. நம்மை நாமே ஜேப்படி செய்தோமே என்று துடித்தான்.

''மாமா...'' என்று அலறி அவர் காலில் விழுந்தான். தன் மடியில் வைத்திருந்த அந்தப் பர்ஸை அவர் காலடியில் எடுத்து வைத்தான்.

டிரைவர் சந்திரன் நிறுத்தினார்.

''ஐயோ... பாரிஜாதம் அவனைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்... அவனையே வெறுத்திருப்பாளே'' என்று என் மனத்தில் பட்டதைச் சொன்னேன் நான்.

''ஹூம்... பாரிஜாதம் அப்படிச் செய்யவில்லை. ஜோதியிடம் உயிரையே வைத்திருந்தாள். அவள் உயர் காதல் எந்தத் தடையையும் மீறியது. தணிகையில் நடந்த கல்யாணத்துக்கு நான் போயிருந்தேன். அந்தத் தணிகாசலன் சந்நிதியில் ஜோதிமுத்து, பாரிஜாதத்துக்கு முடிச்சுப் போட்டான்'' என்று முடித்தார் டிரைவர் சந்திரன்.

● ● ● ●

# இன்பத்தின் விலை

சிறுகதை இலக்கணத்தை மீறாத ஒரு நல்ல கதை இது. சரளமான நடை, மிக எளிதான சொற்பிரயோகங்கள், எதார்த்தம் குறையாத பாத்திர வார்ப்பு என்று இச்சிறுகதை கீர்த்தி உடையதாகத் திகழ்கிறது.

கதை பண்ண வேண்டுமே என்று கதை பண்ணுவார்கள் சிலர். சிலருக்குள் கதை தானாகக் கருக்கொண்டு உரிய வேளையில் (பத்தாம் மாதச் சிசு போல) ஜனித்து விடும். இப்படித்தானாக கருக்கொள்ள ஒரு கதாசிரியனுக்குச் சூழ்நிலையை ஊன்றிக் கவனித்து ஆகர்ஷிக்கும் சக்தி மிக அவசியம்.

பிரபஞ்சத்தில கொட்டிக் கிடக்கும் கருப் பொருள்களைக் கொத்தி வந்து நூறு நூறு நல்ல கதை செய்யலாம். விக்கிரமனும் செய்திருக்கிறார். ஒரு தையல்காரன் கதை நாயகன். வீட்டு வேலைக்காரிதான் நாயகி. இருவருக்கும் இடையே ஆதிக்க சமூகத்தின் அட்டகாசத்தை அளவாகத் தொட்டுக் காட்டி இருவரும் இறுதியில் காதல் நிமித்தம் ஒன்று சேர்ந்துவிடும் சுபமான முடிவுதான் கதை.

இந்தச் சின்னக் கதைக்குள் ஓர் நூலிழை சஸ்பென்சும் உண்டு. அது வாசிப்பவரை அழகாகவே திசை திருப்பி ஏமாற்றுகிறது.

காதல் என்னும் இன்பத்துக்கு ஓர் ஏழையால் அதிக விலை கொடுக்க முடியாது என்கிற சமூகப் பார்வையை இங்கே தன் கதைக்கு lubrication ஆகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கதாசிரியர்.

ஆனால், முடியும் என்கிற நிஜம்தான் செய்தி. அன்பிற்கு ஏது அடைக்கும் தாழ்? அது எந்த மதிற் சுவரையும் ஏறிக் குதித்துவிடும். புல்லைப் பூவாக்கும், பூவைக் காயாக்கும், காயைக் கனியாக்கும்.

நாம் அன்றாடம் காணும் மனிதர்களைக் கொண்டு இந்த வித்தையை விக்கிரமன் இந்தச் சிறுகதையில் செய்திருக்கிறார்.

ஆயினும் இதை விட நல்ல முடிவை, மாறுதலான, மேலும் எதார்த்தமான நெஞ்சை நிரடும் ஒரு முடிவைத் தந்திருக்கலாம் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

– இந்திரா சௌந்தர்ராஜன்





# 20. இன்பத்தின் விலை

**சா**யாஜிராவ் தையற் கடையில், வேதாசலம் ஒருவனுக்குத்தான் உண்மையானவன் என்று பெயர். காலையில் ஏழு மணிக்கு மெஷினடியில் உட்கார்ந்தால் இரவு கடை மூடும் வரையில் மாடுபோல் உழைப்பான். அதுவும் தீபாவளி நெருக்கத்தில் இரவும் பகலுமாக அவன் கண்விழித்து வேலை செய்வதுபோல் வேறு எவரும் செய்யமாட்டார்கள்.

வேதாசலம் அன்று மெஷினெதிரே சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தான். அந்தச் சிறு இடத்தில் மீதமுள்ள நான்கு தையல் இயந்திரங்களும் வெகு வேகமாக வேலை செய்வதற்கு அடையாளமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

முதலாளிக்கு வேதாசலத்திடம் அத்யந்த நம்பிக்கை. ஏனெனில் எத்தனையோ பேர் வேலை கற்றுக் கொள்ள சாயாஜியிடம் வந்திருக்கிறார்கள். அரைகுறையாக வேலை கற்றுக் கொள்வார்கள். பிறகு சொல்லிக் கொள்ளாமல் போய் அந்த ஊரிலேயே இரண்டு மூன்று தெருவைத் தாண்டி ஒரு தையல் மெஷினை வாடகைக்கோ, கடனுக்கோ வாங்கித் தொழிலைத் தொடங்கிவிடுவார்கள். அப்படிப் போகவில்லை வேதாசலம். உண்மையாக உழைப்பவனிடம் யாருக்கும் பிரியமும் நம்பிக்கையும் விழுவது இயல்புதானே?

சிறிது நேரத்துக்கெல்லாம் தலையைப் பிடித்தவண்ணம் குனிந்து யோசனையில் ஆழ்ந்திருந்த வேதாசலம் தலையை நிமிர்த்திச் சாயாஜியிடம், ''தலையை வலிக்கிறாற் போலிருக்கிறது. ஒரு ஸிங்கிள் டீ போட்டுவிட்டு வருகிறேன்'' என்றான்.

சாயாஜி வேறு பேச்சுப் பேசவில்லை. ''சரி சீக்கிரம் வந்துவிடு'' என்றார்.

டீக்கடைக்கு விரையுமுன் மார்க்கெட் சந்தில் திரும்பினான் வேதாசலம். தினமும் இந்நேரத்தில் டீ குடிக்கும் காரணத்துடன் அந்தப் பக்கம் வருவது வேதாசலத்தின் வழக்கமாகி விட்டது. காரணம், மரகதம் தினமும் அவனுக்காக வழி மேல் விழி வைத்துக் கொண்டு அங்கே காத்துக் கொண்டிருப்பதுதான்.

வேதாசலம் சிரித்த முகத்துடன் வருவதைப் பார்த்தவுடனேயே மரகதத்துக்கு உள்ளத்தில் எழுந்த இன்பம், அன்றும் நேற்றும் எஜமானி அம்மாள் வீட்டில் மாடுபோல் உழைத்த துன்பத்தையும் மறக்குமாறு செய்யும். மரகதம் வேலை பார்த்து வந்த வீடு பெரிய பணக்கார வீடு.

முன்பெல்லாம் மரகதத்தின் தாய் அந்த வீட்டில் வேலை பார்த்து வந்தாள். இப்பொழுது அவளுக்கு முன்னைப்போல் வேலை செய்ய முடியாமல் கைகள் விழுந்துவிடவே, மரகதம் தாயின் அந்த வேலையை ஏற்றுக் கொண்டாள். கல்யாணமாக வேண்டிய வயதிலும் அவள் வெளியே போய் வேலை செய்து வந்துதான் ஆக வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

அந்த 'நீல பங்களா' வீட்டில் வேலைப்பளுவுக்குக் குறைவேயில்லை. காலேஜ் போகும் மஞ்சுபாஷிணிக்குத் தலைவாரிப் பின்ன வேண்டும். கடைத் தெருவுக்குப் போய் சாமான் வாங்க வேண்டும். இம்மாதிரி இன்னும் எத்தனை எத்தனையோ இதர வேலைகள்!

கடைத் தெருவுக்குக் காலை பத்து மணி சுமாருக்குச் சாமான் வாங்கப் போன ஒருநாள், அப்படியே சில துணிகளைத் தைக்கக் கொடுத்துவிட்டு வருமாறு 'நீல பங்களா'வின் எஜமானியம்மாள் கட்டளையிடவே, மரகதம் சாயாஜிராவ் கடைக்கு வர நேர்ந்தது.

அவள் கடைக்குப் போன சமயம் சாயாஜிராவ் இல்லை. வேதாசலம் தான் மரகதத்திடமிருந்து அளவு கேட்டுத் துணி வாங்கினான். துணியைத் தைப்பதற்குக் கொடுத்த மரகதம் அதே சமயம் வேதாசலத்தின் இதயத்து அன்பை, தனது அன்புடன் சேர்த்து தைக்கக் கொடுத்து விட்டாள். அது முதற்கொண்டு மார்க்கெட் மூலையில் தினம் ஐந்து அல்லது பத்து நிமிஷங்களாவது சந்தித்துப் பேசுவது அவர்கள் வழக்கமாகி விட்டது.

தீபாவளி நெருக்கத்தில் இரண்டு மூன்று தினங்கள் வேலை மிகுதியின் காரணமாக அவனால் மரகதத்தைச் சந்தித்துப் பேச முடியவில்லை. இந்த நிலையில் வேலையின் மீது வேதாசலத்துக்குக் கவனம் எப்படிச் செல்லும்? ஏதாவது சாக்கு சொல்லிவிட்டு மரகதத்தைச் சந்திக்கச் சொல்ல துடித்தான். நல்லவேளை! பழியை ஏற்கத் தலைவலி வந்து குதித்தது.

மரகதத்துடன் அன்று பேசிவிட்டுத் திரும்பும்போது உண்மையிலேயே வேதாசலத்துக்குத் தலையை வலிக்கத்தான் செய்தது. அங்கே போனால் மலை மலையாக ரவிக்கையும் ஜம்பருமாகத் தைக்கப்பட வேண்டிய துணிகள் குவிந்திருந்தன. அவை அவனைப் பார்த்துப் பயங்கரமாகச்



சிரித்துக் கொண்டிருந்தன. இங்கோ கிழிந்த ஆடையையும் ரவிக்கையையும் அணிந்த மரகதம் அன்பை அள்ளிக் கொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

'எத்தனை விதமான துணிகளை இந்தக் கைகளால் தைக்கிறோம்? அன்பின் வளர்ச்சிக்கு அடையாளமாக அவள் ஒருநாள் திடுக்கிடும் வண்ணம் ஒரு பரிசு அளித்தால் என்ன?' என்று எண்ணினான் வேதாசலம்.

தீபாவளிக்கு முழுசாக இருண்டு தினங்கள் கூட இல்லை. சாயாஜி ராவ் கடைத் தையல் இயந்திரங்கள் எழுப்பிய ஒலியில் தீபாவளி இன்னும் சீக்கிரம் வந்துவிடும் போலிருந்தது. வர்ணத் துணிகள் வித வித ரூபத்தில் ரவிக்கைகளாக மாறிக் கொண்டிருந்தன. இரவு இரண்டு, மூன்று மணி என்று கண் விழித்துத் தைத்து மெஷின் மீதே சோர்வுற்றுத் தூங்கும் வரை தையற்காரர்கள் வேலை செய்தனர்.

அன்று பொழுது விடிந்ததும் சாயாஜி வேதாசலத்தை எழுப்பி, "தம்பீ! இந்தத் துணிகளெல்லாம் சீக்கிரம் வேணுமாம். கொஞ்சம் 'சாயா' போட்டு விட்டு ஒரு மூச்சுப்பிடி" என்றார்.

சாயாஜி கொண்டு வந்திருந்த விதவிதமான பட்டுத் துணிகள் வேதாசலத்தின் மனத்தைக் கவர்ந்தன. இரண்டே வித அளவுகளில் தைக்கப்பட வேண்டிய அந்தத் துணிகளைப் பார்த்த அவன், 'இவ்வளவு விலை கொடுத்து வாங்கும் இந்த வீட்டில் இரண்டே இரண்டு பெண் பிள்ளைகள்தாமா? ஹூம்...' என்று தனக்குள் சிரித்துக் கொண்டான். அந்தத் துணிகளில் ஒரு துணி அவன் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. எவ்வளவு நேரம் துணிகளை மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தானோ, தெரியாது!

"தம்பீ! அவசரம் வேலையை ஆரம்பி!" என்று சாயாஜியின் குரல் அவனைத் தன் நினைவுக்குக் கொண்டு வந்தது.

தையல் மெஷினின் ஒலி எழுந்து அந்த இடத்தின் வேலைத் துரிதத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது. வேதாசலத்தின் கையும் காலும் வேகமாக இயங்கினாலும், அவன் எண்ணம் என்னவோ அந்தத் துணியிலேயே லயித்திருந்தது. அந்தப் பட்டுத் துணியும், அதை மரகதத்துக்குத் திடீரென அளித்தால் அவள் திகைப்புற்றுக் கன்னங் குழிய முகம் சிவக்க நாணித் தலைகுனியும் பாவமும் அவன் கற்பனையில் எழுந்து நடமாடின. அந்த நினைப்பில் வேதாசலம் தன்னை மறந்து வாய் விட்டுச் சிரித்தான். சட்டென எல்லாரும் அவனையே திரும்பிப் பார்த்தனர்.

''என்ன, அண்ணே! தானே சிரித்து கொள்கிறாயே! நாங்களும்தான் கொஞ்சம் ரசிக்கிறோமே!'' என்றான் சக தொழிலாளி ஒருவன்.

''இல்லை... எல்லாரும் கடைசி நிமிஷத்தில் துணியைக் கொடுத்து விட்டுத் தை தை என்று குதிக்கிறார்களே... ஒருவருடைய தலையையும், இன்னொருவருடைய கையையும் சேர்த்துத் தைத்துப் போட்டால் என்ன ஆகும் என்று யோசித்தேன். சிரிப்பு வந்தது'' என்றான் வேதாசலம். அதைக் கேட்டு எல்லாரும் 'கடகட'வென்று சிரித்தனர்.

ஆனால், அதற்குப் பின் வேதாசலம் சிரிக்கவில்லை. யோசனையில் ஆழ்ந்தவாறே வேலையைச் செய்தான். அவன் கண்களெதிரே அந்தப் பட்டுத் துணி பலப்பல உருவங்கள் எடுத்து அவனை மதி மயக்கிக் கொண்டிருந்தன. அம்மாதிரித் துணியில் மரகதத்துக்கு ரவிக்கை தைத்துக் கொடுக்க வேண்டும் என்று மனத்தில் திட்டம் போட்டுக் கொண்டான்.

அன்றும் இரவில் சரியான வேலை. இரண்டு மணிக்கு மேல் ஒவ்வொருவரும் பேயடித்தவர்கள் போல் சோர்ந்து மெஷின் மீதே சாய்ந்து கிடக்க, வேதாசலம் மட்டும் வெகு வேகமாகத் தைத்துக் கொண்டிருந்தான். சாயாஜிராவ் 'அவசரம்' என்று சொன்ன துணியும், அவன் தைப்பதும் ஒன்றுதான். ஆனால், அளவுதான் வேறு.

ஜாக்கெட் அழகாகத் தைத்து முடித்தாகிவிட்டது. வேதாசலத்திற்குப் பரம திருப்தி. வளப்பம்மிக்க அங்கங்களை மறைக்கவிருக்கும் அந்த ஜாக்கெட்டோ மடித்ததும் ஒரு கைப்பிடிக்குள் அடங்கவிட்டது. அவ்வளவு மெல்லிய சில்க்! அதைச் சுருட்டித் தன் பையில் திணித்துக் கொண்டு வேலையைக் கவனிக்கத் தொடங்கினான்.

காலை, அதே டீ சாப்பிடும் நேரம். அவசரம் அவசரமாகக் கிளம்பினான் வேதாசலம். சாயாஜியும் தடுக்கவில்லை. 'பாவம், இராப் பகலாக உழைக்கிறான்' என்று முணுமுணுத்துக் கொண்டார். வேதாசலம் மார்க்கெட் சந்தை நோக்கி விரைந்தான். அவனுக்கு முன்பாகவே மரகதம் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

''உனக்கு ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான் வேதாசலம். இரண்டுமூன்றுதினங்களாககண்விழித்ததால்கண்கள்இடுங்கியிருந்தன. தலைமயிர் வாரப்படாமல் முகத்திலெல்லாம் விழுந்து கிடந்தது. முகத்தில் களையில்லாவிடினும் களிப்பு கூத்தாடியது.

''அது இருக்கட்டும்... என்னங்க இப்படி முகமெல்லாம் ஒடுங்கிப் போய் இருக்கிறது? எங்கள் எஜமானியம்மாதான் வாட்டுகிறார்



களென்றால் அங்குமா இப்படி...'' என்று கூறும்போது மரகதத்தின் கண்கள் அவனைப் பரிவுடன் ஏற இறங்கப் பார்த்தன.

வேதாசலம் இதையெல்லாம் கவனிக்கவில்லை. ''இன்றைக்கு இரவு தீபாவளி இல்லையா மரகதம்? உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்!'' என்று கூறிய வண்ணம் அந்த ரவிக்கைப் பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதைப் பிரித்துப் பார்த்த மரகதம், ''அம்மாடி! இம்மாம் விலைத் துணி எனக்கு எதற்கு?'' என்றாள். வேதாசலம் அவளை இடைமறித்து, ''அது பற்றி உனக்கு என்ன மரகதம்? நம் இன்பத்துக்கு இது ஒரு விலையாகுமா? அடுத்த தீபாவளிக்குப் புருஷனும் பெண்சாதியுமாக...'' என்று முடிப்பதற்குள் மரகதத்தின் முகத்தில் வெட்கம் கொப்பளித்தது. அடுத்த கணம் அவள் 'சர்' என்று அங்கிருந்து எங்கோ மாயமாய் மறைந்து விட்டாள்.

எப்படியோ ஒருவழியாகத் துணிகள் தைத்து முடிந்தது. இரவுக்கிரவே அந்தத் துணிகளைச் சாயாஜிராவ் எடுத்துக் கொண்டு அவரவர்களின் வீட்டில் பட்டுவாடா செய்யப் புறப்பட்டார்.

மரகதத்தின் எஜமானி - அதுதான் 'நீல பங்களா'வின் எஜமானியின் வீட்டிற்கு சாயாஜி நுழைந்தவுடனேயே, ''வா, அப்பா! உனக்காகக் காத்திருக்கிறோம். எங்கே தீபாவளிக்குத் துணி கொடுக்காமல் போய் விடப் போகிறாயே என்று பயந்தோம்'' என்று வரவேற்றாள் எஜமானி யம்மாள்.

அவசரம் அவசரமாக மூட்டையை அவிழ்ந்து உதறிய மஞ்சுபாஷிணி பரபரப்பான குரலில், ''அம்மா... இவர் புள்ளி போட்ட ஒமெகா சில்க்கைக் கொண்டு வரவில்லையே? அதைத்தானே நாளைக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன்'' என்றாள்.

''அம்மா! அவர் ஆசையாக வாங்கித் தந்ததாயிற்றே'' என்று இடையிடையே அவள் உதடுகள் முணுமுணுத்தன.

''இருக்குமடீ... மெல்லப் பாருடீ...'' என்று சொல்லிக் கொண்டே எஜமானியம்மாள் தையற்காரரை அந்தத் துணியைக் குறித்து வினவினாள்.

இதுவரை எந்த வீட்டிலிருந்தும் 'துணியைக் காணோம்; துணியின் அளவைக் குறைத்துத் துணியை அபகரித்துக் கொண்டார் என்ற பெயர் வாங்காத சாயாஜியை இந்தப் புகார் திடுக்கிடச் செய்தது.

''அம்மா... தைக்கக் கொடுத்தீங்களோ, இல்லையோ! நன்றாக வீட்டிலேயே இருக்கிறதா என்று பாருங்கள் அம்மா!'' என்றார் சாயாஜி மிகவும் பணிவாக.

இரண்டு எஜமானிகளும் சிங்கம், புலியாயினர்.

வருத்தத்துடன் தலைகுனிந்தவாறு சாயாஜி கடைக்குத் திரும்பினார். எல்லா வேலையாட்களும் அவரவர் வீட்டிற்கு திரும்பி விட்டனர். விளக்கை ஏற்றிக் கடை முழுதும் தேடினார். இவ்வளவு நாள்கள் கஷ்டப்பட்டதனைத்தும் வீணாகிவிட்டதே என்று மனம் துடித்தார்.

மறுநாள் காலையில் மரகதம் தலை முழுகிவிட்டு அன்புப் பரிசாக, இன்பத்தின் விலையாகக் கிடைத்த அந்த ரவிக்கையை அணிந்து கொண்டாள். அவள் உடலுக்கு அது அழகாகத்தானிருந்தது. ஆனால், அதற்குத் தக்கபடி புடைவையும் இருந்திருந்தால்...

அந்த ரவிக்கையை அணிந்தவாறே வேலை செய்யக் கிளம்பினாள். அந்த ரவிக்கையுடன் எஜமானியின் கண்களில் பட அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனினும் தோளை இழுத்து மூடிக் கொண்டு பங்களாவுக்குள் நுழைந்தாள்.

ஆனால், கிணற்றில் தண்ணீர் இழுக்கையில் அந்தப் பக்கம் சோர்வுற்று வந்த மஞ்சுபாஷினி, எதேச்சையாக மரகதத்தைக் கவனித்தாள். தான் காணவில்லை என்று தையற்காரரிடம் புகார் செய்த ரவிக்கையை வேலைக்காரி அணிந்து கொண்டிருப்பதைக் கண்டவுடன் மஞ்சு பாஷிணிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

உள்ளே ஓடினாள். ''அம்மா, அம்மா! நேற்று தைக்கக் கொடுத்தது வரவில்லை என்று சொன்னேனே, அந்த ரவிக்கையை வேலைக்காரி போட்டுக் கொண்டிருக்கிறாள். அம்மா... வாயேன், வந்து பாரேன்!'' என்று பரபரப்புடன் கூவினாள். அதைக் கேட்டவுடன் எஜமானியம்மாள் ஓடி வந்தாள்.

மரகதம் அணிந்திருந்தது மஞ்சுபாஷிணியினுடையதுதான் என்பது தெளிவாகிவிட்டது.

''ஏய்... ஏதுடீ ரவிக்கை?'' என்ற எஜமானியின் பயங்கரக் குரலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டு திரும்பினாள் மரகதம்.

தான் அணிந்திருக்கும் புது ரவிக்கையைப் பார்த்துத்தான் எஜமானி அதுபோல் கத்துகிறாள் என்பது அவளுக்குப் புரிந்தது.



'வேலைக்காரி என்றால் புதிதாக ஒன்றும் போட்டுக் கொள்ளக் கூடாதா' என்று எண்ணிக் கொண்டாள்.

''என்னடீ முழிக்கிறாய்? திருடி! ரவிக்கை ஏதுடீ?'' என்று மறுபடியும் பாணம் கிளம்பவே, மரகதம் திடுக்கிட்டுப் போனாள்.

'திருடியா? எஜமானி என்றால் எது வேண்டுமானால் பேசி விடலாமா? இருக்கட்டும்... இனி அந்த ஜம்பம் என்னிடம் சாயாது' என்று எண்ணிக் கொண்டாள் மரகதம்.

அது சரி, ஏது ரவிக்கை என்கிறாளே, என்னவென்று சொல்வது? 'அவர்' வாங்கிக் கொடுத்தார் என்றால்... 'அவர்' புருஷனா... 'கள்ளப் புருஷன்' என்று கேலி செய்து பழி சொன்னால்... ஒரு விநாடி மரகதம் செயற்று நின்றாள். பிறகு, ''ஏங்க, என் அத்தான் வாங்கிக் கொடுத்தாரு'' என்றாள் கம்பீரமாக. அவளுடைய கண்கள் எஜமானியை ஏற இறங்கப் பார்த்தன.

அவளுடைய பதில் எஜமானியின் சந்தேகத்தையும், ஆத்திரத்தையும் அதிகப்படுத்தியது.

''எந்த திருட்டுப் பயலடி உன் அத்தான்! திருட்டுக் கழுதை... ரவிக்கையை அவிழ்த்து வையடீ... திருட்டுக் கழுதைகளை வேலைக்கு வைக்கிறதே தப்பு...'' என்று எஜமானியம்மாள் சரமாரியாகப் பொழிந்து கொண்டே போனாள்.

மரகதத்திற்கு நன்றாக விளங்கிவிட்டது. வேலைக்காரி என்றால் இளப்பம்; அவள் புது உடை அணியக்கூடாது; அப்படி அணிந்தால் அது திருடப்பட்டது - இந்தக் கொள்கையை எஜமானி தன்னிடம் காட்டுகிறாள் என்று திடமாக முடிவு செய்த மரகதம், மேற்கொண்டு அங்கு நின்று பேச விரும்பாமல், ''சொல்கிறேன் அம்மா, சொல்கிறேன்... எந்தத் திருடன் வாங்கிக் கொடுதான் என்பதைச் சொல்கிறேன்!'' என்று கூறிக் கொண்டே விரைந்தாள் வீடு நோக்கி.

வேலைக்காரியின் பதிலும், திருட்டு வஸ்து மீளாததும் எஜமானியின் ஆத்திரத்தை அதிகமாக்கின. இவ்விஷயத்தை லேசில் விடக்கூடாது என்று எண்ணி, உடனே போலீஸுக்குப் புகார் செய்தாள்.

ஹெட் கான்ஸ்டபிள் ஒருவர் உடனே விசாரணைக்கு வந்தார். விவரம் அறிந்த அவர் குற்றவாளியைக் கண்டுபிடிக்க மரகதத்தின் குடிசையை அடைந்தார். தன் 'அத்தான்' தைத்துத் தீபாவளிக்காகக் கொடுத்தது என்று கூறியதையறிந்து, அவள் அத்தானைத் தேடிப் போனார் அவர்.

காலையில் அப்பொழுதுதான் மெஷினுக்கு எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தான் வேதாசலம். சாயாஜி காணாமல் போன துணியைப் பற்றிக் கடையிலுள்ளவர்களை எல்லாம் விசாரித்துக் கொண்டிருந் தார்.

ஹெட் கான்ஸ்டபிள் வந்து வேதாசலத்தைப் பற்றி விசாரித்ததும் சாயாஜிக்கு நம்பிக்கையே இல்லை. வேதாசலம் அப்படிச் செய்ய மாட்டான் என்று முதலில் எண்ணினார். பிறகு 'எந்தப் புற்றில் எந்தப் பாம்போ? இப்பொழுதெல்லாம் பயல் மாறித்தான் வருகிறான்! எவளுக்குக் கொண்டு விற்றானோ, என்னவோ?' என்று எண்ணினார்.

உடனே சாயாஜி ஹெட் கான்ஸ்டபிளிடம், ''செய்கிறதைச் செய்து உண்மையைக் கக்க வையுங்கள். ஒரே நாளிலே கடைக்குக் கெட்ட பெயரைக் கொண்டு வந்துவிட்டான். இப்படிப்பட்டவனை..!'' என்றார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் வேதாசலம் நிறுத்தப் பட்டிருந்தான். மரகதமும் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தாள். மரகதத்தைக் கண்டவுடனேயே, 'ஐயோ! அவள் என்ன நினைப்பாள்' என்று துடிதுடித்தான் வேதாசலம்.

''தையற்காரன் - ஏழை என்றால் திருடித்தான் அவன் இன்பத்துக்கு விலையாக்கிக் கொள்ள வேண்டும் என்பதில்லை. என் சொந்தப் பணம் போட்டு வாங்கினேன்'' என்று வாதாடினான் வேதாசலம்.

இதைக் கேட்டு இன்ஸ்பெக்டரும் மற்ற போலீஸ்காரர்களும் ஏளனமாகச் சிரித்தார்கள்.

''நீ மகா பிரபு! கெஜம் ஐந்து ரூபாய்த் துணிதான் உன் ஆசை நாயகிக்கு வாங்கிக் கொடுப்பாய். இல்லையா? ஏமாந்து யாராவது இருந்தால் வைர நெக்லெஸ்கூட வாங்கி கொடுப்பாய்!'' என்றார் இன்ஸ்பெக்டர் கிண்டலாக.

''வேண்டுமானால் கடையில் வாங்கிய பில்லைக் காட்டுகிறேன் சார்!'' என்று பையைத் துழாவினான். சிகரெட் பாக்கெட்டும் நாலணா சில்லறை யும் கைக்கு அகப்பட்டனவே தவிர, 'பில்' அகப்படவில்லை.

மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனில் கேலிச் சிரிப்பு எழுந்தது.

''இருநூற்று நாற்பது! நம் ஐயா இப்படியெல்லாம் சொன்னால் உண்மையக் கூற மாட்டார். கொஞ்சம் கவனி'' என்று இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார்.



அப்பொழுது டெலிபோன் மணி 'கணகண'வென்று ஒலித்தது. என்னவென்று அறியத் திரும்பினார்.

வேதாசலத்திற்கு ஏதோ கோபுரமே சாய்ந்து தலையில் விழ்ந்தது போலிருந்தது. இன்பமடைய இதெல்லாம் விலைகளா என்று உள்ளத்தே விம்மினான். 'மரகதம் தன்னைப் பற்றி என்ன நினைப்பாள்? உண்மையை ஒப்புக்கொள்ள யாருமில்லையே உலகில்!' என்று எண்ணினான்.

'திருடியாவது பரிசு கொடுக்க வேண்டுமா?' என்று அவள் எண்ணி விட்டால் - ஐயோ... அவன் இதயத்தைப் பெரும் பாரம் அழுத்துவது போலிருந்தது அந்த நினைப்பு.

சப் இன்ஸ்பெக்டர் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு, ''தேவலை அப்பா... ஆளு கைராசிக்காரன். எல்லாம் அவன் பக்கம்தான் ஜெயம்'' என்றார். அதைக் கேட்ட ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

''யாரை சொல்லுகிறீங்க?'' என்று ஹெட் கான்ஸ்டபிள் கேட்டார்.

''வேறு யாரைச் சொல்லுவேன்? இதோ நிற்கிறார் பார்! இவரைத் தான்!'' என்றார் சப் இன்ஸ்பெக்டர் வேதாசலத்தைச் சுட்டிக்காட்டி.

அதற்குள் வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து 'நீல பங்களா'வின் எஜமானி, சாயாஜிராவ், மஞ்சுபாஷிணி ஆகியோர் இறங்கி ஓடோடி வந்தனர்.

''மன்னிக்க வேண்டும், இன்ஸ்பெக்டர்! எங்கள் வீட்டு வேலைக் காரி போட்டுக் கொண்டிருக்கிற அதே மாதிரித் துணியைத்தான் என் பெண்ணுக்கும் என் மருமகன் வாங்கிக் கொடுத்திருக்கிறார். ஆசையாக தீபாவளிக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று நினைத்தபோது துணி காணாமல் போய்விட்டதில், அதுவும் வேலைக்காரி அதே மாதிரி ரவிக்கைப் போட்டுக் கொண்டு வந்தாள். உம்... அநாவசியமான சந்தேகம்.

இந்தத் தையற்காரர் சாயாஜிராவ் என்ன செய்தாராம் தெரியுமா? நேற்று ராத்திரி டெபுடி கலெக்டர் வீட்டுத் துணிகளைக் கொண்டு போய்க் கொடுத்தாராம்.

காலையில் அவர்கள் தங்கள் துணி அல்லாத ஒன்று தைத்து வைத்திருப்பதைக் கண்டு அதை உடனே இவரிடம் கொடுத்து வரச் சொன்னார்கள். அந்த வேலைக்காரன் வீட்டிலே தூங்கி விட்டு இன்று காலையில்தான் சாயாஜியிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான்.

‘வேதாசலம் என்ற நம் வேலைக்காரன் மேலே அநாவசியமாகப் பழி சுமத்தினோமே’ என்று ரவிக்கையைத் தூக்கிக் கொண்டு சாயாஜி ராவ் எங்கள் வீட்டுக்கு ஓடி வந்தார்’’ என்று விஷயத்தை விளக்கினாள்.

சப் இன்ஸ்பெக்டர் புன்முறுவலுடன் ‘‘அப்படியானால் வேதாசலம் அதிக விலை கொடுத்து அந்த சில்க்கை வாங்கியிருக்கிறார் என்று ஆகிறது. காதல் என்றால காசைப் பார்க்க முடியாதுதானே!’’ என்றார்.

எல்லாரும் சிரித்தனர். மரகதத்தின் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆனால், வேதாசலம் குனிந்த தலை நிமிராமல் அந்த இடத்தை விட்டு வந்து விட்டான். தன் காசைப் போட்டு வாங்கியும் இத்தனை களேபரம் ஆகிவிட்டதே என்றெண்ணி மிகவும் வருத்தப் பட்டது அவன் உள்ளம்.

ஏழை உயர் ரக துணியைப் பயன்படுத்தக் கூடாதா? யாரைக் கோபிப்பது?

தீபாவளி கழிந்து கார்த்திகை வருவதற்குள் வேதாசலம் புது மனிதனாகி விட்டான்.

தனியே ஒரு வீட்டுத் திண்ணையில் ‘வேதாசலம் ஜென்ட்ஸ் டெய்லர்’ என்ற போர்டு தொங்க, பழையபடி குனிந்த தலைநிமிராமல் தைத்துக் கொண்டிருந்தான். இப்போது அவனே முதலாளி. ஆனால், பெண்களுக்கான உடைகளைத் தைப்பதில்லை.

வீட்டின் உள்ளே ஒரு சிறு அறையில் அவர்கள் குடித்தனமிருந்தனர். மஞ்சள் கயிறு கழுத்தில் விளங்க, கால் மெட்டிகள் கலகலவென ஒலிக்க, அதே சில்க் ரவிக்கையைப் போட்டுக் கொண்டு இடுப்பில் குடத்துடன்வரும்மரகதத்தின்புன்முறுவலுக்காக - அந்த இன்பத்துக்காக - வேதாசலம் என்ன விலை கொடுத்தாலும் தகும் அல்லவா?

● ● ● ●



# அரையணா

தொழிலில் போட்டி, பொறாமை என்பது மேல் மட்டத்தில் மட்டுமன்று; தெருவில் எச்சில் இலைக்கும் ஏங்கும் பிச்சைக்காரர்களிடமும் உள்ளது என்பதை உளவியல் பூர்வமாக உணர்த்தும் இச்சிறுகதையின் தலைப்பில் (அரையணா) ஒரு விசேஷம் உண்டு. எந்தக் காலக் கட்டத்தில் இது வெளியாகியுள்ளது என்பதை வரலாற்று ரீதியாக அணுகினால் அறிய இயலும்.

ஆம்; இந்தியாவில் அளவை முறைகள் படிப்படியாக மாறுவதற்கு முன் ‘அரையணா’ என்பது ஏறக்குறைய ஆறு பைசாவிற்குச் சமமாக இருந்த காலம். வரலாற்றாசிரியர் என்பதால் இச்சிறுகதைக்கு இத்தலைப்பை வைத்தார்போலும். நாணயப் பழக்க வழக்கம் மாறிய காலக் கட்டத்தை அறிய உதவுகிறது இச்சிறுகதை.

பரம்பரைப் பிச்சைக்காரியிடம் பஞ்சத்துக்குப் பிச்சையெடுப்பவள் படும் வேதனையைக் காட்டி, முடிவில் பணம் காசு தேட பட்டணம் வந்தவர்கள் ‘பட்டிக்காடே பரவாயில்லை’ என்று அவலத்தோடு மீளும் காட்சியே இச்சிறுகதையின் செய்தியாகும். சிறுகதை எப்படியிருக்க வேண்டும் என்ற இலக்கணங்களை 1951ஆம் ஆண்டிலேயே இயல்பாக எழுதி, ஒரு நாளின் ஒரு பொழுதில் நடைபெறும் சம்பவத்தைச் சிறப்பாகச் செதுக்கியுள்ளார் சிறுகதைச் சேக்கிழார் கலைமாமணி விக்கிரமன்.

கதையில் வரும் சடையப்பன் பாத்திரம் (அன்றைய சடையப்பரின் வள்ளன்மையைச் சுட்டுவதுபோல) பொருத்தமாகப் பெயரிடப்பட்டுள்ளது. ‘செல்லாயி அரையணாவால் ஏற்பட்ட வினையை விம்மி விம்மிச் சொல்லும்போது சடையப்பனுக்கு வருத்தம் உண்டாகவில்லை. நளனுக்கும் தமயந்திக்கும் நேர்ந்ததைவிடவா இது பெரிய கஷ்டம் என்று நினைத்துக் கொண்டான் போலும்’ என்று இடையிடையே தன் இலக்கிய ஆற்றலை இழையோடச் செய்து செந்தமிழ் அமுதம் படைத்துள்ள பாங்கு படித்து இன்புறத்தக்கதாகும். ஜீவனுள்ள சிறுகதைகள் வரிசையில் இதையும் இணைக்கலாம்.

- பின்னலூர் மு. விவேகானந்தன்

1951

# 21. அரையணா

'கோமள பவன்' வாசலில் இதுவரையில் எத்தனையோ பிச்சைக் காரர்கள் நின்றிருக்கின்றனர். ஆனால், இப்பொழுதுதான் அந்தத் தொழிலுக்குப் போட்டி அதிகமாய் விட்டதே!

கருப்பாயி நிற்கும் அந்த ஏகபோகத் தொழிலிடத்திற்கு யார் போட்டியாக வந்தாலும், அவர்கள் மூன்று நாள்கள்கூட அங்கே சேர்ந்தாற்போல காலந்தள்ள மாட்டார்கள்.

செல்லாயியும் இப்போது அங்கே வர வேண்டியதாகிவிட்டது. அவள் மட்டும் வரவில்லை. தோளிலே குழந்தையைச் சாய்த்துக் கொண்டு வந்திருந்தாள்.

"ஐயா... இரண்டு ஜீவனுங்க. இந்தப் பசலைக்குப் பால் வார்க்கவாவது ஏதாச்சும் போடுங்கய்யா" - செல்லாயி உருக்கமாக வேண்டுவாள். அதைக் கேட்டுக் கருப்பாயி முறைத்துப் பார்ப்பாள்.

'சவம் எங்கிருந்தோ வந்திடிச்சே' என்று முதல் நாளே அவளுடைய முணுமுணுப்புத் தொடங்கிவிட்டது. எத்தனையோ பேர் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வெற்றிலையை எடுத்துச் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டு வருகிறார்கள். எல்லாருமா தர்மக்காசை விசி எறிகிறார்கள்? ஒரு கப் காப்பியோ அல்லது வெறும் போண்டா மட்டுமோ சாப்பிட்டு விட்டு மீதி விழும் அரையணாவைக் காலியான பையில் போட்டுக் கொண்டு யோசனையில் ஆழ்ந்து வரும் சிலர் காதில்தான், "ஐயா! ஏழைக்கு எதானாச்சும் தர்மம் போடுங்க" என்ற குரல் கேட்கும். பையிலே சட்டென்று கையைப் போட்டு அரையணாவை விசி விட்டு நடப்பார்கள்.

இப்பொழுது அங்கே இரண்டு குரல்கள் சேர்ந்து ஒலித்தன: "ஐயா! ஏழைக்கு எதனாச்சும் தர்மம் போடுங்க."

"தர்மப் பிரபுகளே! இரண்டு ஜீவன் பிழைக்கணுங்க... பச்சைக் குழந்தைக்குப் பாலாவது வாங்கிக் கொடுக்கணுங்க; எதனாச்சும் தர்மம் போடுங்க."



இப்பொழுது கருப்பாயி, எதிராளி தர்மம் போடுகிறானா இல்லையா என்பதையெல்லாம் கவனிப்பதில்லை. செல்லாயியின் குரலைக் கேட்டதும், "ஏய் சவமே... எங்கிருந்தடி நீ வந்தே என் பிழைப்பைக் கெடுக்க? காலையிலிருந்து செல்லாத் துட்டும் கிடைக்கவில்லை" என்று சீறுவாள்.

செல்லாயி திரும்பிப் பார்ப்பாள். அவள் இதுவரை இம்மாதிரி வசவுச் சொற்களை எங்கும் கேட்டதில்லை. அத்துடன் இந்தப் பிச்சைக்காரி யிடமா சுடுசொல் கேட்க வேண்டும்? உம்... இங்கும் தொழில் போட்டி!

முதல் இரண்டு நாள்கள் செல்லாயி பதிலே பேசவில்லை. ஆகவே, கருப்பாயியின் உக்கிரமான வார்த்தை வீச்சுகள் பலமாகத் தொடங்கி விட்டன. தான் வாங்கப் போகும்போது போட்டிப் போட்டுக் கொண்டு கருப்பாயி தன் தகரக் குவளையை நீட்டிச் சுடுசொற்களைக் கக்கியவாறு தனக்கு வரும் அரையணாக் காசையும் கெடுக்க முயலும்போது செல்லாயியின் கண்களில் அவளை அறியாமலே நீர் ததும்பும்.

பிச்சை எடுக்கவா அவள் பிறந்தாள்? அந்தக் குழந்தையையும் இடுப்பில் சரியாக வைத்துக் கொண்டு தெருவிலே புரளும் அந்தக் கந்தலையும் சரி செய்து கொண்டு எதிர்த்தாற் போலிருந்த திண்ணையில் போய்ப் படுத்து விடுவாள். அந்தத் திண்ணை ஒன்றுதான் இப்பொழுது அவளுக்கு ஆறுதலான இடம்.

அருகே கிடக்கும் அந்த இரண்டரை வயதுக் குழந்தையைப் பார்க்கும்போது அவளுடைய எண்ணங்கள் எங்கெங்கோ விரியும். அது அவள் குழந்தையா? இல்லை... அவள் குழந்தை இருந்து இந்த நிலைக்கும் வர வேண்டுமா? சீச்சீ... இது என்ன பிழைப்பு! மறுபக்கம் திரும்பிப் படுப்பாள்.

செல்லாயி பிச்சை எடுப்பதற்காகச் சென்னைப் பட்டணத்துக்கு வரவில்லை. அவளும், அவள் கணவன் சடையப்பனும் கௌரவமாகத் தான் கிராமத்தில் வாழ்க்கையை ஓட்டி வந்தனர்.

அவன் மண்வெட்டி கொட்டியும் நிலங்களுக்கு எருக்கொட்டியும் சில்லறை வேலை செய்தும் பிழைத்து வந்தனர். செல்லாயியும் சளைக்க வில்லை. கீரைத் தோட்டம் போட்டிருந்தாள். தளதளவென்று வளரும் கீரையைப் பறித்து எடுத்துத் தலையில் சுமந்து கொண்டு பக்கத்து ஊரின் தெரு வழியே விற்கப் போனால் சிறிது நேரத்துக்குள்ளாகவே காசு அவளிடம் குலுங்க ஆரம்பித்துவிடும்.

சடையப்பனுக்கு வேலை இல்லா நாள்களில், அந்தக் கீரைதான் தெய்வம்போல் அரை வயிற்றுக்கு உணவைத் தேடிப் போடும்.

இப்படிக் கௌரவமாகக் குடும்பம் நடத்தி வந்த அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்க ஒரு குழந்தையும் பிறந்தது. ஆனால், வானம் சில வருஷங்களாகப் பொய்த்துவிடவே, அரை வயிற்றைக் கழுவிக் 'காமா சோமா' என்று வாழ்க்கையை ஓட்டி வந்த அவர்களைக் கஷ்ட காலம் பிடித்துக் கொண்டது.

கிணற்றில் தண்ணீர் இல்லாமல் என்ன விளைவிக்கிறது நிலத்தில்? பலர் நிலத்தை அப்படியே போட்டு விட்டுப் பட்டணத்தைப் பார்க்கக் கிளம்பினர். பெரிய பெரிய பண்ணைக்காரர்கள் பாடே திண்டாட்டமாக இருக்கும்போது சடையப்பன்மட்டும் அதற்குவிலக்கா? செல்லாயியிக்கும் கீரைப் பாத்தி போட முடியவில்லை. அந்த வட்டாரங்களிலே எந்தக் கிணற்றிலும் தண்ணீர் இல்லை.

அந்த ஊரில் பண வசதியுள்ளவர்களே குடம் தண்ணீரை விலை கொடுத்து வாங்கும்போது, இவள் கீரைப் பாத்திக்கு எங்கிருந்து தண்ணீர் கிடைக்கும்?

தினசரி குடிக்கத் தண்ணீர் வேண்டுமே; செல்லாயி எங்கெங்கோ அலைந்து திரிந்து குடம் தண்ணீர் கொண்டு வருவாள். ஒருநாள் அந்தத் தண்ணீர் சாப்பிட்டதனாலோ என்னவோ, செல்லாயியிக்கும் குழந்தைக்கும் நோய் கண்டது. ஒரு வாரம் விடாமல் அடித்த ஜுரம் குழந்தையை அவர்களிடமிருந்து பிரிந்து விட்டது. சாப்பாடு இல்லாதது கூட முக்கியமாகத் தோன்றவில்லை செல்லாயியிக்கு; குழந்தையைக் கடவுள் எடுத்துக் கொண்டதுதான் பெரும் துயரமாகப்பட்டது.

அதனால் அந்த ஊரிலேயே இருக்கச் செல்லாயிக்குப் பிடிக்கவில்லை. அவளும் அவளுடைய கணவனுமாக, யாரோ தெரிந்தவர்களது யோசனைப்படி பட்டணத்துக்குக் கிளம்பிச் சென்றனர். பட்டணத்தில் வேலை என்ன குவிந்தா கிடக்கிறது? இரண்டு நாள்கள் அலைந்து திரிந்த சடையப்பன் வாடிய முகத்துடன் வந்ததுதான் பலன்.

அங்கே ஒருநாள் கழிப்பது ஒரு யுகம் கழிப்பது போல இருந்தது. காலிலே ரொம்ப காலமாகப் போடப்பட்டிருந்த கெட்டிக் காப்பையும் விற்றாகி விட்டது.

திரும்பவும் கிராமத்துக்கே போய் எப்படியாவது பிழைக்க வழி தேடிக் கொள்ளலாமா என்று சடையப்பனுக்கு ஒரு யோசனை தோன்றியது. இரண்டு பேரும் போவதென்றால் அதற்குப் பணமில்லை. அதனால்



செல்லாயியை அங்கேயே இருக்குமாறு கூறிவிட்டுச் சடையப்பன் மட்டும் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான்.

நாள்கள், வாரம் எல்லாம் எப்படியோ கெக்கலி கொட்டிக் கொண்டு கடந்து சென்றன. செல்லாயியால் ஒரு விநாடிகூடப் பட்டணத்தில் எந்தத் தொழிலும் செய்யாமல் தள்ள முடியாது போலிருந்தது. ஆனால், ஏதாவது வேலை கிடைத்தால்தானே? வேலை தேடிக் கொண்டு வந்தவள் ஒரு பிளாட்பாரக் கூட்டத்தை வந்தடைந்தாள். அங்கே ஒரு கிழவன் இவளைப் பிரியமுடன் வரவேற்றான்.

''எதனாச்சும் வேலை செய்ய வழி செய்யுங்க பெரியவரே'' என்று கேட்ட, அவள் முகத்தைப் பார்த்து கடகடவென்று சிரித்தான் அந்தக் கிழவன்.

கிழவன் ஒரு தொழிலதிபன். அவனிடம் அண்டிப் பிழைப்பவர்கள் ஒரு டஜனுக்கு மேலிருந்தனர். எப்படிப் பிச்சை எடுப்பது என்பதை எல்லாருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டியதுதான் அவன் வேலை.

குருட்டுப் பிச்சைக்காரன் போல் ஒருவனும், அவனுக்கு வழிகாட்ட ஒரு பெண்ணும் - இப்படியாக ஜோடி சேர்த்து விடுவான். எல்லாரும் இரவு எட்டு மணிக்குத் தங்கள் 'தலைமைக் காரியாலயத்தை' அடைவர். அவரவர்கள் தங்கள் வாடகையைக் கிழவனிடம் செலுத்தி விடுவர். அதிகமாக இருந்தாலும் அவனிடமே கொடுத்து வைப்பர்.

அந்த முகாமில் ஒருநாள் இருந்து பார்த்த பின்தான் செல்லாயிக்கு விவரம் புரிந்தது.

''குருடனுக்குத் துணையாக நடிக்கிறாயா? கர்ப்பமுற்றவள் போல் நடிப்பவளுக்குத் துணையாக நடிக்கிறாயா? எப்படி நடிக்கிறாய்?'' என்று கேட்டான் கிழவன்.

செல்லாயியிக்குத் துக்கம் பொங்கி வந்தது. கண்களில் நீர் மல்க ஒன்றும் பேசாமல் நின்றாள்.

''அம்மா! இப்படி இருந்தால் பிழைக்க முடியாது. இங்கே கௌரவத்தைப் பார்த்தால் நடக்காது. கடைசியாகக் கேட்கிறேன்... இந்தக் குழந்தைக்குத் தாய்போல் இருக்கிறாயா?'' - கிழவன் சற்று அதட்டலாகவே கேட்டான்.

செல்லாயி திரும்பிப் பார்த்தாள். அருகே பரட்டைத் தலையுடன் குழந்தை ஒன்று உட்கார்ந்திருந்தது. அவள் தலைமட்டும் என்ன? அதுவும் சிக்குப் பிடித்து பேன் பிடித்து விகாரமாகத்தான் இருந்தது.

''இந்தக் குழந்தையைத் தூக்கிக்கனும். 'சாமி... தர்மவான்கனே! பச்சைக் குழந்தை. பாலுக்காகவாவது எதனாச்சும் போடுங்கய்யா!' என்று கேட்கணும்'' என்று சொல்லிக் கொடுத்தான் கிழவன்.

செல்லாயி பார்த்தாள். அவள் செல்வனும் இருந்தால் இந்த நிலைமைதானோ? இதே வார்த்தையைக் கூறித்தான் பிச்சை எடுக்க வேண்டுமோ? இதை எண்ணும்போது அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

கிழவன் விசித்திரமான செல்லாயியைப் பார்த்து மனசுக்குள்ளேயே ஏதோ முணுமுணுத்துக் கொண்டான். 'இது எங்கே இந்தத் தொழிலில் நீடித்திருக்கப் போகிறது?' என்று அவன் ஒருவேளை முணுமுணுத்துக் கொண்டானோ என்னவோ?

செல்லாயி குழந்தையை இடுப்பில் சுமந்து கொண்டு அந்த ஹோட்டல் வாசலுக்கு வந்து சேர்ந்தாள். தனக்கு முன்னமேயே அங்கு ஒருத்தி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் முதலில் அவள் தயங்கினாலும், 'இது என்ன பிச்சை எடுப்பதுதானே? யார் எடுத்தாலென்ன? இதில் போட்டி ஏது?' என்றுதான் எண்ணினாள். ஆனால், கருப்பாயியின் சுடு வார்த்தைகள் அவளுடைய உள்ளத்தைத் தைத்தன.

இந்த நினைவுகளோடு திண்ணையில் படுத்திருந்தவள் அப்படியே தூங்கி விட்டாள். அருகே இருந்த குழந்தை - வாடகைக் குழந்தை - அழ ஆரம்பித்தபோதுதான் திடுக்கிட்டு விழித்தாள். மாலை ஆறு மணியாகிவிட்டது. அவள் தொழில் மும்முரமாக நடக்கும் நேரம். அன்று காலையிலிருந்து காலணா வருமானமில்லை. பசியோ காதை அடைத்தது.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு தள்ளாடியவாறு ஹோட்டல் வாசலை நோக்கி நடந்தாள்.

''சாமி... தர்மபிரபு! குழந்தைக்கேனும் பால் வாங்கிக் கொடுக்கிறேன். ஓர் அரையணா கொடுங்க. தர்மப் பிரபோ...' அவள் குரலில் சோகம் பளிச்சிட்டது. இப்பொழுது உண்மையைத்தான் சொன்னாள்.

அந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. அதன் அழுகைக் குரல் செல்லாயியின் உள்ளத்தில் வேதனையைத் தூண்டிவிட்டது.

கருப்பாயியிக்கோ 'நல்லா வந்தாள் இவள்... குழந்தையையும் எடுத்துக் கொண்டு! நல்ல வேஷம் போடுகிறாள்!'' என்று தோன்றியது.



சிவக்கச் சிவக்க வெற்றிலையைத் திணித்துக் குதப்பிக் கொண்டு 'ஹோஹோ' என்று பேசிக் கொண்டே ஹோட்டலிலிருந்து இறங்கினது ஒரு கோஷ்டி.

''சாமி... ஏதாச்சும் தர்மம் போடுங்க சாமி!''

''ஐயா புண்ணியவான்களே! காலணாப் போடுங்க ஐயா!''

''சாமி... இந்தக் குழந்தை முகம் பார்த்துத் தர்மம் போடுங்க சாமி!''

இரண்டு பேரும் சேர்ந்து அந்தக் கோஷ்டியைத் துளைத்து விட்டார்கள்.

அந்தக் கோஷ்டியில் சில்க் சொக்காய் போட்டிருந்த ஒருவன் தன் பிளாஸ்டிக் பர்ஸைத் திறந்து ஓர் அரையாணாவை எடுத்துச் செல்லாயியின் குவளையில் 'டங்' என்று போட்டுவிட்டு, 'இரண்டு பேரும் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிப் போனான்.

செல்லாயி குவளையைப் பார்த்தாள். அரையணா நாணயம். அருகே இருந்த வெற்றிலை, பாக்குக் கடைக்கு ஓடிப் போய் இரண்டு காலணாவாக மாற்றிக் கொண்டு வந்து கருப்பாயியிடம் ஒரு காலணா நீட்டினாள்.

கருப்பாயிக்கு மகா ஆத்திரம் வந்தது. இந்தப் பிச்சைக்காரச் சவத்திடமிருந்தா நான் வாங்கிக் கொள்ள வேணும் என்று கோபம் கோபமாக வந்தது. செல்லாயி காலணாவை நீட்டியவுடன் கருப்பாயி நாய் போல் 'வள்'ளென்று விழுந்தாள்.

''ஏண்டி பொய் சொல்கிறாய்? அந்த ஆள் கட்டை இரண்டணா அல்லவா போட்டார்! காலணாவை நீட்டுகிறாயே... அதற்குள்ளே என்னை ஏய்க்கப் பார்க்கிறாயே!''

செல்லாயி திடுக்கிட்டாள். ''அவர் அரையணாத்தான் போட்டார். காலணாவை இதோ வைத்திருக்கிறேன். இதோ அந்தக் காலணா குவளையிலே இருக்கிறது பாரு!'' என்றாள் செல்லாயி. அபாண்டத் தால் அவளுடைய உள்ளம் சிலிர்த்தது.

''ஆமாம்... உன்கிட்டே கொடுத்ததைத் திருடிகிட்டே... பெரிய திருடியாச்சே நீ!'' என்று கருப்பாயி வசையம்பு தொடுத்து விட்டாள்.

செல்லாயியினால் இதைப் பொறுக்க முடியவில்லை. அவளும் பதிலுக்குப் பேசினாள்.

இவள் பேச, அவள் பேச கடைசியில் சண்டை வலுத்தது.

கருப்பாயி ஆத்திரத்தாலும் அன்று முழுவதும் ஒன்றும் கிடைக்காத ஏமாற்றத்தாலும் அவள் மீது பாய்ந்தாள்.

செல்லாயியிக்கு ஆத்திரம் தாங்கவில்லை. இருவரும் அடித்துக் கொண்டனர். கூச்சல் அதிகமாகவே, ஹோட்டலிலிருந்து வேலைக்காரன் ஒரு செம்புத் தண்ணீரைக் கொண்டு வந்து அவர்கள் மீது கொட்டி அதட்டினான். பின்னர்தான் அந்த யுத்தம் நின்றது.

செல்லாயியின் கந்தல் ஆடை இன்னும் சர்வ கந்தலாகி விட்டது. இரவல் குழந்தையின் அழுகை அதிகமாயிருந்தது. கையிலுள்ள தகரம் ஒரு மூலையில் நசுங்கிக் கிடந்தது.

அதிலே இருந்த இரண்டு காலணாக்களும் தெருவில் ஓரத்தில் சாக்கடையில் கிடந்தன.

செல்லாயியின் உள்ளம் உடைந்துவிட்டது. முகத்திலும் கையிலும் கிறப்பட்டுள்ள இடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மெல்ல மெல்ல அவள் தன் இருப்பிடத்தை நோக்கி நடந்தாள்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் கணவன் சீக்கிரம் வருகிறேன் என்று போய் இரண்டு, மூன்று மாசம் ஆகியிருக்கலாம். ஐயோ... அவர் ஏன் வரவில்லை? மறந்தே போய்விட்டாரா? அவள் மனம் இதை நினைக்கும்போது துடியாகத் துடித்தது.

வழி நெடுக யோசனையில் ஆழ்ந்தவாறு நடந்து கொண்டிருந்த அவள், குழந்தையை கிழவனிடம் கொடுத்துவிட்டு நடந்தாவது ஊரைப் பார்க்கப் போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

இனி, இந்த பாழும் பட்டணத்தில் இருந்து என்ன பயன்?

இருப்பிடத்தை அடைந்தபோது நன்றாக இருட்டி விட்டிருந்தது. பிச்சைக்காரக் கோஷ்டியும், மற்றும் பலரும் அங்கு நிறைந்திருந்தனர். குழந்தையைக் கிழவன் அருகில் உட்கார வைத்து விட்டு செல்லாயி 'ஓ'வென்று அழுதுவிட்டாள்.

"தாத்தா! எனக்கு இந்தப் பொழைப்பு வேண்டாம். நான் ஊரைப் பார்க்கப் போகிறேன்!" என்று கதறினாள்.

ஆனால், கிழவன் செல்லாயியின் பேச்சைக் கேட்டு பச்சாதாபப் படுவது போகக் குலுங்க குலுங்கச் சிரித்தான்.

"ஏ புள்ளே! இனி ஏங்கிட்ட ஒண்ணும் சொல்லாதே. அதோ அவன் கிட்டே சொல்லிக்கோ" என்று கூறினான்.



இது வேறு வம்பா என்று எண்ணித் திரும்பிப் பார்த்த அவள் ஒரு கணம் திடுக்கிட்டாள். திகைத்தாள். தலையே சுற்றிவிடும் போன்ற உணர்ச்சி! ஏதோ பெரிய வேதனைப் பாரம் இறங்கிவிட்டது போன்ற நிலை!

சடையப்பன் - செல்லாயியின் கணவன் - கிழவன் பின்புறம் உட்கார்ந்திருந்தான்.

செல்லாயியிடம் சொல்லிவிட்டுக் கிராமத்தை நோக்கிப் போன சடையப்பனுக்கு அங்கே ஒரு பெரிய ஆபத்து காத்திருந்தது. அவன் தனக்குத் தெரிந்த ஒருவனது குடிசையில் தங்கியிருக்கையில், அவனது சிநேகிதனை அவனுடைய விரோதிகள் சிலர் பழைய விரோதத்தால் தாக்க வந்தனர்.

சடையப்பனும் அவன் நண்பனுமாகச் சேர்ந்து எதிர்த்தவர்களைச் சமாளிக்கும்படி ஏற்பட்டது. அந்தச் சண்டையின் போது எதிர்க்கட்சியாளரில் ஒருவனுக்குப் பலத்த அடி விழவே, அவர்கள் மறுநாள் போலீஸாரிடம் புகார் செய்து விட்டனர்.

சடையப்பன்தான் எதிர்க்கட்சியில் ஒருவனைப் பலமாக அடித்தான் என்பது எதிர்க்கட்சியாரின் புகார். சடையப்பன் ஒரு பாவமும் அறியாதவன். இளகிய மனத்தினன்.

இப்படி நேரும் என்று அவன் நினைக்கவே இல்லை. பட்டணத்தில் மனைவியின் கதி என்னவோ என்று நினைக்கும்போது அவனுக்கு அழுகையே வந்து விட்டது. நல்லவேளையாக ஒன்று மோசமாக நேரவில்லை.

மூன்று மாத காலம் வழக்கு நடந்தது. கடைசியில் சடையப்பன் மீது குற்றமில்லை என்று முடிவாகிவிட்டது. சடையப்பனின் நல்ல காலம் அவன் விடுதலையடைந்தான்.

● ● ● ●

விடுதலையடைந்தவுடன், நண்பனிடம் கூறிவிட்டுச் சடையப்பன் பட்டணத்துக்கு ஓடோடி வந்தான். செல்லாயியைக் காணவில்லை. எப்படியோ விசாரித்துக் கொண்டு பிச்சைக்காரர்களின் வாத்தியாரான கிழவனிடம் வந்து சேர்ந்தான்.

செல்லாயி கோவென்று கதறி அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள். அதைக் கண்ட வாடகைக் குழந்தையும் தன் அழுகையை நிறுத்தி விட்டது.

செல்லாயி அரையணாவால் ஏற்பட்ட வினையை விம்மி விம்மிச் சொல்லும்போது சடையப்பனுக்கு வருத்தம் உண்டாகவில்லை. நளனுக்கும், தமயந்திக்கும் நேர்ந்ததை விடவா இது பெரிய கஷ்டம் என்று சடையப்பன் நினைத்துக் கொண்டான் போலும்!

''செல்லி, வா! அந்தக் கருப்பாயியைப் போய்ப் பார்ப்போம்'' என்று கூப்பிட்டான்.

''வேண்டாம்... எல்லாம் இல்லாத கொடுமைதான் அவளுக்கு ஆத்திரம் உண்டாகக் காரணம்'' என்றாள் செல்லாயி.

''இல்லை, செல்லி! வா, அப்படியே ஊருக்குப் போகணும்...'' என்று அவன் சொல்லவே, செல்லாயி சம்மதித்தாள்.

அதே ஹோட்டல் வாசலில் கருப்பாயி உட்கார்ந்திருந்தாள்.

செல்லாயி யாரோ ஓர் ஆண்பிள்ளையை அழைத்துக் கொண்டு வருவதைப் பார்த்தவுடன் கருப்பாயி பயந்தாலும் தைரியமாக ''வந்துட்டியா... எந்த ஆள் என்னை என்ன செய்வாள்?'' என்று கேட்டவாறு எழுந்து நின்றாள்.

''பயப்படாதே! இந்தா எடுத்துக் கொள்! உனக்கு வேண்டியது அரையணாத்தானே? இந்தா ஓரணாவாக எடுத்துக் கொள்'' என்று கூறி அவளுடைய தகரக் குவளையில் இரண்டு அரையணாக்களைப் போட்டான் சடையப்பன்.

செல்லாயியிக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

சடையப்பனும், செல்லாயியும் திரும்பவும் ஊருக்குப் போவதற்காக ரயில்வேஸ்டேஷனை அடைந்தபொழுது, அந்த வாடகைக் குழந்தையின் அழுகையும், அரையணாச் சம்பவமும் செல்லாயியின் நினைவை விட்டுச் சிறிதும் அகலவே இல்லை.

● ● ● ●



## சிலம்பொலியார் வழங்கிய
## ‘சிறுகதைச் சேக்கிழார்’ விருது

கலைமாமணி விக்கிரமன் தமிழகத்தின் தலை சிறந்த புதின எழுத்தாளர்களுள் ஒருவர். ஒவ்வொரு கதையையும் ஒரு குறிக்கோளுடன் எழுதிச் செல்கிறார். எந்தக் கதையைத் தொட்டாலும் அங்கே ஒரு கொள்கைப் பிடிப்பு - மரபு வழுவா நெறிமுறை இருந்திடக் காண்கிறோம். பெரிய புராணத்தில் சேக்கிழார் ஒவ்வோரடியார் வரலாற்றிலும் ‘இறை நெறி’யை மையமாகக் கொண்டு கதை கூறிச் செல்லும் பாங்கில் நம் கலைமாமணி விக்கிரமன் அவர்கள் நம் பண்பாட்டு நெறியை மையமாகக் கொண்டு கதைகள் புனைந்து செல்வதால் இவரை நாம் ‘சிறுகதைச் சேக்கிழார்’ என்று பெருமையோடு குறிப்பிடலாம்.

– டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்